காளீ பூஜா ப்ரபாவம்

காளீபெருமையும், வழிபாட்டுமஹிமையும்

(காளியின் உருவவகைகள், தத்வவிளக்கங்கள், பூஜைமுறைகள், படங்களுடன் 54ரூபதியானங்கள், மந்திர யந்திர வகைகள், அரியதுதிகள், 108, 300, 1000 நாமாவளிவகைகள், விருப்பப்பிரார்த்தனைகள் கொண்டுள்ளது.)



தொகுப்பாசிரியர் & உரையாசிரியர்

சிவஶ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

207/101 தம்புசெட்டி தெரு, சென்னை-1.

உ

ஸ்ரீ குருவருள் துணை

காளீ பூஜா ப்ரபாவம்

(காளீபெருமையும், வழிபாட்டுமஹிமையும்)

(காளியின் உருவவகைகள், தத்வவிளக்கங்கள், பூஜைமுறைகள், படங்களுடன் 54ரூபதியானங்கள், மந்திர யந்திர வகைகள், அரியதுதிகள், 108, 300, 1000 நாமாவளிவகைகள், விருப்பப்பிரார்த்தனைகள் கொண்டுள்ளது.)

தொகுப்பாசிரியர் & உரையாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ஞ சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்கிருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ: , ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சைவாகம பரீக்ஷாதிகாரி, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஸ்ரீ. விஜய. சோமசேகரசிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சிவாகம தலைமையாசிரியர். சிவாகம வித்யாபீடம்.

மேற்குமாம்பலம், சென்னை 33.

2018 விளம்பி வருஷம் சரந் நவராத்திரி விழாவில் வெளியிடப்பட்டது.

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

207/101 தம்புசெட்டி தெரு, சென்னை-1.

நூல்விளக்கக் குறிப்பு

நூலின்பெயர், தலைப்பு	:	காளீ பூஜா ப்ரபாவம்
நூலின் துறை	:	சாக்தசமய ஆகமத்துறை
நூலின் வகை	:	ஆகமமரபுசார்ந்த தொகுப்புநூல்
நூலின் பொருள்	:	காளியின் உபாஸனைவழிபாடு
நூலின் மொழி	:	தமிழ் (ஸம்ஸ்கிருத சான்றுடன்)
நூலின் எழுத்து	:	தமிழ்எழுத்துமட்டில்
தொகுப்பு & வடிவமைப்பு	:	சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	:	நூலாசிரியருக்கே உரியது.
கணிணி அச்சுபதிப்பு	:	அ.கணேஷ், அண்ணாநகர், சென்னை.
நூல் அளவு	:	8.5" x 5.5"
அச்சிட்ட எண்ணிக்கை	:	1000 பிரதிகள்
முதற்பதிப்புகாலம், ஆண்டு	:	அக்டோபர் 2018
நூல் பதிப்பு எண்.	:	முதற்பதிப்பு
நூலின் பக்கங்கள்	:	384 பக்கங்கள்
வெளியீடு	:	சிவாசார்யார் அறக்கட்டளை, சென்னை–01.
வெளியீட்டு நூல்வரிசை	:	22
அச்சகம்	:	ஓம் டிஜி ஒர்க்ஸ், சூளைமேடு, சென்னை.
நிதியளித்த நிறுவனம்	:	ஸ்ரீஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட்.
வெளியீட்டு விழா	:	விளம்பிவருட சாரதாநவராத்திரி விழா
வெளியிட்ட நாள்	:	விஜயதசமி, 19 அக்டோபர் 2018
புத்தகத்தின் விலை	:	விலை ரூ.450/–
புத்தகம் கிடைக்கும் இடம்	:	அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	:	98402 99352 / 99402 01849

All rights relating to this work rest of the copyright. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without prior written permission of the writer of this book.

Chief Editing - Layout & Compiled by : V. Somasekara Gurukkal M.A.,

நூலின் உள்ளடக்கம்

1. நூல் விளக்கக் குறிப்பு

2. ஆதிசைவ ஸம்ப்ரதாய குருவந்தனம்.

3. இறைவணக்கம், இஷ்டதேவதாவந்தனம்.

4. தொகுப்பாசிரியர் முன்னுரை

5. அறக்கட்டளை விவரம்.

6. ஆசியுரைகள்

7. வாழ்த்துரைகள்

8. அணிந்துரைகள்

9. மகிழ்வுரைகள்

10. பதிப்புரை/வெளீயீட்டுரை

9. நூலின் பொருளடக்கம்

10. நூல் – காளீ பூஜா ப்ரபாவம்.

11. சைவநெறி தழைக்க வாழ்த்து.

12. நூலாசிரியர் இதுவரை வெளியிட்டுள்ள நூல்விவரம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆதிசைவ ஸம்ப்ரதாய குருவந்தனம்

நமோ ப்ரம்மபதார்த்தாய லோகானாம் ஸித்திஹேதவே.
ஸச் சிதா னந்த ரூபாய சிவாய பர மாத்மனே.

ஸதாசிவம் அனந்தம் ச ஸ்ரீகண்டம் புனர் அம்பிகாம்.
குஹம் விஷ்ணும் ச தாதாரம் குருன் ஸப்த ஸமாச்ரயே.

குருர் பிரம்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேச்வர:.
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:.

குரவே ஸர்வ லோகானாம் பிஷஜே பவ ரோகினாம்.
நிதயே ஸர்வ வித்யானாம் தக்ஷிணா மூர்த்தயே நம:.

ஸ்ரீகண்ட வம்சோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீகண்ட சாஸ்த்ரார்த்தவிதம் முநீந்த்ரம்.
ஸ்ரீகண்ட பாவாஞ்சித யக்ஞசூத்ரம்
ஸ்ரீகண்ட மாசார்ய மஹம் பஜாமி.

தூர்வாஸ கௌசிக விரிஞ்சி ம்ருகண்டு புத்ர
தேவேந்த்ர பாண ஹரி சக்தி ததீசி ராமான்.
கண்வாத்ரி பார்கவ ப்ருஹஸ்பதி கௌதமாதீன்
புண்யான் இமான் பரம பாசுபதான் நமாமி.

சுத்த ஸ்படிக ஸங்காசான் மந்தஸ்மித முகாம்புஜான்
வ்யாக்யா புஸ்தகஸம்யுக்தான் சிவஞான ப்ரபோதகான்.
குருன் பராபரான் ஸர்வான் குருவம்ச க்ரமாகதான்
அஸ்மத் ஆசார்ய பர்யந்தான் வந்தே தேசிக புங்கவான்.

சிவம் சக்திம் கணாதீசம் குஹம் வாகீச்வரீம் க்ரமாத்.
தூர்வாஸஸம் அஹம் வந்தே பைங்களாத்யாம்ச்ச தேசிகான்.

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்பூர் ப்ரம்ம சம்பூர் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவாத ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ்சைவா(அ)ஷ்டாதசா சார்யபுங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா:.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்கதர்சிப்யோ ஆசார்யேப்யோ(அ)ஸ்து மே நதி:.

கேயூர குண்டல கிரீட விபூஷிதாங்கம்
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம்.
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம்
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம்.

இறைவணக்கம் / இஷ்டதேவதாவந்தனம்

ஓங்காரம் பிந்துஸம்யுக்தம் நித்யம் த்யாயந்தி யோகின:.
காமதம் மோக்ஷதம் சைவ ஓங்காராய நமோ நம:.

ஸ்ரீ விக்னேசஸ்துதி:

விக்னேசோ வ: ஸ பாயாத் விஹ்ருதிஷு ஜலதீன்
புஷ்க ராக்ரேண பீத்வா.
யஸ்மின் உத்ருத்ய தோயம் வமதி தத் அகிலம்
த்ருச்யதே வ்யோம்னி தேவை:.
க்வாப் யம்ப: க்வாபி விஷ்ணு: க்வசந கமலபூ:
க்வாப் யநந்த: க்வ சச்ரீ:
க்வாப் யௌர்வ: க்வாபி சைலா: க்வசந மணிகணா:
க்வாபி நக்ராதி ஸத்வா:.

ஸ்ரீ நடராஜர்துதி:

க்ருபாஸமுத்ரம் சுமுகம் த்ரிணேத்ரம்
ஜடாதரம் பார்வதி வாமபாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்தமூர்த்திம்
சிதம்பரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஸ்ரீ மஹாசாஸ்தா துதி.

ஆசானுரூப பலதம் சரணாரவிந்த
பாஜாமபார கருணார்ணவ பூர்ணசந்த்ரம்
நாசாய ஸர்வ விபதா மபி நௌமி நித்யம்
ஈசான கேசவபுவம் புவனைக நாதம்.

ஸ்ரீ ராஜாராமர் துதி

ராமோ ராஜாமணிஸ் ஸதா விஜயதே ராமம் ரமேசம் பஜே
ராமேணா(அ)பி ஹதா: நிசாசர சமூ: ராமாய தஸ்மை நம:.
ராமாத் நாஸ்தி பராயணம் பரதரம் ராமஸ்ய தாஸோ(அ)ஸ்மி யஹம்
ராமே சித்த லய: ஸதா பவது மே போ! ராம! மாம் உத்தர.

லோகாபி ராமம் ரண ரங்க தீரம். ராஜீவ நேத்ரம் ரகுவம்ச நாதம்.
காருண்யரூபம் கருணாகரம் தம். ஸ்ரீராமசந்த்ரம் சரணம் ப்ரபத்யே.

சைவாகம ஆசார்ய வந்தனம்.

ஸ்ரீமத் பஞ்சரிஷீந்த்ர கோத்ர தனுஜான் பஞ்சானனைர் தீக்ஷிதான்.
லிங்காக்னி சூர்ய கலச ஸ்வாத்மார்ச்சனா பூஷணான்.
சைவாசார்யவரான் ஸதா பசுபதிம் கால த்ரயேப் யர்ச்சகான்
ஸத் பக்தான் சிவமானஸான் ஹ்ருதி பஜே சைவாகமோத்தாரகான்.

குருவந்தனம்

குரும் கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம் ச பரமேச்வரம்.
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே. 1

நூல் மங்களம்

நத்வா குருபதத்வந்த்வம் சோதித்வா சாஸ்த்ரஜாலகம்.
காளிகாயாஸ்ச பூஜாயா: ப்ரபாவம் கத்யதேதுநா. 2

உ

இறைவணக்கம்

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானைப் பதம் பணிவாம்.

உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மன்னார்ந்தன வருவித்திரண் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணமறுமே.

கற்பனை கடந்தஜோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைசிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள்
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

மின்னாயிரம் ஒருமெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகமகிழ் ஆநந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவதொன்றில்லையே.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கேபரம் எனக்கு உள்ளம் எல்லாம்
அன்றே உனதுஎன்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான்பெற்ற கோமளமே.

தீபநமஸ்கார ஸ்துதி.

(காலைமாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம்செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)



ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயுராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

***

பகவதீ ஸ்துதி
(காலைவணக்கம். தேவீதுதி)

பிராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம்
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம்
திவ்யாயுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ரஹஸ்தாம்
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம். 1

பிராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம்.
பிரம்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீலலீலாம்
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம். 2

பிராதர் பஜாமி பவதா மபிலாஷ தாத்ரீம்
தாத்ரீம் ஸமஸ்தஜகதாம் துரிதாப ஹந்த்ரீம்
ஸம்ஸார பந்தன விமோசன ஹேது பூதாம்
மாயாம் பராம் ஸமதிகம்ய பரஸ்ய விஷ்ணோ:. 3

*****

துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே

ஸ்ரீ சாமுண்டீ ஸ்தவம்

நமோதே3வ்யை மஹாதே3வ்யை சிவாயை ஸததம் நம:
நமப் ப்ரகிருத்யை பத்ராயை நியதா: ப்ரணதாஸ்ம தாம்.

காளிகாளி! மஹாகாளி! காளிகே! பாப நாசிநி.
காளீ கராளநிஷ்க்ராந்தே! காளிகே! த்வாம் நதா வயம்.

அன்யதா2 சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம.
தஸ்மாத் காருண்ய பா4வேந ரக்ஷ ரக்ஷ மஹேச்வரீ.

ஸர்வமங்க3ள மாங்க3ல்யே சிவே ஸர்வார்த்த2 ஸாத4கே.
சரண்யே த்ர்யம்ப3கே கௌ3ரி நாராயணி நமோஸ்து தே.

ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி ஸமன்விதே
ப4யேப்யஸ் த்ராஹி நோ தேவி து3ர்கேதே3வி நமோஸ்து தே.

ஸர்வஸ்ய பு3த்தி4ரூபேண ஜனஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்தி2தே.
ஸ்வர்கா3பவர்க3தே3 தே3வி நாராயணி நமோஸ்து தே.

ஜயந்தீ மங்க3ளா காளீ ப4த்ரகாளீ கபாலிநீ
துர்கா க்ஷமா சிவா தா4த்ரீ ஸ்வாஹா ஸ்வதா4 நமோஸ்து தே

ஜ்வாலாகராளம் அத்யுக்3ரம் அசேஷாசுர ஸூத3னம்.
த்ரிசூலம் பாதுநோ பீ4தேர் ப4த்ரகாளி நமோஸ்து தே.

ப்ரத்யங்கி3ரே நமஸ்துப்4யம் ஸர்வசத்ரு விநாசினீ.
ப4த்ரம் ப்ரயச்ச2 சீக்3ரம் மே பத்ரகாளி நமோஸ்து தே.

க2ட்3கம் கபாலம் ட4மரும் த்ரிசூலம்
ஸம்பி3ப்4ரதீம் சந்த்ரகலா வதம்ஸாம்.
பிங்கோர்த்வகேசீம் ஸிதபீ4ம த3ம்ஷ்ட்ராம்
பூ4யாத் விபூ4த்யை மம ப4த்ரகாளி.

ரூபம்தே3ஹி ஜயம்தே3ஹி யசோதே3ஹி த்விஷோ ஜஹி
தே3ஹி ஸௌபா4க்ய மாரோக்3யம் தே3ஹி மே பரமம் ஸுக2ம்.

ஸ்ரீசக்ரநாயகீ பவானீ ஸ்தவம்
(ஆதிசங்கர பகவத்பாதர் அருளியது)

ந மந்த்ரம் நோ யந்த்ரம் ததபி ந ஜானே ஸ்துதி மஹோ
ந சாஹ்வானம் த்யானம் ததபிச ந ஜானே ஸ்துதி கதா:
ந ஜானே முத்ராஸ் தே ததபி ச ந ஜானே விலபனம்
பரம் ஜானே மாத: த்வத னுஸரணம் க்லேச ஹரணம். 1

விதே4 ரக்ஞானேன த்ரவிண விரஹேணா லஸதயா
விதேயா ஸக்யத்வாத் தவசரணயோர் யா ச்யுதிரியம்
ததேதத் க்ஷந்தவ்யம் ஜனனி ஸகலோத் தாரிணி சிவே.
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி. 2

ப்ருதிவ்யாம் புத்ராஸ் தே ஜனனி பஹவஸ் ஸந்தி ஸரலா:
பரம் தேஷாம் மத்யே விரல தரலோ ஹம் தவ ஸுத:.
த்வதீயோயம் த்யாக3ஸ் ஸமுசித மித3ம் நோ தவ சிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி. 3

ஜகன்மாதர் மாதஸ் தவ சரணஸேவா ந ரசிதா
ந வா தத்தம் தேவி! த்ரவிண மபி பூயஸ் தவ மயா
ததாபி த்வம் ஸ்நேஹம் மயி நிருபமம் யத் ப்ரகுருஷே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி. 4

ஸ்வபாகோ ஜல்பாகோ பவதி மது4 பாகோ பம கிரா
நிராதங்கோ ரங்கோ விஹரதி சிரம் கோடிக நகை:
தவாபர்ணே கர்ணே விஸதி மனுவர்ணே பலமிதம்
ஜன: கோ ஜானீதே ஜனனி ஜபநீயம் ஜபவிதௌ. 5

சிதா பஸ்மாலேபோ க3ரள மசனம் தி3க்பட த4ரோ
ஜடாதா4ரீ கண்டே2 புஜக3பதிஹாரீ பசுபதி:
கபாலீ பூ4தேசோ பஜதி ஜ3க3தீ சைக பத3வீம்
ப4வானி த்வத் பாணி க்3ரஹண பரிபாடீ ப2லமித3ம். 6

ஸ்ரீஆதிசங்கர ஆசார்யக்ருத பவானிஸ்தவம் ஸம்பூர்ணம்

கோமாதாஸ்துதி. (பசுவணக்க துதி)

இந்த அபூர்வமான ஸ்தோத்ரத்தைச் சொல்லி கோபூஜை செய்து, பிரதக்ஷிணம் செய்தால் அளவற்ற புண்யமாகும். சகல பாக்யங்களும் ஏற்படும். வாசக அன்பர்கள் பயன் பெறவேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவிருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம:. 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

....

சாமுண்டா ஜயார்களா ஸ்தோத்திர மஹாமந்திரம்

(வெற்றிதுதி)

ஜய த்வம் தேவி! சாமுண்டே! ஜய பூதார்த்திஹாரிணி!
ஜய ஸர்வகதே! தேவி! காலராத்ரி நமோஸ்துதே!

புவனேச்வரீ ஸ்தவராஜாஷ்டகம்

தேவீ உவாச

ப்ரபோ ஶ்ரீபைரவச்ரேஷ்ட: த்யாளுர் பக்தவத்ஸல:.
புவனேசீ ஸ்தவம் ப்ரூஹி யத்யஹம் தவவல்லபா.

ஈச்வர உவாச

ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி புவனேச்யஷ்டகம் சுபம்.
ஏந விக்ஞானமாத்ரேண த்ரைலோக்யம் வசகம் பவேத்.

ஓம். நமாமி ஜகதா தாராம் புவனேசீம் பவப்ரியாம்
புக்தி முக்திப்ரதாம் ரம்யாம் ரமணீயாம் சுபாவஹாம்.

த்வம் ஸ்வாஹா த்வம் ஸ்வதா தேவி த்வம் யக்ஞா யக்ஞநாயிகா.
த்வம் நாதஸ் த்வம் தமோஹந்த்ரீ வ்யாப்ய வ்யாபகவர்ஜிதா.
த்வமாதாரஸ் த்வமிஜ்வால்ய ஞானாஞேயம் பரம்பதம்.
த்வம் சிவஸ் த்வம் அஜோ விஷ்ணுஸ்த் மாத்மா பரமோவ்யய:.
த்வம் காரணம் ச கார்யம் ச லக்ஷ்மீ ஸ்த்வம் ச ஹுதாசன:.
த்வம் ஸோமஸ் த்வம் ரவிக் காலஸ் த்வம் தாதாஸ் த்வம் ச மாருத:
காயத்ரீ த்வம்ச ஸாவித்ரீ த்வம் மாயா த்வம் ஹரிப்ரியா.
த்வமே வைகா பராசக்திஸ் த்வமேவ குருரூப த்ருக்.
த்வம் கலாத்வம் கலாதீதா த்வமேவ ஜகதாம் ச்ரிய:.
த்வம் ஸர்வகார்யம் ஸர்வஸ்ய காரணம் கருணாமயீ.

பலச்ருதி:

இதமஷ்டகமாத்யாயா புவனேச்யா வராநநே.
த்ரிஸந்த்யம் ச்ரத்தயா மர்த்யோ யப் படேத் ப்ரீதமானஸ:
ஸித்தயோ வசகாஸ் தஸ்ய ஸம்பதோ வசகா க்ருஹே.
(இதி ருத்ரயாமளே புவனேசீஸ்தவராஜஸ் ஸமாப்த:)

உ
குருவருள் துணை

முன்னுரை

தேவீம் த்ரிலோகஜனநீம் சரணம் ப்ரபத்யே

யாதேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா.
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:.

எல்லாம்வல்ல எம்பெருமாட்டி காளியே அனைத்து உலகிலும் யாவுமாயிருப்பவள். இவளோ சிவபெருமானின் சக்தியே. இதனை "ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரரேரயிதா சிவ:" என்கிறது சிவாகமம். ஒரே பெரிய நாயகியாக, விச்வேச்வரியாக, உலகஅன்னையாக விளங்குகிற காளியே பராசக்தியின் முதல்உருமாகிய ஆதிசக்தியாகிறாள். இவளே ஞானரூபமாயும், க்ரியாரூபமாயும் வித்யாவாயும், அவித்யாவாயும், சித்சத்தியாயும் ஜடசக்தியாயும், எல்லாதெய்வங்களுக்கும் முழுமுதல் மூலகாரண துணைக்காரணவடிவமாயும் இருந்து பலவாய், பலவடிவமும் பெயரும்பெற்று விளங்குகிறாள். இதனை வியாபினீ, விவிதாகாரா என்கிறது புராணம்.

ஸ்ரீகாளிகாம்பாள் உலகத்தோருக்கு அறம் பொருள் இன்பம் முக்திஎனும், வீடுபேறு ஆகிய நால்வகையானபிறவிப்பயன்களையும் அளிக்கவல்லவளாக புருஷார்த்தப்ரதா எனப்படுபவள். புருஷார்த்தப்ரதா – பூர்ணா போகினீ புவனேச்வரீ என்று பிரம்மாண்டபுராணம் தேவியை துதிக்கிறது. ஆதிபராசக்தியின் சண்டீநவாக்ஷரிமந்திரத்தில் உள்ள இவளது திருநாமத்தால் உலகிற்கு அபயமளிப்பவள் சாமுண்டீச்வரிகாளியே என்பதை உணரலாம். இவளை ஆராதிக்கும் மக்களுக்கு விரும்பிய சுகபோகமிக்க வாழ்வையும் சுவர்கம் முக்தி அகிய மறுமைப்பயன்களையும்

இவள் அளிக்கிறாள் என்று மார்க்கண்டேயபுராணம் கூறுகிறது. ஆராதிதா ஸைவ ந்ருணாம் போக ஸ்வர்கா அபவர்கதா எனப்படுகிறாள். எனவே உலகஉயிர்களின் ஒரே அன்னையான தேவிகாளியை பூஜைசெய்வதே இக்கலியுகத்தில் யாவருக்கும் எப்பயனையும் விரைவில் தரவல்லது. கிராமங்கள் யாவிலும் காவல்தெய்வமாகவும், குலதெய்வமாக இருந்து காப்பவளாகவும், கிராமதேவதையாக விளங்குபவள் காளிதேவியே. உருவத்தைக் கண்டு இவளை வழிபடுவதற்கு பலரும் அஞ்சியபடி கைவிட்டுவிடுகின்றனர். இவள் உருவம் அறம்காத்திடகோபமாக உக்ரமாக இருந்தாலும் இவள் உள்ளம் கருணைக்கடலாய் விளங்குவதால் இவள் அடியவர் படுதுயராயினவற்றை அடியோடு அகற்றி அபயமளித்து காத்தருள்பவளாகிறாள். ஆதலால் இவளை விரும்பி, இஷ்டதெய்வமாகஏற்று, உபாஸிப்பதற்குத் தேவையான செய்திகளை இவளது பெருமைகளை சென்னையில், ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் நாற்பது ஆண்டுகாலம் சிறப்புப் பூஜாகாலங்களில் பணியாற்றிய யாம் அங்கு சண்டீயாகம், பிரத்யங்கிராயாகம், தசமஹாமாத்ருயாகம் முதலிய பலவகை வேள்விகாலங்களில் பலதருணங்களில் விளக்கிவந்துள்ளோம். பல அன்பர்களின் வேண்டுகோளைஏற்று அவற்றை ஒரு நூலாக எமது குருநாதர் பூஜ்யபாதர் சிவபுரம் சிவஸ்ரீ.S.சுவாமிநாதசிவாசார்யர் அவர்களின் அருளாசியையே துணைகொண்டு சிற்றறிவிற்கு ஏற்றவாறு எழுதியுள்ளேன். சிவனோ அபிஷேகப்ரியர், விஷ்ணுவோ அலங்காரப்ரியர், தேவியோ ஸ்தோத்ரப்ரியை என்றும் நாமபாராயணப்ரீதா என்றும் கூறப்படுவதால், மாலயன் முதலான மாதேவர்களும் பேராயிரம் பரவி ஏத்தும் பெருமாட்டியை புகழ்ந்திடும் வகையில் அரிய பல, தோத்திரவழிபாட்டுக்கான நாமாவளிகளையும் (பெயர்வரிசைகளை 1008, 300, 108 என்றும் மூலமந்திரஎழுத்தில் துவங்கும் பெயர்கள் முதலானவற்றையும், எளியதும் உயர்ந்ததுமான அரியபலதுதிகளையும், பல்லோரும் பரவிஏத்தி வழிபடும்வகையில் தேவீபூஜையின் செய்முறையையும் தலவிவரங்களையும் யாம் ஒன்றினைத்து இதில் தொகுத்துள்ளோம். காளியின் பெருமைகளையும், காளியின் பூஜையினுடைய பெருமைகளையும், அதற்குத் தேவையான உறுப்புகளாகவுள்ள பத்ததி, நாமார்ச்சனை துதிகளையும் தன்னகத்தே கொண்டு விளக்குவதால், இந்நூல் காளீபூஜாப்ரபாவம் என்று பெயரிடப்பட்டுள்ளது. முறையை அறியாமலேயே அன்போடு அம்மா என்று அழைத்துப்போற்றி பூசையை அளித்தாலே அருளுகின்ற அன்னையான ஸ்ரீ காளியை, ஒருவழிமுறையைப் பின்பற்றி வழிபட்டால் முழுமையான சிறப்பான பயன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே காளிதேவியின் (தாஸர்களுக்கு) மெய்யடியார்களுக்கு. அவர்கள்

உள்ளம்உள்கி, உகந்து, வழிபட இந்நூல் துணைசெய்யும் எனலாம். மேலும் **சிவஞான ப்ரதாயினீ, கைவல்யபத தாயினீ, மோக்ஷ ப்ரதாயினீ** என்று பேசப்படுகிற காளியின் அருளை விரைவில் அள்ளித்தருகிற மந்திரங்களும், பூஜைக்கு ஏற்று அமைக்கத்தக்க உரிய யந்திர வடிவங்களையும், பக்தர்கள் பயன்பெறவேண்டி இதில் தந்துள்ளோம். மந்திரத்தை ஒரு ஆலயகுருக்களின் வாய்வழியாக உபதேசமாகப்பெற்று பிறகு உபயோகப்படுத்தி உய்வுபெறவேண்டுகிறோம்.

ஆலய ஸேவார்த்திகளின் மேன்மைஒன்றையே தமதுகுறிக்கோளாக கொள்கையாக்கொண்டு, அரியபல அறப்பணிகளை செய்துவருகிற, சிவஸ்ரீ. டி.எஸ். சாம்பமூர்த்திசிவாசார்யார் அவர்களுடைய குமாரர்களின் அறக்கட்டளை, இந்நூலை எமது மணிவிழா ஆண்டாகிய விளம்பி வருடம் 2018–ல் சாரதா நவராத்திரி விஜயதசமி வெள்ளிக்கிழமை அன்று சண்டீயாகத்தில் **காளீபூஜா ப்ரபாவம்** என்ற எமது இந்நூல் வெளியிடப்படுவதை பாராட்டியும் வாழ்த்தியும் மகிழ்கிறோம். இந்நூலை கண்ணுறும் வாசகர்களுக்குத் தேவையான அரியசெய்திகளை எடுத்துரைத்து இந்நூலுக்கு வாழ்த்துரைகளை அளித்துள்ள அறிஞர்களுக்கு பணிவன்புடன் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நூலில் இடம்பெற்றுள்ள தேவையான வரைவுகோட்டுப் படங்களை வரைந்து அளித்த ஓவியக்கலைஞர்களுக்கும், ஸ்தபதியார்களுக்கும் உள்ளன்போடு பாராட்டுடன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் வெளிவர உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியை அறிவிப்பதோடு சுகபோக வாழ்வுபெற்று, அவர்கள் பல்லாண்டு காலம் அறப்பணியாற்றிட ப்ரார்த்தித்து இஷ்டதெய்வத்திருத்தாளினைப் போற்றி வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு

V. சோமசேகரசிவாசார்யர் M.A.,
குருமுதல்வர். சிவாகம வித்யாபீடம். சென்னை–33.

சுபம்

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சென்னை-1, சிவாசார்யர் அறக்கட்டளையின் நிறுவனர்

சிவஸ்ரீ. Dr. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார் சரிதம்

தருமமிகு. சென்னையின் திருமழிசை திருத்தலத்தில் கௌசிககோத்திரத்தில் ஆதிசைவகுலத்திலே சிவஸ்ரீ. ஷண்முக குருக்களுக்கும், ஸ்ரீமதி. தாக்ஷயணி அம்மையாருக்கும், 3வது திருமகனாக அவதரித்தவர். சென்னை பூக்கடை சிவஸ்ரீ.சபாரத்ன சிவாசார்யாரிடம் சிவதீக்ஷை பெற்றவர். குருவருளாலும், திருவருளாலும் சென்னை கடற்கரைநகரில் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் தமது சகோதரர்களுடன் சிறந்த அர்ச்சகராய் வெகுகாலம் தொண்டாற்றியவர். மேற்படி ஆலயத்தில் தமது பெருமுயற்சியால் பலசிறப்புமிக்க திருப்பணிகளைச்செய்து, ஆலயவளர்ச்சிப் பணிகளில் தம்மை முழுவதும் இவ்வாலயத்திற்கு அர்ப்பணித்து பலமுறை கும்பாபிஷேகங்களைச் செய்வித்தவர். தனது ஆத்மார்த்த சிவபூசையை இடையறாதுசெய்து, சிவநெறியில் வாழ்ந்தவர். தமது வாழ்க்கைத் துணைவியாராக ஸ்ரீமதி. புவனேச்வரி அம்மையாரை மணந்து மகன்களோடும், மகள்களோடும் மனநிறைவுடன் வாழ்ந்தவர்.

சென்னை-1, சிவாசார்யர் அறக்கட்டளையின் ஆலயத்திருப்பணிகள்

சிவஸ்ரீ டாக்டர் தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார் அவர்களின் குமாரர்களால் நடத்தப்பெறும் சிவசார்யார் அறக்கட்டளையின் பெருமுயற்சியால் காளிகாம்பாள் ஆலயத்தில் தற்பொழுது புதிய தக்ஷிணாமூர்த்தி மண்டபம் மற்றும் பழுதுற்ற கொடிமரத்தை நீக்கி தகட்டு வேலைப்பாட்டுடன் கூடிய புதிய கொடிமரத்து திருப்பணிகள் நன்கொடைகள் மூலமாக செய்விக்கப்பட்டுள்ளது.

சென்னை–1, சிவாசார்யர் அறக்கட்டளையின் ஆலயத்திருப்பணிகள்

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம்

212, தம்பு செட்டித் தெரு, சென்னை-600 001

நிகழும் துர்முகி வருடம் தை மாதம் 20ம் நாள் 02.02.2017 வியாழக்கிழமை சுக்ல சஷ்டி, ரேவதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மீனலக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ விஸ்வபிரம்மா மண்டபம் திறப்பு வேதாகம ஞான கலாநிதி தெய்வத்திரு. டாக்டர்.தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அருளாசியுடன், அகில பாரத விஸ்வகர்ம ஜகத்குரு ஸ்ரீ சிவசண்முக ஞானாச்சார்ய குரு சுவாமிகள் முன்னிலையில் திருவருளும், குருவருளும் கூடி சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ விஸ்வபிரம்மா மண்டபம்

திருமிகு. S.ராஜரத்தினம் அவர்கள் திருமதி. ரேவதி ராஜரத்தினம் அவர்கள்

திருமிகு. R.சபாபதி அவர்கள் திருமதி. சுனிதா சபாபதி அவர்கள்

உரிமையாளர், சரவணா ஸ்டோர்ஸ், சென்னை, அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது.

ஸ்ரீ விஸ்வபிரம்மா மண்டப தூண்கள் சுதை அலங்காரம்

சிவஸ்ரீ S.பாலகுமார் சிவாசார்யர்

SRI LOGOS INTERNATIONAL CHENNAI - 78

இங்ஙனம்

அறங்காவலர்குழுத் தலைவர்

K.மூர்த்தி ஆச்சாரி

அறங்காவலர்கள்

D.ஜெகத்சன் ஆச்சாரி K.யுவராஜ் ஆச்சாரி

இரா.இராஜேந்திரகுமார் ஆச்சாரி P.பஞ்சாட்சரம் ஆச்சாரி

தேவஸ்தான சிவாசார்ய பெருமக்கள்

சென்னை வாழ் விஸ்வகர்ம சேவார்த்திகள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தலைவராக பலஆண்டுகள் இருந்து அர்ச்சக சமூகத்தின் மேன்மைக்குத் தொண்டாற்றியவர். தமதுஆலயத்திலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல இடங்களில் பலவகை யாகங்களையும், சஹஸ்ரசண்டீ யாகங்களையும் நடத்தியவர். ஆலயசேவார்த்திகளுக்கும், அயல்நாட்டின் ஆஸ்தீகர்களுக்கும் இந்துசமய சுபாஷிதங்களையும், சித்தாந்த கருத்துக்களையும் போதித்த சைவசமயபோதகர். ஆலயசேவார்த்திகளின் மனத்துயரம் நீங்கிட அம்பாளிடம் கசிந்துருகி அர்ச்சனைசெய்து, தேவியின் திருநாம உச்சரிப்பால் நாதகலைகளை ஆலயமெங்கும் பரவச்செய்த தேவீஉபாஸகர். சேவார்த்திகளுக்கு ‘அம்பாள் ஆசீர்வாதம்” எனக்கூறி குங்குமம்அளித்து, மங்களம்பெறச் செய்த மஹிமை பொருந்தியவர். கோயிலுக்குவரும் பக்தர்களில் ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், நல்லவர், தீயவர் என்ற வேறுபாடுஎதுவும் பாராமல், சமநோக்கில் தாயன்புகாட்டி உதவி, ஆசிநல்கிய ஆசான். பல்லோராலும் சிவாசார்யகுலபூஷணம் என்றும், சக்திகருணாகர சக்ரவர்த்தி என்றும் விருதுவழங்கிப் போற்றப்பட்டவர். பக்தர்களுக்கு தன் தீபாராதனைத்தட்டிலிருந்து குங்குமத்தையும், எளியோருக்கு பரிவுடன் பணத்தையும் எடுத்துத்தந்திடும் தயாளகுணத்தவர். முப்பதுக்கும்மேற்பட்ட வெளிநாடுகளில், பலகோயில்களில், ஆசியுரையாற்றியும், கும்பாபிஷேகம், யாகம் இவற்றைசெய்தும், செய்வித்தும், இந்துசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்.

அமெரிக்காவிலுள்ள ஐக்கியநாடுகள்சபையில், இந்துசமய சிறப்பைப்பற்றி, சொற்பொழி ஆற்றியவர். தனது நான்குகுமாரர்களையும், ஆலய மற்றும் சமயப்பணிகளில் அமர்த்தியும், அறக்கட்டளைகளை ஏற்படுத்தி சைவாகம கலாசாரவளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தும் வழிகாட்டியவர். தேசபொதுநலனுக்காக அச்வமேதயாகம், ஸஹஸ்ரசண்டீயாகம் முதலிய அரிய பல பெருவேள்விகளைச் செய்து உலகஅமைதிக்கு துணைநின்று கௌரவமுனைவர் பட்டம் பெற்ற ஆகமஞானகலாநிதி ஆவார். இன்றும் சிவபுரத்துச் சிவனடிநிழலில் சிவபோகம் அனுபவித்தவாறு, குமாரர்கள்மூலமாக அறக்கட்டளைகளை ஆசியளித்து இயக்கிவருகிறார். இவரது சைவசமய சேவையைஎண்ணிப் போற்றிடும் ஆஸ்தீகர்கள் அம்பாள் ஆசீர்வாதம் பெற்றவர்களாய் இன்புற்று வாழ்கின்றனர். வாழ்க சீர்அடியார் எல்லாம்.

சுபம்.

ஸ்ரீராஜராஜேச்வரீ ப்ரசன்னா
சிவமயம். சக்திமயம்
சிவாகம ஸார்வபௌம. சண்டீஹோமசாம்ராட். ஸௌம்ய சாக்த ரத்னாகரம்.
சிவஸ்ரீ. **S. ஸபேச சிவாசார்யார்.**
குருமுதல்வர்.
ஸ்ரீநாகநாதஅகோரசிவாசார்யார்வேதசிவாகம பாடசாலை. மயிலாடுதுறை.
நெ.2, வள்ளலார் ஒத்ததெரு, மயிலாடுதுறை, தமிழ்நாடு.

நமஸ் சங்க சக்ரே வரா (அ)பீதி ஹஸ்தே
நமஸ் த்ரயம்பகே கௌரி பத்மாஸனஸ்தே.
நமஸ் சுவர்ணவர்ணே ப்ரஸன்னே சரண்யே
நமஸ் தே மஹா லக்ஷ்மி கோலா புரேசி.

ஆசியுரை

பரம்பொருளாகிய ஸர்வேச்வரன் உமையொருபாகன் தான் உலகை பார்க்கஎண்ணியபோது முதலில் பார்த்தது அவதாரமானது காளியே. அந்த ஸமவேதனாசக்தி துணைகொண்டு இவ்வுலகில் பாபபுண்யத்துக்கு தக்கவாறு எல்லாஜீவராசிகளையும் உண்டுபண்ணி. துணைநின்று. அவை மேல்நிலை அடைவதன்பொருட்டு குருவடிவமாகவும், மந்திரவடிவமாகவும் இருந்து. அருள்பாலித்து வருவதை,

எல்லோரும் இன்புற்றிருக்க ஸ்ரீகாளியின் ஆவிர்பாவம், சிந்தாமணிகாளி, ஸ்பர்சகாளீ முதலான எட்டுகாளியின் தோற்றத்தையும், சிறப்பையும், இப்பரதகண்டத்தில் காளீ இருக்கும் க்ஷேத்ரங்களையும், சிதம்பரத்தில் உள்ள ப்ரம்மசாமுண்டீ (காளீ), ரக்தகாளீ, மஹாகாளியின் திருத்தலங்களையும்,காளியின் பூஜாஸமயத்தையும், அதிலும் சமயபுரம் ஸமீபமுள்ள மாகாளிகுடியில் மூன்றுகைகளுடன் இருப்பதையும், செம்மையாக எழுதியுள்ளதும்,

காளிகாம்பாளை எந்ததருணத்தில் பூஜைசெய்யவேண்டும் என்ற விபரமும், அக்காளீ பூஜையில்

சந்தனா (அ)கரு கற்பூர ஸௌர குங்கும ரோசனாம்.
ஜடாமாம்ஸீ கபி யுதா (ரக்த சந்தனம்) சாக்தேர் கந்தாஷ்டகம் விது:.
இவ்வாறு சாக்தபூஜைக்குறிய சந்தனக்கலவையையும்.
ஸாதிதா காலநாதேந ப்ரத்யக்ஷா காளிகா கலௌ.
கலௌ காளீ விஹாயாத்ய யக் கச்சித் ஸித்தி காமுக:
ஸ்ரீ மஹா காளிகா வித்யா கலௌ பூர்ண பல ப்ரதா.

என்ற தந்த்ர வசனப்படி காளியே கலியுகத்தில் நிறைவான பயனையளிப்பவள். என்பதையும்,

ச்வேத க்ருஷ்ணா துளஸ்யாஞ்ச காளீம் ந ஸ்பர்சயேத் க்வசித்.

பில்வைர் மருவகாத் யைச் ச துளசீ வர்ஜிதைஸ் சுபை:.

துளசீ மாலதீ சைவ தாராகளீவிதௌ த்யஜேத்.

என்றும் சாக்த தந்த்ரசாஸ்த்திரங்களில் காளீ தாரா பூஜையில் விலக்கத்தக்க பத்ரபுஷ்பவகைகளைக் சொல்லியதையும், அர்ச்சனைபூஜாக்ரமம் ஸ்தோத்திரம், பலி முதலிய செய்யவேண்டியவற்றை சொல்லியும், ஜபத்தில் ஸர்வஸித்தியைதரக்கூடியது தந்தமாலை என்பதையும், சிரமம் பாராது பலநூல்களை ஆராய்ந்து விளக்கி எழுதி, உருவமைத்து காளீ பூஜா ப்ரபாவம் என்றநூலை தந்தருளிய, பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய சைவசாக்தகல்பத்ருமம் என்ற விருதுக்கு உறைவிடம்தந்தவரும், ஆகமப்ரவீணர், ஆகமவித்வான் முதலான விருதுகளுக்கும் சிறப்புக்கு சிறப்புமிக்கவரும் இனிமையானவருமான சிவஸ்ரீ. சோமசேகரசிவாசார்யார் அவர்களை பாராட்டி, எம்பிராட்டி ஸ்ரீராஜராஜேச்வரீ அம்பாள், நீண்டஆயுள் முதலான செல்வங்களைதந்து இவர் இதுபோல் பலநூல்களை வெளிக்கொணர்ந்து உபாஸகர்களுக்கு உதவ எல்லாம் வல்ல நமதுகுருவாம் க்ரோதபட்டாரகரான தூர்வாஸாசார்யாளையும் குலதெய்வமான ஸ்ரீமூகாம்பிகையையும் வணங்கிவாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

சிவஸ்ரீ. **S. ஸபேச சிவாசார்யார்.**

மயிலாடுதுறை.

உ
Sri Ganapathy Thunai
SAIVA SIDHANTHA, AGMA SAGARAM, Mobile : 9445257471
SIVAGAMA SELVAR, SIVAGAMA ZANABANU,
SIVAGAMA THIRUTHONDAR, SIVAGAMA ZANA BASKARA,
SIVAGAMA RATNAGARAM, ACHARYA CHINTHAMANI, SIVAGAMA VACHASPATHY.
SALAVA. **K.RAJAPPA GURUKKAL,**
Heriditary STHANIKAM & SRI EKAMRANATHAR &
SRI KAILASANATHAR DEVASTHANAMS.
BIG KANCHIPURAM-631 502.
Residence : 45/121, Ekamranathar Sannathi Street, Big Kanchipuram.631 502.
Office : 5/11, West Raja Street, Big Kanchipuram. 631 502.

ஆசியுரை

ஸர்வ ஸித்திப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதே சுபே.
புவனேசி மஹாகாளி மனோபீஷ்ட ப்ரதாயிநி.

எல்லாம்வல்ல ஸ்ரீ காளிகாம்பாளினுடைய தனிப்பெரும்கருணையை தனதாக்கிக்கொண்ட சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர் அவர்கள் சைவஉலகிற்கு செய்துகொண்டிருக்கும் மஹத்தான ஸேவைகளின் ஓர் அங்கமாக இந்த காளீ பூஜா ப்ரபாவம் எனும் நூல் அவரது மணிவிழா ஆண்டாகிய விளம்பி வருஷத்தில் ஆடிமாஸம் வெள்ளியன்று அவர் அரும்பணியாற்றிய சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலில் வெளிவருவது குறித்து மகிழ்ச்சியுற்றோம்.

ஜகன்மாதாவான தேவிகாளியின் பெருமைகளையும், பூஜை உபாஸனாமுறைகளையும் விளக்கிடும் இந்நூல் மற்றய ஸாமான்ய பூஜாகல்ப புத்தகங்களைப்போல பூஜாவிஷயங்களை சொல்லுவதோடு மட்டுமல்லாது பராசக்தியின் நிலைகளையும், தத்வஸ்வரூபங்களின் ஸம்பூர்ண விளக்கங்களையும் கூறுவதாக, எளியோரும் புத்திபூர்வமாய் அறிந்துகொள்ளும்விதமாக நூலின் முற்பகுதியில் காளீதேவியின் உபாஸனா விளக்கத்தையும், தேவீதத்வார்த்த மந்தரபேதங்களையும் மஹிமைகளையும் தெளிவாக சான்றுகளுடன் விளக்கிக் கூறியிருப்பது "தவ தத்வம் ந ஜாநாமி கீத்ருசோஸி மஹேச்வரி" போன்ற ஔப சாரிக சுலோகங்களும் பொய்க்கும் வண்ணமாக விளங்குகிறது.

அவ்வாறே சிவாசார்ய குலபூஷணமாக, அன்னையின் ஜங்கமத் திருமேனியாக விளங்கிய தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யாரின் சரிதத்தை இணைத்து உள்ளது யாவரும் அறிந்து குருபக்தியைப் பெறஉதவும். மேலும் காளியை விளக்கிலும், யந்திரம்முதலானவற்றிலும் சிறப்பு உபசரிப்புகளுடன் பூசைசெய்யும் வகையில், இந்நூல் காளீபூஜாமுறையையும், 1008, 300, 108 முதலான அறியபல மூலமந்திர எழுத்துடனான நாமாவளிகளையும் பலரும் பயன்படுத்தும் வண்ணம் காளீஅருள்பெற ஏற்றதாய் அறியவகையில்அமைந்து வழிவகுக்கிறது.

எவர்கள் முறையாக குருவிடம் தீக்ஷைபெற்று இப்புத்தகத்தை முறையாகப் பயின்று காளீபூஜாமார்க்கத்தை அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் காளியின் கருணாகடாக்ஷத்திற்கு பாத்திரமாகி காளீ ஆசியைப்பெறுவார்கள் என்பதில் ஐயமேதுமில்லை.

பக்தமஹாஜனங்களுக்காக பெருமுயற்சி செய்து இப்புத்தகத்தினை தொகுத்தளித்த நூலாசிரியருக்கும், இந்நூல் வெளிவர பொருளுதவி அளித்த அறக்கட்டளையின் குடும்பத்தாருக்கும், அனைத்துமாகி விளங்குகின்ற ஸ்ரீ காமாக்ஷி அம்பா ஸமேத ஸ்ரீமத் ஏகாம்பரேசரின் திருத்தாளினைப் போற்றி ப்ரார்தித்து மேன்மேலும் இஹபர ஸௌபாக்யங்களை அடைய ஆசீர்வதிக்கிறேன்.

இப்படிக்கு,

சாளவ. க. ராஜப்பா குருக்கள், காஞ்சீபுரம்.

டாக்டர். சிவஸ்ரீ சபாரத்தினம் சிவாசாரியார்,
எம்.ஏ(தமிழ்), எம்.ஏ(ஸம்ஸ்க்ருதம்) எம்.ஏ(தத்துவம்), பி.எச்டி
ஆகம மொழிபெயர்ப்பாளர், கௌவை ஆதீனம், ஹவாய்
இயக்குநர், வேத-ஆகம- சித்தாந்த மேல்நிலை ஆய்வுமையம்
(மேனாள் தமிழ்–தத்துவப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்)
1/1B, கற்பகாம்பாள் நகர், திருமயிலை, சென்னை 600 004
அலைபேசி: 90030 16571 மின்னஞ்சல்: sabharathnam@gmail.com

உ

திருச்சிற்றம்பலம்

ஆசியுரை

பேரன்புக்கும் பாராட்டுக்கும் உரிய சிவஸ்ரீ விஜய. சோமசேகர சிவாசாரியார் அவர்களின் மணிவிழா ஆண்டு நவராத்திரியில் வெளியிடப்படும் காளீ பூஜா ப்ரபாவம் எனும் நூல் ஸ்ரீகாளி பூஜாமுறையை விரிவாகக் கூறும் முறையில் அமைந்துள்ளது. தொகுக்கப்பட்டுக் கூறப்பட்டிருக்கும் பூஜா விஷயங்கள் அனைத்தும் பிற்காலத்தே எழுதப்பட்ட சாக்த சம்பந்தமான பல்வேறு நூல்களை அதாரமாகக் கொண்டே அமைந்துள்ளன.

பத்ரகாளி, மஹாகாளி, அகோரகாளி, அங்காளி, சியாமளா காளி, பிரத்யங்கிரா காளி, குஹ்யகாளி, நிக்ரஹகாளி எனப் பல்வேறு காளிரூபங்களைப் பற்றிய விளக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் தோத்திரங்களையும் இந்நூலில் காணலாம். ஆனால் பூஜைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமாயின் தகுந்த ஆசாரியர் வாயிலாக உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஆசாரியர் உடனிருந்து வழிகாட்ட இவ்வகைப் பூஜை முறைகளை மேற்கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் ஒருபோதும் ப்ரயோகத்தில் ஈடுபடக் கூடாது.

ஒருகருத்தை இங்கே முக்கியமாகக் கூறவேண்டியுள்ளது. தனிப்பட்ட நலனுக்காக அன்பர்கள் அம்பாளின் சௌம்மிய வடிவங்களையே வழிபட வேண்டும். பொதுநலன், கிராமசாந்தி, நாட்டின் பாதுகாப்பு முதலானவற்றை முன்னிட்டே பொருத்தமான உக்ரவடிவங்களைத் தற்காலிகமாகப் பிரதிஷ்டை செய்து ஆசாரியர் வழிபடவேண்டும். காளி வழிபாட்டில் கவனம் அதிகம் தேவை. சௌந்தர்ய லஹரி உபந்யாசங்களில் ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் பல இடங்களிலும் இக்கருத்தைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். தசமஹா

வித்யை முதலானவற்றில் சிவாசார்யர்கள் ஈடுபாடு கொள்ளாமல் இருப்பது மிகவும் நல்லது. காமிகம், லலிதம், ஸித்தம் எனும் பெயரில் சைவ ஆகமங்கள் மட்டுமல்ல, சாக்த ஆகமங்களும் உண்டு. இந்த மூல சாக்த ஆகமங்களிலும், தந்த்ரராஜ தந்த்ரம் முதலான பிராசீனமான சாக்த தந்த்ரங்களிலும் தசமஹா வித்யைகளும் உக்ரமான காளி வித்யைகளும் ப்ரஸ்தாபிக்கப் படவில்லை என்பதை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும்.

கிராம சாந்தி, நாட்டு நலன், பேரிடர் நீக்கம் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு சிவஸ்ரீ சோமசேகர சிவாசாரியார் இந்நூலை உருவாக்கியுள்ளார். அவரது தொகுப்புப் பணி பாராட்டுக்கு உரியது.

அரும்பாடுபட்டுத் தொகுத்துள்ள சிவஸ்ரீ சோமசேகர சிவாசார்யார் அவர்களுக்கும் தொகுப்பினை அச்சிட்டு வெளியிடும் சிவாசார்ய அறக்கட்டளை நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்; வாழ்த்துகள்.

திருமயிலை
23–06–2018

அன்பன்
சபாரத்தினம்

நியாயவேதாந்த சிரோமணி, வேதபாஷ்ய ரத்னம், தர்சன கலாநிதி,
சாஸ்திர ரத்னாகர, மஹாமஹோபாத்யாயா.
பிரம்மஸ்ரீ. **Dr.R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள், M.A., Ph.D.,**
முன்னாள் முதல்வர். மயிலை சம்ஸ்கிருதக்கல்லூரி. சென்னை–4.

வாழ்த்துரை

"துர்கா" "காளீ" என்றெல்லாம் பலபல நாமாக்களால் துதிக்கப்படும் பராசக்தியின் ப்ரபாவம் சொல்லுதற்கு அரியது. எண்ணற்ற சங்கடங்கள் நாட்டியமாடும் இந்தக்கலியுக காலகட்டத்தில் நமக்கு ஒரே வழி "காளியின் வழிபாடுதான்" ஸ்ரீகாஞ்சீ மஹாஸ்வாமிகள், நடமாடும் தெய்வம் ஸ்ரீசந்திர சேகரஸ்வாமிகள் ஒரு ஸமயம் கூறினார் வேதங்களில் ஒரே ஒரு தெய்வத்ற்குத்தான் சரணமடைகிறேன் என்று கூறப்பட்டுள்ளது. "அந்த தெய்வம் துர்கை (எ) காளியே" என்று கூறினார். அந்த மந்திரத்தையும் சொன்னார் தாமக்னிவர்ணாம் தபாஸாஜ்வலந்தீம் வைரோகனீம் கர்மபலேஹகூஜீஷடாம் துர்காம் தேவீம் ச ரணமகூஷம் ப்ரபத்யே".

இத்தகைய தனிப்பெருமை வாய்ந்த ஸ்ரீகாளீ தேவியின் பூஜை, அதன் பெருமை, பல பல பூஜாவிதானங்கள், உருவத்தின் தத்துவவிளக்கங்கள், மந்திரங்கள், போன்ற எல்லாவிஷயங்களையும் தன்னுள்ளே கொண்டதால் காளிப்பெருமைப்பெட்டகம் போல இந்த அருமையான நூல் காளீபூஜாப்ரபாவம் என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. இதனது நூலாசிரியர் தமிழ்நாட்டிலேயே மிகச்சிறந்த சைவாகமவல்லுநர்களில் ஒருவராக, ஜகம் புகழும் கீர்த்தி பெற்றுள்ள சிவகூஷ விஜய வி.ஸோமசேகர சிவாச்சாரியார் ஆகமங்களை முழுமையாக கண்டு கற்றுக்தெளிந்து பலருக்கும் கற்பித்து, நூற்றுக்கணக்கான கோவில் கும்பாபிஷேகங்களில் தலைமைதாங்கி, எல்லாவற்றிற்கும் மேலாக நற்பண்புகளும், நல்லடக்கமும் நிரம்பி விளங்குகிறார். இவர் மயிலை ஸம்ஸ்கிருத கல்லூரியில் ஸாஹித்ய சிரோமணி படிக்கும்போதே விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழிக்குஏற்ப நன்கு ஸம்ஸ்கிருத மொழியைக் கசடு அறகள்ளூர் என்பதை நான் ஆசிரியராக இருந்ததால் நன்கு உணர்வேன்.

பலபல தந்திரங்கள், ரஹஷ்யங்கள், மந்திரங்கள், யாவற்றையும் எடுத்துக்களவும், சாண்ருவும் கூறி, இந்த நூலில் விஸ்தாரமாக ஸ்ரீ பராசக்தி (எ) காளிகாம்பாளின் மகத்துவத்தையும், வழிபாடு முறைகளையும் அதன் நற்பயன்களையும் தெளிவாக விரிவாக இனிமையாக கூறியுள்ளார். அவரது ஷஷ்டியப்தபூர்த்தியின் தருணத்தில் வெளியாகும் இந்த அருமையான நூலை யாவரும் வாங்கிப்படித்து ஸர்வேச்வரியின் அருளுக்கு பாத்திரர்களாக ஆகவேண்டும், அவரும் பல்லாண்டு பல்லாண்டு ஆரோக்யத்துடன் இம்மாதிரி நற்பணிகளைத் தொடர்ந்து செய்து வர அம்பாளின் அருளை வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
பிரம்மஸ்ரீ. **Dr. R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்,**
மயிலை, 27.06.2018

ஆகமப்ரவீண, வித்வான்

புலவர். **சுவாமி. சுப்பிரமணியன்,** எம்.ஏ.எம்.எட்.எம் பில்.

தமிழ்க்குடில், சென்னை. 600 073.

அணிந்துரை

" பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும்,உயர்சண்டி, காளி, ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே"

– (அபிராமி அந்தாதி)

உலகம் சக்திஸ்வரூபம். சத்தியாலே இயங்குகிறது. அந்தப் பராசக்தியின் அவதாரங்களும், பெயர்களும், கருணையும்,ஆட்கொள்ளும் அற்புதமும், விரித்துரைக்க முடியாத அனுபவ ஆழ்சிந்தனை சார்ந்தது. அந்த சர்வேஸ்வரியின் நிஜஸ்வரூபமே காளி என்பர்.

காளிமாதேவியைப் போற்றாதோர் இல்லை. சக்தி பீடங்களாய்ப் பாரத தேசம் முழுவதும் வியாபித்து, இருப்பவள் அந்த சக்தி. அவளைப் போற்றிப் புகழ்ந்து, பூசனை ஆற்றும், முறைகளை விளக்கும் நூல் "காளி பூஜா ப்ரபாவம்" ஆகும். பல்வேறு நூல்களில், பல்வேறு முறைகளில் பூஜிக்கப்படும், மந்திரங்களை, முறைகளை, அணியும் ஆபரணங்கள் ஆடைகள் போன்றவற்றை விளக்கி, சக்தியின் தோற்றம், நாமதேயம், அருட்டன்மை,போன்றவற்றையும் விளக்குவதே, இந்நூலின் உயர் நோக்கமாகும்.

பலநூல்களை ஆய்ந்து, காளி பற்றிய தோத்திரங்களைத் தொகுத்து, அவற்றிற்கு விளக்கம் அளித்து, ஆகமநெறி சார்ந்த பூஜை முறைகளைத் தமது ஆழ்ந்த வேதாகமப் பேரறிவால் வகைப் படுத்தி, நமக்கு வழங்கியிருப்பவர் சைவாகமப் பண்டிதர், சிவஸ்ரீ. விஜய சோமசேகர சிவாசார்யார் ஆவார். அவரது ஆழ்ந்த புலமையில் உருவான சக்தி தத்துவம் சக்தி வகைகள், சக்தி பூஜைமுறைகள், பெயர்கள், சக்தி அருள்பாரிக்கும் கருணை உள்ளம் போன்றவை போற்றத்தகும் முறையில் அமைந்துள்ளன. மஹா காளியின் பேரருளால் உருவான இந்த நூலின் அருமை பெருமைகளை முறையே காண்போம்.

காளி பூஜா ப்ரபாவம் இந்தத் தலைப்பை மட்டும் ஒருவன் படிப்பானானால் அவன் காளியை முழுமையாக உணர்ந்து போற்றும் பக்திமான் ஆவான்.காளியின் தோற்றம் துவங்கி, அன்னையின் அருள் வழங்கும் கருணை வரை அற்புதமாகப் படைக்கப் பட்டுள்ள முதற்பகுதி இது.

தேவியின் உயர்ந்த தன்மையை விளக்க முற்பட்டு, ஐஸ்வர்யம், பராக்ரமம், ஆற்றல், திறன்,குணம், பண்பு ஆகியவைகளாக அவளே விளங்குவதாகவும்,எங்கும், எதிலும், நிறைந்து விளங்குவதாகவும் போற்றும் மாக்கண்டேய புராணத்தின் கருத்தான "யா தேவி ஸர்வ பூதேஷு,சக்தி

ரூபேண ஸம்ஸ்திதா"என்ற வாக்கியத்தைச் சான்று காட்டி, விளக்குகிறார் ஆசிரியர். "ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதீயா கா மமாபரா" தேவி தானே கூறும் வார்த்தையை மேற்கோள் காட்டி, உலகில் அவளன்றி வேறெதுவும் இல்லை" என்னும் கருத்தை வலியுறுத்தும் ஆசிரியரின் உள்ளம் உண்மை சார்ந்து உயர்ந்து விளங்குகிறது.

சாக்த சமயம்,சக்தி உருவ வகைகள், முக்குணங்கள் வழியே சக்தி, (தமோ குணம் தாமஸீ மஹா காளி,ரஜோ குணம் மகாலக்ஷ்மி சத்வகுணம் மகாசரஸ்வதி) காளியின் தோற்றம், திரிசக்திகள், தச மகாவித்யா, ஜகதம்பா, தக்ஷிண காளிகா, காப்பவள் காளி, போன்ற தலைப்புகளில் விளக்காப்படும் காளிப்ரபாவம் சிறப்பும்,செம்மையும் வாய்ந்ததாக அமைந்துள்ளது. காளி அருள் தரும் தலங்கள் என்ற வரிசையில் பாரத தேசம் முழுவதும்,அருள்பாலிக்கும் சிறப்புமிக்க காளி வாசம் செய்யும் தலங்களைப் பட்டியலிட்டுப் படிப்போர் மனத்தை விரைவாக அத்தலம் நோக்கிச் சென்று,அன்னையை வணங்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது என்பது மிகையாகாது.

காளிகோயில் பூஜை முறை,காளியைப் பூஜிப்பதால் அடையும் பயன்கள், பூஜைப்பொருட்கள், ஸ்ரீ சக்ர விளக்கம், ஐந்தொழிலைப் புரியும், அன்னை காளி,காளிகோயில் அமைப்பு முறையான ஸஹஜாலயம், மிச்ராலயம், ஸ்வதந்த்ராலயம், போன்றவற்றை விளக்கி அவ்வாறமைந்துள்ள கோயில்களையும் பட்டியலிட்டு,வரிசைப் படுத்தி இருக்கும் பாங்கு போற்றத்தக்கது. வழிபாட்டு முறைகள், மந்திரவகைகள், விரிவாக விளக்கப் பட்டுள்ளது. காளி ஆலய அமைப்பு கொண்ட "சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலை மனக்கண்முன் நிறுத்தி, உபாஸனா வழிமுறைகளை விளக்குவது, காளியைப் போற்றுவதால் பெறும் பயன்களைக் கூறுவது, அன்னையை வழிபட வைக்கும் பக்திபூர்வ அமைப்பாகவே தோன்றுகிறது.

காளிபூஜா விதியை மந்திர உச்சாடணத்துடன் வெளியிட்டிருப்பது சிறப்பம்சமாகும். ஸ்ரீ ப்ரத்யங்கரா காளி நவாவரண பூஜை மந்திரங்களையும்,பூஜிக்கும் முறையோடு வெளியிட்டிருப்பது சாக்த உபாஸகர்களுக்குக் கிடைத்துள்ள வரப்ரசாதமாகும்.

சாமுண்டீ ஜீவந்யாஸம் ,ஐம்பத்தோரு மலைகளிலே அமைந்துள்ள உக்ர காளியின் பெயர்கள்,உறுதுணையாய் நரசிம்ஹரின் பெயர்கள், மலையின் பெயர்கள் போன்றவற்றைப் பட்டியலிட்டும், காளி யந்திரம் அமைப்பதற்கான விதி முறையை விளக்கியும்,அவ்வவற்றிற்கான முழுமையான,விரிவான பூஜா மந்திரங்களையும் படைத்திருப்பது இந்நூலின் மிகச்சிறந்த பகுதி எனலாம். பூஜைமுறை, மந்திரங்கள், போன்றவை தெள்ளத்தெளிவாகத் தந்திருப்பது,பூஜை ஆற்றுவோருக்கு அதீத பலனை அளிக்கும்.

அடுத்து வரும் துதிகள்,சுலோகத்தோடு கூடிய செய்முறைகள், கொண்ட ஸ்ரீ சக்ர லலிதார்ச்சனம் நன்முறையில் அமைந்துள்ளது. 108 தேவிஸ்தலங்கள், தேவியின் பெயர்கள்," தேவிபாகவாத வழியில் பட்டியல் இட்டிருப்பது, 64 சக்தி

பீடங்களின் பெயர்ப்பட்டியல், காளி கவசம் போன்றவை, சக்தி உபாசகர்களுக்கு வழிகாட்டி வயப்படுத்தும் நெறியாகும். காளி தேவியின் பலவகை உருவத்தைப் போற்றும் சுலோகங்கள், மந்திரங்கள், காளிதேவி அஷ்டோத்தர நாமாவளி, ககார நாம சதாஷ்டகம், மூலமந்திரத்துடன் கூடிய திரிசதி,காளி ஸஹஸ்ர நாமாவளி,காளி தசகஸ்தவம், பல்வேறு துதிப்பாடல்கள், போன்றவற்றை இறுதியாகப் படைத்திருப்பது இனிமையும், மங்களமும் கொண்டதாக இந்நூலை அமைக்கிறது.

முதலும் முடிவும் முதலும் முடிவுமான முக்குணக் காளி தேவியைப் போற்றிப்புகழ, இந்நூலின் ஆசிரியர் சோம சேகரர் பல்வேறு நூல்களைப் படித்துப்பொருளுணர்ந்து,மேற்கோள்கள்,மந்திரங்கள்,அர்ச்சனைகள்,சுலோகங்கள், போன்றவற்றை நாமெல்லாம் நன்குணரும் வகையில் தந்துள்ளார். தான்பெற்ற காளியின் அனுக்ரஹத்தை இவ்வையகமே பெற வழி வகுத்துள்ளார்.எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகவும், முறை மாறாது அமையவேண்டி வரிசைப்படுத்தியும், தவறில்லாது உச்சரிக்க வழிமுறைகளையும், அறிந்து கொள்ளும் ஆற்றல் வளர்க்கும் விதமாக ஆங்காங்கு பட்டியலிட்டு விளக்கியும் இந்நூலைப் படைத்துள்ளார்.சிவாகம வாசஸ்பதியான சிவாசார்யார் ஆதலின் ஆகம மூலமந்திரங்களை முறையோடு வரிசைப் படுத்தி உள்ளார்.

அன்னையின் அருள்பெற்ற ஆசிரியரின் இந்நூல் ஆன்மிக அன்பர்கள் அனைவரையும் அன்னை காளி பக்தர்களாக ஆக்கவல்லது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்நூலாசிரியர் நலமும், வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து, இது போன்ற பல்வேறு நூல்களைப் படைக்கவேண்டும், ஆன்மீகம் தழைக்க அயராது பாடுபடும் ஆசிரியரின் தொண்டு சிறக்கவேண்டும், உலகோர் இந்நூலை வாங்கிப் பயன் அடைய வேண்டும்.

22.07.2018.

சரவண பவ குக ஓம்.

சுவாமி. சுப்பிரமணியன்

சென்னை.

உ
சிவமயம்
ஸ்ரீ நாகம்மன் துணை

சிவாகம சிரோமணி, சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. S. சந்திரசேகர சிவாசார்யர்

19/32, வடக்கு விஸ்தரிப்பு,
ஸ்ரீநிவாஸ நகர்,
திருவானைக்காவல்,
திருச்சி – 620 005.
போன் : 0431 – 2230008
செல் : 94435 30790

ஆசியுரை

(காளி பூஜாப்ரபாவம்)

உத்ததௌ மதுகைடபௌ மஹிஷாசுரஞ்சி நிஹத்யதம்
தும்ரலோசன சண்டமுண்டக கைத்பீஜமுகாம்ஸ்ச தாந்
துஷ்ட சும்ப நிசம்பமந்திநி நந்திதாமர வந்திதே
விஷ்ட பத்ரய துஷ்டிகாரிணி பத்ரகாளி நமோஸ்துதே

கோபது காளி ஸமரேச துர்கா என்ற வாக்கியத்தின்படி துஷ்டர்களை சிஷிக்கும் ஸமயம் சினம்கொண்டு காளியாக அவதரிக்கிறாள் அன்னை பராசக்தி. பத்ரகாளி என்ற பதத்திற்கு மங்களத்தையளிக்கும் காளி என்ற பொருளாகும். ஸ்வச்ரேயஸம் சிவம் பத்ரம் கல்யாணம் மங்களம்சுபம் என்ற அமரகோடி வாக்கியத்தின்மூலம் பத்ரம் என்றால் மங்களம் என்ற அர்த்தமாகும். காளீ என்றால் கருமை நிறமுடைய அன்னை எனும் பொருளாகும். அவ்விதம் மஹிமை வாய்ந்த அன்னையின் பெருமைகளை கூறும்.

காளீபூஜா ப்ரபாவம் என்ற கிரந்தமானது சிவஸ்ரீ விஜயஸோமசேகர சிவாசார்யாரின் மணிவிழாவன்று வித்யா ப்ரதான வைபவமாக வெளியிடுவது அவரின் இஷ்ட தெய்வமான ஸ்ரீகாளிகாம்பாளின் பரிபூரண அனுக்கரஹமேயாகும். மேலும் இந்த கிரந்தத்தில் காளியின் பூஜாமுறையை தாந்திரீகமுறையாக தொகுத்து எழுதி காளிதேவியின் ஸம்பந்தமான அனைத்து விஷயங்களையும் சேகரித்து தொகுத்து தூயதமிழ் விளத்துடனும் எழுதியுள்ளார். மேலும் இந்த மணிவிழா மலரின் காளியின் சிறப்பை மட்டுமின்றி ஸ்ரீவித்யா ஸம்பந்தமான விஷயங்களும், ரூபத்தியானங்கள், மந்திர விதானம், பிரார்த்தனா ஸ்லோகங்கள் தமிழ்மொழியில் பாட்டுகள் எல்லாம் மிக்க பிரயாசையுடன் தொகுத்துள்ளார். மார்கண்டேய புராணத்தில் ஒன்பது அத்யாயங்களைக் கொண்ட பத்ரகாளி மாஹாத்மியம் என்ற கிரந்தமானது கிரந்தலிபியிலும், தமிழ்மொழிபெயர்ப்புடனுடனும் தொகுத்து வெளியிட இலண்டனில் உள்ள ஓர் அன்பர் மூலம் எனக்கு பாக்யம் கிடைத்துள்ளது. அந்த நூலில் பரமேஸ்வரன் நெற்றிக்கண் மூலம் ஜநித்ய புத்ரியாகவும், கண்டே காளி என்றபெருடனும் பதினாறுகரங்களுடன், பிராம்யாதி ஸப்தமாதாக்களுக்கு தலைவியாக இருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸப்தசகிரந்தத்தில் த்யானம் என்ற பகுதியில் தச ஸாஹஸ்ரதோர்தண்டாம் நாநாசஸ்த்ராஸ்த்ர தாரிணீம் என்று பத்தாயிரம் கரங்களுடன் பலவித அஸ்திர சஸ்திரங்களை தரித்தவனாக இருக்கிறாள் என்றும் கூறப்பட்டுள்ளது. மணிவிழா நாயகர் தொகுத்து வெளியிடும் விழாமலரை நாம்யாவரும் பெற்றுக்கொண்டு அதிலிலுள்ள கருத்துக்கள் அனைத்தையும் அறிந்து கொண்டு ஸ்ரீ காளியின் திருவருளை அடைய பிறார்த்திக்கிறேன். விழாநாயகர் சுமார் பதினைந்து வருடங்களாக பலஅரிய கிரந்தங்களை தொகுத்து வெளியிட்டிருந்தாலும் இன்னமும் வருங்காலாத்தில் நம்அனைவருக்கும் உபயுக்தமான கிரந்தங்களை தொகுத்து வெளியிட்டு மிக்க ஸ்ரேயஸ்ஸாக இருக்க ஆசிவழங்குகிறேன்.

இப்படிக்கு,
S. சந்திரசேகர சிவாசார்யர், திருச்சி.

ஜெய் குருதேவ் சிவமயம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ப்ரசன்னா

சிவாகம விசாரதா – சிவாகம பிரவீணா – சிவாகம ஞானத்திலகம்

சிவஸ்ரீ.அவிநாசி.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்

குருத்துவம் – முதல் ஸ்தானிகம்

அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி

முதல்வர், வேத ஆகம சம்ஸ்க்ருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்

வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம்,சர்வதேச வாழும் கலை மையம், பெங்களூரு.

***A.S.Sundara Murthy Sivam*,**

PRINCIPAL, VEDA AGAMA SAMSKRUTHA MAHA PATASHALA, THE ART OF LIVING INTERNATIONAL CENTRE,

SRI SRI GURUKULAM, 21ST KM, KANAKAPURA ROAD, UDAYAPURA, BENGALURU – 560 082

Contact: 080 67262851, 9008499833, E-Mail: srisrigurukulinfo@gmail.com/ assmsivam@yahoo.co.in

Ref. No.VASMP/SSG/PO/531 உ Date:08.07.2018

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

காளீ பூஜா ப்ராபாவம்

மகிழ்வுரை

कलौ काली कलौ काली कलौ काली वरप्रदा।

कलौ काली कलौ काली कलौ काली तु केवला॥ - श्री काली रहस्ये

எல்லாம் வல்ல உமையொருபாகனின் துணை கொண்டு, பராசக்தி ஸ்ரீகாளிகாம்பாள் அம்மையின் திருவருள் துணைக்கொண்டு, இந்த சாக்தாகம வழிபாட்டை மேன்மேலும் சிறப்பிக்க சிவஸ்ரீ சோமசேகர சிவாச்சார்யார் அவர்களின் கைவண்ணம் எழுதிய "காளீபூஜா ப்ரபாவம்" என்ற நூல் அமைந்துள்ளது. இந்த நூலில் கூறப்பட்டுள்ள, காளீ ப்ரபாவத்தை, அடியேன் என்னால் முடிந்த தமிழில் இந்த காளீ ப்ரபாவத்தை பற்றி சிறு சிற்றுரையை வழங்க முற்படுகிறேன்.

कालि कालि महाकालि कालिके पापनाशिनी।

काली करालि निष्कान्ते कालिके त्वां नमोस्तुते॥

என்று காளீ ரஹஸ்யத்தில் கூறிய வண்ணம் காளியே வணங்கத்தக்க தெய்வமாவாள். कलौ चण्डी विनायकौ என்ற வாக்கியத்தின்படி கலியுகத்தில் காளியே வணங்கத்தக்க தெய்வங்களில் முதன்மையானவள். "காளீபூஜா ப்ரபாவம்" என்ற இந்த புத்தகமானது சரியான நேரத்தில் தான் வெளியாகி உள்ளது. தற்பொழுது கோயில்களில் நடைபெறும் பூஜையானது சிவாகமங்களில் கூறியவண்ணம் சிறப்பாக நடைபெற்றாலும், காளீ முதலாகிய தெய்வங்களுக்கு எவ்வாறு பூஜை செய்ய வேண்டும் என்று கூறும் புத்தகங்களின் எண்ணிக்கை குறைவே. மேலும் சாக்தாகமம் ஸம்பந்தமாக கிடைக்கும் புத்தகங்கள் அனைத்தும் ஸம்ஸ்க்ருத மொழியில் இருப்பதால், இந்த ஸமயத்தில் காளீபூஜா விதானம் என்ற புஸ்தகம்

முழுவதும் தமிழில் வெளியாகி உள்ளது ஒரு அற்புதமான செயலாகும். இந்த புத்தகத்தின் மூலம் பெரிய அம்பாள் ஆலயங்களில் பூஜையானது சிறப்பாக நடைபெற பேருதவியாக இருக்கும்.

प्रासादे गोपुरं चैव என்ற காரணாகம ஸ்லோகத்தின் மூலம் யார் யார் பூஜைகள் செய்வது உத்தமம், மத்யமம், அதமம் மற்றும் அதன் பயன்கள் என்ன போன்ற கருத்துகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. மேலும் தேவீ பல வடிவம் உடையவள் என்பதை, பிரம்மாண்ட புராணம் "பஹுரூபா" என்று எடுத்துரைக்கிறது.

न हि कालि समा विद्या न हि कालि समं वलम्।

न हि कालि समं ज्ञानं न हि कालि समं तपः॥

ஸ்ரீகாளியே ஸ்ரீசக்ரத்தில் அமர்ந்து கொண்டு சாந்த நிலையில் உலகமக்களை ரக்ஷிக்கிறாள். மேலும் சாக்தபூஜா விதிமுறையில் பராசக்தியிடமிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக, அவளது அம்சமாகவே ஆதிசக்தி வெளிப்பட்டதாயும், இவ்வாறே, அம்பிகையிடமிருந்து இச்சா, கிரியா, ஞான சக்திகளானது வெளிப்பட்டதாக வாதுளாகமம் விளக்கியது இவ்விடத்தில் மிகவும் வியப்பான செய்தியாக உள்ளது. காளியின் திருவுருவமானது பைரவர் மற்றும் வீரபத்திரர் உருவத்தை ஒத்த வடிவில் பெண்ணுருவாய் விளங்கும். காளியின் வடிவம் 64 வகையாக உள்ளதையும், காளிக்கு 4 முதல் 32 வரையிலும் கைகளும், 5 முதல் 1000 வரையிலான தலைகளுடனும், குஹ்யகாளீ என்பது பல்லாயிரம் கரம், சிரம் கொண்டதாயும், மிகவும் பயங்கரமாயும் கூறப்பட்டுள்ளதை நுலாசிரியார் அவர்கள் மிகவும் சிறப்பாக விளக்கியுள்ளார். காளீ வழிபாட்டு முறையில்,

1. पटलम् 2. पद्धति 3. वर्मः 4.नामसाहस्रकम् 5. स्तोत्राणि

முதலிய பஞ்சகத்தை பற்றியும், உபாஸனை பற்றியும், எளிமையான முறையில், தெளிவாக கூறியிருப்பது மேலும் இந்நூலுக்கு சிறப்பை தருகிறது. சக்தி மந்திர வகைகள் என்ற தலைப்பில், பஞ்சதசீ, ஷோடசீ போன்ற மந்திரங்களின் அக்ஷர அமைப்பும், இந்த மந்திரங்களின் சிறப்பும், 1. காதி வித்யா, 2. ஹாதி வித்யா, 3. க்ரோதாதி வித்யா, 4. வாகாதி வித்யா, 5. நாதி வித்யா, 6. தாதி வித்யா, 7.பிரணவாதி போன்ற மந்த்ரசாஸ்த்ரங்களில் கூறியுள்ளதை சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். மந்திரங்களில், ஒரே எழுத்து மந்திரங்களாக இருப்பவை அந்த தேவதையை அழைப்பவையே ஆகும். மாத்ரு கணங்கள் எவ்வாறு உருவாயின என்பதை பற்றியும், அவர்களின் பெயர்கள், 64 பைரவ, பைரவிகளின் பெயர்களும், உக்ரகாளியின் பெயர்களும், மஹாருத்ரர்களின் பெயர்களும், அவர்களின்

உறைவிட மலைகளை பற்றியும், தெளிவாக கூறியுள்ளார். மேலும், தேவியை எவ்வாறு ஆவாஹனம் செய்ய வேண்டும், எந்த பொருள் தேவியை ஆவாஹனம் செய்ய தகுதியானது என்பதை பற்றியும், தேவிக்கு ஸமர்ப்பிக்கும் தூப, தீபம் முதலிய ஷோடச உபசாரத்தையும், என்ன மந்திரம் கூறி எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை கூறியுள்ளார். மேலும் 64 சக்தி பீடங்கள் உருவான சிறுகதை, 64 சக்தி பீடங்கள் இப்பொழுது எங்கு உள்ளன, சக்தி பீடங்களின் மடாலயங்களின் பெயர்கள் என்ன என்பதையும், திவ்ய ஸ்தோத்திரங்கள், மற்றும் அவற்றை கூறுவதால் ஏற்படும் பயன்கள் பற்றியும், மிகவும் தெளிவாக விவரித்துள்ளார். காளீபூஜா ப்ரபாவம் என்ற இந்த புத்தகத்தில், காளீ ஸ்வரூபமாக உள்ள தக்ஷிணகாளியின் மஹிமையினை பற்றியும், பத்ரகாளீ, மஹாகாளீ, அகோரகாளீ, ஸ்மசானகாளீ, காமகாலகாளீ போன்ற காளீ-களின் பெருமை, மந்திர உச்சாடனத்தையும் தெளிவாக கூறியுள்ளார். பொதுவாக காளீயானவள், நித்யாகாளீ, மதுரகாளீ, பத்ரகாளீ என்று மூவகையாவாள். ப்ரத்யங்கிராகாளீ, சின்னமஸ்தாகாளீயின் உருவங்கள், த்யான பேதங்கள் மற்றும் உபாஸனா முறையை சிறப்பாக கூறியுள்ளார். உலகில் உள்ள அனைத்து உயிர்களும், இயங்குவதற்கு முழுகாரணம் சக்தியே. மனிதர்கள் முதல் தேவர்கள் வரை ஒரு விஷயத்தை செய்ய இயலவில்லை என்றால் தனக்கு அந்த காரியத்தை செய்ய சக்தி இல்லை என்றே கூறுவர். அப்படிப்பட்ட சக்தியை என்றும் தரும் பராசக்தி - காளீபூஜையை செய்ய இந்நூலானது சிவாச்சார்யார்களுக்கும், சாக்த உபாஸகர்களுக்கும் பெரிதும் உதவியாக இருக்கும் வண்ணம் பூஜைக்கு தேவையான அரிய காளீ அஷ்டோத்தரசதநாமாவளீ மற்றும் ஸஹஸ்ரநாமாவளியும் இந்த புத்தகத்தில் இணைந்திருப்பது, மேலும் சிறப்பை தருகிறது. பலசிறப்புகள் நிறைந்துள்ள இந்நூலைப் பயில்வதும் பாதுகாப்பதும் சமய மக்களின் தடமையாகும். அதுவே நூலாசிரியருக்கும் வெளியீட்டாளருக்கும்நாம் செய்யும் கைமாறாகும். இந் நூலைப் பயில்வோர், பாதுகாப்போர், ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் முதலியோர்களுக்கு எல்லாவித நன்மைகளையும் பெற ஸ்ரீஅவிநாசிலிங்கேசபெருமானை பிரார்த்திக்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,

A. S. சுந்தரமூர்த்தி சிவாச்சார்யார்

(A.S.சுந்தரமூர்த்தி சிவாச்சார்யார்)
பிரின்சிபால், வேத ஆகம சம்ஸ்க்ருத மஹாபாடசாலை
ஸ்ரீ ஸ்ரீ குருகுலம், பெங்களூர் - 82

ஹேவிளம்பி வருடம்,
ஆனி மாதம் 24ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை, 08 ஜூலை 2018

ஆகம ப்ரவீணர், அலங்கார கலாரத்னம்.
சிவாகம வாசஸ்பதி. தத்புருஷசிவம்.
சிவஸ்ரீ. **T.G. கல்யாணசுந்தரகுருக்கள்**
பிளாட் எண்.23, ஷாவாலஸ் காலனி, கணேஷ் கார்த்திக் அபார்ட்மெண்ட்,
சிட்லபாக்கம், சென்னை – 64. போன் : 044–2223 7052. செல் : 9952929765

வாழ்த்துரை

ஸ்வர்க்காவதரனேசான! ஸ்வாமின்! காத்யாயநீபதே!.

தேஜினீ நகரீநாத! ஹரமே பாதகம் ஹர!.

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் தம் சக்தியினால் படைப்பதோடு மட்டுமல்லாமல் காத்தும் அருள்பவள் ஆதிசக்தியே என்பது பலசான்றுகள் மூலம் அனைவரும் அறிந்த உண்மையாகும். மானிடராகப் பிறந்தவர்களுக்கு தர்மம், அர்த்தம், காம்யம், மோக்ஷம், (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற நான்கு விதபலன்களான புருஷார்த்தங்களை அடைய ஆன்றோர்கள் பலவிதமான வழிகளையும் முறைகளையும் சொல்லியுள்ளார்கள். இவற்றில் மிகச்சிறப்பு வாய்ந்த இறைவழிபாட்டில் சிவசக்திவழிபாட்டை சாக்தம் சிறப்பித்து கூறுகின்றது, சக்தி என்னும் மூலப்பொருள் ஒன்றாகியும் பலவாகியும் பல உருவ பேதங்களால் பல்வேறு நாமங்களுடன் இவ்வுலகை பரிபாலனம் செய்து வருகிறாள். சக்திகளில் காளியம்மன் சிறப்பு வாய்ந்தவள் ஆவாள். இவளே ஆதிசக்தியாவாள். மார்க்கண்டேயபுராணத்தில், சிவஸ்ய ஸ்த்ரீரூபம் காளி சிவனுடைய பெண்வடிவமே காளியாவார் என்கிறது. மனிதர்களுக்கு இக்காலத்தில் ஏற்படும் இன்னல்கள் அதிகமாக உள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்விதம் ஏற்பட்ட இன்னல்கள் நீங்கவும், இனிமேல் இன்னல்கள் வராமல் இருப்பதற்கும் இக்கலியுகத்தில் விரைவில் பயனளிக்கும் தெய்வங்களில் காளீயானவள் துணைபுரிவாள் என புராணங்கள் கூறுகிறது. காளீ, பத்ரகாளி என்றவுடன் அனைவருக்கும் ஒரு அச்சமும், பயமும் பெருந்தயக்கமும் ஏற்படுகிறது. இதனை கைவிட்டு அனைவரும் அச்சமின்றியும், தயக்கமின்றியும் இவளைப் பற்றிய விவரங்களை அனைவரும் நன்கு தெரிந்து கொண்டு, இவளை வழிபட்டு விரும்பிய பயனை அடையும் பொருட்டு, சிவஸ்ரீ. சோமசேகரசிவாசாரியர் அவர்களால் காளீ பூஜா ப்ரபாவம் என்ற தலைப்பில் காளியின்வடிவங்கள், அவை தோன்றிய விவரங்கள், இவளை வழிபட்டு பயனடைந்தவர்கள் இவளது பூஜையின் முறைகள், காளீபூசையின் பயன்கள் அனைத்தையும் முறைப்படுத்தி, தொகுத்துவழங்கியிருப்பது மிகஉயர்வான செயலாகும். இதனை பயன்படுத்தக் கூடியவர்கள், குருஉபதேசத்தோடு செய்பவரும், செய்விப்பவரும் மிகவும் போற்றத்தக்கவராவார்கள். இந்நூலில் அனைவரும் எளிதில் பயனடையும் வகையில் செய்திகள் தெளிவாகவும் தமிழில் விவரங்களையும் விளக்கமாக எடுத்துரைத்திருப்பது கற்றுபின்பற்றுவோருக்கு விரும்பிய பயனைஅளிக்கும் என்பதில் எந்தஐயமுமில்லை, காளீ பூஜாப்ரபாவம் என்ற இந்தமலரை நிதானமாகப்படித்து, பயன்படுத்த விரும்புபவர்கள் வேறுமலரை தேடிச்செல்ல மாட்டார்கள் எனத்தோன்றுகிறது. சென்னை தம்புசெட்டித்தெருவில் பழம்பெரும் ஆலயமாகத் திகழ்வதில் எழுந்தருளியுள்ள அன்னை

ஸ்ரீ காளிகாம்பாள் அருளால் பலருக்கும் நிறைவானபலன் கிடைக்கப்பெற்றுள்ளது என்பது உண்மை எவ்வாறு எனில்? இங்கு நடைபெற்ற பற்பலவிசேஷங்களில் மிகவும் முக்கியமான ப்ரத்யங்கிராவழிபாடு பல ஆண்டுகளாகச் சிறப்புறச் செய்ததினால், நம் அனைவருக்கும் பயன்படும்படியும், வருங்கால சந்ததியினர்க்கும் பயனளிக்கும் வகையிலும் காளீ பூஜாப்ரபாவம என்ற இந்நூல் (மலர்) அன்னையின் அருட்பிரசாதமாக குருவருளால் கிடைத்துள்ளது, என்று அனைவரும் அறியவேண்டும்.

ஆகமச்சிந்தனைகளையும், சாஸ்த்ரவிஷயங்களில் மேன்மையும், பலவற்றில் ஆராய்ச்சியும் செய்து திறமை நிறைந்து விளங்குகின்ற சிவஸ்ரீ.சோமசேகரசிவாசாரியர் அவர்களால் காளீபூஜாப்ரபாவம் என்ற நூல் (மலரை) தொகுத்து வழங்கப்பட்டுள்ளதுமிக்கமகிழ்ச்சியளிக்கிறது. தொடர்ந்து அவர்கள் இதுபோல பற்பல நூல்களை எழுதிவழங்க வேண்டும், என எல்லாம்வல்ல ஸ்ரீ சுந்தரகுசாம்பிகா ஸமேத தேஜினீநாதப் பெருமானையும், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மஹாலஷ்மி துர்க்கையம்மனையும் ப்ரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

இம்மலரை சிவாசாரியார் அறக்கட்டளையின் சார்பில் வெளியீடு செய்தவர்களையும் அன்னையின் அருளோடு அவர்களின் நற்பணிகள் தொடரவும் மேன்மைபெறவும் வாழ்த்துகிறேன்.



அருள்தரு சென்னை ஸ்ரீகாளிகாம்பாள்

அருள்தரு தில்லைகாளீ பிரம்மசாமுண்டா (4முகம்)

श्रीगुरुभ्यो नमः
ओन्नमो दक्षिणामूर्तये
SIVAGAMA KALAMANI, SIVAGAMA VACHASPATHI, VYAKARANA SIROMANI, VIDHYABOOSHANAM, SAIVAGAMASRI:, VAIDHIKA SAIVA RAKSHAMANI
Dr. C. KARTHIKEYA SIVACHARIAR M.A., Ph.D.
Assistant Professor, Dept. of Saivagama
S.V.VEDIC UNIVERSITY, TIRUPATHI.
Managing Trustee : Sri Adi Sankara Veda Agama Vidyalaya Trust.
Secretary : Sri Gnanambika Trust.

Date: 15-06-2018

சிவாப்யாம் நம:

காளீபூஜாப்ரபாவம் - அணிந்துரை

चतुर्भुजां त्रिणेत्रां च काळकण्ठीञ्च कर्णिकाम्।
दंष्ट्राकराळवदनां व्याघ्रचर्माम्बरावृताम्।।
खेटकं शूलहस्तञ्च कपालं डमरुं धृताम्।
किङ्किणीमालयायुक्तां भजेत्काळीं वरप्रदाम्।।

வைதீக மதங்களுல் ஶாக்தம் மிகவும் முக்யமானதாகும். தேவீ உபாஸனையினால் நாம் கிடைத்தற்கிரிய பேற்றை பெறுவது திண்ணம்.

उमा कात्यायनी गौरी <u>काळी</u> हैमवतीश्वरी என்பதாக அமரகோஶம் தேவியின் பெயர்களைக் கூறுகின்றது. மஹாகவி காளிதாஸரும் காளியின் அருளினாலிலேயே மிகப்பெரும் ஞானத்தை அடைந்தார். அவ்வாறாகவே பலர் தேவீயின் கருணைக்கு பாத்ரர்களாகி மிகப்பெரும் பேற்றை அடைந்துள்ளனர். அடைந்தும் வருகின்றனர்.

யாரொருவர் பூர்வஜன்மத்தில் புண்யம் செய்திருக்கின்றாரோ அவர்களுக்கே ஶாக்தோபாஸனையானது கிட்டும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என பஞ்சபூதங்கள் அனைத்தும் ஶக்தியின் வடிவமாகவே கூறப்படும். பரமேஶ்வரரின் ஸர்வ கர்த்ருத்வ ஶக்தியை ஞானக்ரியா ஶக்தியாக கூறுகின்றோம். இவ்வாறாக ஶக்தியின் பெருமை அளவிடமுடியாதது. நாம் பிறந்ததிலிருந்து பலவிதரூபமாக இருந்து நம்மை ஜகன்மாதாவே ரக்ஷித்துவருகின்றாள். அவளே மஹாகாளியாகும். அவளையே பரா, பஶ்யந்தீ, மத்யமா, வைகரீ என்பதாக கூறுகின்றோம். இதையே

லலிதா ஸஹஸ்ரநாமமும் விரித்துக்கூறும். இவ்வாறான பெருமைகளுடைய மஹாகாளியினுடைய ப்ரபாவத்தைக் கூறுவதென்பது மிகப்பெரும் செயலாகும். அவ்வாறான மிகப்பெரும் செயலைச் செய்து புத்தகரூபமாக ஆசிரியர் தந்துள்ளார். இதைப் படிப்பதும் தெரிந்துணர்வதும் நமது பூர்வஜன்ம புண்யத்தினாலேயே பெற முடியும்.

இப்புத்தகத்தில் காளியின் சொல் விளக்கம், மஹிமை, ஶாக்த ஸமயம், ஶக்தியின் வகைகள், தஶமஹாவித்யா ஆவிர்பாவம், காளியின் காருண்யம், பூஜைமுறை, மந்த்ர மஹிமை, உபாஸனா மார்க்கம், பஞ்சபல்லவம் முதலான பல அரிய விஷயங்களை ஆசிரியர் அளித்துள்ளார்கள்.

இப்புத்தகத்தைப் போலவே பல ஆராய்ச்சி நூல்களையும் ஆசிரியர் முன்பு லோகார்ப்பணம் செய்துள்ளார்கள். அதன் வழி இப்புத்தகமும் ஆராய்ச்சிநூலேயாகும். பல நுணுக்கமான செய்திகளை உடைய இப்புத்தகத்தை அனைவரும் படித்து ஆசரித்து பயனுற அன்னையைப் ப்ரார்த்திக்கின்றேன்.

பல உபயோகமான புத்தகங்களையும், ஞான நூல்களையும் வெளியிட்டுவரும் ஶிவாசார்ய அறக்கட்டளையின் மூலம் இப்புத்தகம் வெளியிடுவதும் அந்த ஸ்ரீகாளிகாம்பாளின் ப்ரஸாதமேயன்றி வேறல்ல. இக்கட்டளையின் நிர்வாகத்தார்கள் சிவஸ்ரீ ஸ்வாமி ஸதாசிவோம் ஸ்வாமிகள், சிவஸ்ரீ காளிதாஸ சிவாசார்ய ஸ்வாமிகள், சிவஸ்ரீ ஷண்முகஸுந்தர (சதீஷ்) சிவாசார்ய ஸ்வாமிகள் ஆகியோரும், நூலாசிரியரும், இதற்கு உறுதுணையாக இருந்தோரும் ஸ்ரீமஹாகாளியின் அருளால் இஹபர ஸுகங்களை அடைய அன்னை ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியை மனோ-வாக்-காயங்களால் பணிகின்றேன்.

சிவஸ்ரீ Dr. செ.வா. C.கார்த்திகேய சிவாசார்ய:
திருப்பதி.

Residence: 18-1-9, Ramachandra Nagar, K.T. Road, Tirupathi, Chittoor Dist., Andhra Pradesh-517 501. Ph. +919440268463, agamakarthi@gmail.com

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை

Vedantha Siromani, Sivagama Vachaspati
Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org, adisaiva@gmail.com

66/101, Ramaswamy Street,
Chennai - 600 001. Tamilnadu, India.
✆: 0091-44 - 2526 1320
Web: www.sivacharya.org

காளீ பூஜா ப்ரபாவம்

மகிழ்வுரை

தெய்வத் திருவுருவங்கள் ஒவ்வொன்றினையும் சிறப்பாக விளக்கி அருளக் கூடிய ஆற்றல் உடையவர் எங்களது குருநாதர் சிவஸ்ரீ V. சோமசேகர சிவாசார்யர் அவர்கள். மஹாபலிபுரம் சிற்பக் கலைக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் சைவ, வைஷ்ணவ, சாக்த ஆகமங்களில் அமைந்துள்ள சிலை அமைப்புகளை குறித்த தியானங்களுக்கும் ஆலய அமைப்பினை குறித்த விபரங்களையும் அழகிய தமிழில் மொழிபெயர்த்த பெருமை அண்ணாவையே சாரும். அவை புத்தகங்களாக அண்ணாவின் பெயரில் அங்கே அச்சிடவில்லை என்றாலும் அந்த நூற்குறிப்புகளே இன்றுவரை இந்தியா மட்டும் அல்லாது உலகம் முழுதும் சேவை செய்யும் பெரும்பான்மையான ஆலய அமைப்பாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதை அவர்கள், அண்ணா அவர்களிடம் கூறி மகிழ்ந்திருப்பதை கவனித்து இருக்கிறேன்.

"கோபேஷு காளீ " என்று கோபம் மிகுதியாக இருப்பின் எல்லாம் வல்ல அன்னையானவள் காளீ உருவத்தை எடுத்து மக்களின் கோபத்தை ஆட்கொள்வாள் என்பதை நமது வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

வாத்யார்அண்ணா அவர்கள் தன்னுடைய பன்முகப்பட்ட திறமையின் பயனாக காளிகா தேவியின் பேதங்கள் யாவை, அவற்றை வழிபடும் மந்திரங்கள் , பூஜா முறைகள் என்று காளியின் அனைத்து தத்துவங்களையும் மிகத்தெளிவாகவும் அனைவரும் எளிமையில் புரிந்து உணர்ந்து ஆனந்தித்திடும் வகையிலும் இந்த நூலில் அளித்திருப்பது காளி உபாஸகர்களுக்கு கிடைத்த பிரஸாதமே.

நமது ஆலயத்தில் வருடந்தோறும் அதர்வண பத்ரகாளீ என்று போற்றப்படும் ப்ரத்யங்கிரா தேவியின் சாந்தியை கார்த்திகை மாதம் செய்வித்து வைதீக தர்மம் தழைத்து ஓங்கவும் நமது பாரத தேசம் உயர்ந்த நிலையை அடையவும் உலகம் முழுவதும் சாந்தி நிலவவும் வேண்டி நடத்தி தருவது மிகச்சிறப்பானது. அந்த பராசக்தியின் வழிபாட்டினை தெளிவாக அளித்திருப்பது இந்த பூஜையானது இன்னும் பல இடங்களில் சிறப்பாக நடைபெற வழிகாட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

குறிப்பாக அம்பிகையின் த்ரிசதீ , ஸஹஸ்ரநாமம், தோத்திரங்களின் தொகுப்பு அனைவரும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. காளியின் ரூப த்யானங்களுக்கு சிறப்பான பொருளுரை அளித்திருப்பது பூஜை செய்பவர்களின் மனதில் அம்பிகையின் எழில் தோற்றம் நிலைத்து இருந்து வழிபட வழி வகுக்கும்.

"த்வம் ஸாக்ஷிணி ப்ரளய பைரவ தாண்டவானாம்" என்று அபீத குசாம்பிகா ஸதவத்தில் கூறியுள்ளபடி காளியே உலகை சிருஷ்ட்யாதி காரியங்கள் செய்வித்து, அவளே ஜீவராசிகள் கர்மவினைகள் அனுபவித்து பிறகு மறுபடியும் பிறவி எடுப்பதற்கு முன்னர் மஹாப்ரளய காலத்தில் கால பைரவருடன் பைரவியாக காளியாக இருந்து ஸாக்ஷியாக விளங்குகிறாள் என்பதை நாம் உணர முடிகிறது.

விஞ்ஞானத்தில் Black hole என்று ஒரு நிகழ்வை குறிப்பிடு கின்றார்கள். அதாவது உலகம் அனைத்தும் இந்த Black hole எனும் கருப்பு ஓட்டையினுள் ப்ரளய காலத்தில் சென்றுவிடும் என்று கூறுகிறார்கள்.நமது சாஸ்திரங்கள் கூறும் காளியையே அவர்கள் Black hole என்று குறிப்பிடுகிறார்கள் என்பது எனது அனுமானம். வேறு பெயர்கள் கூட அவர்கள் வைத்து இருக்கலாம். கருப்பு என்பது காளியையே குறிப்பது.

மதுரையில் மீனாக்ஷி அம்பிகை, திருவண்ணாமலையில் அபீதகுசாம்பிகை ஆகிய சக்திகள் காளியின் அம்சங்களே என்று வாத்யார் அண்ணா அவர்கள் கூறுவார்கள்.

இந்த ப்ரபஞ்ச சக்தியின் வழிபாட்டினை அனைவரும் செய்து பயன்பெற இந்நூல் ஒரு அற்புதமான வழிகாட்டி.

சக்தியை வழிபடும் சிறந்த மாதமாக விளங்கக்கூடிய இந்த ஆடி மாதத்தில் காளி ஆராதனையில் சிறந்து விளங்கக்கூடிய ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் அந்த சக்தியை அனுதினமும் வழிபட்டு அவளடி சேர்ந்த இறையடியாரும் எனது தந்தையுமான சிவஸ்ரீ தி.ஸா. சாம்பமூர்த்தி சிவாசார்யரின் நினைவாக எனது ஸஹோதரர் சிவஸ்ரீ தி.சா. காளிதாஸ சிவாசார்யர்அவர்கள் திறம்பட நடத்திவரும் சிவாசார்யர் அறக்கட்டளையின் வாயிலாக இந்நூல் வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இவை அனைத்தும் ஸ்ரீகாளிகாம்பிகையின் திவ்ய அருளினாலேயே நடைபெறுகிறது என்பதை உணர்கிறேன்.

எனது ஸகோதரரும் வாத்யார்அண்ணாவின் ஆத்ம நண்பருமான ஸ்வாமி ஸதாசிவோம் அவர்கள் அண்ணா அவர்களை "நடமாடும் பல்கலைக்கழகம்" என்றே குறிப்பிடுவார்கள்.

வாத்யார்அண்ணா அவர்களின் ஆசார்யர்களின் திவ்ய அனுக்ரஹத்தினால் அண்ணா அவர்கள் இது போன்று பல நூல்கள் வெளியிட்டு ஆன்மீக உலகில் நிலவி வரும் பல சந்தேகங்களை அகற்ற அனைவருக்கும் ஞானத்தை தந்திடுமாறு குருநாதர் அவர்களின் பாதார விந்தங்களில் விண்ணப்பத்தை ஸமர்ப்பிக்கிறேன்.

வாழ்க இந்தியா,

அண்ணாமலையார் அடிமை,

தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்

(விளம்பி வருடம் ஆனி மாதம் 17 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை)

1 ஜுலை 2018.

சென்னை-1

வெளியீட்டுரை.

மாதா மரகத ச்யாமா மாதங்கீ மத சாலினீ.
குர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்பவந வாஸினீ.

எல்லாம்வல்ல எம்பெருமாட்டி தாய் காளிகாம்பாளின் திருவருட்பயனால், உலகமக்களிடையே தெய்வபக்தி மேலோங்கி வளரவேண்டும். இந்து சமயத்தின் ஸநாதனதர்மம் தழைத்துஓங்கவேண்டும், என்றநோக்கில் எமது அறக்கட்டளையின் மூலமாக சமயஆன்மீக பொதுநலசேவைகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். இதில் குறிப்பாக எங்களது குருநாதரும், எமதுஅறக்கட்டளையின் கௌரவஆலோசகரும், மார்கதர்சியுமான சிவஸ்ரீ.வி.சோமசேகரசிவாசார்யர் அவர்கள் எழுதித் தொகுத்தளித்த பலதெய்வீகநூல்களை வெளியிட்டு சமய சமூகஅறப்பணியாற்றி வருகிறோம்.

பலஆதீனங்களினாலும், பல பல்கலைக்கழகங்களினாலும், பலவாறாக, விருதளித்து கௌரவிக்கப்பட்டுள்ள, எங்களதுகுருநாதர். சிவஸ்ரீ.வி.சோமசேகரசிவாசார்யார் அவர்களது ஷஷ்டியப்தபூர்த்தி விழாவானது விளம்பிவருஷம் ஆனிமாஸம் கிருத்திகைநக்ஷத்திரத்தன்று 09.07.2018 திங்களன்று நடைபெற்றது. அதன்நினைவாக அவர்கள்எழுதிய இந்த காளீ பூஜாப்ரபாவம் என்ற புத்தகத்தை, ஆடிமாஸசுக்ரவாரோத்ஸவத்தில் வெளியிடுவதை எண்ணி பெருமிதமடைகிறோம்.

இந்நூல் காளியை இஷ்டதெய்வமாகக் கொண்டு சிறப்பாக சிறப்பு நாட்களில் வீடுகளில் வழிபாடாற்ற விரும்பும் காளீ உபாஸகர்களுக்கும், காளீ ஆலய பூஜகர்களுக்கும் பெரிதும் உதவும் வகையில் அமைந்துள்ளது. தெய்வத்திருவுருவங்கள் நமக்கு உணர்த்திடும் தத்துவக் கருத்துக்களை உணர்ந்து வழிபடுவதால் சிரத்தையும் பக்தியும் சிறப்புற்று முழுமைபெறும். யாவரும் செய்யத்தக்கவகையில் எளியமுறையிலும் சிறப்பான உபசரிப்புகளோடும் விரிவாக செய்யத்தேவையான வகையிலும் பூசையின் செய்மறை கூறப்பட்டுள்ளதும் அப்பூசைக்குத் தேவையான பலவகை நாமார்ச்சனைகளும் துதிகளும், மந்திரங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது தனிச்சிறப்பு உடையதாக உள்ளது. ஆகையால் இப்புத்தகத்தைப் பின்பற்றி காளிதேவியை அனைவரும் வழிபடுவது கலியுகத்தில் விரைவில் அருள்தருவதாகும் என்பதில் ஐயமில்லை.

இந்தகாளிகாம்பாள் ஆலயத்தில் காளீயாகங்களை நடத்தி காளீபெருமைகளை எடுத்துரைத்த நூலாசிரியர் இந்த ஆலயத்தில் இந்த நூலைவெளியிடுவது எங்களையும் கௌரவப்படுத்துவதாக உள்ளது. இதனை எண்ணி பெருமிதம் கொள்வதோடுவாய்ப்பளித்தமைக்கு நன்றியோடு பணிந்து மகிழ்கிறோம்.

இந்நூலை பொதுமக்கள் யாவரும் பெற்றுபயன்பெற வேண்டுகிறோம். பலஅறிஞர்பெருமக்களும் இந்நூலைக் கண்டு அவசியத்தேவையை உணர்த்தியும் வாழ்த்தியும் அணிந்துரைகளை அளித்துள்ளதாக, சிறந்தமுறையில் அமைந்துள்ள இந்நூலை ஆஸ்தீகப்பொதுமக்கள் யாவரும் வேண்டிப்பெற்று பயனுறவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். இந்த புத்தகத்தை வெளியிடுவதற்கு எங்களுக்கு வாய்ப்பளித்தமைக்கும், நல்வழிகாட்டுதலுக்கும், மணிவிழா கண்டுள்ள எமது குருநாதரை வணங்கி, அவர்களின் சமயத்தொண்டு பல்லாண்டுகள்தொடர்ந்திட எம்பெருமாட்டி ஸ்ரீமாதா காளீகாம்பாளின் திருவருளைவேண்டி வணங்கி வாழ்த்துகின்றோம். நன்றி. வணக்கம்.

இப்படிக்கு
சாக்தச்செம்மல்

சிவஸ்ரீ. T.S.S. காளிதாஸ் சிவாசார்யர்.
ஸ்ரீகாளிகாம்பாள் ஆலய ஆசார்யர், சென்னை–1.



உ

ஓம் நமச்சிவாயை

பொருளடக்கம்

காளீ பூஜா ப்ரபாவம்

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
	விளக்கவுரைகள்	
1.	காளீ பூஜா ப்ரபாவம்	51
2.	காளீ தேவியின் தத்வவிளக்கம்	52
3.	காளீ உருவதத்துவம்.	53
4.	மஹாகாளியின் தோற்றம்	54
5.	மாகாளியின் மஹிமை.	56
6.	சக்திஎனும்சொல்விளக்கம்.	57
7.	சக்தியின் நிலை	57
8.	சாக்தசமயம்	58
9.	சக்தியின் வகைகள்	58
10.	தேவீ திரிகுணாத்மிகா	59
11.	விஷ்ணுமாயா ரூபிணீ	60
12.	மஹாகாளீ தோற்றம்	62
13.	திரிசக்திகள்	62
14.	சக்தி உத்பவமஹிமை	63
15.	சிவசக்திகளிருவரில் சிறிதும் பேதமில்லை	65
16.	பஞ்சசக்திகளின் பஞ்சகிருத்யமும் ரூபஅரூப நிலைகளும்.	65
17.	காளீ சொல் விளக்கம்	66
18.	ஜகத்காரணீ காளீ	67
19.	தசமஹாவித்யா ஆவிர்பாவம்	68
20.	ஜகதம்பா தக்ஷிணகாளிகா	69
21.	மங்களம்தரும் மாகாளி	70
22.	அபயம் அளிப்பவள் காளிகாம்பா	71
23.	காப்பவள் காளீ	72

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
24.	ஆணவத்தை ஒடுக்கும் அங்காளீ	73
25.	காளியின் காருண்யம்	75
26.	கலியுக வரதா காளீ	77
27.	காளியின் ஒப்பிலா மஹிமை	79
28.	ஸ்ரீசக்ரநிலயா காளிகா.	79
29.	காமாக்ஷிகாளியே காமகலா	80
30.	பராசக்தியும் பஞ்சகிருத்யமும்	81
31.	பத்ரகாளீ சாமுண்டா உருவத் தோற்ற விளக்கம்.	82
32.	சிவதூதீகாளீகா உருவத் தோற்ற விளக்கம்.	83
33.	தக்ஷிணகாளீ ப்ரபாவம்	84
34.	காளீதோற்றத்தின் தத்வரூப விளக்கம்.	86
35.	மாத்ருகாக்ஷரரூபிணீ	87
36.	காளியம்மை வெளிப்பட்டகாலம்.	89
37.	பத்ரகாளீ உருவவிளக்கம்.	90
38.	ச்மசானகாளீ உருவம்	90
39.	காமகலாகாளீ உருவம்	91
40.	பிரத்யங்கிரா ப்ரபாவம்.	92
41.	காளீஉத்பவத்தின் தத்வநோக்கம்.	96
42.	குஹ்யகாளீ ஸ்வரூபபேதவிளக்கம்.	100
43.	காளீ வழிபாட்டின் தனிச்சிறப்பு	103
44.	மஹாகாளீ ஆவிர்பாவம்	107
45.	காளீ அருள்தரும் தலங்கள்	110
46.	அஷ்டாதச சாக்தபீடங்கள்.	110
47.	50 சக்திபீடங்களின் பெயர்கள்	112
48.	அஷ்டாஷ்ட சக்திபீடங்கள்	115
49.	மாத்ருகண சக்திகள் 36.	119
50.	தேவியும் தலமும்	122

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
51.	காளிகளும் நரஸிம்மருத்ரார்களும்	126
52.	64 பைரவர்களும் 64 பைரவிகளும்.	129
53.	காளிஸ்தாபன காலவிதானம்	131
54.	காளீஸ்தாபனகால நிச்சயமுறை.	131
55.	காளீயாக நவகுண்ட நவசக்திகள்.	132
	வழிபாட்டுமுறைகள்	
56.	காளீபீடபத்மபூஜை	132
57.	காளீயாககுண்டங்களின்தத்துவஉருவம்.	133
58.	காளீபிரதிஷ்டாயாக கலசதெய்வங்கள்.	133
59.	காளீபூஜையில் கந்தாஷ்டகம்	133
60.	காளீ பிரதிஷ்டா யாகசாலையும் கலசதெய்வங்களும்.	134
61.	ஸப்தகன்னிகோயில்	136
62.	காளீஅஷ்டமங்களவடிவங்கள்.	136
63.	காளீதசாயுதங்கள்.	136
64.	காளீபூசையில் 16 உபசரிப்புமுறை.	137
65.	விசேஷபூஜாகாலவிதானம்.	137
66.	பூஜாசக்ரநிர்மாணவிதி.	137
67.	காளீயாககுண்டத்தின் உருவம்.	138
68.	காளீ விழாக்கால விதிமுறை.	138
69.	காளீஊர்வலத்தில் சிறப்பு உபசரிப்பு முறை.	139
70.	காளிபூஜைக்கு ஏற்ற பூஜகர் விதி.	140
71.	காளீ பூஜைக்கு ஏற்றமூர்த்தங்கள் உருவங்கள்	140
72.	மந்திரத்துடனான பூஜையின் மஹிமை.	141
73.	நவகும்பத்து நவகாளி பூஜைமுறை.	141
74.	காளீஉத்ஸவத்தில் பலிதானமுறை.	142
75.	காளீகொடியில் பூஜையும் விழாக்காலபலிதானமும்.	142

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
76.	காளீபூசைக்கேற்ற ஆகமநூல் வகை.	143
77.	சாக்தஸமய வழிநூல் குறிப்புகள்	144
78.	சதுஷ்ஷஷ்டி சாக்ததந்த்ர நாமாநி.	145
79.	சாக்த தந்த்ர நூல்கள்	145
80.	சாக்த சமய நூல்கள்	146
81.	காளியின் திவ்யதேச ஸ்தல ஆலயங்கள்.	149
82.	விச்வேசீகாளியின் விழிக்கருணை.	151
83.	சென்னை, காளிகாம்பாள் ஆலயஅமைப்பு.	153
84.	சாக்தபூஜா விதிமுறை	156
85.	காளியின் வழிபாட்டுமுறைகள்.	157
86.	காளிகோயில் பூசைமுறை	158
87.	காளீபூசையின் விசேஷபயன்	159
88.	காளீபூசையில் அரிய பொருட்கள்	160
89.	சாக்த மந்திர மஹிமை	161
90.	காளீஉபாஸனா மார்க்கம்	164
91.	பிறவிப்பயன்தருவது பூஜை	166
92.	பூசைவகைகள்	169
93.	தேவீவழிபாட்டுவிதி முறை	171
94.	காளீபூசைக்கேற்ற காலநேரம்	172
95.	காளீபூஜையில் பலியின் பயன்	174
96.	சரத்காலபூசைப் பயன்	174
97.	காளியின் பூஜாபயன்.	175
98.	வாழ்வின் பயன்	175

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
	காளீ ரூபதியானங்கள்	
99.	1. வரபத்ரகாளீ ரூபதியானம்	178
100.	2. பத்ரகாளீ ரூபதியானம்	179
101.	3. அஷ்டபுஜா பத்ரகாளீ ரூபதியானம்	179
102.	4. சிம்ஹாரூடா பத்ரகாளீ ரூபதியானம்	180
103.	5. உக்ரகாளீ ரூபதியானம்.	181
104.	6. அங்காளீ ரூபதியானம்.	182
105.	7. ரக்தசாமுண்டா த்யானம்	182
106.	8. ரக்ததந்திகா தியானம்	183
107.	9. பிரம்மசாமுண்டா ரூபதியானம்	184
108.	10. தக்ஷிணகாளீத்யானம்.	185
109.	12. பிரத்யங்கிரா ரூபதியானம்.	187
110.	13. சத்ருக்னா பிரத்யங்கிராகாளீ ரூபதியானம்	188
111.	14. உக்ரா பிரத்யங்கிரா தியானம்.	188
112.	15. சாங்கரீ பிரத்யங்கிரா தியானம்	189
113.	16. குஹ்யகாளி ரூபத்யானம்	189
114.	17. நிக்ரஹகாளீ ரூபதியானம்	191
115.	18. அனுக்ரஹகாளீ ரூபதியானம்	192
116.	19. பீடாஹாரீ சாமுண்டீ காளீ தியானம்.	192
117.	20. மஹாகாளீ தியானம்	193
118.	21. உக்ரா பத்ரகாளீ ரூபதியானம்	194
119.	22. மஹாகாளீரூபதியானம்	195
120.	23. அங்காளீ ரூபதியானம்.	195
121.	24. உக்ரகாளீ ரூபதியானம்.	196
122.	25. தசானனா மஹாகாளி ரூபதியானம்.	197
123.	26. பவானீகாளீ ரூபதியானம்.	198
124.	27. முஸலதாரிணீகாளீ தியானம்	199

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
125.	28. பூதவாஹினீகாளீ தியானம்	199
126.	29. ப்ரேதாஸநீகாளீ தியானம்.	200
127.	30. ஸிம்ஹவாஹினீகாளீ தியானம்	200
128.	31. அங்காளபரமேச்வரீ ரூபதியானம்	201
129.	32. திகம்பரா தக்ஷிணகாளீ தியானம்.	202
130.	33. ரிபுநாசினீ பிரத்யங்கிராகாளீ தியானம்.	203
131.	34. உக்ரசாமுண்டாதியானம்	203
132.	35. லோகேசீ சாமுண்டீ தியானம்	204
133.	36. ரக்தாக்ஷீ சாமுண்டீ தியானம்.	205
134.	37. காலருத்ர பைரவீ தியானம்.	206
135.	39. புவனேச்வரீகாளீ தியானம்	207
136.	40. நீலசாமுண்டா தியானம்.	208
137.	41. அக்னிபைரவீ காளீதியானம்	208
138.	42. ஷட்புஜா மஹாகாளீ தியானம்	210
139.	43. ஸிம்ஹரதஸ்தா காளீதியானம்	211
140.	44. ஔகாரிஅகோரகாளீ தியானம்	211
141.	45. தம்ஷ்ட்ரிணீ காளீ தியானம்	212
142.	46. சிம்மாஸனஸ்தா காளீதியானம்	213
143.	47. வனபத்ரகாளீ தியானம்	213
144.	48. கம்பீஜகாளீ தியானம்	214
145.	49. பாசஹஸ்தாபத்ரகாளீ தியானம்	214
146.	50. த்விபுஜாகாளீ தியானம்	215
147.	51. ஹலதராகாளீ தியானம்	215
148.	52. ஆத்யாகாளீ தியானம்	215
149.	53. காட்டேரீதியானம்	216
150.	காளீ துதி	216
151.	தக்ஷிணகாளியின் மந்திரமஹிமை	217

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
152.	தக்ஷிணகாளீ மந்திரவகை.	218
153.	காளியின் காயத்ரீ மந்திரங்கள்	223
154.	சாமுண்டீமாலாமந்திரம்	225
155.	சாமுண்டா மூலமந்திரம்	225
156.	பத்ரகாளி மூலமந்திரம்	226
157.	பைரவி மூலமந்திரம்	226
158.	சாமுண்டீமூலமந்திரம்	226
159.	ஸ்ரீதக்ஷிணகாளீ பூஜாவிபரம்	226
160.	மந்திரஜப கணிப்புஅளவு முறையும் இடமும்.	227
161.	காளீஹோம த்ரவ்யமும் பயனும்	227
162.	தக்ஷிணகாளீயின் பூஜைக்கான யந்திரம்	227
163.	காளீபூஜையின் மேன்மை–தனிச்சிறப்புப்பெருமை.	228
164.	காளியை அழைத்து இருத்தும் இருக்கையின் ஆஸன மந்திரம்	228
165.	காளீசக்கரம்	233
166.	காளீபூஜா லகுவிதி	236
167.	ஸ்ரீ காளீ ப்ராதஸ்மரணம்.	236
168.	ஆத்யா த்ரைலோக்ய விஜய கவசம்.	237
169.	காளீபூஜாஸங்கல்பம்	240
170.	சாந்திகும்ப ஸ்தாபனமுறை.	240
171.	சாந்திகலசப்பயன்	241
172.	கங்காஜலம்சேர்த்தல்	241
173.	ரத்தினங்கள் அல்லது தங்கம் சேர்த்தல்.	242
174.	பஞ்சபல்லவம் சேர்த்தல்	242
175.	ஸப்தமிருத்திகை சேர்த்தல்	242
176.	ஔஷதிகள் சேர்த்தல்	242
177.	சாந்திகலச அங்கபூஜை	243
178.	சாந்திக்கலசப்ரார்தனை.	244

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
179.	காளிவழிபாட்டிற்குரிய இடங்களும், காலங்களும்	244
180.	ப்ராணப்ரதிஷ்டா.	245
181.	சாமுண்டீ ஜீவநியாஸம்	246
182.	சாமுண்டீதேஹ சப்தமாத்ருநியாஸம்	246
183.	காளீநாமமாலா.	247
184.	காளீஷோடசோபசார லகுபூஜை	247
185.	காளீ பூஜாகல்பம்.	250
186.	ஸங்கல்பம் செய்யும்முறை	251
187.	மஹாஸங்கல்பம்:	254
188.	கணபதி யதாஸ்தானம் செய்தல்	254
189.	கணபதி அருட்பிரசாதம் ஏற்றல்	255
190.	ஸ்ரீபத்ரகாளீ பூஜை (72 உபசரிப்புகளுடன்)	255
191.	ஆசமனம்	255
192.	குருவந்தனம்	255
193.	குலதேவதா வந்தனம்	255
194.	ஆத்மரக்ஷை	256
195.	ஸாக்ஷிதீப பூஜை.	256
196.	கண்டாபூஜை	256
197.	கலசபூஜை	257
198.	சங்கபூஜா	258
199.	ஆத்மபூஜை	258
200.	பீட பூஜை:	258
201.	1. மஹாபத்ரகாளீ ரூபத்யானம்.	260
202.	2. ஆவாஹனம்.	260
203.	3. ஸ்தாபனம்.	261
204.	4. ஸந்நிதானம்.	261
205.	5. ஆஸனம்	261

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
206.	6. ஸ்வாகதம்	262
207.	7. பாத்யம்	262
208.	8. அர்க்யம்.	262
209.	9. ஆசமனம்	262
210.	10. மதுபர்க்கம்	263
211.	11. உத்வர்த்தனம்.	263
212.	12. ஸ்நானம்	263
213.	13. வஸ்த்ரயுகளம்	
214.	14. உபவீதம்.	264
215.	15. மாங்கல்யஸூத்ரம்	264
216.	16. ஆபரணாலங்கரணம்.	265
217.	17. கந்தலேபனம்.	265
218.	18. ஸிந்தூரம்.	266
219.	19. குங்குமம்.	266
220.	20. அக்ஷதம்	266
221.	21. புஷ்பமாலா	267
222.	22. அஷ்டாங்கபுஷ்பாணி.	267
223.	23. இஷ்டபுஷ்பார்பணம்.	267
224.	24. பில்வபத்ரம்.	268
225.	25. அலங்கரணம்	268
226.	26. புஷ்பபூஜனம்	269
227.	27. காளிநாமார்ச்சனை.	270
228.	28. தூபம்	271
229.	29. தீபம்	272
230.	30. சுகந்த த்ரவ்யம்	272
231.	31. கற்பூரதீபம்.	272
232.	32. அன்னநைவேத்யம்.	273

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
233.	33. பழவகைநிவேதனம்	273
234.	34. பானீயநிவேதனம்	274
235.	35. கரோர்த்வர்தனஜலம்.	274
236.	36. தாம்பூலம்.	274
237.	37. கஞ்ஜலம்/அஞ்ஜனம்	275
238.	38. அலக்தகம்.	275
239.	39. ஆராத்ரிகம்.	275
240.	40. ஜபஸமர்ப்பணம்.	276
241.	41. புஷ்பாஞ்ஜலி	276
242.	42. பரிவார பூஜாநுக்ஞா	276
243.	43. காளீநித்ய த்வாரதேவதா அர்ச்சனம்.	277
244.	44. தசதிக்பாலகார்ச்சனம்	277
245.	45. காளீ நவாவரணபூஜை.	277
246.	46. காளீகர ஆயுதபூஜை.	280
247.	47. ஆயுத சக்தி தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்தல்.	281
248.	48. சிவா பலிதான முறை.	281
249.	49. பூஜாந்த ஸ்தோத்ரபாடம் பூசைமுடிவில்	282
250.	50. வர ப்ரார்தனா	282
251.	51. தேவிக்குரிய ஹோமத்திரவியங்கள்.	283
252.	52. காளீபுஷ்பாஞ்ஜலி	284
253.	53. மஹாகாளரின்லகுபூஜா.	284
254.	54. ராஜோபசாரங்கள்.	285
255.	55. மணி=கைமணி அளித்தல்	286
256.	56. தக்ஷிணாஸமர்ப்பணம்	286
257.	57. அச்சித்ராவதாரணம்	286
258.	58. க்ஷமாபணம்	286
259.	59. நவதந்து ரக்ஷாபூஜை	287

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
260.	60. தோரக/க்ரந்தி பூஜை	288
261.	61. ரக்ஷாசூத்ரபந்தனம்.	288
262.	62. க்ஷீரதர்ப்பணம்	288
263.	63. மந்த்ரபுஷ்பார்பணம்.	290
264.	64. ஸ்தோத்ரம்	291
265.	65. ப்ரதக்ஷிணம்.	291
266.	66. நமஸ்காரம்	291
267.	67. வரப்ரார்த்தனை.	292
268.	68. புவனேச்வரீ ஸ்தோத்ரம்.	292
269.	69. க்ஷமாப்ரார்த்தனா.	294
270.	70. அபீஷ்டப்ரார்த்தனை.	294
271.	71. மங்களஹாரதி. மங்கள நீராஜனம்.	294
272.	71. காளீ தேவீ விஸர்ஜனம்.	295
273.	72. பூஜையின் பயனை ப்ரம்மார்பணம் செய்தல்	296
274.	தேவீஸ்தோத்திரம்.	296
275.	ப்ரத்யங்கிராகாளீபெருமை	298
276.	ப்ரத்யங்கிரா தேவீ யந்திர அமைப்பு	299
277.	ஸ்ரீ ப்ரத்யங்கிராகாளீ நவாவரண பூஜை.	299
278.	ஸ்ரீசக்ரமேரு அல்லது யந்திரம்	302
279.	ஸ்ரீசக்ரதேவ்யார்ச்சனம்	303
280.	ஸ்ரீசக்ரநாயகி மஹா த்ரிபுரசுந்தரீ ஷோடசோபசார பூஜை	303
281.	ஸ்ரீ காளி அஷ்டோத்திர சதநாமாவளி (108)	308
282.	ஸ்ரீகாளீ ககாரநாம சதாஷ்டகம் (108)	310
283.	காளீபீஜாக்ஷர த்ரிசதி நாமாவளி. (300பெயர்வரிசை)	313
284.	காளீ ஸஹஸ்ர நாமாவளி. (1008)	324
285.	காளீகவசம். (காளியின் காப்புத் துதி)	341
286.	காளராத்ரீ சிவதூதீ உருவம்	342

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
287.	சப்தசுலோகீ காளராத்ரீஸ்துதி	342
288.	காளீ தசக ஸ்தவம்	343
289.	சியாமளா நவரத்னமாலிகா	345
290.	மாலாமந்த்ரரூபஸ்துதி அஷ்டகம்	346
291.	பத்ரகாளீ ப்ரணதி பஞ்சகம்	347
292.	ஸ்ரீ கணேசத்யானம்	347
293.	பிரத்யங்கிரா காளீ ப்ரணதி	347
294.	காளீ பிரார்த்தனை.	348
295.	ஸ்ரீகாளீகாயத்ரீ	348
296.	ஸ்ரீ காளீ மூலமந்திரம்	348
297.	பத்ரகாளீ ஸ்துதிபஞ்சகம்	348
298.	அதர்வண பத்ரகாளி திருவருள்மாலை	349
299.	சாமுண்டீ மங்கள ரத்னமாலா	352
300.	வரம் வேண்டுதல் பிரத்யங்கிரா காளியே சரணமம்மா	354
301.	காளீபெயர்வகை.	356

காளீ பூஜா ப்ரபாவம்

(காளீ வழிபாட்டுப் பெருமைகள்)

நவதுர்காம் மஹாகாளீம் ப்ரம்மவிஷ்ணு சிவாத்மிகாம்.
திரிகால ஞான ஸம்பன்னாம் நமாமி புவனேஸ்வரீம்.

* * * * *

காளி ! காளி ! மஹாகாளி ! காளிகே ! பாபநாசினி !
காளி ! கராளி ! நிஷ்க்ராந்தே ! காளிகே ! த்வாம் நதோஸ்ம் யஹம் !!

* * * * *

ஸ்ரீமாதா காளியே பரப்ரம்மஸ்வரூபிணி. இவளே ஆதிசக்தி. இந்த ப்ரம்மாண்டகோளங்களாகிய அனைத்து உலகங்களைத் தோற்றுவித்தவளும், அவற்றைக் காப்பவளும், அவற்றை அவற்றின் இயல்புநிலையில் ஒடுக்குபவளும் காளியே. இவள் சிவசக்தியே ஆவாள். தீயினில் வெப்பம் போல சிவமும் சக்தியும் பிரியாது விளங்கும். உலகம் சக்திமயமானது. இத்தகைய ஜகன்மாதாவின் கருணை அளவிடற்கரிய மஹிமை உடையதாகும்.

காளீ தேவியின் தத்வவிளக்கம்

ஜயந்தீ மங்களா காளீ பத்ரகாளீ கபாலினீ.
துர்கா க்ஷமா சிவா தாத்ரீ ஸ்வாஹா ஸ்வதா நமோஸ்துதே.

சிவனிடத்தில் பிரியாது ஸமவேதசக்தியாகஇருக்கும் சித்சக்திக்கே காளீ என்று பெயர். ஒரு நொடி, கணம், க்ஷணம், நிமிஷம், கலா, காஷ்டா முதலாக ஸர்வஸம்ஹாரம்நடைபெறுகிற மஹாகல்பகாலம் வரையில் உள்ளதான காலத்தின் எல்லாவடிவமாகவும் இந்த சித்சக்தியே, இருப்பதால், இவளுக்கு காளீ என்றுபெயர். இதனை தேவீமஹாத்மியத்தின் 11வது அத்யாயத்து சுலோகத்தால் அறியலாம். அதில்,

கலா காஷ்டாதி ரூபேண பரிணாம ப்ரதாயினி!.
விச்வஸ் யோபரதௌ சக்தே! நாராயணி! நமோ ஸ்து தே.

என்று கூறப்படுகிறது. இதன்பொருள், இந்த பிரபஞ்சத்தில் உள்ள தனு கரண புவனங்களுக்கெல்லாம், பலவிதமான பரிணாமத்தை (மாறுதல்களை) உண்டுபண்ணி, இறுதியில் அவற்றை அழிப்பவள், மீண்டும் ஆக்குபவள் என்றுபொருள், அனைத்து ஜீவான்மாக்களுடைய சரீரங்களும் சைவம்=இளமை, பால்யம்=பாலப்பருவம், கௌமாரம், யௌவனம், வாலிபப்பருவம் வார்த்தக்யம்=முதுமைப்பருவம் முதலான பருவங்களால் பலவிதமாக மாறுபட்டஉருவத் தோற்றங்களை அடைந்து. இறுதியில் அவ்வுடல்கள் அழிந்துவிடுகின்றன. இதனை உலகில் அனைவரும் அறிவார்கள். இவைகள் எல்லாம் காலத்தினால் உண்டாகும் செயல்கள். சைவசித்தாந்தத்தின் கொள்கைப்படி, காலம் என்பது அசுத்தமாயையிலிருந்து முதன்முதலாக தோன்றிய தத்துவம். இது சென்றகாலம். நிகழ்காலம். எதிர்காலம் என்று மூன்றுவகையான பிரிவையுடையது. இந்த தத்துவம் தானாகவே தோன்றுவதற்கோ, செயல்படுவதற்கோ, திறமைஇல்லாதது. இதுபோன்ற அசேதனமான அறிவற்ற பொருள் எதுவும் ஒரு சேதனனுடைய, அதாவது வேறுஒரு அறிவுடையவனின் தூண்டுதல் இல்லாமல் ஒருபோதும் செயல்படுவதில்லை என்கிறது சைவமிருகேந்திராகமம். அதாவது,

அசேதனம் ஜகத் விப்ரா: ஸ்வ ப்ரவிருத்தௌ ரதாதி வத்.
ப்ரவிருத்தௌ வா நிவ்ருத்தௌ வா ந ஸ்வதந்திரம் கடாதி வத்.
(மிருகேந்திராகமம்)

என்கிறது இதன்பொருள், இந்தஉலகில் தேர்முதலான அசேதனமான பொருள்கள், சேதனனான ஒருபுருஷனுடைய தேரோட்டியின்

முயற்சிஇல்லாமல் எவ்வாறு? அசைவதில்லையோ, அதேபோன்று, அசேதனமான காலதத்துவமும், சித்ரூபியாகஉள்ள சிவசக்தியின் முயற்சிஇல்லாமல் தானாகவே தோன்றி தனு கரணாதிகளில் பலவிதமான தோற்றங்களை உண்டுபண்ணுவதும் அழிப்பதும் இல்லை. எனவே அனைத்துப் பிரபஞ்சத்திற்கும் நிமித்தகாரணமான சிவன், சிருஷ்டியின் ஆரம்பகாலத்தில் தன்னிடத்தில் (அபின்னமாக) பிரியாதிருக்கும் சித்ரூபியான சக்தியை தனக்குதுணைக் கருவியாகக்கொண்டு, உபாதானகாரணமான மாயையை க்ஷோபிக்கச் செய்து, (கலக்கமுறசெய்து) காலம்முதலான தத்துவங்களை படைக்கிறார். பிறகு ஸர்வஸம்ஹாரகாலத்தில் அந்தசக்தியைக்கொண்டே, உபாதானமான காரணமாயையில் ஒடுங்கச்செய்கிறார். இக்கருத்தே தேவீமாஹாத்மியம் 12வது அத்தியாயசுலோகத்தால் அறியப்படுகிறது.

மஹா காள்யா மஹாகாலே மஹாமாயா ஸ்வரூபயா.
ஸைவ காலே மஹாமாரீ ஸைவ சிருஷ்டிர் பவதி யஜா. (சப்தசதீ)

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே சித்ரூபியான சிவசக்தியே மாயையிலிருந்து புவனங்களையும், உடன்காலதத்துவத்தைப் படைத்து, அதில் அதிஷ்டித்திருந்து, பலவிதமான பரிணாமங்களை உண்டாக்கி, இறுதியில் அவைகளை அழிப்பவளாகவும் இருப்பதால், அந்த சித்சக்தியே காளீ என்பவளாகிறாள்.

காளீ உருவதத்துவம்.

இவள் ஞானமேவடிவான சித்சக்தி. காளீ என்றபெயர் வருவதற்கு யாது காரணம்? எனில், காலத்தைஉடையவள் காளீ. சித்ரூபிணியானகாளியும் சிவனிடத்தில் அபின்னமாய்சேர்ந்திருப்பதால், சிவனுக்கும் மஹாகாளன் என்றபெயர் உண்டு. காளீ என்று சொன்னவுடன் அனைத்து மக்களுக்கும் நினைவில் வரக்கூடிய உருவம், கோர தெத்திப்பற்கள், ஜ்வாலாகேசம், (தீச்சுடர்முடி) பருத்தவிழி இவைகளோடுகூடிய ஓர் உருவமாகும். ஆனால் காளீ என்பவள் சாந்தரூபிணியாகவும், உக்ரரூபிணியாகவும் இருவகையாய் இருப்பவள். இக்கருத்தை "ஸௌம்யா ஸௌம்யதரா அசேஷ ஸௌம்யேப்ய; அதிசுந்தரீ" என்று தேவீமாஹாத்மியத்தில் கூறப்படுவதாலும் அறியலாம்.

நிர்குணஸ்வரூபிணியான சித்சக்தியே உலகில் துஷ்டர்களை அழித்து, ஸாதுக்களைக் காத்தருளவேண்டி அவ்வப்பொழுது ஸகுணஸ்வரூபிணியாக ஆவிர்பவிப்பாள். மதுகைடபவதத்திற்காக, தமோகுணத்தை ஆச்ரயித்து மஹாகாளியாகவும், மஹிஷாசுர வதத்தின்

பொருட்டு ரஜோகுணத்தை ஆச்ரயித்து மஹாலக்ஷ்மியாகவும், சும்பநிசும்ப வதத்திற்காக ஸத்வகுணத்தை ஆச்ரயித்து மஹாஸரஸ்வதியாகவும் ஆவிர்பவித்தாள். முக்குணங்களை சார்ந்துநின்று தேவீ வெளிப்பட்டதை இனி காண்போம்.

மஹாகாளியின் தோற்றம் (தாமஸீ, காளீ)

தமோகுணத்தின் செயல்கள் மயக்கம், தூக்கம், சோம்பல் முதலானவைகளாகும். முன்பு ஒருசமயம் மஹாப்ரளயகாலத்தில் மஹாமாயையின் பிரபாவத்தால் யோகநித்திரையில் (தூக்கத்தில்) ஆழ்ந்திருந்த, மஹாவிஷ்ணுவின் காதுகுரும்பையில் இருந்து தோன்றிய, மது, கைடபன், என்ற இரண்டு அரக்கர்கள் விஷ்ணுவின் நாபிகமலத்தில் அமர்ந்திருக்கும் பிரம்மதேவனோடு போர்புரிய முயற்சித்தார்கள். அப்பொழுது, அவர்களைக்கண்டு அஞ்சிய பிரம்மதேவன், மஹாவிஷ்ணுவை மோஹித்து யோகநித்திரையில் ஆழ்த்தியுள்ள தேவீ மஹாமாயை என்பவள் அவரைவிட்டு விலகவேண்டும் என்றுகருதி சித்ரூபிணியான சக்தியை துதிக்கிறார். அப்பொழுது சித்சக்தியின் அருளால் யோகநித்திரையாக இருந்த விஷ்ணுவைவிட்டு பள்ளியிலிருந்து மாயை விலகியவுடன், விஷ்ணு விழித்தெழுந்து அந்த அரக்கர்களோடு போர்புரிந்து அவர்களை வதம் செய்கிறார். இந்த இடத்தில் முக்யமாக ஓர் விஷயத்தை நாம் சிந்திக்க வேண்டும். மதுகைடபக்னீ என்று காளிக்கும் பெயர் உண்டு. மஹாவிஷ்ணுவிற்கும் மதுஸூதனன் என்றும் கைடபாரி என்றும் பெயர் உண்டு. வெளித்தோற்றத்தில் மஹாவிஷ்ணு வதம்செய்ததாக தோன்றினாலும், சித்சக்தியே மஹாகாளீவடிவமாக அவர்களுக்கு புத்திரூபமாக விஷ்ணுவை அதிஷ்டித்திருந்து வதம்செய்வித்தாள் என்பது உண்மை. இதனை அனைவரும் உணரவேண்டும். ஆகவே தமோகுணத்தினால் மோஹிக்கப்பட்டு யோகநித்திரையில் ஆழ்ந்திருந்த மஹாவிஷ்ணுவின் சரீரத்தில் அந்தர்யாமினியாக இருந்துகொண்டு, மதுகைடபர்களை அழித்ததால் மஹாகாளிக்கு தாமஸீ என்று பெயர், இந்த சக்தியே தேவீமாஹாத்மிய முதல்அத்தியாயத்திற்கு அதிதேவதையாகிறாள்.

அடுத்ததாக நிர்குணஸ்வரூபிணியான சிவனது சித்சத்தியே மகிஷாசுரவதத்திற்காக ரஜோகுணத்தை ஆச்ரயித்து மஹாலக்ஷ்மீ என்றபெயருடன் அவதரிப்பாள். உலகில் ரஜோகுணம் மிகுதியாகஉள்ள ஒருவன் பிறருடைய பொருள்களை விரும்புகின்றவனாகவும், அதிகம் கோபமுள்ளவனாகவும், பிறருடன் சண்டையிடுவதில் விருப்பமுள்ளவனாகவும் இருப்பான். ஒருசமயம் மஹிஷாசுரனால் துன்புறுத்தப்பட்ட இந்திரன் முதலான தேவர்கள், சிவன், விஷ்ணு,

பிரமன் முதலான தேவர்களிடம் முறையிடச்சென்று, மஹிஷாசுரனால் தங்களுக்குநேர்ந்த துன்பங்களைச் சொல்லி அவனை வதம்செய்து எங்களைக் காத்தருளவேண்டும் எனவேண்டினர், அப்பொழுது, கோபத்தினால்கொதித்தெழுந்த சிவன் விஷ்ணு பிரம்மா இந்திரன் முதலான தேவர்களுடைய சரீரத்திலிருந்து எழுந்தகோபாக்னியானது மிகப்பெரிய ஒளிமயமான ஓர்அழகிய பெண்உருவமாகி காக்ஷியளித்தது. அந்தசக்தியிடம் சிவன் முதலான தேவர்கள் பலரும் தன்னிடமுள்ள படையான திரிசூலம்முதலான ஆயுதங்களைக்கொடுத்து மஹிஷாசுரனை வதம்செய்ய அனுப்பிவைத்தார்கள். இப்பொழுது சித்ரூபிணியான சித்சக்தி ரஜோகுணத்தை ஆச்ரயித்துவெளிப்பட்டதால், ஸகுணபிரம்மமாக இருப்பாள்.

அடுத்ததாக சித்ரூபிணியானசிவசக்தி ஸத்வகுணத்தை ஆச்ரயித்து **மஹாஸரஸ்வதியாக** அவதரித்தாள், ஸத்வகுணத்தின்சிறப்பு, நல்லஒழுக்கம், அஹிம்ஸை, கோபமின்மை, அமைதி, பிறருடைய பொருளை விரும்பாதிருத்தல், நல்லஆசாரம், அனுஷ்டானம் முதலானவைகளாகும். ஒரு சமயம் இமாசலத்தில் (கயிலை எனும் பனிமலையில்) பார்வதி தேவியானவள் கங்காநதியில் புனிதநீராடுவதற்காக சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது, சும்பன் நிசும்பன் என்ற அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள், அங்குசென்று தேவியிடம் அசுரர்களை வதம்செய்து எங்களைக் காத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்து, **நமோ தேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம் நம:** என்று பலவாறாக துதித்தார்கள், அப்பொழுது பார்வதிதேவியானவள் தேவர்களைப்பார்த்து நீங்கள் யாரை துதிக்கிறீர்கள்? என்று கேட்டவுடன் பார்வதியின் சரீரத்திற்குள் நிர்குண ஸ்வரூபிணியாக இருக்கும் சிவனுடைய ஒளிமயமாக சித்சக்திவெளிப்பட்டு ஹிமாசலத்தின் உச்சியில்அமர்ந்து விட்டாள். பார்வதியின் சரீரத்திற்குள் இருந்தஒளி வெளிவந்தவுடன் அந்த பார்வதியே உடல் கருமையானநிறமுடையவளாக **காளி** என்ற பெயரால் அழைக்கப்பட்டாள். மஹாசரஸ்வதிக்கு கௌசிகீ என்று பெயர் உண்டு. பார்வதியினுடைய சரீரமாகிறகோசத்தில் இருந்து வெளிவந்ததால் **கௌசிகீ** என்று அழைக்கப்பட்டாள், கோசம் என்றசொல்லிற்கு உறைவிடம் என்று பொருள், போர்வீரர்கள் தன்னிடத்தில்இருக்கும் ஒளிமயமான போர்வாளை, தேவைஇல்லாத ஸமயத்தில் அந்தஉரைக்குள் வெளியில் தெரியாமல் அமர்த்தி விடுவார்கள். அவசியமாக தேவைப்படும் சமயத்தில் மட்டுமே அந்தவாளை உரையிலிருந்து வெளிப்படுத்துவார்கள். அதே போன்று சித்ரூபிணியானசிவசக்தியும் அசுரர்களை வதம்செய்யவேண்டிய அவசியம்ஏற்பட்டதால் கோசம்போன்ற பார்வதியின்சரீரத்திருந்து

வெளிப்பட்டாள். அதனால் இவள் **கௌசிகீ** என்று அழைக்கப்பட்டாள். இவ்வாறு நிர்குணசித்ஸ்வரூபிணியான சிவசக்திஒருத்தியே தமஸ், ரஜஸ், ஸத்வம் என்ற முக்குணங்களையுடைய, மஹாவிஷ்ணு, சிவன், முதலான தேவர்கள், பார்வதி, ஆகியவர்களுடைய சரீரத்திலிருந்து வெளிப்பட்டதால், **மஹாகாளீ** என்றும், **மஹாலக்ஷ்மீ** என்றும், **மஹாஸரஸ்வதீ** என்றும் அழைக்கப்படுகிறாள். மார்க்கண்டேயபுராணத்து தேவீமாஹாத்மியத்தின் இரண்டு மற்றும் மூன்றாம் அத்தியாயங்களில், காளியின் அபரிமிதமான கருணையானது விளக்கிக் கூறப்பட்டு உள்ளதால் நன்கு அறியலாம், (எடுத்துக்காட்டு)

சித்தே கிருபா ஸமரநிஷ்டுரதா ச திருஷ்டா.
த்வய் யேவ! தேவி வரதே! புவன த்ரயேபி. (சப்தசதீ)

என்று கூறப்பட்டு உள்ளது. இதன்பொருள் தேவியானவள் துஷ்டர்களான அசுரர்களோடு போர்புரியும்காலத்தில் உக்ரமானவளாக கொடுமையான வெளித்தோற்றத்தில் காணப்படினும் (மனதிற்குள் கருணை) உள்ளத்தில்கிருபை நிறைந்தவள் என்றும், மூவுலகிலும் காளிதேவியே வரமளித்து காக்கக்கூடியவள் என்று தேவர்கள் துதித்து புகழ்ந்துள்ளனர்.

மாகாளியின் மஹிமை.

நிர்குணஸ்வரூபிணியான சித்சக்தியே ஸகுணபிரம்மமாக அவதாரம்செய்து துஷ்டர்களைமாய்த்து சிஷ்டர்களைக்காத்தருள்கிறாள். அதர்வசீர்ஷ உபநிஷதம் தேவியின் திருவாக்காகவே தேவியின் மஹிமையைக் கூறுகையில் **அஹம் பிரம்மஸ்வரூபிணி. மத்தப் பிரகிருதிபுருஷாத்மகம் ஜகத்** என்று கூறுகிறது. இதன்பொருள் தேவியே பரப்பிரம்மம். இதிலிருந்தே மூலபிரகிருதி, உலகம் உயிர்கள் அடங்கிய பிரபஞ்சம் யாவும்வெளிப்பட்டன என்பதாகும். சாந்தமான வடிவில்உள்ள சிவனுக்கு, உக்ரன், ருத்ரன், பீமன் என்றபெயர்கள் உள்ளதைப்போலவே, உக்ரமானவடிவில் உள்ள காளியும், **"அதிஸௌம் யாதிரௌத்ராயை நதாஸ்தஸ்யை நமோ நம:"** என்றவாக்கின்படி மிகவும் சௌமியமாகவும், மிககோரமாகவும் உள்ளபராசக்திகாளியே கருணையே வடிவானவளும் ஆகிறாள். போர்புரிதலன்றி இவள் பார்த்தாலே எரிக்கும்ஆற்றல் இருந்தபோதும் தேவீ உயிர்களிடத்தில் உள்ள கருணையினால், போர்வீரன் போரில் ஆயுதத்தால் தாக்குண்டு மரித்தானேயானால், அவனுக்கு வீரசொர்க்கம் உண்டு என்ற அறப்போர் நீதியின்காரணமாக தன்னை எதிர்த்துப்போரிடுபவனும் சுவர்க்கம்

அடையவேண்டும் என்றகருணையினால் ஆயுதத்தால் அசுரர்களை அழித்தாளே அன்றி, அவளுக்கு ஆயுதமே தேவையில்லை. இதனை, **யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா** என்றவசனப்படி ஸகல பிராணிகளிடத்திலும் பூதங்களிலும் **தாய்வடிவமாயும், தயைவடிவமாயும்** விளங்குபவளாக, தேவாசுரர்கள்முதலான அனைத்துஉயிர்களிடத்திலும் தயாரூபிணியாகவே விருப்புவெறுப்பு இரண்டும் அற்றவளாக இருந்து அனைவருக்கும் நன்மை அளித்திட எண்ணம்கொண்டவளே **காளீ. வைரிஷ்வபி பிரகடிதைவ தயா த்வயேத்தம்** என்ற இந்திராதியர்களின் தேவீமாஹாத்மியத் துதிவாக்கியத்தின்படி பகைவர்களிடத்திலும் வெளிப்படுத்திய இரக்கமுடையவள் காளீ என்பதும் அவள்மாய்த்தவர்களை தனதுதிருவடிக்கீழ் இருத்தியும், தனது அருகில் வைத்துபூசிக்கும் பெரும்பேற்றை அளித்தும் அருள்புரிந்தவள் என்பது அறியத்தக்கது.

சக்திஎனும்சொல்விளக்கம்.

ஐச்வர்ய வசனஸ் ச ஸ்ச க்தி: பராக்ரம ஏவச.
தத் ஸ்வரூபா தயோர் தாத்ரீ ஸா சக்தி: பரிகீர்த்திதா.
(தேவீபாகவதம்)

சக்தி என்ற பெயர்ச்சொல்லில் உள்ள **ச** என்பது ஐச்வர்யத்தையும், **க்தி** என்பது பராக்ரமத்தையும் குறிப்பதாம். இவை இரண்டின் உருவத்தைக்கொண்டுள்ளவளே **சக்தி** எனப் புகழப்படுகிறாள். இந்த சக்தியின் அருளின்றி தேவர் முதலான எல்லாஉயிரினங்களும் ஐச்வர்யம் பராக்ரமம் மற்றும் பிறரைத் தனக்குட்பட்டவராக்கும் சக்தி, இயக்கும்சக்தி இவற்றைப்பெற முடியாது.

சக்தியின் நிலை

சூரியனின் ஒளிக்கதிர்கள் போல, இறைவனின் எல்லையற்ற, எண்ணற்ற, வல்லமையே சக்தி எனப்படுகிறது. இதனையே ஐச்வர்யம், பராக்ரமம், ஆற்றல், திறம், குணம், பண்பு என்றெல்லாம் கூறுவர். இந்த சக்தியானது எல்லா பூதங்களிலும் நிறைந்து உள்ளதை **யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா** என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. மேலும் இதில் தேவியின் கூற்றாக **ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதீயா கா மமாபரா** என்பதனால், உலகில் அவளன்றி வேறெதுவும் இல்லை என்பதை அறியலாம். இதனை சிவாகமங்களும் விளக்குவனவாய் சக்தியின் நிலையை **ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதா சிவ:** என்கின்றன. இவளே அனைத்திற்கும், தோற்றத்திற்கும் மூலதுணைக்காரணியாவாள். இவள் சிவனுக்கு ஞானக்கிரியாத்மக தேகமாயும், கரணமாயும் உள்ளதாக **சக்திச் சித்தனு ரீச்வரஸ்ய கரணம்**

ஞேயேஷு கார்யேஷு தத். என சைவஸித்தாந்தசாராவளி விளக்கும். இது சித்தாகவும், அசித்தாகவும் விளங்கும்.

சாக்தசமயம்

சக்தியை மேன்நிலையில் விளக்கும் நெறி சாக்தம். சக்தி ஸம்பந்தமுடையது **சாக்தம்.** நவயாமளம் முதலான தந்த்ரநூல்கள் **சாக்தாகமங்கள்** எனப்படும். சக்தி ஒன்றே முடிவில் எஞ்சி நின்று, மீண்டும் படைத்து உலகுக்கு மூலகாரணமாகிறது. சக்தியே மும்மூர்த்திகள் முதலான யாவர்க்கும் மூத்தவள் என்கிறது **சாக்தம். ஸ்ரீ காளியே மஹா மஹா ப்ரம்மவித்யா ஸ்வரூபிணி** ஆவாள் என்பது, சாக்தாகமங்களின் முடிவாகும். இவளே நித்யா, இவளே பூர்வஜா எனப்படுகிறாள்.

சக்தியின் வகைகள்

ஆதியும் அந்தமுமில்லாத நித்யாவாக பரப்ரம்ம ஸ்வரூபிணியாக உள்ளபோதும், இவள் பக்தர்களுக்கு பக்தி சுலபாவாகவும், பலாவாகவும், சூக்ஷ்மமாகவும், விச்வாத்மகியாகவும், உலகஉருவினளாகவும், குணச்சிறப்புகளால் அறியப்படுகிறாள். உருவமற்ற போதிலும், தன்னை ஆராதிக்கும் ஸாதகர்களின் உபாசனையில் அருள்புரிந்திடவே, பகவதிக்கு உருவம், குணம், பெயர், முதலியன அமைகின்றன. சக்தியின் வடிவங்களான, துர்கை, லக்ஷ்மீ, சரஸ்வதீ, மாரியம்மன், காளீ போன்றவற்றில் பராசக்திஒருத்தியே பலவாய் விளங்குகிறாள்.

> அரூபாயா: காளிகாயா: காலமாதுர் மஹாத்யுதே:.
> குணக் கிரியானுரூபேண க்ரியதே ரூபகல்பனா.

என்று சாக்தநூலான **மஹாநிர்வாணதந்த்ரம்** விளக்குகிறது. இதனையே சிவபூஜாஸ்தவம் எனும்நூல் ஏகைவார்த்தத ஈசசக்தி ரமிதா யாஅனேகரூபா சிவா என்றும், பேதைஸ் ஸோபஹிதா ப்ரயாதி குணதோ பேதம் க்ரியா ஞானத: என்றும் கூறும். மேலும் இக்கருத்தையே –

> ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய
> பின்னா சதுர்தா விநியோக காலே.
> போகே பவானீ அவனே து விஷ்ணு:
> கோபே ச காளீ ஸமரேஷு துர்கா.

என்று கூறுகிறது. தர்மம் தாழ்வது கண்டும், அதர்மம் மேலோங்குவது கண்டும் தேவீ கோபமடையும்பொழுதில் காளீ எனவும், துஷ்டர்களான பகைவர்களை அழித்து, சிஷ்டர்களான நல்லோர்களைக் காப்பாற்றும்

பொழுதில் **துர்கை** எனவும், அறம் காத்திட அவ்வப்பொழுது பலவாறாக, பலகாலகட்டங்களிலும், பத்துஅவதாரங்கள் வாயிலாகவும், உலகத்துயர் துடைத்து, காத்திடும்பொழுதில் **விஷ்ணு** எனவும், உயிரினங்களுக்கு சுகபோக வாழ்வளித்திடுகையில் **பவானீ** என்றும், நால்வகையாக பெயர்பெற்று விளங்குபவளாக தேவீ அழைக்கப்பட்டு போற்றப்படுகிறாள்.

தேவீ பலவடிவம் உடையவள் என்பதை, **பிரம்மாண்டபுராணம் பஹுரூபா** என்கிறது. பராசகத்தியே ஸர்வமங்களாவாக உலகில் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து அப்பொருளாகவே விளங்குகிறாள் என்றும், காணும் நிலையிலும், காணாதநிலையிலும் உலகில் பரவி, அணுவிலும் அணுவாக இருந்திடுவதை ரகஸ்யத்ரயம் விளக்குகிறது.

ஸர்வஸ் யாத்யா மஹா லக்ஷ்மீ த்ரிகுணா பரமேஸ்வரீ.
லக்ஷ்யா அலக்ஷ்ய ஸ்வரூபா ஸா வ்யாப்ய க்ருத்ஸ்நம் வ்யவஸ்திதா.

துர்காசப்தசதியின் உத்தரபாகத்தில், பரதேவதையே மூன்றுரூபங்களில் மஹாலக்ஷ்மியாகவும், மஹாகாளியாகவும், மஹாசரஸ்வதியாகவும், தோன்றுகிறாள் என்று கூறப்படுகிறது.

தேவீ திரிகுணாத்மிகா

தேவியின் திருவுருவங்கள் அனைத்தும் முக்குணங்களின் அடிப்படையில் மூவகையாகவும், **சாந்தம், உக்ரம்** என்று இருவகையாகவும் விளங்குவதால், அதற்கேற்ப அவளது வழிபாட்டு முறைகளும் **ஸௌம்யம்** என்றும், **ரௌத்ரம்** என்றும் இருவகையாயும், முக்குணத் திரனடிப்படையில் பலமாறுதல்களைக் கொண்டதாயும் உள்ளன. மூத்தவளான ஆதிபராசக்தியே முக்குணங்களுக்கும் இருப்பிடமாம். **பபார ரூபம் அபரம் தமஸா கேவலேன ஹி** என்ற மந்திரசாஸ்திரத்தின் வசனத்தின்படி, தமோகுணஅம்சமாக மஹாமாயாதேவியாகத் தோன்றி, மது கைடப அசுரர்களை மஹாவிஷ்ணு அழித்திடுவதற்கு புத்திருபமாய் இருந்து அருளினாள். இவளே மஹாமாயா என்றும், மஹாகாளீ என்றும், மஹாமாரீ என்றும் போற்றப்படுபவள். ஸத்வகுண அம்சமாகத் தோன்றி அதர்மத்தால் வெகுண்டு, சும்ப நிசும்ப அசுரர்களை அழித்தவள், இவளே மஹாவித்யா, மஹாவாணீ, பாரதீ, மஹாஸரஸ்வதீ என்று போற்றப்படுபவள். ரஜோகுண அம்சமாகத் தோன்றி மஹிஷாசுரனை அழித்தவள், இவளே ஸர்வமங்களாவாகவும், மஹாலக்ஷ்மீ, கமலாத்மிகை, மஹாவித்யா என்றும் போற்றப்படுபவள்.

சண்டமுண்டர்களை ஸம்ஹரித்தவளான சாமுண்டீஸ்வரியே காளிகா என்பவள். துயரங்களை அறவே துடைத்து, அடியவர்களைக் காத்து, ரக்ஷிப்பவள் துர்கை ஒருத்தியே என்று, தேவீமாஹாத்மியத்தில் இந்திராதி தேவர்களின் துதிப்பாடல் உணர்த்துகிறது. இதனை

தாரித்ரிய துக்க பய ஹாரிணி கா த்வதன்யா.
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா. (ஸப்தசதீ)

என்கிறது சப்தசதீ. உலகத்துயர் நீக்க அறப்போரிட்டு அவனியைக் காத்தவள். பகவதி காளியே தசமஹாவித்யாவாக விளங்கி முத்தொழில் தொடர, மூலகாரணியாகிறாள். லலிதா சஹஸ்ரநாமாவளியில் ஒன்றான **கராங்குளி நகோத்பன்ன நாராயண தசாக்ருதீ.** என்பதால், விஷ்ணுவாகி, தசாவதாரத்தாலும், அறம் காத்த அகிலாண்டநாயகி காளிகையே என்பதை அறியலாம். காளியும், துர்கையும் வேறு அல்ல. இரண்டும் ஞானகிரியா ரூபங்களான சிவசக்தியே.

தம்ஷ்ட்ரா கராளவதனே! சிரோமாலா விபூஷணே.
சாமுண்டே! முண்டமதனே! நாராயணி! நமோஸ்துதே.
(தேவீ மாஹாத்மியம்)

விஷ்ணுமாயா ரூபிணீ

மஹாமாயாதேவியே லலிதா ஸஹஸ்ரநாமத்தில் **விஷ்ணுமாயா** என்று போற்றப்படுகிறாள். உலகில் நாம் சுகபோகத்தை அனுபவித்திட உதவுபவள் **மஹாமாயை.** இவளே பரபிந்து என்றும், **குண்டலினீ சக்தி** என்றும், பரநாத **பிந்துசக்தீ** என்றும் அறியலாம். யோகநித்திரையில் இருந்த விஷ்ணுவின் கமலக்கண்ணில் நித்ராதேவியாய் விளங்கியும், பிரம்மதேவரின் துதியால் புத்திரூபமான ஞானசக்தியாய் வெளிப்பட்டும், உதவியதால், இவளை **விஷ்ணுமாயை** என்று அழைக்கின்றனர். பராசக்தியே விஷ்ணுவை உறங்கவைத்தும், விழிக்கச்செய்தும், போரிடச்செய்தும் இயக்கியதால் இப்பெயர் பெறுகிறாள். இவளே முக்குணத்தால் வெளிப்பட்டும், வெளிப்படாமலும், பலவகை வேறுபாடுகளுக்கும் காரணமாக விளங்குவதாக "காளிகாபுராணம்" விளக்குகிறது.

அவ்யக்த வ்யக்த ரூபேண ரஜஸ் ஸத்வ தமோகுணைர்.
விபஜ்ய யா (அ)ர்த்தம் குருதே விஷ்ணுமாயேதி ஸா உச்யதே.
(காளீகா புராணம்)

சக்தியே உலகிலுள்ள ஜீவராசிகள் இயங்குவதற்குமுக்கிய காரணமாய் உள்ளவள். **மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயிநம் து மஹேச்வரம்**

என்ற வசனப்படி தேவியை மாயை என்று அறிந்தவர்கள் ஞானியர்கள். சிவசக்திவடிவங்களே இவ்வுலகம், உடல்கள், பொருள்யாவும். இதனால் சக்தி இல்லையேல் எதுவும் தோன்றாது, எதுவும் இயங்காது, ஆகையால் சக்தியைப் போற்றி, வழிபடவேண்டும் என்பதே சாக்தசமயமுடிவாகும்.

இவளை அபிராமிபட்டர் தமது அந்தாதிநூலில் புகழ்ந்து கூறுவதாவது, பலவகைச் செல்வமாக விளங்குபவளே! அவற்றால் விளையும் சுகபோகமே! அரியபோகங்களால் ஏற்படும் மயக்கமே! அம்மயக்கத்தின் முடிவில் ஏற்படும் தெளிந்தஞானமே! அடியேன் மனதில் மாயையிருள் சிறிதும் இல்லாது நீங்கிட சுடர்வீசும் பெருவொளியாக இருக்கும் உனது இன்னருள் எத்தகையது? அதை என்னால் அறியஇயலவில்லையே என்று தெரிவித்துள்ளார். அப்பாடல் இதுவே.

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
அருளே! மருளில் வரும் தெருளே! என் மனத்து வஞ்சத்து
இருளே துமின்றி ஒளி வெளி யாகி இருக்கும் உன்றன்
அருள் ஏதும் அறிகின் றிலேன் றம்புயாதனத் தம்பிகையே.

(அபிராமி அந்தாதி)

அவித்யை என்னும் அக்ஞானத்தை நீக்கித் தெளிவை உண்டாக்குவதால் அம்பிக்கைக்கு விக்ஞானகலனா என்று ஒரு பெயர் உண்டு. அவ்வாறு சிவஞானப்ரதாயினியாக மெய்ஞானம்தந்து காப்பவள் காளிகாம்பா. இவள் சிவஞானஸ்வரூபிணீ என்றும், சிவசக்தீயைக்ய ரூபிணீ என்றும் அறியத்தக்கவள். இதனையே மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழு மன்பர் உளற்கோயிலிற்கு ஏற்றும் விளக்கே" என்று ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் தேவியைக் குறிப்பிடுகிறார். ஞானமேவடிவாய், சின்மயமான அக்னிஸ்வரூபமாய், ஞானச்சுடரொளியாய் விளங்குபவள் ஸ்ரீ காளிகையே.

சக்தியின் வெளிப்பாட்டை சைவாகமநூல் ஐந்து நிலைகளில் கூறுகிறது. பராசக்தியிலிருந்து ஆயிரத்திலொருஅம்சமாக ஆதிசக்தியும், இவளின் ஆயிரத்திலொருஅம்சமாக இச்சாசக்தியும், இவளிடமிருந்து ஆயிரத்திலொருஅம்சமாக ஞானசக்தியும், இவளிடமிருந்து ஆயிரத்திலொருஅம்சமாக கிரியாசக்தி வெளிப்பட்டாள் என்றும், இவளே சொல்மயமாயும் பொருள்மயமாயும் சப்தப்ரபஞ்சம் அர்த்தப்ரபஞ்சம் என்ற இருவகை உலகமாய் ஷடத்வாக்களாக சக்தியே விளங்குகிறாள், என்கிறது சைவாகமம். இதனை அபிராமிபட்டர் தேவியை சொல்லும் பொருளும் என நடமாடுபவள் என்கிறார்.

மஹாகாளீ தோற்றம்

மார்க்கண்டேயபுராணத்தின் தேவீமாஹாத்மியத்தின் மூலமாக தேவியின் நெற்றிக்கண்ணிலிருந்து கோபத்தில் காளீ வெளிப்பட்டதாகவும், போரின்முடிவில் தனது மார்பகத்தில் அவள் ஒடுங்கியதாகவும், சரிதம் கூறப்படுகிறது. அது ஒருகாலகட்டத்தில், இமயமலைப்பகுதியில், பேரழகியாக தேவியைக் கண்ட, சண்டமுண்டஅசுரர்கள் இருவர் அவள்முன் பெரும்படையுடன் வந்து போரைத் துவக்கிய பொழுதில், அன்னைக்குக் கோபம்மூண்டது. அத்தருணத்தில் அவளின் நெற்றிக்கண்ணிலிருந்து காளீ வெளிப்பட்டாள். பின்பு, சண்டமுண்டர்களுக்கும், காளிக்கும் பயங்கரமான போர் நடந்தது. அதில் சண்டனின் தலையை கத்தியால் துண்டித்து, முண்டனையும் காளீ வதம் செய்தாள். அசுரகணங்கள் போர்க்களத்தை விட்டு வெருண்டோடின. சண்டனின் சிரத்தையும், முண்டனின் முண்டத்தையும் தமது வெற்றிக்குப்பரிசாக அடையாளமாகத் தேவியிடம் காளீ சமர்ப்பித்தாள். இதனால் தேவீ மகிழ்ந்து, காளியைநோக்கி **நீ இனி சாமுண்டீ என உலகில் ப்ரஸித்தி பெறுவாய்** எனக்கூறினாள். இவ்விதம் காளி சண்டமுண்டர்களை அழித்தது மட்டுமின்றி, மேலும் ரக்தபீஜனின் வதத்திற்கும், அசுரனை குருதி அற்றவனாக்கிட உதிரபானம்செய்து தேவிக்கு மாய்த்திட, உதவியாகஇருந்தாள், என்பதையும் அறியமுடிகிறது. இச்சரிதத்தில் தேவியால் காளியானவள் **சாமுண்டே** என்று அழைக்கப்படுவதால் **காளிகையே சாமுண்டீஸ்வரி** என்பதும், **சண்டீநவாக்ஷரீ** மந்திரத்திற்குப் பொருளாகவிளங்குபவள் **காளிகையே** என்பதையும் அறியலாம். சாமுண்டா வேறு, அவள் யாரிடமிருந்து தோன்றினாளோ அந்த தேவீவேறு என்று எண்ணலாகாது. தேவர்கள் அன்னையைத் துதித்துப்பாடிய தோத்திரத்திலிருந்து சாமுண்டேச்வரியும், பரதேவதையும் ஒன்றே என்று அறிவோம்.

திரிசக்திகள்

இச்சா சக்திர் ஞான சக்திர் க்ரியா சக்தி ஸ்வரூபிணீ.

(லலிதாஸஹஸ்ரநாமாவளீ துதி பிரம்மாண்டபுராணம்)

இந்த சிவனுடைய சக்தியானது இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி என்று மூன்றுவகைப்படும். இம்மூன்றும் ஒன்றாய் இணைந்தவளே பராசக்தியாவாள். இவளையே ஸ்ரீபுவனேச்வரீ என்று தேவீபாகவத நூலும், ஸ்ரீ ராஜராஜேச்வரீ என்று லலிதோபாக்யானம் முதலிய நூல்களும் விளக்கும். இவள் ஸௌம்யாவான சாந்தரூபாவான ஆத்யாசக்தி. ரௌத்ரரூபாவான ஆத்யாசக்தி அந்த பராசக்தியின் முதல் (ஆவிர்பாவம்) தோற்றமே **மஹாகாளீ** என்பவளாவாள். இவளே முதல் மஹாவித்யா.

ஸ்வதந்த்ரமாய் செயல்படுபவள் சக்தி. பிறதெய்வங்கள் அவளால் இயக்கப்படுகின்றனர்.

சக்தி உத்பவமஹிமை

ஸர்வஜகன்மாதாவாகிய மஹாதேவியானவள் ரத்னமும்ஒளியும் போல, மலரும்மணமும் போல, தீயும் வெப்பமும் போல, நீரும் தட்பமும் போலப் பரசிவத்தோடு (அபின்னையாகி) (பிரிக்கமுடியாதவளாகி) அவ்விறைவனின் குறிப்பின்படி பஞ்சகிருத்யங்களை நடத்தி நிற்பவள். அக்கருணைஉருவாகிய பரசிவத்துடனேயே கூடிநிற்கும் பராசக்தியே பஞ்சகிருத்தியகாரணமாகக் கிருத்யபேதத்தினாலே ஐவகைப்படுகிறாள். அவை

“பரை யாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக்காத்து, வரையாது துடைத்து மறைத்தருளி” என்று கூறியபடி முறையே 1. பராசக்தி 2. ஆதிசக்தி 3. இச்சாசக்தி 4. ஞானசக்தி 5. கிரியாசக்தி என்பனவாம். அவற்றுள் பராசக்தி பரசிவத்தில் ஆயிரத்தொரு கூறுகொண்டது. 2. ஆதிசக்திபராசக்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது. 3. இச்சாசக்தி ஆதிசக்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது 4. ஞானசக்தி இச்சாசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறுகொண்டது 5. கிரியாசக்தி ஞானசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு கொண்டது.

இவற்றுள் ஆதிசக்தி ஆன்மாக்களுக்கு விஷய சுகத்தைப் பொருத்தும். இச்சாசக்தி சிருஷ்டியை நடத்தும் ஞானசக்தி ஸ்திதியை அதாவது ஸர்வஆன்மாக்களுடைய கன்மங்களையும் அந்த (வினைகளுக்கு) கன்மங்களுக்கு ஈடான தனுகரணபுவன (உடல், தத்வங்கள், உலகம்) போகங்களையும் உபாதானத்திரயங்களினின்று (பிந்து, மாயை, ப்ரகிருதி என்ற மூன்று முதல் காரணத்திலிருந்து) உண்டாக்கும்.

> தச்சிவே து பராசக்திஸ் ஸஹஸ்ராம்சாத் அஜாயத.
>
> தச்சக்தேஸ் து ஸஹஸ்ராம்சாத் ஆதிசக்தி ஸமுத்பவா.
>
> அஸ்யாஸ் சக்தேஸ் ஸஹஸ்ராம்சாத் இச்சாசக்தி ஸமுத்பவா.
>
> தச்சக்தேஸ்து ஸஹஸ்ராம்சாத் ஞானசக்தி ஸமுத்பவா.
>
> அஸ்யா சக்தேஸ் ஸஹஸ்ராம்சாத் க்ரியாசக்தி ஸமுத்பவா.
>
> ஏதா வை சக்தயப் பஞ்ச நிஷ்களத்வேந ஸமுத்பவா.
>
> சிவசிருஷ்டி ரியம் ப்ரோக்தா

என்று வாதுளசைவாகமம் கூறுகிறது.



சிவசக்திகளிருவரில் சிறிதும் பேதமில்லை

பஞ்சசக்திகளின் பஞ்சகிருத்யமும் ரூபஅருப நிலைகளும்.

இப்படித் தோன்றிய ஐவகை சக்திகளில் பின்வரும் பராசக்தியானது பக்குவமலமுள்ள ஆன்மாக்களைக் கருணையால் அநுக்ரஹிக்கும். ஆதிசக்தியானது ஆணவமலம் பக்குவமாகும்படி செலுத்தும். ஞானசக்தி சக்தர்க்கு ஞானவொளியாகி (சர்மசக்ஷுராதிகளுக்கு) தோல் கண்களுக்கு விஷயமாக புலப்படாதநிலையில் அரூபமாக அக்கிராஹ்யமான தேஜோரூபமாம் என்றறிக. இவ்வகைய பஞ்சசக்திகளின் (பத்திலொன்று) தசாம்சபேதத்தால் ஸகளநிஷ்களமாகிய ஸதாசிவரூபமாம். இதனைவாதுளாகமம் இவ்வாறு கூறுகிறது.

பராசக்தேர் தசாம்சேந சிவஸாதாக்ய ஸம்பவ:.
பராசக்த் யுத்பவத்வாச்ச சுத்தத்வாத் சிவ உச்யதே. (வாதுளம்)

இந்த சைவாகம கருத்துபற்றியே

சிவம் சக்தி தன்னை யீன்றும் சக்தி தான் சிவத்தை யீன்றும்
உவந்து இருவரும் புணர்ந்துங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன் பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந் தரு ஞானத் தோர்க்கித் தன்மை தான் றெரியு மன்றே.
(சிவஞான சித்தியார்)

என்று அருள்நந்தி சிவாசாரியார் திருவாய்மலர்ந் தருளியுள்ளார். சாக்தஅனுபூதிமானாகிய அபிராமி பட்டரும் அபிராமிஅந்தாதி பாடலில், இக்கருத்தையே –

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்.
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தர்க்கு இளையவே.
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே.

மூத்தவளே என்று எடுத்து ஆண்டதும் இப்பொருள் நோக்கியே என்று அறிக.

இவ்விதம் அருவநிலையில் பரசிவத்தோடு பராசக்தியெனவும், அருவுருவ நிலையில் உள்ள ஸதாசிவனிடத்தில் ஆதிசக்தியாய் மனோன்மனி எனவும் இருக்கும் சிவசக்தியே உருவநிலையில் மகேசனுடன் கூடிய மஹேச்வரியாகிறாள்.

கர்மேசஸ்ய ஸஹஸ்ராம்சாந் மஹேசஸ்ய ஸமுத்பவ:
மஹேசம் ஸகளம் வித்யாத் ஸ்ருஷ்டிஸ்திதிலயாத்மக:.
(வாதுள சுத்தாக்யம்)

என்னும் வாதுளாகம வசனத்தின்படி ஐந்தொழிற்படுகிற பரமேச்வரரின் ஆயிரத்திலோரு அம்சமாக தோன்றிய மஹேசர் மஹேசியுடன் கூடியவராய் பிரம்மவிஷ்ணுருத்ரர்கள் மூலமாக படைத்தல் காத்தல் ஒடுக்குதல் என்கிற முத்தொழிலையும் செய்விப்பவராக சக்தியுடன்கூடி ஐந்தொழிலாற்றி மஹேச்வரன் மஹேச்வரியோடு கூடி அருள்கிறார். இவ்விதம் ஸ்ரீகைலாயகிரியின் உச்சியில் ஆயிரங்கால் உள்ள ரத்னமஹாமண்டபத்தில் பக்தர்களுக்கு அருள்தரும்பொருட்டு, சிவபெருமானும் மஹாதேவியும் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்கள். இவர்களை முதல் ஜகத்தம்பதிகளை திருமால் பிரமன் முதலிய தேவர்களும் பதினோரு முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தொண்ணாயிரம் முனிவர்களும், சனகாதி மகரிஷிகளும், நவசித்தர்களும் கருடகந்தர்வஸித்தவித்யாதரர்யக்ஷரகின்னராதி பதினெட்டு கணங்களும் கூட்டமாய்தங்கி போற்றுவர் என்கின்றன நூல்கள்.

காளீ சொல் விளக்கம்

காலன் என்றால் சிவன், அவருடைய பத்னீ காளீ எனப்படுகிறாள். காளீ என்ற சொல்லுக்கு **காளீகல்பத்ருமம்** என்றநூல் பொருள்விளக்கம் தருகிறது. அதில் **விச்வாத்மிகா** = உலகை தனக்குள் உடையவள், **அனந்தா** = முடிவற்றவளான **நித்யா**, **ஸூக்ஷ்மரூபிணி**=புலப்படாதவடிவினள் என்று பொருள் கூறுகிறது. **கலயதி இதி காளீ** என்ற மொழிஇலக்கணத்தால், உத்பாதயதி = படைக்கிறாள், பாலயதி = காக்கிறாள், ஆத்மன்யேவலோபயதி = தனக்குள்ளேயே ஒடுக்கிக் கொள்கிறாள் எனப்பொருள் கொண்டு, முத்தொழிலும் புரிபவள் ஆதலால் காளீ எனப்படுகிறாள். ஓரெழுத்து பீஜமந்திரத்தில், க்லீம் என்ற காமராஜபீஜ எழுத்தே மஹாகாளிக்கு உரியதாகும். எனவே இங்கு இந்த கூட்டெழுத்தே காளீ என மருவி உள்ளதாகவும் சிலர் கூறுவர். **காலஸ்ய கலனாத் காளி** என்று பொருள் கொண்டு, காளருக்குப் பின்னும் இருப்பவள் என்றும், காலமாகிய மகாப்ரளயகாலத்தில் இவள்மட்டுமே எஞ்சிஇருப்பதாலும் இவள் காளீ என்று அழைக்கப்படுவதாகவும், **கால ஸம்க்ரஸனாத் காளீ ஸர்வேஷா மாதிரூபிணீ** என்று சாக்தநூல்கள் கூறுகின்றன. இதனையே அபிராமிபட்டரும் **மூத்தவளே** என்று குறிப்பிட்டுள்ளார். மஹாப்ரளயமான ஸர்வஸம்ஹாரம் முடிவுற்ற காலத்தில் நிலைத்துநிற்பவள் என்பதாலேயே, சைவத்தில் பரம்பொருள் சிவம் எனப்படுதல் போன்று, சாக்தத்தில் பரதேவதை காளீ எனப்படுகிறது. இவள் சிவசக்தியே. மேலும் காலம்

என்றசொல் கருமைநிறத்தைக் குறிக்கும். ஸர்வசம்ஹாரம் முடிவுற்று, அனைத்து சூரியசந்திராதி மும்மூர்த்திகளும் ஒடுங்கியகாலம் இரவுப்பொழுதாக அதாவது மகாநிசியாக, இருளாக, கருமையாக இருக்கும் ஆதலால் அக்காந்தியிலேயே மஹாகாளர் எனும் ஸ்வச்சந்த மஹாபைரவேச்வரரும், மஹாகாளியும், கருப்பராகவும், கருப்பியாகவும் விளங்கினர். இதனால் காளீ என்பதற்கு கருமேகம்போன்ற கருமை நிறத்தவள் என்றும், நீலீ அல்லது நீலா என்றும், சியாமா அல்லது சியாமளா என்றும், கிருஷ்ணவர்ணீ என்றும் வேதாகமங்கள் விளக்குகின்றன. ஒடுக்கச்செயலைச் செய்திடும் இக்காளியின் கருமைநிறமானது, பிறநிறங்களை தம்முள் ஒடுக்கிக்கொண்டு இருக்கும், என்பதை உணர்த்துவதுமாகும். கருமைநிறத்தில் மட்டுமே வெண்மை, சிகப்பு, மஞ் சள், நீலம், பசுமை நிறங்கள் மறைந்திடுவதைக் காணலாம். ஸாதகர்களின் நன்மைக்காக நிர்குண நிராகார சக்தியானவள் கருமை நிறமாக விளங்குகிறாள், என்று தேவியின் கருமை நிறத்தை பற்றி சாக்தாகமமான மஹாநிர்வாணதந்த்ர நூலில் விளக்கப்பட்டு உள்ளதால் அறியலாம்.

சுவேத பீதாதிகோ வர்ணோ யதா கிருஷ்ணே நிலீயதே.
ப்ரவிசந்தி ததா காள்யாம் ஸர்வபூதாநி சைலஜே.
அதஸ் தஸ்யா: காலசக்தேர் நிர்குணாயா நிராகிருதே:.
ஹிதாயா: ப்ராப்த யோகானாம் வர்ணக் கிருஷ்ணோ நிரூபித:.

காளியின் வடிவம் பலவாறாக கூறப்பட்டிருப்பினும் பரப்ரம்மஸ்வரூபமானபடியால், கற்பனைக்கும், மனத்திற்கும் எட்டாதவாறு பக்தியில் அனுபவத்தால் மட்டுமே அறியத்தக்கதாகவும் விளங்குவதாக அறியவும். பரதேவதை என்பவள் தோற்றமும் அழிவும் அற்றவளாவாள். இருப்பினும் அவள் பஞ்சகிருத்யம்செய்ய விரும்புகின்றபொழுது, குணம்கர்மாக்களுக்கு ஏற்ப எப்பொழுது வெளிப்படுகிறாளோ அப்பொழுது அவள் உலகில் தோன்றியவளாக கூறப்படுகிறாள். உண்மையில் அது எங்கும் உள்ளவளின் வெளிப்பாடே என்பதை மார்கண்டேயபுராண தேவீமாகாத்மியம் கூறுகிறது.

தேவானாம் கார்ய ஸித்யர்த்தம் ஆவிர்பவதி ஸா யதா.
ஊத்பன்னேதி ததா லோகே ஸா நித்யாபி அபிதீயதே.

ஜகத்காரணீ காளீ

மஹாப்ரளய காலத்தின் முடிவில், அனைத்தும், அதாவது காரியங்கள் எல்லாம் அதன் காரணத்திற்குள் ஒடுங்கி, மறைத்ததால், ஒன்றுமில்லாத காலத்தில், மஹாமாயை எனப்படுகிற பரபிந்துவை வியாபித்து நிற்பவளாக,

சிவசக்தியாக, சிவனிடம் ஐக்யரூபிணியாக, பகவதீ காளீ விளங்குகிறாள். பகவதி அந்தசமயத்தில் தன்பிம்பத்தில் பார்வையை பதித்தபொழுதில் அந்த பிம்பமானது மாயையாகிறது. அங்கு உலகைப் படைத்திடுவதன் பொருட்டு கணவன் வடிவாக சிவரூபத்தை மானசிகமாக தேவி கற்பிக்கிறாள். இவ்வாறு இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியாசக்திகள் என்று படைப்பு விளைகிறது. இவ்விதமாக? அனைத்தையும் தம்முள் ஒடுக்கிவைத்துள்ள பரபிந்துஸ்வரூபிணியே, உலகத்தோற்றத்திற்கு மூல ஆதாரசக்தி ஆகும். அதுவே அனைத்து சக்திகளுக்கும், தெய்வங்களுக்கும், உலகங்களுக்கும் முதலாவதான முக்கிய தோற்றுவாயாகவும், பயிரிடுவதற்கு விதைபோலவும் விளங்குகிறாள். இதனை, **ஆதாரபூதா ஜகதஸ் த்வ மேகா,** என்றும், **விச்வஸ்ய பீஜம்,** என்றும், **பரமா ஹி மாயா** என்றும், **ஸம்மோஹிதம் தேவி சராசரஸ்ய"** என்றும் கூறி உள்ள தேவர்களின்துதியால் தெளிவுபெறலாம். இதனை **ஆப்ரம்ம கீட ஜனனீ** என்றும், லலிதாஸஹஸ்ரநாமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அறியலாம். இதிலிருந்தே பிரம்மா, விஷ்ணு, ருத்ரர் முதலான தேவர்களின் தோற்றம் ஏற்பட்டு, பின்பு பரதேவதையின் விருப்பப்படியான அருட்பார்வையால் ஆணும் பெண்ணுமாகி, உலகம் மீண்டும் தோன்றி இயங்குகிறது என்பதாக சாக்தாகம ருத்ரயாமளமும், மார்க்கண்டேயபுராணமும் விளக்குகிறது.

பராசக்தியே பிரம்மா விஷ்ணு ருத்ரர் முதலானோர்கள் தங்களது படைத்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய முத்தொழிலைச்செய்ய சக்திஅளிப்பவள். முத்தொழிலாற்றும் சக்தியே சிறந்ததெய்வம் என்று ஹயக்ரீவருக்கு நாரதர் கூறியுள்ளார். வியாஸர் பராசக்தியை உபாஸித்தே ப்ரமஞானியான சுகாசார்யரைப் புத்திரராகப் பெற்றார் என்பது புராணத்தால் அறியப்படுகிறது.

தசமஹாவித்யா ஆவிர்பாவம்

பரசிவத்துடன் இணைந்தேயுள்ள பராசக்தியானவள், ஒருசமயத்தில் பத்துசக்திகளாக விளங்கி இருந்து **மஹாவித்யா** எனப்படுகிறாள். **மஹா** என்பதற்கு மிகப்பெரியது என்றும், **ப்ரம்மம்** என்றும் பொருள். **வித்யா** என்பதற்கு ஞானசக்தி என்று பொருள். பரப்ரம்மஸ்வ ரூபமாய் விளங்கி, மெய்ஞானமளித்து, போகம் மோட்சம் முதலிய ஸர்வாபீஷ்டஸித்திகளையும் அளிப்பவர்களாக இச்சக்தி விளங்குவதால் **தசமஹாவித்யா** எனப்படுகின்றனர். சாக்ததந்த்ரமென்னும் நூல்கள் பல இந்த தசமஹாவித்யாசக்திகளின் வெளிப்பாடுபற்றி ஒரு அரிய நிகழ்ச்சியை வரலாற்றைக் கூறிஉள்ளது. அது யாதெனில், சிவலோகத்தில் ஒரு சமயம் பகவான் எதிர்காலத்தை எண்ணியவராய், பகவதியை விட்டு விலகி, மறைந்து எங்காவது இருந்திட எண்ணினார். அதை அறிந்த

தேவீ இறைவனைப் பார்த்து, தாங்கள் கண்ணுக்குத் தெரியாத நிலையில் எங்கு சென்றிட உள்ளீர்கள்? என்று வினவிட, அதற்கு இறைவன், நாம் எங்கு விரும்புகிறோமோ அங்கு செல்வோம் எனக் கூறினார். இதற்கு தேவீ தடை கோரி "எம்மிடமிருந்து வேறு எங்கும் சென்றிட சிந்திப்பதைக் கைவிடுங்கள் சுவாமி" என வேண்டினாள். ஆனால் பகவான் சதாசிவரானவர் தேவியின் வேண்டுகோளைச் செவிமடுக்காமல் புறப்பட்டார். சிறிதுதூரம் சென்றபின்பு, அவ்வழியை மறைத்துக்கொண்டு பகவதீ மகாகாளீ அவரெதிரில் நிற்பதைக்கண்ட பகவானிடத்தில், இத்திசையில் தாங்கள் செல்லஇயலாது என்றாள். பிறகு பகவான் சங்கரர், அத்திசையை விடுத்துத் திரும்பி, மாறுபட்ட திசைகளில், முறையே பயணிக்க முனைந்து, எல்லா 10 திசைகளிலும் இவ்வாறே காளீதேவியால் எதிர்கொண்டு தடுக்கப்பட்டார். இவ்வாறு பகவதியான, ஜகதம்பாவானவள், கிழக்கு முதலான எட்டு திசையிலும், அவ்வாறே மேல் திசை மற்றும் கீழ்த்திசையிலுமாக, பத்து திசைகளிலும், பத்துவிதமான வடிவத்தை வெளிப்படுத்தி நின்றாள். இவையே சாக்தாகமங்க நூல்களில் தசமஹாவித்யா என்று உலகம்போற்றிட விளங்குவதாக உள்ளனர். அந்த தேவிகள் 1. காளீ 2. தாரா 3. ஷோடசீ 4. புவனேஸ்வரி 5. பைரவி 6. சின்னமஸ்தா 7. தூமாவதி 8. பகளாமுகீ 9. மாதங்கி, 10. கமலாத்மிகா என்பவர்கள் ஆவர். இவர்களே "பத்து மகாவித்யா அன்னையர்கள்" எனப்படுகின்றனர்.

காளீ, தாரா, மஹாவித்யா, ஷோடசீ, புவனேஸ்வரீ.
பைரவீ, சின்னமஸ்தா ச வித்யா, தூமாவதீ ததா.
பகளா, ஸித்திவித்யா ச மாதங்கீ, கமலாத்மிகா.
ஏதா தசமஹாவித்யா: ஸித்திவித்யா: ப்ரகீர்த்திதா: (சாக்ததந்த்ரம்)

இவ்வாறு கூறப்பட்டுள்ள பத்துவகையான பகவதிஸ்வரூபமான மஹாவித்யைகளுள் காளியின் பெயரே முதலாவதாக உள்ளதால் இவளே பரதேவதை என்று உணரலாம்.

ஜகதம்பா தக்ஷிணைகாளிகா

ஸ்ரீ காளிகாம்பாவே, முதலாவதான ஆத்யாசக்தி. இவளது நிலை மிகவும் உச்சநிலையாகும். அதாவது வடக்கே காளீ, வடகிழக்கே த்ரிபுரசுந்தரி, கிழக்கில் சின்னமஸ்தா, தென்கிழக்கே தூமாவதி, தெற்கில் பகளாமுகீ, தென்மேற்கில் கமலாத்மிகா, மேற்கே புவனேஸ்வரீ, வடமேற்கே மாதங்கீ, மேல்திசையில் தாராவும், கீழ்த்திசையில் பைரவியும் தோன்றி விளங்கியதாக கூறப்படுகிறது. சில தந்த்ரங்கள் இவர்களை தஸாவதாரத்துடன் விளக்கியும், காளியே சீதை என்றும், விளக்குகின்றன.

மஹாபதிவ்ரதா சக்தியாகவே காளி திகழ்கிறாள். இங்கு முதலாவதான காளி என்பவள் தக்ஷிணாகாளி, சியாமா என்று அறியவும். இவள் மிருத்யுஞ்ஜய மஹாசக்தியாவாள். இவளை தக்ஷிணகாளி என்றழைத்திடக் காரணம் யாது? எனில், தென்திசைக்கு அதிபதியும், சூரியனின் புத்திரருமான யமன், காளியின் (உபாஸகர்) அடியவர்களைக்கண்டு அஞ்சிஓடுவார் என்பதனால், இவள் தக்ஷிணாகாளி என்று புகழ்பெற்றதாக சாக்தநிர்வாணதந்திரம் என்றநூல் கூறுகிறது. இதனால் இவளது மகிமையையும், இவளருளால் தொல்லையும், எல்லா பயமும் நீங்கி, நீடித்தஆயுளைப் பெறலாம் என்பதையும் அறியலாம்.

தக்ஷிணஸ்யாம் திசி ஸ்தானே ஸம்ஸ்திதச் ச ரவேஸ் ஸுத:.
காலோ நாம்நா பலாயேத பீதியுக்தஸ் ஸமந்தத:.
அதஸ் ஸா தக்ஷிணாகாளீ த்ரிஷு லோகேஷு கீயதே. (சாக்தாகமம்)

மேலும், ஒரு யாகம் அல்லது பூஜையின் பயனானது தக்ஷிணையை அளிப்பதால் மட்டுமே கிடைத்திடும். அவ்வாறு, இவளைப் பூசித்தால் மட்டுமே அனைவரையும் பூசித்ததாக ஆவதாலும், இவளால் மட்டுமே போகமோக்ஷ பயன்கள் கிடைப்பதாலும், இவள் தக்ஷிணா என்று அழைக்கப்படுகிறாள். பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன் முதலான தேவர்களுக்கும், போரிலும், அவர்களினுடைய விருப்பத் தேவையிலும், இவளே இடர்களைந்து, இஷ்டஸித்தியை அவர்களுக்கு அளித்துள்ளதை, புராணங்களின் வாயிலாக நன்கு அறியலாம். தேவகார்ய ஸித்திக்காகவே பராசக்தி அடிக்கடி ஆவர்பவித்து இருக்கிறாள் என்பதை முன்னர் அறிந்தோம். உருவமற்றபோதிலும், பக்தர்களுக்கு அருள் புரிந்திடவே, பராசக்தியான காளீ பலஉருவங்களை எடுத்து, பல தலங்களில் அருளாட்சி செய்கிறாள். காளிக்கு பலபேதங்கள் இருப்பினும், பொதுவாகவும் சிறப்பாகவும் எட்டுவகைகள் நூல்களில் கூறப்படும். அவை 1. சிந்தாமணிகாளி, 2. ஸ்பர்சமணிகாளி, 3. ஸந்ததிப்ரதா காளி 4. ஸித்திதாகாளி, 5. தக்ஷிணகாளி, 6. காமகலாகாளி, 7. ஹம்ஸகாளி, 8. குஹ்யகாளி என்பவை ஆகும். இவற்றுள் தக்ஷிணகாளியே ப்ரதானமாக கருதத்தக்கவள்.

மங்களம்தரும் மாகாளி

காளி என்றாலே உக்ரமான தோற்றமுடையவள் என்பதும் நம் நினைவுக்கு வரும். சாந்தமானவளாக, சியாமளாவாகவும், மாதங்கியாகவும் விளங்குபவள் இவளே. காளி கோரமான உருவம் கொண்டவளாயினும், தனது பக்தர்களுக்கு வசீகரத் தோற்றம் கொண்டவளாகவே ஸௌம்யையாகவே காட்சிகொடுப்பாள். மூர்த்திரஹஸ்யத்தில்,

காளியின்ரூபம் ஸௌபாக்யகாந்திகளுக்கும், ஐஸ்வர்யங்களுக்கும் ஒரே இருப்பிடம் என்று கூறப்படுகிறது. அதாவது,

ஸ்புரத் தசன தம்ஷ்டிரா ஸா கோர ரூபா அபி பூமிப.
ரூப ஸௌபாக்ய காந்தீநாம் ஸா ப்ரதிஷ்டா பரா ச்ரியாம்.
(தேவிமஹாத்மிய மூர்த்திரஹஸ்யம்)

காளியானவள் உலகங்களின் மங்களத்திற்காக எப்பொழுதும் இருப்பவள் என்பதால் பத்ரகாளி என்றபெயரைக் கொண்டுள்ளதாக மார்க்கண்டேயபுராணம் கூறுகிறது. அது,

பத்ராய ஜகதாம் தேவி! யாநி யாநி ஸநாதநீ.
கார்யாணி சக்ரே கல்யாணி! கல்யாணாநி மஹாந்திச.
(மார்க்கண்டேயபுராணம்)

கல்யாணம் என்றாலும், பத்ரம் என்றாலும், சிவம் என்றாலும், மங்களம் என்பதே பொருள். எனவே காளியே கல்யாணீ, ஸர்வமங்களா ஆவாள். இவளே ஜகன்மங்களதாயினீ என்று போற்றப்படுபவள்.

அபயம் அளிப்பவள் காளிகாம்பா

துஷ்டர்களை அச்சுறுத்தும் வகையில் ஆயுதங்களுடன் விளங்கினாலும் அடியவர்களுக்கு அச்சத்தைப் போக்கிட அபயமுத்ரையுடன் ஒரு கரத்தையும், வரமளித்திடுவதற்காக வரதமுத்திரையுடன் ஒரு கரத்தையும், கொண்டு தக்ஷிணகாளி விளங்குகிறாள். சாக்தாகமங்கள் காளியானவள் எப்பொழுதும் தனது பக்தர்களைப் பார்த்து, பயப்பட வேண்டாம் நான் அபயம் அளிக்கிறேன் என்று பெரும் சப்தத்துடன் கூறுகின்றாள் என்கின்றன.

மா பைர் மா பைர் ஸ்வ பக்தேஷு
ஜல்பந்தீ கோர நிஸ்வனை:.
யூயம் கிமிச்சத ப்ரூத
ததாமீதி ப்ரபாஷிணீ.

என்று கூறப்படுகின்றது. இதனால் அடியவர்களிடம் இவளுக்கு உள்ள காருண்யம் விளங்கும். மேலும் தேவியானவள் தயக்கமின்றி உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள், அதை நான் அளிக்கின்றேன் எனவும் தெள்ளத்தெளிவாக உறுதியளித்துக் கூறுகின்றாள் என்பதை தேவீசாத்திரங்கள் விவரிக்கின்றன. இதனால் காருண்ய விக்ரஹா காளீ என்பது அறியத்தக்கது. சாமுண்டியின் ஒன்பது எழுத்து நவாக்ஷரீ மந்திரம் மட்டுமே வித்யாசமாகவும், சிறப்பாகவும், பெயருடன் கூடியதாய்

அபயமளிப்பவள் என்பதை அதாவது விச்சே என்ற சொல்லை முடிவில் கொண்டு விளங்குவதாயும் உள்ளது. இவளே அபயமளிப்பவள். விச்சே என்றால் அபயம் அளிப்பவள் என்பது பொருள். இப்பொருளைக்கூறும் சான்று விச்சே சா(அ)பயதா ப்ரோக்தா. (ரஹஸ்யத்ரயம்.) "சாமுண்டாயை விச்சே" என்பதால் உணர்ந்திடலாம்.

காப்பவள் காளீ, (மூத்தவளான தாய் காளியே)

துர்கையும், காளிகையும் தீயின் அம்சங்களைக் கொண்டு அக்னிஸ்வரூபியாக உள்ளதாக வேதமும், ஆகமங்களும் கூறும். தாம் அக்னிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம் வைரோசனீம் என்கிறது யஜுர்வேதம். காளீ அக்னியின் 10 கலைகளையே பத்து தலைகளாயும், 10 கரங்களாயும், 10 பாதங்களாயும் கொண்டு விளங்குபவள். ஸ்ரீ சக்ரத்திலும் பத்துகோணங்கள் இரண்டு அடுக்காக அமைந்துள்ளது இதை உணர்த்துவதே ஆகும். இவளே பஞ்சபூதங்களாகவும், சூரியன், சந்திரன், யஜமானன் வடிவிலும் எட்டு மூர்த்திகளாக விளங்குகிறாள். ஜகன்மாதா காளியைச் சுற்றிலும், எண் திசையிலும், லோகமாதர சக்திகள் எண்மர் விளங்குவர்.

பிராம்ஹீ மாஹேச்வரீ சாபி கௌமாரீ வைஷ்ணவீ ததா.
வாராஹீ ச ததேந்திராணீ சாமுண்டா ஸப்தமீ மதா.
அஷ்டமீது மஹாலக்ஷ்மீ ப்ரோக்தா விச்வஸ்ய மாதர: (காரணாகமம்)

1) பிராம்மீ 2) மாகேஸ்வரீ 3) கௌமாரீ 4) வைஷ்ணவீ 5) வாராஹீ 6) மாஹேந்திரீ 7) சாமுண்டீ 8) மஹாலக்ஷ்மீ, அல்லது நாரசிம்ஹீ இவர்களே உலகஅன்னையர்கள் என்ற பெயரில் போற்றப்படுபவர்கள். வாணீ மேலுகத்திற்கும், லக்ஷ்மீ பாதாளஉலகிற்கும் தேவியாக முறையே வடகிழக்கிலும், தென்மேற்கிலும், சேர்த்து பத்துதிசையிலும், பத்துமாதாக்களாகவும் பூசிக்கப்படுவர். ஸ்ரீசக்ரத்திலும், இவர்கள் இரண்டாவது பூபுரரேகையில் (கோட்டில்) பூஜிக்கப்படுகின்றனர். துர்கை, காளீ, மற்றும் இந்த லோகமாதர்களை வணங்குவதால் நாம் நமக்குள் இருக்கும் காமம், குரோதம், முதலான தீயசக்திகளையும், நம்மை தாழ்த்துபவைகளையும், வென்று, தீமையைநீக்கி, வாழ்வில் வெற்றியையும், ஸித்தியையும் பெறஇயலும். இதுவே சத்ருநாசம் செய்வதாக புராணங்களில் கூறுப்படுகிறது.

காளிகே ! கோரரூபா ஆத்யா ஸர்வகாம பலப்ரதா.
ஸர்வதேவ ஸ்துதா தேவீ சத்ரு நாசம் கரோது மே.
(காளீஹ்ருதய ஸ்தவம்)

இதனைக்கூறி காளியை வேண்டினால், ஆன்மாவின் மும்மலம் நீங்கப்பெற்று அருள் கிட்டும். உலகையும், உடலையும் நவசக்திகளாயும், நவதூதீகளாகவும், நவதுர்கைகளாகவும், நவகாளிகளாகவும், நவசண்டிகளாகவும் இருந்து இயக்கிக், காத்துரக்ஷிப்பவள் காளிகையே. சிவன் முப்புறம் எரித்திட துணை செய்தவளே சூலினீதுர்கை. தக்ஷயாகத்தை அழித்து அறம்காக்க வீரபத்ரருக்கு துணைசெய்தவள் பத்ரகாளீ. மஹாப்ரளயத்தில் மகாகாளருக்கு துணைநிற்பவள் காளீ, சரபேச்வரருக்கு துர்கையும், காளியும், இருசக்திகளாக இருந்து உதவினர். ஒவ்வொரு யுகத்திலும், கல்பங்கள், மன்வந்தரங்கள், கஷ்டகாலங்கள் இவற்றிலும் பலமுறை இதுபோல் தேவியானவள் வெளிப்பட்டு உலகின் துயரைத்துடைத்து காத்துவருபவள், சாக்தாகமத்தின்படி பரமேஸ்வரி ஸ்ரீ காளிகாம்பாவே என்று அறியத்தக்கது.

ஆணவத்தை ஒடுக்கும் அங்காளீ

உலகில் தருமமார்க்கத்திற்குத் தடையாய் கிளம்பும், கொடிய சக்திகளை அழிப்பதற்காகத் தேவீஒருத்தியே பலஉருவங்களை எடுத்துத் தோன்றி, காக்கிறாள் என்று தேவர்கள் கூறி போற்றியுள்ளனர். அரக்கர்கள் அரியபல வரங்களைப்பெற்ற போதிலும் அதர்மநெறியில் (அக்ரமவழியில்) சென்றதால் அவர்களை அடக்கி, உலகை அறநெறியில் இயங்கவைத்தவள் சாமுண்டீச்வரீ. எப்பேர்பட்ட கொடுமைகளை இழைக்கும் அரக்கர்களையும்கூட, அம்பிகை எடுத்த எடுப்பிலேயே கொன்றுவிடுவதில்லை. அறப்போரின்வழிமுறைகளான ஸாமம், தானம், பேதம், தண்டம் என்ற நால்வகை யுக்திகளையும் முதலில் கடைபிடித்தும், தூதுஅனுப்பி பேச்சுவார்த்தை நடத்தியும், உரிய வாய்ப்பளித்து, இவைகளில் சரிப்பட்டு, திருந்திவராவிட்டால் மட்டுமே, அவனை வேறு வழியின்றி கொல்கிறாள் என்பதை புராணங்களால் நன்கு அறியலாம். இவ்விதம் தேவீ எதிரிகளிடத்தும் நெறி முறையைக் கடைபிடித்தலே அவளது கருணையாம். சும்பாசுரனிடம் பேசிவர சிவனையே தூதுவராக அனுப்பி "சிவதூதீ" என்ற தனிப்பெரும்பெயர் புகழ்பெற்றவள் காளி. ஆணவமே உருவான மஹிஷாசுரனை மாய்த்தவள் துர்கை. இவர்களின் உடலை மட்டுமே அழித்து, அவர்களின் திருந்திய ஆன்மாவிற்கு, அருள்புரிந்தவள் என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. சும்பனது தலையும், மகிஷாசுரனது தலையும், தேவி பூசையில் இன்றும் பூஜிக்கப்படுகிறது. இதனை பூஜாபத்ததிகளால் அறியலாம்.



காளியின் காருண்யம்

தண்டநாயகனாகிய காலமூர்த்தியின் தண்டநாயகியான காளியானவள் தண்டநாதாவாக விளங்கி தேவர்களாலும் அரசர் முதலியோராலும் மறுமையிலேனும் இம்மையிலேனும் தக்கபடி நியாயம்கொடுப்பதாம். அப்படிச்செய்தல் பிள்ளைக்குற்ற பிணியை பிதாவானவன் வைத்தியனால் நீக்கமுயல்வதுபோல முயல்வதாம். இது கருணையேயன்றி கொடுமை அன்று. ஆதலால் நியாயவழிப் போதகரும் மறக்கருணை எனப்படும். கற்பகமரம் தன்னை அண்டினவர்கட்கே தரித்திரத்தையும், தண்ணீரானது தாகத்தையும் நீக்குதல் போல தேவீ துன்பநீக்கம்புரிவாள். அல்லாதார்க்கு அது செய்யமாட்டாள் என்பதையும் உணரக்கிடைக்கின்றது. இவ்விதமாக நீதிசாஸ்த்திரப்ரவர்த்தினீ எனஅறம்வளர்க்கும் அன்னை காளியே ஆவாள். அனைத்துலக அன்னையாய் கருணைமிக்க அமுதக்கடலாய் விளங்கும் காளியானவள், தன்னால் ஸம்ஹறிக்கப்படும் எதிரியிடமும் வற்றாத கருணை கொண்டவளாவாள். ஸம்ஹாரம் என்றால் அழித்தல் என்பது பொருள் இல்லை. நன்கு ஒடுக்குவது என்பதே பொருள். ஆணவமலமானது நித்யமானதாலும், ஆன்மாநித்யமானதாலும் அவை அழிக்கப்படுவதில்லை. திறனற்றதாக்கி காரியம் காரணத்திலேயே ஒடுக்கப்படுகிறது. இந்துசமயத்தில் நடேசர் முதலான எல்லா தெய்வங்களுமே எதிரிகளை ஒடுக்கி அவர்களையும், அவர்களது பொருள்களையும், தாமணிந்து மதிப்பளித்து, அனுக்ரஹம் செய்துள்ளது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. துர்கை மகிஷனை தம்பாதகமலத்தில் நீங்காஇடம் தந்து பூசித்துப் போற்றிடவும் அருளினாள். காளியும் அவ்வாறே எதிரியின் உத்தமாங்கமான சிரஸைத் திருவடிக்கீழ் இருத்தி முக்திஅளித்தும், தலையைத் தனது கரங்களில் ஏந்தியும் மாலையாக அணிந்தும், அவளோடு சேர்ந்திருக்கும் தேவீ ஸாயுஜ்யமுக்தி நிலையையும், அவளைப் பூசிக்கும் போது அவனையும் பூசிக்கும் பெரும்பேற்றையும் அருளி இருக்கிறாள். காளிக்கு அளிக்கப்படும் உயிரின பலியால் அவை முக்தி பெறுவது உறுதி. காளியின் வடிவமைப்பில் பாதத்தடியில் ரக்தபீஜனின் தலையும், காலடியில் சும்பாசுரனும் அமைந்திருக்கும். இதனையே தேவர்கள் சப்தசதீஸ்தவத்தில் "வைரிஷ்வபி ப்ரகடிதைவ தயா த்வயேத்தம்" என்று கூறியுள்ளனர். மேலும் அறப்போரில் ஆயுதத்தால் அடிக்கப்பட்டு இறந்தால் மட்டுமே முக்தி பெறுவர் என்பதற்காகவே தேவீ ஆயுதங்களைத் தாங்கி இருக்கிறாள். தேவீ ஆயுதமேதுமின்றி பார்த்தே பொசுக்கிவிட இயலும் என்பதை, சிவன் பார்த்து மன்மதனையும், சிரித்து முப்புரத்தையும் எரித்ததைப் போன்று, ஸ்ரீலலிதா மகாபாசுபதாஸ்திராக்னியாகிய, மகாபதிவ்ரதாசக்தியினாலேயே, பண்டாசுரனை எரித்தும், காளீ தூம்ரலோசனனை எரித்தும், தனது

ஒப்பற்ற பராக்ரமத்தை வெளிப்படுத்தி உள்ளதால் அறியலாம். எனவே தேவி ஆயுதங்களை ஏந்தி இருப்பது அசுரர்களின் உடலை அழிப்பதற்கும், பக்தர்களுக்கு பயத்தைப் போக்கி நம்பிக்கை, தைரியம், அபயம் இவற்றை அளிக்கவும், தேவர்களுக்கு நன்மை புரியவதற்காகவே என்று மார்கண்டேயபுராணம் தெரிவித்து உள்ளது அச்சுலோகம் இது.

தைத்யானாம் தேஹநாசாய பக்தானாம் அபயாய ச.
தாரயந்தி ஆயுதானீத்தம் தேவானாம்ச ஹிதாய வை.
(தேவீ மாகாத்மியம்)

அடியவர்களின் எதிரிகளை மாய்த்து காத்திடுவேன், அஞ்சேலென அபயமளித்து, பயத்தைப் போக்கிடவே, காளீயானவள் கத்தி, சூலம் இவற்றை ஏந்தி இருக்கிறாள். எனவே பக்தர்கள் அஞ்சாமல் தேவியைத் துதித்து என்றும் வெற்றிபெறலாம் என்பதற்கு இத்துதி ஜபித்திடஉதவும்.

ஜ்வாலா கராள மத் யுக்ரம் அசேஷாசுர சூதனம்.
த்ரிசூலம் பாது நோ பீதேர் பத்ரகாளி நமோஸ்து தே.
(சப்தசதீஸ்தவம்)

உலகில் நாம் விரும்பும் அனைத்து சுகபோகங்களின் வடிவில் இருப்பவள் தேவியே. இதனாலேயே இவளை மஹாபோகா என்றும், மஹாஐச்வர்யா என்றும் லலிதா சஹஸ்ர நாமம் போற்றுகிறது. இதனை அம்பிகை அருளாளரான அபிராமிபட்டர், தமது அபிராமி அந்தாதித்துதியில் "அருள்போகம் செய்யும் மருளே" எனக் குறிப்பிடுகிறார். உலகிற்கு முதல் காரணமாக, பிறப்பிடமாக உள்ளது மாயை. துணைக்காரணமாக கருவியாக உள்ளது சக்தி. நிமித்தகாரணமாக இருப்பது சிவம். அதாவது ஒரு மண்பானைக்குக் களிமண், தண்டம் சக்ரம், குயவர் இவை மூன்றும் காரணமாய் உள்ளது போல், சைவசித்தாந்தம் விளக்கும். சாமுண்டீச்வரியை அபிராமிபட்டர் உயர்ந்தநிலையில் உள்ளவளாக உயர்சண்டீ என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் காளியின் மேன்மை நமக்குப் புலனாகும்.

தொல்லைநீக்கும் தாய் காளீ

உலகில் எவ்வளவோ கஷ்டங்கள், தொல்லைகள், ஆபத்துகள், இடையூறுகள், துயரங்கள் வந்தவண்ணமே உள்ளன. இவற்றை சமாளிக்க ஒரே வழியாதெனில்? தேவியின் அருளைப்பெறுவது ஒன்றேயாகும். இந்த தொல்லை என்பது மூவகைப்படும். இவை **தாபத்ரயம்** எனப்படும். அவை, பூகம்பம், கடல் கொந்தளிப்பு, எரிமலை வெடிப்பது, புயல், இடி, மழை வெள்ளம், பெரும் பஞ்சம் முதலியன, **ஆதிதைவிகம்** எனப்படும். இயற்கைவிதிவசத்தால் உயிரினங்களுக்கு பேய், பிசாசு, பூதம், பிரம்மாராக்ஷஸர் முதலிய கொடிய குரூரக் கிரஹங்களால் ஏற்படும் தொல்லைகள் **ஆதிபௌதிகம்** என்பவை. மனத்துயரமாகிய ஆதி, உடல் நோயாகிய வியாதி, மற்றும் பிறரால் ஏற்படும் துன்புறுத்தல், வருத்தம் முதலியன **ஆத்யாத்மிகம்** எனப்படுபவை. இத்தகைய மூவகையான தொல்லைகளிருந்தும் நம்மைக் காப்பவள் காளியே. எனவே இவள் **தாபத்ரய நிவாரிணீ** எனப்படுகிறாள். இவை எல்லாம் விதிப்படி நடைபெறுவது என நினைத்து அலட்சியப்படுத்தாமல், அம்பிகையின் அருள்பெற்றால் இன்னல் தீரும் என்ற முடிவுடனும், நன்நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் அருள்பெற முயற்சித்தால், நாம் வெற்றிபெறலாம் என்பதை புராணங்கள் வாயிலாக நாம் உணரலாம். மார்க்கண்டேயர் தனக்கு பதினாறுவயதே ஆயுள் என்பதை அறிந்திருந்தும், தெய்வ அருளால் அவர் சிரஞ்சீவியானார். அவ்வாறே பக்தியால் ப்ரஹ்லாதரும், ஆஞ்சனேயரும் சிரஞ்சீவி நிலையைபெற்றனர் என்பது புராணங்களால் அறியப்படுகிறது.

கலியுக வரதா காளீ

கலியுகத்தில் விரும்பும் வரம் தருபவள் காளியே. இவளை உபாஸிப்பது மிகவும் சுலபமானது. காளியின் மந்திரத்திற்கு **வித்யாராக்ஞீ** என்று சிறப்பு பெயர் உள்ளது. எனவே காளியை பக்திசுலபா என்கிறது சாத்திரம். கலிகாலத்தில் காளியின் உபாஸனை ஸகலவிதமான ஸித்திகளை அளிப்பதாகும். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விரும்பும் பயனை அளிப்பவளும், விரைவில் அளிப்பவளும் காளியே என்று **பிச்சிலாதந்த்ரம்** என்ற சாக்த நூல் கூறியுள்ளது. இதனை லலிதாஸஹஸ்ரநாமஸ்துதி, **வாஞ்சிதார்த்த ப்ரதாயினீ** என்றும், **க்ஷிப்ர ப்ரஸாதினீ** என்றும் கூறுகிறது. எக்காலத்திலும் அருள்பவளாயினும், கலியுகத்தில் சிறப்பாக, அனைத்து உயிர்களுக்கும், போகம் மோக்ஷம் என்னும் இருவகைப்பயனையும் அளிப்பவள் காளியே என்கின்றன சாக்தநூல்கள்.

ஸதா ஸர்வயுகே தேவி கலிகாலே விசேஷத:.
ஸர்வப்ராணி ஹிதகரம் போகமோக்ஷைக காரணம்.

கலியுகத்தில் வழிபடத்தக்கவள் காளீ மட்டுமே. இவளைப் போல் விரைவில் அருளும் தெய்வமில்லை என்கிறது சாக்த பிச்சிலாதந்திரம். கலௌ காளீ கலௌ காளீ நான்யோ தேவ: கலௌ யுகே என்கிறது. மற்றொரு நூல் கலௌ சண்டீ விநாயகௌ என்று காளியையும், கணபதியையும் கலியுக தெய்வமாக கூறுகிறது. சிறப்பாக கலியுகத்தில் தக்ஷிணாம்னாய தேவதைகளான காளீ, மாரீ, சாஸ்தா, துர்கா, சரபர், பைரவர், வீரபத்ரர் முதலிய உக்ர தேவதைகளின் வழிபாடு சிறந்த பயன் தருவதாகும்.

காளிகா ஜகதாம் மாதா லோகதுக்க விநாசிநீ.
விசேஷதக் கலியுகே மஹாபாதக ஹாரிணீ. (காளீகுலஸர்வஸ்வத்தில்)

கலியுகத்தில் வழிபட வேண்டியவள் காளீ ஒருத்தியே. அவளே வரம் அளிப்பவள் என்கிறது. காளீரஹஸ்யம் எனும் மந்த்ர சாஸ்திரம்.

கலௌ காளீ கலௌ காளீ கலௌ காளீ வர ப்ரதா.
கலௌ காளீ கலௌ காளீ கலௌ காளீ து கேவலா.
(காளீரஹஸ்யம்)

தக்ஷிணாயணத்துவக்கத்தில் ஆடிமாதத்தில் உக்ரஸ்வரூபமுள்ள தேவிகளான, காளீ, மாரீ, சண்டீ, துர்கை முதலான தெய்வங்களையும், உத்தராயண துவக்கத்தில் தை மாதத்தில் தேவீ சாந்தமாக காணப்படுவதால் சாந்தரூபியான லலிதா, புவனேஸ்வரீ முதலான தேவிகளையும் சிறப்புப்பயன்பெற்றிட வழிபடுவது வழக்கில் உள்ளது. சைவாகமங்களில், பத்ரகாளியின், ஸ்தாபனம், பிரதிஷ்டை, உத்ஸவம், பூஜை முதலியன கூறப்பட்டு உள்ளன. காளியை ஒன்பது வகையாக சைவாகமம் கூறுகிறது. அவ்வாறே உமாயாமள சாக்ததந்திரநூலில் 1) காளீ, 2) மஹாகாளீ 3) பௌமகாளீ 4) க்ரூரகாளீ 5) உக்ரகாளீ 6) கங்காளீ 7) தக்ஷிணாகாளீ 8) கராளவக்த்ரீ 9) சிவஸம்வாதகாளீ என்று ஒன்பது வகைகளில் நவகாளிகள் கூறப்படுகின்றனர்.

காளியின் ஒப்பிலா மஹிமை

ஓங்காரி காளியின் ஒப்பிலா மஹிமைகளை சாக்தாகமங்கள் குறிப்பிடுகின்றன. அவைகள், இவளை சரணடையும் அடியவர்கள் எத்தகையர்களாக இருந்தாலும், எந்த புனிதமற்ற, தாழ்ந்த, பக்குவமற்ற நிலையிலிருந்தாலும்கூட, அவளதுபக்தனுக்கு, பெருதற்கரிய நிர்வாணம் என்னும் பரமுக்தியைப் பெறுவதற்கு அவர்கள் தகுதி பெற்றவர்களாகி, பொருள், புகழ், ஞானம், அனைத்தையும் பெறுவர். இதனை புராணங்களில் தேவர், ரிஷிகள், மன்னர்கள், பாமரர்கள், முதலானோர் ஞானியராகவும், புலவராகவும், வீரனாகவும் அருள்பெற்ற பலவரலாறுகளால் உணரலாம். எடுத்துக்காட்டாக தேவீதாஸர்கள் விக்ரமாதித்தன், காளிதாஸமஹாகவி, மூககவி, முதலானோர்கள். பெண்தெய்வங்களின் மூலமந்திரங்களுக்கு வித்யா என்று பெயர். இதில் காளியின் மந்திரவித்யைக்கு நிகரேதுமில்லை. காளிவழிபாட்டின் பயனுக்கு, நிகராக வேறு தெய்வ வழிபாட்டுப் பயன் இல்லை. காளி அருளால் கிட்டிடும் ஈடற்ற ஞானத்திற்கு ஸமமானதொரு ஞானமில்லை. காளியைக் குறித்துச்செய்திடும் தவத்திற்கு ஸமமாக வேறு தெய்வத்தவம் கிடையாது என்று சாக்தாகமநூலான காளீதந்த்ரம், காளியின் மஹோன்னத மகிமையைக் கூறுகிறது. அச்சான்றுஇதுவே.

ந ஹி காளிஸமா வித்யா ந ஹி காளிஸமம் பலம்.
ந ஹி காளிஸமம் ஞானம் ந ஹி காளிஸமம் தப: (காளீதந்திரம்)

ஸ்ரீசக்ரநிலயா காளிகா.

சாக்தாகமங்கள் காளியே பரப்ரம்மஸ்வரூபா என்றும், இவளே சாந்தமாயும் உக்ரமாயும் இருவகை வடிவங்களில் இருவகையாக வழிபடப்படுகிறாள் என்றும் முடிவாகத் தெரிவிக்கின்றன. எனவே சாக்தத்தில் ஸ்ரீசக்ரமானது சக்ரராஜம் எனப்படுகிறது. ஸ்ரீலலிதா மஹா திரிபுரசுந்தரீ, ஷோடசீ, மஹாவித்யா, பராபட்டாரிகா பூஜிக்கப்படுகிற, ஸ்ரீசக்ரம் என்பது யந்திரமாயும், அர்த்தமேருவாயும், பூர்ணமேருவாயும், நவாவரணபூஜையை செய்திடும்வகையில், முறையே மேருமலையைப் போன்று, உள்புறமான மேலிருந்து வெளிப்புறமான கீழ்வரையாக முறையே 1. பிந்து (வட்டம்) 2. திரிகோணம் (முக்கோணம்) 3. வசுகோணம் (எண்கோணம்) 5. முதல்தசாரம் (பத்துகோணம்) 5. இரண்டாவது தசகோணம் (பத்துகோணம்) 6. மன்வச்ரம் (பதினான்கு கோணம்) 7. நாகதளம் (எட்டுஇதழ் பத்மமண்டலம்) 8. ஷோடசதளம் (பதினாறுதளபத்மம்) 9. விருத்தத்ரயம் (மூன்றுவட்டம்) 10. ஸதனம் (பூபுரம் 4வாயில் உள்ள மூன்று கோட்டு வீடு) என்ற இந்த பத்துஉறுப்புகளைக் கொண்டு, தட்டையாகவோ மேருமலைபோலவோ அமைக்கப்படுவது ஸ்ரீ சக்ரமஹாமேரு எனப்படும். இதில் ஸ்ரீ வித்யாவை

பூஜித்திடுவர். இச்சக்ரம் சைவத்தில் எவ்வாறு உயர்தரவடிவமாக, அருவுருவமாக, சிவலிங்கம் விளங்கிறதோ. அதேபோன்றே சாக்தத்தில் மஹோன்னதமான அருவுருவத் திருமேனியாய்த் திகழ்வதாகும். துர்கை, கந்தர் முதலான ஒவ்வொரு தேவதையின் யந்திரமண்டல வடிவத்தையும், இவ்விதம் மேருவாக (மலைசிகரவடிவில்) அமைத்தும் பூசிக்கலாம். சிவலிங்கத்தைப் போன்றே இதிலும் மூன்றுதத்துவ முப்பகுதிகள், சிவசக்திஐக்யபாவனை, பலசுற்று ஆவரணபூஜைக்கு, உரியஇடங்களாகப்பலஉறுப்புகள், யாவும் உள்ளன என்பதை அறியவும். ஸ்ரீவித்யாலலிதா, தனது பதியாகிய காமேச்வரரின் மடியில் அமர்ந்து விளங்குவது போலவே, காளியும் மகாகாளபைரவருடைய மடிமீதுஅமர்ந்து இணைந்து இருப்பவள் என்கிறது சாக்ததந்த்ரம். இவள் உக்ரகிருத்யா எனப்படுபவள். சிவலிங்கத்தைப் போலவே ஸ்ரீசக்ரத்தில் பிந்துவில் சிவனையும், முக்கோணத்தில் தேவியையும் பூசித்திடுவர். எனவே, தேவிக்கு த்ரிகோணாந்தர தீபிகா, த்ரிகோணகா என்ற சிறப்புத் திருநாமங்கள் உண்டு. பரபிந்துஸ்வரூபமாக பரதேவதை விளங்குவதால், இவளுக்கு பிந்துஸ்தானத்தில் விசேஷார்கியத்தால் தர்பணம் செய்து மகிழ்விப்பர். இதனை பிந்து தர்பண ஸந்துஷ்டா என்ற நாமாவளி உணர்த்துகிறது. ஸ்ரீகாளிக்கும் யந்திர நடுவில் 9/5/3 கோணங்களில் யந்த்ர அமைப்பு விளங்குகிறது. ஒவ்வொரு முக்கிய சுற்றுதேவதைக்கும் முக்கோணம் அல்லது பத்மதளம் இடமாக அமையும். மூவுலகத்தாய் என்பதை உணர்த்திடும் யோநிநிலயா என்றும், நவயோநி மண்டலஸ்தா என்றும் பெண்ணின் கருவாய்வடிவில் போற்றப்படுகிறாள். காளி உலகத்தோற்றுவாயாகவும், மூலகாரணியாகவும், கருதப்பட்டு, யோனி அதாவது பெண்குறிபிறப்புறுப்புவடிவிலோ, ஞானவிருக்ஷமாகிய அரசமரத்தின்இலையின் வடிவிலோ, எட்டுதளமுள்ள ஒரு தாமரைமலரின் வடிவிலோ, அக்னியின் தத்துவமண்டலமான முக்கோணவடிவிலோ, காளிதேவீ பூசிக்கப்படுகிறாள். எனவே ஸர்வமந்த்ராத்மகமாய் விளங்குகிற ஸ்ரீசக்ரம் இருக்குமிடத்தில் பரதேவதையின் ஸாந்நித்யம் உண்டு. அதில் இல்லாதது ஒன்றுமில்லை எனப்படுதலால் ஸ்ரீசக்ரநாயகி காளியே த்ரிபுரசுந்தரீ என்பவளானசெந்நிறத்தவளானபவழக்காளியாம்.

காமாக்ஷிகாளியே காமகலா

ப்ரபஞ்ச சிருஷ்டிக்குமுன் சித்சக்தியாக பரதேவதை ஒருத்தியாகவே இருந்ததால், இவள்தான் அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள். ஆகையினால் இவளை **காமகலை** என்று ஞானிகள் அறிந்து கூறுவர். காமம் அல்லது காமனா என்றால் **ஆசை**, அதாவது

அருள்தரும் ஸ்ரீமஹாதக்ஷிணா காளிகாம்பாள்

அருள்தரும் தசானனா மஹாகாளிகாம்பாள்

மனவிருப்பம் என்று பொருள். நாதபிந்துவின் வடிவாய், அதாவது நாதம் ஒலியாய், பிந்து ஒளியாய் விளங்கிய பரபிந்து வடிவினளே, உலகை முன்பு போல் படைக்க விரும்பி, தன்னிடமிருந்து தமது அம்சமாக முதலில் ஷடத்வா எனப்படுகிற 1. வர்ணம் = எழுத்து, 2.பதம் = சொல், 3.மந்திரம் = ஆற்றல்மிகுகாப்புஒலி, ஆகிய மூவகை அத்வாக்கள் ஆன சப்தப்ரபஞ்சத்தையும், 4.தத்துவம் = 36போகஸாதனமான அகக்கருவிகள். 5.புவனம் போக ஸ்தானமாகிய உலகங்கள், மேற்கூறிய ஐவகை அத்வாக்களையும் தம்முள் அடக்கிய 6.கலா=பஞ்சகலைகள் என்று தேவீ தன்னையே ஆறுவகையாக வெளிப்படுத்தி, இவ்வுலகாக விளங்குகிறாள். 1.நிவிருத்திகலை, 2.ப்ரதிஷ்டாகலை, 3.வித்யாகலை, 4.சாந்திகலை, 5.சாந்தியதீதகலை ஆகியகலைகள் ஐந்தும், பஞ்சப்ரம்மமயம், பஞ்சஸாதாக்யமயம், பஞ்சபூதமயமாயும் திகழும் சிவ சக்தியின் புறக்கூறுகள் என்று அறியவும்.

ஜகத்சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதாசிவ: (சைவாகமம்)

பராசக்தியும் பஞ்சகிருத்யமும்

படைத்தலுக்கு ஸ்ருஷ்டிகர்த்ரீ என்று ப்ரம்மரூபாவாயும், காத்தலுக்கு கோப்த்ரீ என்று கோவிந்தரூபிணியாகவும், ஒடுக்குதலுக்கு ஸம்ஹாரிணீ என்று ருத்ரரூபாவாயும், மறைத்தலுக்கு திரோதானகரியாக ஈஸ்வரியாயும், அருள்வதற்கு அனுக்ரஹதாவாக ஸதாசிவையாகவும், காளியே ஐந்தொழிலாற்றுகிற பஞ்சகிருத்ய பராயணியாக இருப்பவள். கிரியாரூபமான ஆற்றல்மிகு சக்திகள் மந்திரகலைகளே ஆகும். ஐந்தொழிலாற்றும் பிரம்மா முதலான ஐவரிடத்திலும் விளங்கும் மொத்த கலைகள் 64 கலைகளாகும். அவைகளே முக்கோணவடிவில், ஸ்ரீசக்ரமேருவில், பஞ்சபிரம்மாஸனஸ்திதாவாக 64 சதுஷ்ஷஷ்டிகலாமயாவாக, காமேச்வரசக்தியாய் விளங்குவதாலும், சூரியன், சந்திரன், அக்னி, சக்தி மண்டலங்களின் கலைகளாயும் விளங்குவதாலும், ஸ்ரீ சக்ரநாயகியே காமகலேச்வரீ என்படுகிறாள். இத்தகைய ஸ்ரீசக்ரம் விளங்கும் நவநாயகிகள் காமேச்வரியான காமாக்ஷி என போற்றப்படுகிறாள். ஸ்ரீசக்ரபீடத்தின் திருவுருவாய், ஸ்ரீகாஞ்சியில் திகழ்பவளே காமாக்ஷி ஆவாள். அவளது கைகளில் உள்ள பாசம் அங்குசம் என்ற இரண்டு ஆயுதமும், மலர்க்கணைகளையும், (தாமரை மலர் மொட்டும்,) மனதின்காமனாரூபமாய் உள்ள கரும்புவில்லையும் கொண்டு வெளிப்படாத நிலையில் அடியவர்க்கு அருளும் ஸ்ரீசக்ரநாயகியாக காமகலாரூபி காமாக்ஷி விளங்குகிறாள்.

பத்ரகாளீ சாமுண்டா உருவத் தோற்ற விளக்கம்.

தாருமதி என்ற அசுரப்பெண்ணின் புதல்வனான தாருகாசுரன் பரமனைக்குறித்து தவம் செய்து தேவர்களால் தனக்கு மரணமின்மையும் அபரிமிதமான பலமும் பிரம்மதண்டமும் வரமாகப் பெற்றான். இவ்வளவு வரங்களைப் பெற்ற தாருகாஸுரன் பெண்களிடமிருந்து மரணமின்றி இருக்க வரம்பெறவில்லை. வரமளித்த பிரம்மதேவன் "நீ ஒரு திவ்யஸ்த்ரீயினால் மரணமடைவாய்" எனக்கூறி மறைந்தார். வரபலத்தால் மதங்கொண்டு சுவர்கத்தை வென்று, தேவர்களை விரட்டியடித்து துன்புறுத்தினான். விஷ்ணுவின் யோசனைப்படி பிரம்மா, ருத்ரன், முருகன், விஷ்ணு, யமன், இந்திரன் இவர்களுடைய சக்திகள் பிராம்ஹீ, மாஹேச்வரீ கௌமாரீ வைஷ்ணவீ வாராஹீ இந்திராணீ என்ற பெயர்கொண்ட ஆறு வீரமாதாக்களாகப் பெண்வீராங்கனைகள் தோன்றினர்.

இவர்களின் உதவியைக் கொண்டு மீண்டும் தேவர்கள் அந்த தாருகாசுரனுடன் பெரும் போரிட்டனர். அப்போது மாஹேச்வரீதேவீ தனது முச்சூலத்தால் தாருகாசுரனைக்குத்த, அவன் உடலிலிருந்து ஆயிரமாயிரம் அவுணர்கள் தோன்றி தேவர்களுடன் மோதினர். இதுகண்டு மற்றைய சக்திகள் செய்வதறியாது கலங்கினர். இதைக்கண்ட தாருகன் சிவனைநோக்கி "இப்பெண்களை நம்பி யுத்தத்தில் இறங்கினீரே" எனக்கேலி செய்தான். சினங்கொண்ட சிவனார் ஸம்ஹாரமூர்த்தியாய் மாறினார். அவருடைய அக்னிமயமான நெற்றிக்கண் திறந்தது. அதிலிருந்து ஒரு பத்ரகாளி வெளிவந்தாள். இதனாலேயே கோபத்தில் தோன்றியவள் என்பதனை, கோபேஷு காளீ என்றும், குரோதஸம்பவா என்றும் கூறப்படுகிறாள். இந்த பத்ரகாளீ நீருண்டமேகம் போன்ற கருமை நிறத்தினளாய். ஒரு பேருருவம் கொண்டு உலகமனைத்தையும் செவிடுபடச் செய்யும் ஒரு அட்டஹாஸம் (சிரிப்பை) செய்தாள். அவளைப்பார்த்து பகவான் "மாதாக்களுக்கு நீ முதல்வியாய் இரு" என்று வரமளித்தார்.

"ப்ராம்யாதீனாம் து மாத்ரூணாம் ப்ரதமா த்வம் பவிஷ்யஸி.
சாமுண்டாக்யா மஹாகாளீ தேன ஸ்யுஸ் ஸப்தமாதர: (சிவனார்கூற்று)

இதன்படியே முன்கூறிய ஆறு மாதர்களுடன் இந்தகாளீ சாமுண்டாவைச் சேர்த்து மாதாக்கள் எழுவராயினர். இவர்களே எங்கும் "ஸப்தமாதாக்கள்" என்பவர்களாக பூசிக்கப்படுகின்றனர்.

இவளுக்குத்தான் சாமுண்டா என்று பெயர். இச்சாமுண்டா பேருருவம் கொண்டபோது மூன்று பெரிய கண்களும், பதினாறுகைகளும்

யானைத்தோலாடையும் யானைக்குக்கட்டும் மணிகளைத் தோடுகளாகவும் கொண்டு, கருமைநிறத்தில் பெரியஉருவத்தில் விளங்கினாள். இவ்வாறான கோரமான அருட்கோலம்கொண்ட சாமுண்டாதேவீ தாருகாஸுரனை சூலத்தால் குத்திக்கொன்று தேவர்களுக்கு அபயமளித்தாள். என்பதை பத்ரகாளீமாஹாத்மியத்தில் மார்க்கண்டேயபுராணம் கூறும் சான்று இதுவே.

சத்ரு ஸம்ஹாரிணீ ஸாக்ஷாத் ஸாக்ஷிணீ ஸர்வகர்மணாம்.
சக்திர் யா காசித் அத் யுக்ரா நமஸ் தஸ்யை நமோ நம: 1
மஹா வித்யே மஹா மாயே மஹாகாளி மஹா மதே.
மஹாஸுர வதோ த்யுக்தே பத்ரகாளி நமோஸ்து தே. 2
பிரம்ம விஷ்ணு மஹேசானாம் அன்யேஷாம் ச திவெளகஸாம்.
தேஜஸ் ஸம்பார ஸம்பூதே பத்ரகாளி நமோ ஸ்து தே. 3

இவ்வாறு, பத்ரகாளீ துதிக்கப்படுறாள். மேலும் அதிலேயே

ஜ்வாலாகராள மத்யுக்ரம் அசேஷாசுர சூதனம்:
த்ரிசூலம் பாது நோ பீதேர் பத்ரகாளி நமோ ஸ்துதே.

என்று அப்புராணத்திலேயே தேவீமாஹாத்மியத்தில் காளீ போற்றப் படுகிறாள்.

பொன்மயமான மேருமலையினுடைய சிகரத்தில் சிம்மத்தின்மீது அமர்ந்து அசுரப்படையை அழித்தவளான மஹாஸரஸ்வதீதேவியின் நெற்றிப்பட்டையிலிருந்து உதித்தவள் கருநிறக்காளீ தேவியாவாள். இவளே சாமுண்டாகாளீ என்பவளாக சண்டமுண்டர்களை அழித்தவளும், ரக்தபீஜனின்வதத்திற்கு உதவியவளும் ஆவாள். இதனை மார்க்ண்டேயபுராணம் விளக்குகிறது.

சிவதூதீகாளீகா உருவத் தோற்ற விளக்கம்.

ஸப்தமாதாக்களும் உலகத்திற்கு மங்களத்தை விளைவிக்கும் பணியில் ஈடுபட்டவர்கள். இவர்கள் சண்டிகாபரமேச்வரியிடம் வந்து உடனிருந்து போரிட்டு, உலகில் அறம் காத்த அன்னையர்கள். சும்பநிசும்பஅசுரர்களுடன் போர்புரியும் தருணத்தில் மஹாஸரஸ்வதியிடமிருந்து பயங்கர உருவம் கொண்டவளும் நூறுநரிகளுடைய சப்தம் போன்று சத்தமிடுபவளுமாய் ஒரு பெரும் உக்ரசக்தியான காளீ வெளிப்பட்டாள். இவளது ஸ்வரூபத்தை மந்தி சாஸ்த்திரம் நமக்கு எடுத்துரைக்கின்றது. அதாவது,

பெருத்த உருவத்தினள். குங்குமம் போன்ற சிவந்தமேனியள், செந்நிறப்பற்கள், முண்டமாலை, சடையில் பிறைச்சந்திரன், காதுகளில் இரு நாககுண்டலங்கள், பாம்புகளாலான மாலைகள், பளிச்சிடும் கூரியநகங்கள், இடையில் புலித்தோலாடையை உடையவள், தனது இரு வலதுகைகளில் மேலும்கீழுமாக சூலமும் கத்தியும், இரு இடதுகைகளில் மேல்கீழாக பாசமும் கேடயமும் ஏந்தியிருப்பவள், பெருத்ததேகம், பருத்த உதடுகள், உயர்ந்த உடல், வலது காலை ப்ரேதத்தின் மீதும், இடதுகாலை நரியின் முதுகிலும் பதித்திருப்பவள், இதுவே உக்ரகாளியின் திருவுருவமாக மந்திரசாஸ்திரம் கூறுகிறது. இவளைச்சுற்றிலும் யோகினிசக்திகள் பன்னிருவர் இருப்பர். 1. க்ஷேமங்கரீ 2. சாந்தா 3. வேதமாதா 4. மஹோதரீ 5. கராளா 6. காமதா 7. பகாஸ்யா 8. பகமாலினீ 9. பரோதரீ 10. பகாரோஹா 11. பகஜிஹ்வா 12. பகா என்ற பன்னிரண்டு யோகினிகளே இவளுடைய முக்கியசக்திகள் ஆவர். காளீ இவளுடைய பூஜையில் இந்த 12 யோகினிகளை அவசியம் பூஜிக்கவேண்டும் என்று மந்திரசாஸ்திரம் கூறுகின்றது. இந்த காளிக்கு குரல் (ஒலியானது) நூறுநரிகளின் ஊளையிடும் ஒலிக்கு ஒத்திருப்பதால் இவளுக்கு **"சிவாசதநிநாதினீ"** என்ற பெயர் விளங்குகிறது. (சிவா=நரிகள்) இவள் சங்கரனைப்பார்த்து ஐயனே! தாங்கள் சும்பன் மற்றும் நிசும்பன் என்பவர்களிடம் சென்று ஸ்வர்க்கம் இந்திரனுக்கு உரியது. அவன் அங்கு அரசு புரியட்டும். தேவர்கள் வேள்விகளில் அளிக்கும் ஹவிஸ்ஸை அருந்தட்டும், உங்களுக்கு உயிர்மீது ஆசையிருந்தால் உடன் பாதாள உலகம் சென்றுவிடுங்கள். அப்படியின்றி போரைவிரும்பினால் எனதருகில் உள்ள நரிகளுக்கு இறையாவீர்கள் என்று சொல்லும்படி கூறினாள். இப்படியாகசங்கரனுக்கு ஆணையிட்டு அவரை தூதுவராக ஏவியதால் இவள் **சிவதூதீ** என்ற சிறப்புப்பெயரை பெற்றாள். இவள் சிவப்புநிறத்தில் இருத்தலால் 'சுந்தரீ' எனப்படுபவளாவாள். சிவதூதிக்கு உதவிகளைச் செய்த சிவபெருமானார் இவளது மஹிமைத்துதியைக்கூறியவராக, அதனால் தேவியைத் துதித்து யாவரும் பயன்பெறவும் உதவினார் என்கிறது தேவீபாகவதம்.

தக்ஷிணகாளீ ப்ரபாவம் (காளீபெருமை விளக்கம்)

காளீதேவிவகைகளில் முக்கியமானவளாய், முதலில் புகழ்ந்து மஹாவித்யாவாக சியாமா என்று பேசப்படுபவள் **ஸ்ரீதக்ஷிணகாளி**. இவளே கலியுகத்தில் உபாஸகர்களுக்கு மிகமிக சீக்கிரத்தில் மந்த்ரஸித்தியை அளித்து அவரவர் விரும்பும் பயனையும் விரைந்தளித்தருளுவாள். கலியுகத்தில் ஸித்தியளிக்கும் மந்திரங்களில் தக்ஷிணகாளீமந்த்ரமும் முக்யமானதாகக் கருதப்படுகின்றது. காளீமந்திரமே **ஸித்தமந்த்ரம்** என்று

போற்றப்படும். கருணைவடிவினளான காளீ தன்னுடைய உபாஸகர்களை நோக்கி "நீங்கள் எதற்காகவும் பயப்பட வேண்டியதில்லை நான் அபயம் அளிக்கிறேன்" என்று கர்ஜனையாக கூறுகின்றாள். இத்துடன் "நீங்கள் தயக்கமின்றி எது வேண்டுமானாலும் கேளுங்கள். நான்கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்" என்று உறுதியாகவும் கூறுகின்றாள் என்கிறது காளீதந்த்ரம். லலிதா பரமேச்வரீ, காளீ, தாரா, அன்னபூர்ணா, இவர்களை உபாஸிப்பவன் சிவஸ்வரூபியாகி விடுகின்றான் என்கின்றன சாக்தநூல்கள். சக்திகளில் காளிதேவியே முந்தியவள், இவளே காலஸ்வரூபிணியாய் இருக்கின்றாள். இவளே பக்தர்களுக்கு விருப்பமான காமங்களை அளிக்கும் அனுக்ரஹம் செய்யும் கருணாமூர்த்தியாயும் இருக்கின்றாள். காளிதேவியின் மந்திரமே பிரம்மவித்யை எனப்படுவதாகும். இக்காளியை உபாஸித்து விஷ்ணு, பிரம்மா, முதலானோர் பலரும் பெரும்பேறு பெற்றுள்ளனர். எனவே காளிதேவி உபாஸனையே ஸர்வதேவதோபாஸனை ஆகும். ஸர்வதேவதாஸ்வரூபிணீ காளீதேவியை உபாஸித்தாலே பிரம்மா, விஷ்ணு, சிவன், கௌரீ, லக்ஷ்மீ, கணபதி, சூரியன் இவர்களை நாம் வழிபட்டதாக ஆகும். இதனைக்கூறும் சாஸ்திர சான்று இதுவே.

பிரம்மா விஷ்ணு சிவோ கௌரீ லக்ஷ்மீர் கணபதீ ரவி:.

பூஜிதா ஸகலா: தேவா: யக் காளீம் பூஜயேத் ஸதா.

காளியை உபாஸனைசெய்வதில் சிரமம் என்பதே ஒன்றுமில்லை. ஒவ்வொரு தெய்வத்தின் மந்திரத்தையும், அதைஸித்திபெற்றிட ஜபம்செய்யும்போதும், அந்தந்த மந்திரத்தில் இடம்பெற்றுள்ள மொத்தஎழுத்துக்களின் அளவினால், அதாவது ஒருஎழுத்துக்கு ஒருலக்ஷம் என்றஅளவுமுறைவிதமாக **அக்ஷரலக்ஷம்** என்ற எண்ணிக்கையிலோ, மந்த்ரசாஸ்த்ரம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலோ, ஜபத்தின்அளவு இருக்கவேண்டும். இதனை மந்த்ரபுரச்சரணவிதியால் அறியலாம். அதாவது, ஜபத்தின் அளவில் பத்தில் ஒருபங்கு ஹோமம், இதன் 10ல் ஒரு பங்கு தர்பணம், இதன் பத்தில் ஒரு பங்கு அன்னதானம் செய்யப்பட வேண்டும். இதற்கு "புரச்சரணம்" என்று பெயர். இதனை, இந்த ஐந்துகட்டத்தையும், செய்துமுடித்தால் மட்டுமே மந்த்ரஸித்தி ஏற்படும்.

வடாரண்யே ச்மசானே வா சூன்யாகாரே சதுஷ்பதே.

அர்தராத்ரே ச மத்யான்ஹே புரச்சரண மாரபேத்.

ஜீவஹீநோ யதா தேஹ: ஸர்வகர்மஸு ந க்ஷம:.
புரச்சரண ஹீநோ யோ ந மந்த்ரப் பல தாயக:.
மந்த்ரம் உத்காலயே தாதௌ ஸஞ்ஜீவயேத் தத:.

இதைச்செய்வதில் தடைபடவும், தாமதமாகவும், சோதனைகள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு. இவற்றிற்குப் பின்பே தன்னுடைய விருப்பம் நிறைவேற ஜபம், ஹோமம், முதலியவைகளைச் செய்யவேண்டும் என்பது பொதுவிதி. ஆனால், காளியின்மந்திரஜபத்திற்கு இவைஎல்லாம் கட்டாயமில்லை. காளீ மந்திரத்திற்கு வித்யாகாஞ்சீ என்ற சிறப்புப்பெயர் உண்டு. இதனால் காளீமந்த்ரம், மந்திரங்களுக்கெல்லாம் அரசியாகும். இந்த காளீ மந்திரத்தை நினைத்தால்கூட போதும். ஸாதகரான அவருக்கு அணிமா முதலிய யோகத்தின் எட்டுவகையான அஷ்டமாஸித்திகளும் கைகூடும். காளியே அனைத்திற்கும் ஆதியானவள். கனபூசையைக் கொள்பவள் காளீ ஒருத்தியே என்பது பல அநுபூதிமான்கள் கருத்து.

ஒவ்வொரு பிரளயத்தின் முடிவில் அனைத்து ஜீவராசிகளும் அழிந்துபோகும். அப்பொழுது காளீதேவீ ஒருத்திமட்டுமே எஞ்சி இருப்பாள். உலகத்தையும் எமனையும் சேர்த்து சங்கரரே அழித்துவிடுகின்றார். அழிப்பவருக்கு காலன் என்று பெயர். யசுர்வேதமந்திரம் வாமதேவசிவனை. "ஜ்யேஷ்டாயநம: சிரேஷ்டாயநம: காலாய நம:" என்றுகூறித் துதிக்கிறது. இவர் காலனாகிய எமனையும் அழித்துவிடுவதால் சிவனுக்கு காலகாலன் எனப்பெயர் ஏற்பட்டது. இப்படிப்பட்ட காலனின்சக்தியே காளீ. (காலஸ்யாபி கலனாத் காளீ) என்கிறது நூல். காளியே அனைவருக்கும் ஒடுக்கத்தை ஏற்படுத்துவதாலும், அனைவருக்கும் முன்பே இருப்பதாலும் இவள் ஆதிகாளீ எனப்பெயர் பெறுகின்றாள். அபிராமிபட்டர் தேவியை 'மூத்தவளே' என்றுகுறிப்பிடுகிறார். ராமகிருஷ்ணபரமஹம்ஸர் முதலானோர் காளியை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

காளீதோற்றத்தின் தத்வரூப விளக்கம்.

ஸ்ரீகாளீதேவீ கருநிறத்தினள் என்று கூறப்படுகின்றது. இது அன்னை தமோகுணத்தினள் என்பதைக்குறிக்கிறது. இவள் தமோகுணம் கொண்டவளாயினும் இவளிடத்தில் மஹாஸம்ஹாரகாலத்தில் ஸத்வகுணம் கொண்ட சக்திகளும், ரஜோகுணம் கொண்ட சக்திகளும் லயமடைந்து விடுகின்றனர். கடைசியில் இவள் ஒருவளே எஞ்சி இருப்பாள். ரஜோகுணம் சிவப்புநிறம். ஸத்வகுணம் வெண்ணிறம். இவையிரண்டும் தமோ குணமாகிய கருப்பில் கலக்க இருநிறங்களும் கருப்பு நிறமாகி விடும். ஆகஇந்த காளீ, மூன்று சக்திகளின் ஸங்கமித்த ஸ்வரூபத்தினள்

என்று அறியமுடிகிறது. "மமகண்டே ஸ்திதம்பீஜம் பஞ்சாசத் வர்ணமத்புதம்" என்பதாலும், "பஞ்சாசன்முண்டகடித மாலாம்" என்பதாலும் அவள் மாலையாக அணிந்திருக்கும் மாலையில் ஐம்பது தலைமுண்டங்கள் (துனித்தலைகள்) உள்ளதென்றும் இவை அனைத்து மந்திரங்களுக்கும் சிரம்போன்று முக்கியமான ஐம்பது மாத்ருகாக்ஷரங்களே (மூலஎழுத்துக்கள்) என்று தெரிகிறது. இவள் 'மாத்ருகாலயா', மாத்ருகாக்ஷரஸ்வரூபிணீ தேவீ என்பது தத்வம்.

மாத்ருகாக்ஷரரூபிணீ

திருக்கைலாய மலையிலெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது இடதுபாகத்தில் ஸதா ஸர்வகாலமும் பொருந்தியிருப்பவளும், பார்வதி, மஹேசுவரி, கௌரீ, உமை முதலிய திருநாமங்கள் பல வகிக்கப் பெற்றவளுமான தேவி சப்தமயமானரூபத்தை யுடையவளா யிருக்கின்றாள். சைவசாக்த தந்திர நூல்களில் கூறப்படும் சப்தமயமான ஐம்பத்தோரு அக்ஷரங்களின் (51 எழுத்துக்களின்) வடிவமே தேவீ. அப்படி சப்தரூபமான தேவிக்கு அகாரம் (சிரம்)தலை, ஆகாரம் நெற்றி. இகாரம் வலதுகண். ஈகாரம் இடதுகண். உகாரம் வலது செவி. ஊகாரம் இடதுசெவி. ருகாரம் வலதுகன்னம். ரூகாரம் இடதுகன்னம், லுகாரம் வலதுநாசி, லூகாரம் இடதுநாசி, ஏகாரம் மேலுதடு, ஐகாரம் கீழுதடு. ஒகார ஔகாரங்கள் முறையே மேலுங்கீழுமுள்ள பல்வரிசைகள். அம் என்பது வலது தாடை, அ: = என்பது இடது தாடை, கவர்கம் 5எழுத்துகள் வலதுபக்கத்து ஐந்துக்கரங்கள், சவர்கம் 5எழுத்துக்கள் இடதுபக்கத்து ஐந்துகரங்கள் (ஸதாசிவன் மற்றும் மஹேச்வரனைப்போலவே காளிக்கும் 5 தலை பத்துகைகள் உள்ளதுஅறியவும்). டவர்க்கம் 5எழுத்துக்கள் வலதுகால். தவர்க்கம் 5எழுத்துக்கள் இடதுகால், பகாரம் என்பது வயிறு, உபகாரம் வலது பக்கம், 3பகாரம் இடதுபக்கம், 4பகாரம் தோள், மகாரம் மனது (இதயம்) (யகாரம் ரஸம், ர என்பது ரக்தம், லகாரம் மாமிசம் வகாரம், மேதஸ், சகாரம் எலும்பு, ஷகாரம் மஜ்ஜை, ஸகாரம் சுக்லம்) ய, ர,ல,வ,ச,ஷ,ஸ ஆகிய இந்த ய முதல் ஸ வரையிலான ஏழு அக்ஷரங்களும் ரஸம், ரக்தம், மாமிசம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்கிலம் என்னும் ஸப்ததாதுக்கள் ஆகும், ஹகாரம் தொப்புள், க்ஷகாரம் நாதம் என்று இவ்வாறாகச் சொல்லப்படுகிறது. இப்படியாக மாத்ருகா வர்ணரூபமாக, ஏகபஞ்சாசத் அக்ஷரஸ்வரூபிணியாகவிளங்கும் ஸ்ரீமஹாகாளியானவள் இப்படி குணசொரூபிணியாயும், நிர்க்குணியாயும் இருக்கிறவளுடைய ரூபமானது சப்தமயமாகும். ஐம்பத்தோர் எழுத்துக்களின் கூட்டாகவே அனைத்து மந்திரங்களும் சக்திகளாகி அருட்பயனை அளிக்கின்றன.

காளீரூபச்மசானவாஸ விளக்கம்.

மஹாப்ரளயகாலத்தில் அனைத்து ஜீவராசிகளும் அழிந்துவிடுவதால் உலகமனைத்தும் ச்மசானமாகி விடுகிறது. அதில் வாஸம்செய்பவளே காளீ. அதாவது அனைத்தும் அழிந்தபின்பு (ஒடுங்கியசமயத்தில்) தான் ஒருவளே இருக்கின்றாள். ச்மசானமே ருத்ரபூமியாம். அதுவே பைரவரின் வாஸஸ்தலமாம். ஆதலால் நித்யா என்பது தத்துவம். சத்தியைப் பிரிந்த சிவனும் சவமாகின்றார். சவரூபமான சிவனுடைய இதயத்தாமரையில் நித்யவாஸம் செய்வதால் காளீ ச்மசான வாஸினீ எனக் கூறப்படுகிறாள். சிவ என்ற சொல்லில் சி என்ற எழுத்தில், சக்தி என்ற சொல்லின் எழுத்தொலியான இகாரம் உள்ளது அது நீங்கினால் அச்சொல் சவம் என்றாகிறது. ஸர்வஸம்ஹாரகாலத்தில் மஹாசம்சானத்தில் சிவனது காலாக்னியால் யாவும் பஸ்மமாகிறது. அந்த பஸ்மத்தையே (விபூதியையே) சிவசக்தி முதலானோர்கள் அணிந்திடுவார்கள்.

ச்மசானம் தக்ஷிணா ஸ்தானம் ச்மசானம் ச ஸதாசிவ:
சவரூப மஹாகாள ஹ்ருதயாம் போஜ வாஸினீ

என்கிற இந்த சக்திதந்த்ரத்தின் வாக்யத்தினால் இதனை அறியலாம். மஹாகாளசிவனாரின் உருவமாகிய சவத்தின்மீது இருப்பவளாக உள்ளதை அறியாமல் சிவனைமிஞ்சி அழித்தவளாகக் கருதக்கூடாது. சிவனைவிட்டு சக்திஒருபோதும் விலகாது. சிவனது எண்ணப்படி அவரது செயலைச் செய்திட அவர்உடலிலிருந்து சிவசக்தியாக வெளிபடுவதாகக் கருதவும். விஷ்ணு சிம்மஉருவமாயும், அதன்முதுகில் நடுவே பிரம்ம தேவர் தாமரைமலர்வடிவமான இருக்கையாகவும், அதன்மீது சிவனாகிய மஹாகாளரது தேஹமானது ச்மசானமாகவும் விளங்கிட முத்தொழிலாற்றும் மூவரும் காளிக்கு இருக்கையாக உள்ளனர். காளியின் கையிலுள்ள சிரம் தனியாகத் தோற்றமளிக்கும் தலையை ஒங்காரரூபமான முக்யமான எழுத்தாகக் கொள்ளவும். "ஓம் தத் பிரம்மா, ஓம் தத் ஸர்வம்" என வேதங்கள் மொழிவதால் போகமோக்ஷம்தரும் தலைபோன்று விளங்கும் பிரணவகலையே தலையாக தேவீயின் கரத்தில் விளங்குகிறது, ஒருகையில் உள்ள கட்கம் என்பது சிவஞானமாக இருப்பதாகும். உயிர்களின் அறியாமை இருளைநீக்கும் சிவஞானரூபமாக கட்கம் (கத்தி) விளங்குகிறது.

கபாலம் என்ற ரத்தம் நிறைந்து இருப்பதானது. எல்லாஆத்மாக்களும் மஹாமாயையில் அணுக்களாய் ஒடுங்கிஇருப்பதை இந்த பானபாத்ரம் உணர்த்துகிறது. உயிர்களின் அச்சத்தைப் போக்கி அடைக்கலம் அளிப்பது அபயமுத்திரையுடனான ஒரு கைமலர் ஆகும். நாம்விரும்பிய காமியமான வரங்களை அளிப்பது ஒருகையிலுள்ள வரதமுத்திரை ஆகும். இவ்வாறு தனது அடியவர்களின் துயரங்களைப்போக்கி, இஷ்டங்களை நிறைவேற்றி வைப்பவள். உயிர்களின் மூவகை மலபாசங்களை நீக்கிக்காப்பதை உணர்த்துவதே திரிசூலமாகும். ஸர்வஸ்வதந்த்ரசக்தியான தேவீ தன்கைகளில் ஆயுதத்தை எதற்காக? ஏந்திடவேண்டும் என்றவினாவிற்கு பதிலை மார்கண்டேயபுராணம் கூறுகிறது. அவுணர்களை அழிக்கவும், பக்தர்களுக்கு அபயமளிக்கவும், தேவர்களுக்கு இன்பமளிக்கவுமே தேவி எப்பொழுதும் ஆயுதங்களை ஏந்தித்திகழ்கிறாள். கருணையே வடிவானதாயுள்ளத்தால் – காளி, அழிக்க மனமின்றி வருந்தி மது அருந்தி அந்த மதுவின் மயக்கநிலையில் இருந்தவாறே அவர்களை மாய்த்து எதிரியிடத்திலும் கருணைகொண்டு, உலகைக் காக்கிறாள். தனது ஆயுதத்தால் போரில் அடிபட்டு மாய்ந்தால்மட்டுமே, அவர்களுக்கு முக்திகிடைக்கும் என்பதாலேயே ஆயுதத்தை ஏந்துகிறாள் என்பது தத்வக்கருத்தாக அறியப்பட வேண்டியது.

காளியம்மை வெளிப்பட்டகாலம். (காளீதேவீஆவிர்பாவம்)

மதுகைடபர்களை வதைக்க மஹாவிஷ்ணுவுக்கு உதவி செய்வதற்காக மஹாகாளியாக மஹாமாயையாக உதயமானாள். பண்டாசுரனை அழிக்க லலிதாபரமேச்வரீ ஆவிர்பவித்தாள். சும்பநிசும்பர்களை அழிக்க மஹாசரஸ்வதிதோன்றினாள். சண்டமுண்டர்களை அழிக்க சாமுண்டா தோன்றிவந்தாள். அந்தகாசுரனை அழிக்க சிவகோபத்தில் தோன்றினாள். சரபருக்கு நரசிம்மரைஒடுக்க உதவிசெய்ய பிரத்யங்கிரா தோன்றினாள் மஹிஷாசுரனைஅழிக்க, சிவகோபத்தில் துர்கை தோன்றினாள் இவ்விதம் காளீ ஒரு அசுரனையோ தீயவனையோ அழிப்பதற்காக தக்ஷிணகாளீ அவதாரம் செய்ததாக வரலாறு கிடைக்கவில்லை. இதனால் சிவனின் முதல்சக்தி ஸர்வஸம்ஹாரமூர்த்தியான தக்ஷிணகாளிக்கு ஒரு காரணம் தேவையுமில்லை. இவளே பராசக்தி இவளே ஆதிகாளீ. எனவே இவளது வாஸஸ்தானம் மஹாகாலரின் இதயகமல ச்மசானமாகும். அனந்தகோடி ப்ரம்மாண்டங்களுக்கு நாயகியாகிய காளிகாதேவீ 1. ஸ்ரீகாமரூபம், 2. உஜ்ஜயினி, 3. காச்மீரம், 4. காஞ்சீ, 5. கரவீரம், 6. தேவீகோஷ்டம், 7. ஒட்டியாணம், 8. ஹிரண்யபுரம் ஆகிய எட்டு ச்மசாணஇடங்களின் நடுவில் உள்ளதும் நூறுவாயில் கொண்டதும் இவளது மஹாச்மசான பூமியாகும். பிரம்மாமுதலானோரின் ஏழு ப்ரேதங்களுக்கும்மேலே சவரூபியான

மஹாகாலருடைய ஹிருதயகமலம் உள்ளது என்று சாக்தாகமநூல்கள் ரூபதத்துவவிளக்கம் கூறுகின்றன.

பத்ரகாளீ உருவவிளக்கம்.

இவள் சிம்மத்தின்மீது அமர்ந்திருப்பாள், மஷீ எனப்படுகிற கண்மையின் நிறம்போன்று கருப்புநிறதேஹம் உடையவள். அடர்ந்த புருவம்கொண்ட முகத்தினள். முன்னூறு கண்களை உடையவள், பயம்தருகிற கோரமான தோற்றமுடையவள், புலித்தோலாடையை உடுத்தியவள், அகன்றமுகத்தினள், மெலிந்தஅங்கத்தினள், தொங்கும் நீண்ட நாக்கை உடையவள், சிரோமாலையை சூடியவள், வானளாவும் படி சப்தமிடுபவள், ஒளிரும் தீச்சுடர்போன்ற சென்நிறமானஅவிழ்த்துவிடப்பட்ட கேசத்தைஉடையவள். மனிதஎலும்புகளால் அமைந்த ஆபரணங்களை அணிந்திருப்பவள். அனைத்து உலகிற்கும்தாயாகி, கோடிகோடி யோகினீசக்தி கூட்டங்களின் நடுவில் இருப்பவள். தனது எட்டுகைகளில் முறையே கத்தி, முச்சூலம், (அம்பு) பாணம், சக்தி இவற்றை 4 வலதுகைகளிலும், கேடயம், உடுக்கை (டமரு) வில், கபாலம் (கிண்ணி) இவற்றை 4 இடதுகரங்களிலும் ஏந்தியிருப்பவள். கோரமான தெற்றிப்பற்கள் நிறைந்த திறந்தவாயினள். பாதாளம் போன்று குழிவிழுந்த வயிறுகொண்டு, அதில் பலகோடி தானவர்கள் அசுரர்கள் தைத்யர்கள் இவர்களைக் கைகளால் எடுத்துத் தூக்கிப்போட்டு கடகடவென சத்தத்துடன் கடித்து ருசிப்பவள், சிரித்த முகத்தினள் என்று இவளுடைய உருவத் தியானத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும் பல சாக்ததந்த்ரநூல்களில் பலவகையில் இவளின் உருவஅமைப்புகள் பலகாரணங்களால் பலவகையில் பலவாறாக கூறப்பட்டுள்ளன.

ச்மசானகாளீ உருவம்

இவள் மலைபோன்ற பெரியஉடலும் கருமைநிற மேனியும் உடையவள் சுடுகாட்டில் வசிப்பவள், சிவந்த கண்களுடையவள், விரிந்த அவிழ்ந்த கூந்தலை உடையவள். பயங்கரமான தோற்றமும் சுருங்கியவயிறும் உடையவள். இருகைகளில் இடதுகையில் மதுமாம்ஸமுள்ளபாத்திரத்தையும், அச்சமயத்தில் வெட்டப்பட்ட தலையை வலது கையிலும் ஏற்றிருப்பவள். பல ஆபரணங்களை அணிந்தவள். நரிகள் புடைசூழ்ந்திருக்க சிரித்தவாயுடன் இருப்பவளாக நூல்களில் வர்ணிக்கப்படுகிறாள்.

காமகலாகாளீ உருவம்

காளிவகைகளில் காமகலாகாளீஎன்பவள் மிகவும் சிறந்தவளாக விளங்குகிறாள். இவளுடைய மந்திரத்தை மூவுலகையும் வசீகரித்து இழுப்பதாக, "த்ரைலோக்யா(ஆ)கர்ஷணமந்த்ரம்" என்று மந்த்ரசாஸ்திரம் புகழ்ந்துரைக்கிறது. இவளது மந்திரங்கள், 6 எழுத்துக்கள், 7 எழுத்துக்கள், 8 எழுத்துக்கள் கொண்டதாக, மிகரகசியமாக பாதுகாக்கத் தக்கதாக நூல்களில் கூறப்படுகின்றன. இது "அகரகசியவித்தை" எனவும், தனது அரசு, செல்வம், தனது பெண், தனது தலை இவற்றைக்கூட அளிக்கலாம். ஆனால் தகுதியற்ற எவருக்கும் எங்கும் காமகலாகாளீ மந்திரத்தை மட்டும் கொடுத்துவிடக்கூடாது என்று மந்த்ரசாஸ்திரத்தில் கூறப்படுகிறது.

ராஜ்யம் தத்யாத் தனம் தத்யாத் ஸ்த்ரியம் தத்யாத் சிரஸ் ததா.

ந தத்யாத் காமகலா காளீம் தத்யாத் கஸ்யாபி ந க்வசித்.

தேவராஜ்யத்தை பெறவேண்டி தேவேந்திரன் மற்றும் வருணதேவன், குபேரன், பிரம்மதேவர், ருத்ரர், ராமர், ராவணன், யமன், சூரியன், சந்திரன், விஷ்ணு இவர்களும், மற்றும் பல மஹரிஷிகளும் தங்களின் விருப்பம் நிறைவேற இந்த காமகலாகாளியை உபாஸித்து உள்ளனர். விளையாட்டாகக் கூட காமகலாகாளியை நினைவிற்கொண்டாலும் வித்யாலக்ஷ்மீ, ராஜ்யலக்ஷ்மீ, கீர்த்திலக்ஷ்மீ இவர்கள் உபாஸகனின் வசமாவர். அணிமாதி அஷ்டஸித்திகளும் கைக்கூடும். இந்த மந்த்ரவித்யையை யாருக்கும் கூறக்கூடாது என்று பரமன்கூற நான் யாருக்கும் கூறமாட்டேன் என்று பார்வதி ஸத்ய ப்ரதிக்ஞைசெய்ய அதன் பின்னரே பரமன் இந்த வித்யாரஹஸ்யத்தை பார்வதிக்கு உபதேசித்தார். அவ்வளவு ரஹஸ்யமானது இது என்றும் மந்த்ரசாஸ்த்ரம் கூறுகின்றது. முக்ய ரஹசியம் யாதெனில் குஹ்யகாளியே காமகலாகாளீ எனப்படுபவளாக அறியப்படுகிறது. ஆனாலும் மந்திரம் தனியாகவும் தியானம் தனியாகவும் கூறப்படுவதால் காமகலாவேறாகின்றாள். தாரா தேவீ மூன்றுபேதங்களைப் பெறுகின்றாள். சிகப்புநிறகாளீயான சுந்தரி என்பவள் (ஸ்ரீவித்யா) 77 பேதங்கள் உடையவளாய் இருக்கின்றாள். தக்ஷிணகாளி ஐந்துபேதங்களுடன் விளங்குகிறாள். குஹ்யகாளி மந்திர தியான பேதங்களால் ஏழுபேதங்களைப்பெறுகின்றாள். அதுபோல குஹ்யகாளியின் ஒருவகையானவள் காமகலாகாளீ என்பது ரகசியம்.

காமகலாதேவியினுடைய தியானமுறையானது குருவிடமிருந்தே குருவாயிலாகவே அறியவேண்டும். மந்திரமே உருவமாகக் கருதத்தக்கது. அதாவது " முகம் பிந்தும் க்ருத்வா" என்று தொடங்கும் ஸௌந்தர்யலஹரீ சுலோகத்தின் ஸாரமே இவளது தியானமாகிறது. அதன்படி பிந்துவை

முகமாகவும், இரண்டு பிந்து (வட்டப்புள்ளி)க்களை மார்பகங்களாகவும், யோனியை காமகலையாகவும் தியானித்து "ஸௌ:" என்ற தேவிசக்தி பீஜம் தேவியினுடைய இதயமாகவும் கருதுவதே, இவ்விதஉருவ மனோபாவனைசெய்வதே தியானமுறையாகும். மற்றவிபரங்களை குருமுகமாகவே அறியவேண்டும். இம்மந்திரத்தை ஸ்மரணம்செய்தாலே போதும், தேவர் மூர்ச்சையடைவர், அப்படியே ஸ்தம்பித்துப் அசைவற்றுப் போவர். நடுநடுங்குவர், பயந்து நிற்பர். அவனுக்கு வசமாகி பணியாட்கள் போலாவார்கள். இந்தமந்திரத்தின் மஹிமைபற்றி வேறென்ன கூறமுடியும், ஸர்வஸித்தியையும் தருவதாகும். இவ்வாறாக மந்த்ரசாஸ்த்திரம் பலவகைகாளிகளைப்பற்றி கூறியுள்ளது.

காளிதேவிக்கு அங்கதேவதைகளாக (அதாவது உறுப்பு தெய்வங்களாக பதினைந்து தேவிகள்) நித்யாதேவிகள் உள்ளனர். அவர்கள் பதினைந்து பேர்களாவர். 1. காளி, 2. கபாலினீ 3. குல்லா 4. குருகுல்லா 5. விரோதினி 6. விப்ரசித்தா 7. உக்ரா 8. உக்ரப்ரபா 9. தீப்தா 10. நீலா 11. கனா 12. பலாகா 13. மாத்ரா 14. முத்ரா 15. மிதா எனப்படுவர். பொதுவாக காளீயானவள் நித்யாகாளீ, மதுரகாளீ, பத்ரகாளீ என்று மூவகையாவாள்.

பிரத்யங்கிரா ப்ரபாவம்.

காளிவர்க்கத்தில் மிகச்சிறந்தவள் பிரத்யங்கிரா காளியாவாள். இவளை அதர்வணவேதம் போற்றுவதால் இவள் **அதர்வணபத்ரகாளீ** என்றபெயரில் புகழப்படுகிறாள். வேதங்களில் சிறந்தது அதர்வணவேதம் என்று சூதஸம்ஹிதை புகழ்ந்துரைக்கின்றது.

யதா ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம ப்ரதிஷ்டா ஸகலஸ்ய ச.
ததைவா(அ) தர்வணோ வேத: ப்ரதிஷ்டைகா கலச்ருதே:

(சூதசம்ஹிதா)

அனைத்துக்கும் எப்படி பரப்ரம்மம் ஆதாரமாயிருக்கின்றதோ, அப்படியே அனைத்து வேதங்களுக்கும் அதர்வணவேதம் ஆதாரமாயிருக்கிறது. மற்றய முதல் மூன்றுவேதங்கள் **த்ரயீ** எனப்படும். இந்த அதர்வண வேதம் மூன்றுவேதத்தையும் உயிர்கள் பயன்படுத்திப்பயனடையும் உன்னதவழிபாட்டுநெறிமுறைகளைக் கூறி மேம்படுத்திட நல்வழிகளைக் கூறும் ஆசானாக விளகுவதாகும்–சைவாகமங்கள் நால்வேததோற்றத்தையும் பாராயணத்திசைமற்றும் பயன்பாட்டுமுறைகளையும் கிரியையில் பலதருணஙங்களில் கூறியுள்ள அதர்வண வேதம் ப்ரத்யங்கிராதேவியின் பூர்ணமானமந்திரங்களை சூக்தமாகக் கொண்டுள்ளது. பிரத்யங்கிரா தேவிக்கான மந்திரங்கள் ருக்குகளாக ஒன்பதுவரிசையாக

இடம்பெற்றுள்ளன. முதல் ஏழுவர்கங்களிலும் 5 வீதம் 25ருக்குகளும், 8ம் வர்கத்தில் ஆறு ருக்குகளும், ஒன்பதாம் வர்கத்தில் ஏழு ருக்குகளுமாக மொத்தம் 48ருக்குகள் (பிரத்யங்கிராவின் சூக்தமான வேதமந்திரங்கள்) இடம்பெற்றுள்ளன.

அதர்வணவேதமந்திரங்களான இவற்றிற்கெல்லாம் ரிஷி, சந்தஸ், தேவதை, முதலியன தனித்தனியாக சொல்லப் பட்டுள்ளன. வதம் வசியம் முதலான எட்டுவகையான செயல்களையும் தனது எட்டுசக்திகளைக் கொண்டு செய்துமுடிப்பவள் இவள். எனவே இவளை அதர்வணவேதம் 'உக்ரா' என்றும் 'உக்ரகிருத்யா' என்றும் பெயரிட்டு போற்றுகின்றன. பொதுவாக எதிரிகளை அழிக்கவும், பாவம், தோஷம், சாபம், பயம், நோய், இவற்றை நீக்கவும் பிரத்யங்கிராகாளியை வழிபடுவது சிறப்புமுறை.

அதர்வணவேதமானது, மிருத்யுஞ்ஜயருத்திரார், சரபேச்வரர், பிரத்யங்கிராகாளீ, சூலினீதுர்கை போன்ற சிறந்த தெய்வ வழிபாட்டு மந்திரங்களையும் எட்டு வகைப்பயன்பாட்டு நெறிமுறைகளையும் கூறுகிறது.

பிரத்யங்கிராகாளீ உத்பவம்.

பிரஹ்லாதரின் ஸத்யவார்த்தைக்கு ஏற்ப தூணிலிருந்து நரசிம்மராக வெளிப்பட்டு மஹா விஷ்ணுவானவர், ஹிரண்யகசிபுவை வதம்செய்த பின்பு அவனுடைய குருதிச்சேர்க்கையால் அதிக கர்வியாகி வீரபத்திரரை அவமதித்தபோது, வீரபத்திரர் சரபமாக உருமாறினார். அவர் நரசிம்மரை அணுகிசாந்தப்படுத்த முயன்றபோது, சரபபக்ஷிக்கு எதிரிப்பறவையான இருசிம்மமுகமுள்ள கண்டபேருண்டம் என்ற ந்ருஸிம்மருடைய சக்திவெளிப்பட்டு சரபபக்ஷியோடுமோதிபோரிட்டது. இதனால் கோபமுற்ற சரபேச்வரர் மிகவும் கோபங்கொண்டு தனது நெற்றிக்கண்ணிலிருந்து, ஆயிரம் சிம்ஹமுகங்களும் இரண்டாயிரம் கைகளும் கொண்டவளாய் பிரத்யங்கிரா என்ற தனது பத்ரகாளியை உதிக்கச்செய்தார். அவள் அந்த் கண்டபேருண்டபக்ஷியை (பறவையை) எடுத்து விழுங்கிவிட்டாள். கண்டபேருண்டவிஷ்ணுசக்தியானது பிரத்யங்கிராசக்தியில் ஒடுங்கியது. சரபரின் அரவணைப்பால் சாந்தராகி ந்ருசிம்மர் தன்னை தடுத்தாட்கொண்டமைக்காக சிவனைத் துதித்து ஒன்றாயினார். அப்போது தேவர்களைப் பார்த்து பரமேச்வரர் ஒரு ரஹஸ்யத்தைக் கூறினார். அது, தேவர்களே! நீர் நீரிலும், பால் பாலிலும், நெய்நெய்யிலும் கலந்தால் ஒன்றாவது போல, நானும் (சரபருத்ரனும்) விஷ்ணுவும் ஒன்றாகிவிடுகின்றோம்."என்று கூறினார். இதனால் சரபருத்ரரின்

அதிஉக்ரசக்தியாக வெளிப்பட்ட 1000தலை மஹாமஹாப்ரத்யங்கிரா சினந்தனிந்து, உக்ரரூபிணியாக ஒருசிம்மமுகமும், நான்குகைகளும், கொண்டு சிம்மவாஹினியாகத் தோன்றி அருளினாள். வேதங்கள் இவர்களைத் துதித்தன. சரபருக்கு பிரத்யங்கிராகாளி வலதுபுறத்துள்ள சக்தியாகவும், சூலினீதுர்கா என்பவள் இடதுபுறசக்தியாகவும், அவருக்கு இரண்டு இறக்கைகளாகவும், அவரது ஆயுதங்களிலும் விளங்கி இருந்து அருளுவர். "ஹரிம் ஹரந்த மனுயந்தி தேவா:". என்ற யசுர் வேதசூக்தம் சரபசரிதத்தைக் கூறுகிறது. சரபோபநிஷத் இந்தவரலாற்றை மிகவும் விரிவாய் விளக்குகிறது. சிதம்பரத்தில் வாழ்ந்த உமாபதிசிவாசார்யார் என்பவர் தனது குஞ்சிதாங்க்ரிஸ்தவத்தில் சரபபிரத்யங்கிரா உதித்தது குறித்து வர்ணித்துக் கூறி துதித்துள்ளார்.

ஸ்ரீபிரத்யங்கிராகாளியினுடைய ஸ்வரூபவர்ணனைகள், மஹிமைகள், வழிபாட்டுமுறைகள், பயன்கள் யாவும், வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், மந்த்ரசாஸ்த்ரங்கள், இவைகளில் யாவிலும் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

பிரத்யங்கிரா மந்திர மஹிமை

இந்த ப்ரத்யங்கிராதேவீ சத்ருஸம்ஹாரம் செய்யும் திறனுடையவள். இவள் குற்றமற்றவர்களை ஒன்றும் செய்யமாட்டாள். இவளை உபாஸிப்பவரிடம் விரோதம் கொள்வது எவருக்கும் நன்மையைத்தராது காரணம் யாதெனில் இதுவே.

"யோ நோ ரயிம் துச்சரிதாஸோ அக்னே
ஜஹ்ருத் மர்தாஸோஅந்ருதம் வதந்த:
தேஷாம் வபூம்ஷி அர்க்ஷா ஜாதவேதான்
சுஷ்கம் ந விருக்ஷ மபி ஸந் தஹஸ்வ. (அதர்வணவேதம்)

இதன்பொருள் = என் ஐச்வர்யத்தை அபஹரித்தவர், என்விஷயமாகப் பொய்சொல்லுபவர், என் எதிரிகள், அவர்களுடைய உடலைக் காய்ந்த மரத்தை அக்னி எரிப்பது போல கொளுத்திவிடு என்று இவளை குறித்து அதர்வண வேதமந்திரம் வேண்டுகிறது.

இந்த ப்ரத்யங்கிரா சக்தியிடம் ஒரு தனித்தன்மை உண்டு. அது நம் மீது எவராவது ஏவல் செய்திருப்பின், இவள் மந்த்ரத்தை ஜபித்தால் அந்த ஏவல் செய்தவர்களை நோக்கியே அதுசென்றுவிடும். ஏவல் செய்துவைத்தவனே அழிவான். இவளது மந்திரத்தை கவனமாகக் கையாளவும் வேண்டும்.

யாம் கல்பயந்தி நோ ரயக் க்ரூராம் க்ருத்யாம் வதூ மிவ.

தாம் ப்ரம்ஹணா(அ)வ நிர்ணுத்ம: ப்ரத்யக் கர்த்தார ம்ருச்சது.

(அதர்வணவேதம்)

இவ்வாறு இந்த அதர்வணவேதமந்திரம் இதனை விளக்குவதால் அறியலாம்.

அதர்வணபத்ரகாளியான ஸ்ரீபிரத்யங்கிராவினுடைய அதர்வண வேதமந்திரத்தில் ஒன்று, எவன் ஏவல் செய்தானோ அந்த ஏவலை அவன்பக்கமே அனுப்பும் அற்புதமானமந்த்ரம் இதுவே.

"ஓம் ஹ்ரீம் – யாம் கல்பயந்தி நோ (அ)ரய: க்ரூராம் க்ருத்யாம் வதூமிவ.

தாம் ப்ரம்ஹணா நிர்ணுத்ம: ப்ரத்யக் கர்த்தாரம் ருச்சது – ஹ்ரீம் ஓம்.

இந்த மந்திரத்தைச் சொல்லி உரியபொருட்களால் பிரத்யங்கிரா ஹோமத்தை செய்பவர் அந்த ஹோமத்தின் கடைசியில் அங்கு எட்டுதிக்கிலும் வேண்டுதலோடுகூடிய உரிய மந்திரங்களைக்கொண்டு எட்டு திக்பாலகர்களுக்கும் அவசியம் அன்னத்தால் பலிபோடவேண்டும். அந்த பலிகளை எப்படிப்போடவேண்டும் என்ற, உரியமந்திரம் பூஜா பத்ததியில் கூறப்பட்டுள்ளது. இதுபற்றிய எட்டு திக்பலிமந்த்ரங்கள் மந்த்ரமஹோததி என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக கலியுகத்தில் பிரத்யங்கிராகாளியின் வழிபாடு இஷ்டஸித்தியைத் தருவதாகும்.

பெண்குழந்தைகள் தந்தையின் வீட்டிற்கு வெகுவிரைவாக வருவதுபோல் என்மீது யார் ஏவல்செய்துள்ளானோ அவனிடம் வேகமாகச் செல், அவன் தலையை உடைத்து விடு, அவன் குலத்தை அழித்துவிடு என்றும் பிரத்யங்கிரா தேவியிடம் அதர்வண வேதமந்திரம் பிரார்த்திக்கின்றது. இதனால் குற்றமிழைக்காதவர் அழிய இம்மந்திரத்தைப் பயன் படுத்தக்கூடாது என்று மந்த்ரசாஸ்திரம் உறுதிபடக்கூறுகிறது. இவளை மிகக் கிழவியாகவும், தொங்கும் நீண்டநாக்கு உடையவளாகவும், பெரிய சிவந்த மூன்றுகண்ணுடையவளாகவும், கோரப்பற்களோடு கூடிய குகைபோன்ற அகன்ற பெரிய வாய்உள்ளவளாகவும், குனிந்த முகத்தினளாகவும், எண்ணி உபாஸிக்கலாம். அப்போது மேல் வலதுகரத்தில் கோடரியையும் கீழ்வலது கரத்தில் அங்குசத்தையும், மேல்இடதுகரத்தில் பாசத்தையும், கீழ்இடது கரத்தில் சூலம் அல்லது வெட்டியதலை (சிரம்) இவற்றையும் உடையவளாகக்கருதி வழிபடத்தக்கவள். அஷ்டமஹாநாகங்களும் இவளுக்கு ஆபரணங்களாக இருக்கும். இவளை

அங்கீரஸ மகரிஷிகோத்திரத்தினர், ப்ருகுவம்சத்தினர், அத்ரிவம்சத்தினர், வசிஷ்டவம்சத்தினர் உபாஸித்துப் பயன்பெற்று உள்ளார்கள்.

பிரத்யங்கிரா காயத்ரி மந்திரப்பொருள்.

பிரத்யங்கிராயை வித்மஹே சத்ருநிஷூதின்யை தீமஹி.

தன்னோ தேவீ ப்ரசோதயாத்.

இதன்பொருள், பிரத்யங்கிராதேவீ என்று யாரைத்தெரிந்து கொண்டிருக்கிறோமோ, யாரை சத்ருக்களை அழிப்பதை சாதிப்பவளாக த்யானம் செய்கிறோமோ, அந்த தேவிப்ரத்யங்கிரா என்று அதர்வணவேதம் கூறுகிற பத்ரகாளீ நம்மை அவளுடைய ஞானத்திலும், தியானத்திலும், ஈடுபடுத்தட்டும் என்பது இந்த காயத்ரியின் பொருள். மற்றொருகாயத்ரீ மந்திரம். இது உக்ரப்ரத்யங்கிரா காயத்ரி ஆகும்.

அபராஜிதாயை வித்மஹே க்ஷுத்ர ஹாரிண்யை தீமஹி.

தன்னோ உக்ரா ப்ரசோதயாத்.(பிரத்யங்கிராகாயத்ரீ)

இதன்பொருள் : எவள் பிறரால் ஜயிக்கமுடியாதவள் என்று அறிந்துகொண்டிருக்கிறோமோ, எவள் க்ஷுத்ரம் கர்ம எனப்படும் ஏவல் முதலியவற்றை போக்குபவளாக தியானிக்கப்படுகின்றாளோ அந்த உக்ர ப்ரத்யங்கிராதேவி நம்மை அவளுடைய ஞானத்திலும் தியானத்திலும் ஈடுபடுத்தட்டும் என்பது இந்த காயத்ரியின் பொருள். இவளுடைய மந்த்ரஜபத்தில் ஈடுபட்ட உபாஸகன் மந்த்ரஜபம் செய்யும் முன் இவளுடைய ஏதாவது ஒருகாயத்ரியை அவசியம் ஜபம்செய்வது நலம்தருவதாகும்.

காளீஉத்பவத்தின் தத்வநோக்கம்.

அருவமாகிய பராசக்தி நல்லோர்களுக்குத் துயரம் ஏற்படும் பொழுதில், அவர்களைக் காத்திடுவதற்காக திருமேனியைத்தாங்கி நான் அவதரிக்கிறேன். இவ்விதம் தேவர்களைக் காத்திட பிறப்பற்ற நான் பிறப்புற்றதும் உருவமற்றநான் உருவம்பெற்றதும் அசுரர்களால் ஏற்பட்டநிகழ்ச்சி என்று தேவீபாகவதத்தில் தேவியேகூறிய, தேவியின் அருள்வாக்கு இது.

அருள்தரு மஹாலக்ஷ்மீ சண்டிகாபரமேச்வரீ (18கை)



அருள்தரும் ஸ்ரீவக்ரகாளியம்மன் திருவக்கரை

யதா யதா ஹி ஸாதூனாம் துக்கம் பவதி தானவ.

ததா தேஷாம் ச ரக்ஷார்த்தம் தேஹம் ஸந்தாரயாம் யஹம்.

அரூபாயாஸ் ச மே ரூபம் அஜன்மாயாஸ் ச ஜன்ம ச.

சுராணாம் ரக்ஷணார்த்தாய வித்தி தைத்ய விநிச்சிதம்.

(தேவீபாகவதம்)

மேலும் `காலசக்தியான அன்னை காளிக்கு குணம் கிரியைகளுக்கு ஏற்ப உருவம் அமைகிறது என்று "மஹாநிர்வாணதந்த்ரம்" கூறுகிறது.

அரூபாயா: காளிகாயா: காலமாதுர் மஹாத்யுதே:.

குணக் கிரியானு ரூபேண க்ரியதே ரூபகல்பனா.

மேலும் காளியம்மாவே கலியுகத்தில் சீக்கிரத்தில் அருள்வரம் தரக்கூடியவள் என்று சாக்தாகம பிச்சிலாதந்த்ரம் கூறுகிறது.

காளிகா மோக்ஷதா தேவீ கலௌ சீக்ர பலப்ரதா.

எவ்வாறு ஒவ்வொரு செயலின் முடிவிலும் வெகுமதியளிப்பது அச்செயலுக்குப் பயனளிப்பதாகிறதோ அவ்வாறே இந்த சிவனாரின் சக்தியான காளிகாதேவீ உலகத்தோரின் அனைத்து செயல்களுக்கும் பயனை அளிப்பவள். அதனாலேயே இவள் தக்ஷிண + காளீ = தக்ஷிணாகாளீ எனப்பெயர்பெருகிறாள்.

யதா கர்ம ஸமாப்தௌ ச தக்ஷிணா பல ஸித்திதா.

ததா சக்தி ரஸௌ தேவீ ஸர்வேஷாம் பலதாயிநீ.

காளீஞானசக்தியாவாள். இவளே மூத்தவள். "ஓங்காரரூபிணீம் அம்பாம் மஹாகாளீம் ப்ரபூஜயேத்" என்ற ஆகமவசனப்படி தலைவனின் தலைவியாய் உலகத்துயரைப் போக்கி அருள்பவள். நமது பாசபந்தத்திற்கும் விடுதலைமுக்திக்கும் காரணமானவள். இக்கருத்தை மார்கண்டேய புராண சப்தசதீமந்த்ரஆர்ஷோக்தியால் அறியலாம். மேதஸ்மகரிஷிகூற்று,

ஸா வித்யா பரமா முக்தேர் ஹேதுபூதா ஸநாதனீ.

ஸம்ஸாரபந்த ஹேதுச்ச ஸைவ ஸர்வேச்வரேச்வரீ (ஸப்தசதீ)

இவ்வாறு ஸர்வேச்வரரின் ஸர்வேச்வரியாக திரிலோகஜனனியாக உள்ள சிவசக்தி ஒருவளேயாகிலும் உருவவகைகளால் பலவாக விளங்கி அருள்கிறாள் என்று சைவசித்தாந்த நூல் கூறும்.

ஏகைவ சிவசக்திஸ் து மூர்த்திபேதாத் அனேகதா.

பொதுவாக காளிதேவியின்வர்கத்தை நிறத்தால் இருவகைப்படுத்தி கருப்பி, சிகப்பி என்றும் சுந்தரீ, காளீ என்றும் கூறிவிளக்குகின்றன.

காளிகா த்விவிதா ப்ரோக்தா க்ருஷ்ணா ரக்தா ப்ரபேதத:.
கிருஷ்ணா து தக்ஷிணா ப்ரோக்தா ரக்தா து சுந்தரீ மதா.
இயம் நாராயணீ காளீ தாரா ஸ்யாத் சூன்ய வாஹிநீ.
சுந்தரீ ரக்தகாளீ தத் பைரவீ நாதினீ ததா. (காளீதந்த்ரம்)

மேலும் சாஸ்திரங்களில் பலவகையில் பலபெயரில் காளீகூறப்படுகிறாள் தக்ஷிணகாளீ மஹாகாளீ, குஹ்யகாளீ, உக்ரகாளீ, நிக்ரஹகாளீ, அனுக்ரஹகாளீ, மதுரகாளீ, நித்யாகாளீ, பத்ரகாளீ என்று ஒன்பது வகைகாளிகள் பேசப்படுகின்றனர். காளீ நித்யா, மதுரா, பத்ரா எனமூன்று வகையாகவும், ஆதிகாளீ, தக்ஷிணகாளீ, பத்ரகாளீ, குஹ்யகாளி ச்மசானகாளீ என்று ஐந்து வகையாகவும், காளீக்ரமதீக்ஷா என்ற நூலில் எட்டுவகையாக முறையே, 1. சிந்தாமணிகாளீ, 2. ஸ்பர்சகாளீ, 3. ஸந்ததிப்ரதாகாளீ, 4. ஸித்திகாளீ 5. தக்ஷிணாகாளீ 6. காமகலாகாளீ 7. ஹம்ஸகாளீ 8. குஹ்யகாளீ என்ற எட்டுவகை கூறப்பட்டு தனித்தனியே மந்திரபேதங்கள் கூறப்படுகின்றன. காளியே ஆதிவித்யா காளீபேத மந்திர புரச்சரணத்திற்குப் பிறகே தாரா, ஷோடசீ, சின்னமஸ்தா முதலான வித்தைகளின் உபதேசத்தைப் பெறவேண்டும். பிறகு மஹாகாளபைரவர், பிறகு வடுகபைரவர் மந்திர உபதேசம் பெறுவது வழிமுறையாகும்.

ஜோதிரூபமான மஹாகாளியிலிருந்து சிவசக்தி ப்ரபேதத்திலிருந்தே இவ்வுலகம் படைக்கப்படுகிறது என்றும், அந்த சிவசக்தியே ஸகுணப்ரம்மமாயும் நிர்குணப்ரம்மமாயும் இருவகையில் இருந்து அருள்செய்வதாக, சிவனால் சாக்தாகமமான நிருத்தரதந்த்ரத்தில் அடிப்படைதத்வம் கூறப்படுகிறது.

ஜ்யோதி ரூபா மஹாகாளீ சுக்ரரூபா ப்ரபஞ்சசு.
சுக்ரதோ ஜாயதே விச்வம் சிவசக்தி ப்ரபேதத:
சிவசக்திர் த்விதா தேவி நிர்குணா ஸகுணாபி ச (நிருத்தரதந்த்ரம்)

சுக்லரூபிணியான சிவசக்தியில் உலகைப் படைப்பவளாதலால், (விச்வயோனி) ஜகத்ஜனனி எனப்படுகிறாள்.

மஹாவித்யாதேவிகள் (மூவகைபத்து சக்திகள்)

சிவனது ஞானசக்தியே காளீ அதாவது வித்யா எனப்படுகிறாள். பிரியாதசிவசக்தி பத்துதிசையிலும் சிவனைப் பிரியாதிருக்க பத்துபெயர் உருவத்தில் பெருந்தேவிகளாகத் திகழ்ந்தனர். இவர்களே தசமஹாவித்யா எனப்படுகின்றனர். அவர்கள் 1. காளீ, 2. தாரா 3. புவனேச்வரீ 4. ஷோடசீ 5. பைரவீ 6. சின்னமஸ்தா 7. தூமாவதீ 8. பகளாமுகீ 9. மாதங்கீ 10. கமலாத்மிகா என்ற பத்துசக்திகளை "ஸித்தவித்யாசக்திகள்" என்ற தசமஹா வித்தைகள் என்று சாக்த நூலான "நிருத்தர தந்த்ரம்" முறைப்படுத்தி விளக்குகிறது.

காளீ தாரா மஹாவித்யா ஷோடசீ புவனேச்வரீ.
பைரவீ சின்னமஸ்தா ச வித்யா தூமாவதீ ததா.
பகளா ஸித்தவித்யா ச மாதங்கீ கமலாத்மிகா.
ஏஷா தசமஹாவித்யா: ஸித்தவித்யா: ப்ரகீர்த்திதா: (நிருத்தர தந்த்ரம்)

சிவபெருமானால் பார்வதியிடத்தில் அந்த நிருத்தரதந்த்ரத்திலேயே கூடுதலாக சில சக்திமூர்த்தங்களுடன் பதினெட்டுவகையான "மஹாவித்யாதேவிகள்" கூறப்பட்டுள்ளனர். இதனைக்கூறும்சான்று,

காளீ தாரா ததா ச்சின்னா மாதங்கீ புவனேச்வரீ.
அன்னபூர்ணா ததா நித்யா துர்கா மஹிஷமர்தினீ.
த்வரிதா த்ரிபுரா சைவ பைரவீ பகளா ததா.
தூமாவதீ ததா ஞேயா கமலா ச ஸரஸ்வதீ.
ஜயதுர்கா ததா பத்ரே ததா த்ரிபுர சுந்தரீ.
அஷ்டாதச மஹாவித்யா: தந்த்ராதௌ கதிதா: ப்ரியே!.

இதன்படி பதினெட்டு மஹாவித்யா சக்திகள் என்ற உச்சநிலை சிவசக்தி பேதங்கள்

1. காளீ 2. தாரா 3. சின்னமஸ்தா 4. மாதங்கீ 5. புவனேச்வரீ 6. அன்னபூர்ணா 7. நித்யா 8. மஹிஷாசுரமர்தினீதுர்கா 9. த்வரிதாதேவீ 10. த்ரிபுராதேவீ 11. பைரவீ 12. பகளா 13. தூமாவதீ 14. கமலா 15. ஸரஸ்வதீ 16. ஜயதுர்கா 17. பத்ரா 18. த்ரிபுரசுந்தரீ இத்தேவிகளே அதிகப்ரபாவம் மிக்க அஷ்டாதசமஹாவித்யா பெருந்தேவியர்கள் எனப்படுகின்றனர்.

எல்லாஸித்தவித்யாக்களுக்கும் தக்ஷிணகாளியே மூலமாக விளங்குபவள் அவளை வீரபாவத்தோடு சிந்தித்து சுபம் தரும் தக்ஷிணாவை பூசிக்குமாறு சிவபெருமான் கூறுகிறார்.

ஸர்வாஸாம் ஸித்தவித்யானாம் ப்ரக்ருதிர் தக்ஷிணா ப்ரியே.

திவ்யைர் வா வீரபாவைர் வா சிந்தயேத் தக்ஷிணாம் சுபாம்.

திவ்ய பாவைஸ் ச வீரைஸ் ச காளீ குலம் விசிந்தயேத்.

பெண்தெய்வமான காளீகுலத்தில் 10 வித்யா சக்திகள் முறையாக கூறப்பட்டுள்ளனர். காளீ, தாரா, ரக்தகாளீ, புவனா, மஹிஷமர்தினீ, த்ரிபுடா, த்வரிதா, துர்கா, வித்யா, பிரத்யங்கிரா, இவர்கள் தசவித்யா காளீகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறார் சிவபெருமான்.

"காளீ தாரா ரக்தகாளீ புவனா மஹிஷமர்தினீ.

த்ரிபுடா த்வரிதா துர்கா வித்யா ப்ரத்யங்கிரா ததா.

இவை காளீகுலம் வித்யா எனப்படுபவர்கள் ஆவர். சுந்தரீ, பைரவீ, பாலா, பகளா, கமலா, தூமாவதீ, மாதங்கீ, வித்யா, ஸ்வப்னவதீ மதுமதீ இவர்கள் பத்துதேவியர்களும் மஹாவித்யா என்ற ஸ்ரீகுலத்து சக்திகளாவர்.

இவ்வாறு சிவபெருமானால் பத்து வித்யாசக்திகள் **காளீகுலம்** என்றும், பத்துமஹாவித்யா சக்திகள் **ச்ரீகுலம்** என்றும், பத்துமஹாவித்யா சக்திகள் **ஸித்தவித்யாசக்திகள்** என்றும் பகுத்துக் கூறப்பட்டுள்ளது. இதன்படி 10 வித்யா மற்றும், 10 மஹாவித்யா மற்றும், 10 ஸித்தவித்யா என்று மூன்றுவகை வித்யா சக்திகளைஅறிந்து உபாஸித்து பயன்பெறவேண்டும்.

குஹ்யகாளீ ஸ்வரூபபேதவிளக்கம்.

இவளை மந்த்ரசாஸ்திரங்கள் பர்வதராஜகுமாரியாய் பேரழகியாய் தோன்றி அசுரர்களை அழித்திட ஸௌம்யரூபத்தை விட்டு அடியவர்களுக்காக உக்ரரூபத்தை ஏற்ற ஆதிகாளீ என்கிறது. இவளை சித்சக்தி என்கிறது. கோடியோகினிசக்திகள், கோடிபைரவர்கள் சூழ்ந்து மகிழ்ந்திருக்கும் ச்மசானத்திலிருப்பவள் என்றும், 27 தலை முண்டமாலையை அணிந்து, 154 கைகளுடன் இருப்பவள் குஹ்யகாளி. இவளே பலவிதமான

உருவங்களைக் கொண்டவளாக விளங்குகிறாள். 1முகம் 2முகம் 3முகம் 5முகம் 10முகம், 20 முகம் 30முகம் 36 முகம் 60முகம் 80 முகம் 100முகம் கொண்டவளாயும் ஆதிகாளியான குஹ்யகாளீ காட்சியளிப்பாள். இவற்றுள் பத்துமுகம் கொண்டகுஹ்யகாளியையே ரகு ராமர், பரதன், ராவணன் முதலானோர்கள் பலர் உபாசித்துப்பயன் பெற்றுள்ளனர். ராமர் உபாஸித்த இந்த குஹ்யகாளி 54கையுடையமுன்கூறப்பட்டவளாவாள். இவளே அனைத்து குஹ்யகாளி மூர்த்திகளுக்கும் மூலமாய் விளங்குபவள்.

இந்த குஹ்யகாளிக்குப், பலவகையான முகங்கள் அமைத்திடக் காரணம், பலருக்கு அருள்செய்வதற்காகவே இவள் பலவகைமுகங்களை ஏற்றாள் என்று நூலில் கூறப்பட்டுள்ளது. அச்சரிதம் இதுவே ஒருசமயம் தேவர்கள் முதலானவர்கள் தேவியைக் குறித்துத் தவம் செய்தனர். தேவி அனைவருக்கும் ப்ரத்யக்ஷமானாள் (வெளிப்பட்டாள்) தேவர்கள் வரிசையாக வரங்கேளாமல் கூட்டமாய் முண்டியடித்துக் கொண்டுவரங்கேட்டனர். இதைக்கண்டு சிரித்தாள் தேவி. தேவர்முதலியவரோ தேவி நாங்கள் அனைவரும் ஒரேஸமயத்தில் ஒரேவிதமாய் தவமியற்றினோம். அனைவருக்கும் நீயும் ஒரே சமயத்தில் தரிசனம் தந்தாய் ஆகையால் நீஒருவருக்கு முன்னும் மற்றவருக்குப் பின்னுமாய் வரங்கொடுப்பது எவ்வாறு பொருந்தும்? என்றனர். அனைவருக்கும் ஒரேஸமயத்தில் வரங்கொடுக்க தேவீ பலமுகங்கள் கொண்டாள்.

ஸதாசிவனுக்கு வரமளிக்க ஒருமுகத்தினளாகவும், முக்குணத்தவரான மும்மூர்த்திகளுக்கு வரம்தந்திட மூன்று முகங்களையும், தன்இருக்கையிலுள்ள பஞ்சப்ப்ரேதங்களுக்கு வரம்கொடுக்க ஐந்து முகங்களும், ஸப்தரிஷிகளுக்கு வரம்கொடுக்க ஏழு முகங்களும், வசுக்கள் எண்மருக்கு அருள்புரிய ஒன்பது முகங்களும், 10 திக்பாலகர்களுக்கு அருள்தர பத்துமுகங்களும் (8திசைமேல்திசை கீழ்திசைஆக10), ருத்ரர்களுக்கு வரம்தருவதற்காக பதினோருமுகங்களும், 12 சூரியர்களுக்கு அருள்தர பன்னிரண்டு முகங்களும், விச்வேதேவர்களுக்கு அருள்தர பதிமூன்று முகங்களும், 14 உலக இந்திரர்களுக்கும், 14 மனுக்களுக்கும் அருள்புரிய பதினான்கு முகங்களும், அக்னி மூர்த்திகளுக்கு அருள்தர பதினைந்து முகங்களும், ஸித்தர்களுக்கு வரம்அளிக்க பதினாறு முகங்களும், ஸாத்யர்களுக்கு வரம்தரப் பதினேழு முகங்களும், யக்ஷர்களுக்கு வரம்தர பதினெட்டு முகங்களும், அரக்கர்களுக்கு வரமளிக்க பத்தொன்பது முகங்களும், கின்னரர்களுக்கு வரம்தந்திட இருபது முகங்களும், குஹ்யகர்களுக்கும்

பிசாசர்களுக்கும் அருள்தர இருபத்தோரு முகங்களும், வித்யாதரர்களுக்கு அருள்தர 30 முகங்களும், பாஸ்கரர்களுக்கு அருள்தந்திட 32 முகங்களும், ப்ரஜாபதிகளுக்கு வரமளித்திடவே 60 முகங்களும், மருத்துக்களுக்கு (வாயுதேவதைகள்) எண்பது முகங்களும், அவுணர்கள், தைத்யர்கள், தானவர்களுக்காக தான் 100 முகங்களையும் கொண்டு–வரம்தந்தாள். மஹாகல்பகாலம்வரும்போது பத்தாயிரம்முகங்களும், இரண்டுலக்ஷம் கைகளும், மிகநீண்ட தேஹமுடையவளாகவும் இருந்து கொண்டு அனைவருக்கும் வரமளிக்கப்போகின்றாள் என்கிறது காளீபுராணம்.

அவள்விருப்பப்படியே அவள் உருவம் எடுப்பாள் எனவே இவள் இச்சாரூபதாரிணீ. உலகம் அவள்வசத்தில் உள்ளது. அவள் யாருக்கும் வசமானவள் அல்ல. அவளே உலகத்தைக் கட்டுப்படுத்துபவள். அவள் யார்கட்டுப்பாட்டிலும் இல்லையே அதனால் அவளே த்ரிபுவனேச்வரீ என்கிறது காளீபுராணம். அனைத்து சக்திகளுக்கும் ஆதியாய்உள்ளவள் இந்த குஹ்யகாளியே என்றறிக.

ஸ்ரீவித்யார்ணவதந்த்ரம் என்னும் நூல் காளீவித்யையைப் பற்றி அறிமுகப்படுத்தும்போது ஸ்ரீகாளீவித்யா மஹாவித்யா. இது எல்லோருக்கும் கிடைப்பது அரிது. இந்த வித்தையை தெரிந்துகொண்டவன் ஜீவன் முக்தனாகின்றான். இந்த மந்திரத்தை உபாஸிக்க சித்தசுத்தி முக்யமில்லை, சிரமங்களோ சிலவோ இல்லை. சரீரத்தை வருத்தவேண்டிய அவசியமும் இல்லை. இதனை குருமுகமாகப்பெற்று ஜபித்து ஸித்திபெறலாம். எவன் காளீவித்தையை உபாஸிக்கிறானோ அவன்கையில் ஸர்வஸித்திகளும் உள்ளன. காளீ உபாஸகன் ஒருவன் ஸபையில் வந்து அமர்ந்தவுடன் கத்யபத்யமயமான கவிதை அவன்வாயிலிருந்து அனாயாஸமாக வெளிவரும். அவனைப் பார்த்தவுடன் சபையில்உள்ள வாதிகள் கலையிழந்து நிற்பர். அரசர் அவனுக்கு பணிவிடைசெய்யக் காத்திருப்பர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு காளீமந்த்ரங்களில் மிகச்சிறந்தமந்த்ரம் தக்ஷிணகாளீ மந்த்ரமும் ஸ்ரீ குஹ்யகாளிமந்த்ரமும் ஆகும். தக்ஷிணகாளிமந்த்ரம் 22அக்ஷரங்கள் கொண்டது. குஹ்யகாளி மந்த்ரம் 21 அக்ஷரங்கள் கொண்டது. தக்ஷிணகாளி மந்த்ரத்திலேயே ஒருஅக்ஷரத்தைக் குறைத்தால் அது குஹ்யகாளி மந்த்ரமாகும். மற்றஎல்லா விஷயங்களிலும் தக்ஷிணகாளியின், மந்த்ரத்திற்கும், குஹ்யகாளியின் மந்த்ரத்திற்கும் பேதம்கிடையாது. தியானம், ரிஷி, சந்தஸ், நியாஸம், முதலியவை சமமானதாகும். யந்த்ரம்கூட ஒன்றாகவே இருக்கும் என்று மந்த்ரசாஸ்த்ரம் எடுத்துரைக்கின்றது. இவளது துதி இதுவே.

தாதுர் யா ஸ்ருஷ்டி சக்தி: ஜக தவன விதௌ
ஸ்தைர்ய சக்திஸ் ச விஷ்ணோ:

சம்போஸ் ஸம்ஹார சக்திர் யுவதி ஜன ஹ்ருதுன்
மாத சக்தி ஸ்மரஸ்ய.

ஞானேச்சா கர்மசக்தி: த்ரிபுர விஜயினஸ் ஸர்வகா ஸர்வசக்தி:
ஸர்வேஷா மாதி சக்திர் மம ஹ்ருதி வஸதாம்
குஹ்ய காள்யாக்ய சக்தி:. (மந்த்ரசாஸ்த்திரம்)

இதன்பொருள்.– உலகைப்படைக்கும் பிரம்மனுடைய படைப்புசக்தியான ஸரஸ்வதியாயும், விஷ்ணுவினுடைய உலகைக் காக்கும் லக்ஷ்மீ சக்தியாயும், கருணையினால் உலகங்களை ஒடுக்கி ஒய்வளிக்கும் ஸம்ஹாரசக்தி பார்வதீஎன்ற காளியாயும், பருவமங்கைகளின் மணங்கவரும் மன்மதனின்சக்தி ரதிதேவியாகவும், ஞானசக்தியாயும், இச்சாசக்தியாயும், க்ரியாசக்தியாகவும், முப்புரமெரித்த சிவனாரின் எங்கும் தங்குதடையின்றிச்செல்லும் ஸகலசக்தியாகவும், அனைத்திற்கும் முதலாகவும்உள்ள ஆதிசக்தியான குஹ்யகாளியானவள் நமது மனதில் என்றும் வசிக்கட்டும். இவ்வாறாக குஹ்யகாளிபற்றி மந்திரசாஸ்திர துதியானது உறுதிபடக் கூறுகின்றது. மேலும் இவளின் பெருமைகளைக் கூறுகின்றன.

காளீ வழிபாட்டின் தனிச்சிறப்பு

ஜகன்மாதாவான ஸ்ரீபராசக்தியின் பாதாரவிந்த அர்ச்சனையே, அவளிடமிருந்து உதித்தவர்களான பிரம்ம விஷ்ணு ருத்ரர்கள் மூவருக்கும் செய்த பூஜையாகும் என்கிறது நூல். இதனைக்கூறும் சான்று இதுவே.

விஷ்ணுபூஜா ஸஹஸ்ராணி, சிவபூஜா சதானி ச.

அம்பிகா சரணார்ச்சாயா: கலாம் நார்ஹந்தி ஷோடசீம்.

உலக அன்னையான இவளே ஸர்வசக்தி வடிவினள் என்கிறது துதி.

யா மாயா மதுகைடப ப்ரமதினீ யா மாஹிஷோன் மூலினீ

யா தூம்ரேக்ஷண சண்டமுண்ட மதினீ யா ரக்தபீஜாசனீ.

சக்திஸ் சும்ப நிசும்ப தைத்ய தளனீ யா ஸித்திலக்ஷ்மீ பரா

ஸா துர்கா நவகோடிமூர்த்தி ஸஹிதா மாம் பாது விச்வேச்வரீ.

இதன்பொருளாவது. எந்த மஹாமாயா தேவியானவள் மது கைடபர் என்ற அவுணர்களை மாய்த்தாளோ, எவள் மஹிஷாசுரனை வீழ்த்தினாளோ,

எவள் தூம்ரலோசனாசுரனை அழித்தாளோ, எவள் சண்டமுண்ட அசுரர்களை அழித்தாளோ, எவள் ரக்தபீஜாசுரனை ரத்தபானம்செய்து அழித்தாளோ, எவள் சும்பன், நிசும்பன் என்ற கொடிய வல்லசுரர்களையும் அழித்தாளோ, எவள் பத்து மஹாவித்யாவில் ஒருத்தியாக, முதலாவதான ஸித்திலக்ஷ்மியாக, அதாவது தக்ஷிணாகாளியாக அனைத்திலும் உச்சநிலை உன்மனா எனும் பராசக்தியாக விளங்குகிறாளோ, அப்படிப்பட்ட அவ்வப்பொழுது அவதரித்து அதர்மவழியினரான அவுணரை அழித்து, அறத்தைக் காத்து, அனைத்துலகையும் காத்தருளிய உலகநாயகியான விச்வேச்வரியானவள் நம்மை எங்கும் எப்பொழுதும் காத்து அருளட்டும் என்கிறது. மேலும் பராசக்திகாளியே பத்துவகை ஸித்தவித்யா சக்திகளாக பக்தர்களை அஷ்டமாஸித்திகளுடன் கூடிய யோக மோக்ஷஸித்திகளுமாக பத்துவகைஸித்திகளையும், இம்மை மறுமைப் பயன்களான போகம், மோக்ஷம், இரண்டையும் அளிக்கிறாள். இத்தகைய தசமஹாவித்யா எனப்படும் தசஸித்தவித்யாமாத்ரு துதியால் துதித்துநாமும் பயன்பெறலாம்.

சியாமா வத்ஸதயா கரோது குசலம் தாரா தநோது ச்ரியம்.

தீர்காயுர் புவனேச்வரீ விதனுதாம் விக்னம் ஹரேத் ஷோடசீ

பைரவ்யஸ்து குலாவஹா ரிபுகுலம் ஸா சின்னமஸ்தா ஹரேத்

மாதங்கீ பகளா முகீ ச கமலா தூமாவதீ பாது ந:. (காளீதந்த்ரம்)

இந்த தசமஹாவித்யா தேவியரின் அருட்பயனை வேண்டுகிற இந்த ஆசித்துதியில் சியாமா எனப்படும் தக்ஷிணாகாளீ தாயன்புடன் நலம்தரவும், தாரா எனும் ஒங்கரீ ஞானம் செல்வத்தையும், புவனேச்வரீ எனும் ஆத்யாகாளீ நீண்டஆயுட்காலத்தையும், ஷோடசீ என்பவள் தடைநீக்கத்தையும், பைரவீ குலமாதர்களின் நலத்தையும், சின்னமஸ்தாகாளீ எதிரிகுலத்தின் அழிவையும், மாதங்கீ, பகளாமுகீ, கமலா, தூமாவதீ ஆகியோர்கள் தமது அரிய பயன்களையும் அடியவர்க்கு தந்தருளி நம்மைக்காக்கட்டும் என்கிறது. காளியாகிய மஹாவித்யாசக்தியே மேலானசக்தியாய் பராசக்தியாய் உயிர்களின் மோக்ஷத்திற்கு மூலகாரணியாய் விளங்குகிறாள் என்கிறது காளீ புராணம்.

ஸா வித்யா பரமா முக்தேர் ஹேது பூதா ஸநாதநீ.

ஸம்ஸாரபந்த ஹேதுச்ச ஸைவ ஸர்வேச்வரீ ஸதீ. (சப்தசதீ)

என்கிறது (மார்க்கண்டேயபுராணம்) ரிஷியின்கூற்று. உலகில் உயிர்களினுடைய துயரக்கட்டுக்கும் இன்பவிடுதலைக்கும் இவளே காரணமானவள். இவள் ஒருத்தியே அனைத்துலகிற்கும் நாயகியான ஸர்வேச்வரீ ஆவாள். எனவே இவள் பத்ரகாளீ எனப்படுகிறாள்.

கரங்களால் சுரிகை ஆழி கதை பாணம் சிலையினோடும்.
உரங்கொளும் பரிகம் சூலம் உயர்வு சால் புசுண்டி சங்கம்
சிரங்களே எடுப்பாள் பத்து சிரங் கரம் பாதங் கொண்டாள்
வரங்களால் உயர்ந்தா ராய மது கைடபரை மாய்த்தாள்.

மூவுலகையும் மூவரையும் முக்காலமும் காத்திடும் மூத்தவள் இவள் இவள் நம்மை எப்பொழுதும் காருண்யவாத்ஸல்யத்தால் காப்பவள் காளீ. இவள் துதி இதுவே.

இந்திர நீலம் ஒக்கும் எழில் திரு மேனி கொண்டாய்.
சந்திரன் இரவி அங்கி தமை மூனுறு விழியாக் கொண்டாள்.
தந்திர முணர்ந்த தாமோ தரன் கிடந் துறங்கும் காலை
மந்திர முணர்ந்த வேதா வழுத்து மா காளீ காக்க.
மஹா மாயா ப்ரபாவேன ஸம்ஸார ஸ்திதி காரிணா.
தன்நாத்ர விஸ்மயக் கார்யோ யோகநித்ரா ஜகத்பதே: (சப்தசதீ துதி).

இவளேமுத்தொழிலாற்றும் சக்தியாய் மும்மூர்த்திகளிடம் இருந்து துணைசெய்பவள் பஞ்சப்ரம்மமயீ, த்ரிகுணா எனப்படுகிறாள்.

தேவீ ஹ்யேஷா குணமயி மம மாயா துரத்யயா.
மாமேவ யே ப்ரபத்யந்தே மயா மேதாம் தரந்தி தே. (பகவத்கீதை)

இந்த முக்குணவடிவான என்னுடைய மாயை தெய்வசக்தி வாய்ந்தது. இது ஒருவராலும் விலக்கிவிட்டு தாண்டுதற்கரியது. எவர்கள் என்னையே சரணடைகின்றனரோ அவர்களே இந்த மாயையைத் தாண்டுகின்றனர் என்று பகவான் கீதையில் கூறினார். பிறர் என்னுடைய மாயையினின்றும் தப்பமுடியாது என்று கூறினாலும், அவரையே இம்மஹாமாயை (பராசக்தி) தன் மாயைக்குவசமாக்கினாள் என்பது சக்தி தத்துவம். சிவசக்தியான இவள் ஒருத்தியே "ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா', என்றும் சிவஞான ப்ரதாயிணீ, கைவல்யபத தாயினீ, எனப் போற்றப்படுகிறாள்.



மஹாகாளீ ஆவிர்பாவம் (காளியின் உதய கருத்துரை)

மஹாபிரளயகாலத்தின் முடிவில் விஷ்ணு யோகநித்திரையில் தூங்குகையில் அவர் நாபியில் இருந்த பிரம்மாவை மதுகைடபர் இருவர் தாக்க முற்பட்ட போதுஅவர் யோகநித்திரையிலிருக்கும் விஷ்ணுவை எழுப்ப முற்படுகையில் அவர் நித்ராதேவியின் பிடியிலே உள்ளார். என்பதால் பிரம்மா நித்திரைக்கு காரணதேவியான மஹாமாயையைத் துதித்தார். இந்த துதியானது காளியின் தத்வரூப மஹிமைகளை பறைசாற்றுகிறது. இதில் உள்ள பிரம்மதேவரின் கூற்றுகளால் மஹாகாளியின் மஹிமைகளை இனி அறிவோம் மஹாமாயை என்பது பரபிந்து என்கிறது சைவஸித்த ஆகமம்.

ஹே தேவியே! நீ அக்ஷரமான அழிவற்ற ஓங்காரஸ்வரூபிணீ. அந்த ஓங்காரத்தில் உள்ள அகார உகார மகாரமாகவும் நீயே இருக்கின்றாய். இந்த அக்ஷரமான ஓங்காரத்தின்மேல் ஒலிக்கும் 'ம்' என்ற அர்தமாத்ராஸ்வரூபமாகவும் நீயே இருக்கின்றாய். அதாவது அகாரம் உகாரத்திலே லயிக்கின்றது, உகாரம் மகாரத்திலே லயிக்கின்றது, அந்த மகாரம் தனக்கு மேல் இருக்கும் பிந்துவில் லயிக்கிறது. இவ்விதமாக அனைத்தும் லயக்கும் பிந்துவே பராசக்தி. இந்த பிந்துவை அர்தமாத்திரை என்பர். முக்குணங்களுக்கும் அப்பாற்பட்ட நான்காவதான துரீயஸ்வரூபம் நீயே. தாயே நீயே ஸந்த்யா ஸாவித்ரீ தேவிகள். நீயே உலக சிருஷ்டி ஸம்ஹாரத்திற்குக்காரணம். நீயே மஹாவித்யா ஸ்வரூபிணீ. நீயே மஹாமாயா ஸ்வரூபிணி. நீயே மூலப்ரக்ருதி. நீயே ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களாயும் அவற்றின் ஒன்றிய மூர்த்தியாகவும் இருக்கின்றாய், காளராத்ரியாகவும் ப்ரளயராத்திரியாகவும், இருக்கின்றாய். அனைவரிடமும் உள்ளசக்தியாய் இருப்பவளும் நீயே. உன்னுடைய திருவருளால்தான் நான் (பிரம்மா) விஷ்ணு ருத்ரன் முதலிய (மூவருள்ளிட்ட) முப்பத்து முக்கோடி தேவரும் பிறரும் தேஹம் பெற்றுள்ளனர். உன்னைத் துதிக்க எனக்கு ஏதுசக்தி? ஹே ஜகன்மாதாவே! நீ மஹாவிஷ்ணுவை விழித்தெழச் செய்யவேண்டும். என்று பிரம்மதேவன் பிரார்த்தித்தார். இதனால் மகிழ்ந்த யோகநித்ராதேவீ பகவான் மஹாவிஷ்ணுவின் அங்கங்களை விட்டுவிட்டு எழுந்தாள். இவ்வாறு விஷ்ணுவின் சரீரத்தினின்றும் வெளிவந்த யோகநித்ராதேவியே மஹாகாளீ எனப் பெயர்பெறுகின்றாள். இவள் தேவர்களுக்கு தரிசனம் அளித்த புண்ணியதினம் ஸாரஸ்வதகல்பத்தின் ஆரம்பதினமாகிய பங்குனிசுக்லத்வாதசீயாகும் என்று சிவபுராணம் உமாஸம்ஹிதை கூறுகிறது.

த்வாதச்யாம் பால்குனஸ்யைவ சுக்லாயாம் ஸமபூத் ந்ருப. இந்த தினந்தான் ஸாரஸ்வத கல்பத்தின் உதயதினமாகும். கல்பங்கள் 51 என்றும் 31 என்றும் 22 என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மஹாவிஷ்ணுவின் உடலுருப்பின்பத்துபகுதியிலிருந்து குறிப்பாக கண்கள்2 மூக்கு2 கைகள்4 ஹ்ருதயம்1 மார்பு1 இவற்றிலிருந்து மஹாகாளீ 10 தலையுடன் (திசைபத்து 10 நாடிகள், 10 அக்னிகலைகள் 10 திக்பாலசக்திஇவைகளை 10தலை) 10 கை 10கால் உணர்த்துவன) தோன்றினாள். இதன் காரணமாக பகவான் மஹாவிஷ்ணு நித்திரையில் இருந்து விடுபட்டு விழித்தெழுந்தார். இந்த சமயத்தில் விஷ்ணு இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர் மதுவும் கைடபனும் விஷ்ணுவை சண்டைக்கு அழைத்தனர். இருவருக்கும் ஐயாயிரம் வருடங்களாக இரவுபகலாக விடாது போர் நடந்தது. விஷ்ணு சிந்தித்து வெற்றிக்கான ஞானம் பெற்றார். மஹாமாயையே புத்திரூபமாக இருப்பதை உணர்ந்தார் மதுகைடபர் இருவரும் மஹாகாளீ பீஜாக்ஷரமான வாக்பவபீஜத்தை ஜபித்ததன்பயனாகவே அழியாது உள்ளனர் என்பதை அறிந்து, விஷ்ணு அந்த மஹாகாளியை சரணமடைந்தார். சரணமடைந்தவர்களை காப்பதே காளீ கொண்டுள்ள சபதம் விரதம். இதனால் தேவீ இருவரிடத்திலும் புத்திரூபமாக இருந்து வரத்தை கேட்கச் செய்து, ஏமாரச் செய்து விஷ்ணு வதம் செய்ய உதவினாள். விஷ்ணுதன் சுதர்சனசக்ரத்தால் தன்மடிமீது அவர்களை வைத்து வதம் செய்ததால், "மதுசூதனன், கைடபாரி" என்ற பெயர்களை விஷ்ணு பெற்றார். இதற்கு விலகி உதவியும், புத்திரூபமாயுமிருந்து விஷ்ணுவாய் வதம்செய்தமையால் மஹாகாளீ மதுகைடபநாசினீ எனப்படுகிறாள். இந்த காளீ முகம்கைகால்களை ஏன் பத்தாகக் கொண்டிருக்கிறாள் எனில் எண்திசைகளும், ஆகாயம்பூமியுமாகிய பத்துதிசைகள். பராசக்திபத்து திசையிலுள்ளோரும் தனது பத்துபாதங்களில் சரணாகதியடைவாராகில் அவர்களை தன் பத்து திசைமுகத்து 30கண்களால் (முக்கண்ணால்) கருணை கொண்டு மும்மலம் நீக்கி அருட்பார்வையை பதித்து, ஆயுதம் தாங்கிய பத்துகைகளால் அபயம் (அடைக்கலம்) தந்து, காத்து அருள்கிறாள் காளீ. இதற்காகவே 10முகம் 10கை 10பாதம் கொண்டுவிளங்குவதாக அறியலாம்.

காளியின் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. காளியின் ஒவ்வொரு முகத்திலும் கடைவாயில் தெற்றிப்பற்கள் நீண்டு நிறைந்திருக்கும். பயங்கரமான பேருருவத்துடன் இருப்பவள் இவள். இவள் தீயோருக்கு பயமளிப்பவளாயினும் தன் பக்தர்களுக்கு அழகிய உருவத்துடனேயே காக்ஷியளிப்பாள். காளீயின் அழகிற்கு ஈடுஇணைஇல்லை. இவள் அழகை வர்ணிக்கஇயலாது. காளிதாஸ மஹாகவி இவளை உரைநடைகாவியம்

எனும் கத்யமான சியாமளாதண்டகஸ்துதியில் வர்ணித்து உள்ளார். அதிஸௌம் யாஅதிரௌத்ராஎன்று இச்சாரூபவதியான இச்சாஞானக்ரியா ரூபிணி இவள். இவள் உக்ரமானவளாய் அழிக்கும் நிக்ரஹத்தை மட்டும் செய்பவளல்ல. மிகவும் அழகம்மையாய் ஸகலஸௌபாக்யத்தையும் தரக்கூடியவள் என்று மந்த்ர சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இக்கருத்தை

ஸ்புரத் தசன தம்ஷ்ட்ரா ஸா பீமாரூபா (அ)பி பூமிப !.

ரூப ஸௌபாக்ய காந்தீனாம் ஸா ப்ரதிஷ்டா மஹாச்ரிய:.

என்று அழுத்தமாய் உறுதிபடக் கூறுகின்றது தேவீமாஹாத்மியத்தின் வைக்ருதிகரஹஸ்ய உத்தரபாக சுலோகக்கூற்று. எனவே கலியுகத்தில் காக்கும் காளீ விரைவில் பயனளிப்பவள். மூவுலகிலும் உள்ள காளீ அம்மையினுடைய ஸௌம்யமான திருக்கோலங்களாலும், மிகவும் கோரமான திருக்கோலங்களாலும் மூவுலகில் எங்கும் காத்திடவேண்டும்மா என்று தேவர்களால் சப்தசதீசண்டீ எனும் தேவீமாஹாத்மியத்தில் வேண்டப்பட்டுள்ளதால் அறியலாம்.

ஸௌம்யானி யானி ரூபானி த்ரைலோக்யே விசரந்தி தே.

யானி ச அத்யந்த கோராணி தை ரஸ்மான் ரக்ஷ ஸர்வத:

காளியின் ஆயுதங்களால் நமக்கு பாதுகாப்பு ஏற்படுகிறது.

அறம் காத்து அருளாட்சி செய்து அகில ஜகன் மாதாவாக விளங்குகிறாள். காளிகுலம் மிகப்பெரியதாகும். காளீவர்கங்களின் தோற்றமும், வரலாறுகளும் திருவருட்பணிகளும் விரிவாக தேவீபாகவதம், தேவீமாஹாத்மியம், தேவீபராக்ரமம், பிரம்மாண்டபுராணம் முதலிய புராணங்கள், தேவீஉபாக்யானங்கள், முதலான பல நூல்களில் விரிவாக கூறப்பட்டு உள்ளன. இக்காளீ மஹாமாயையே மூலப்ரகிருதி. ப்ரகிருதிஎன்றால் பிரதானம்முக்யம். என்பது பொதுவான பொருள். ஸர்வமூலகாரணீ என்று அறிக.

கணேசஜனநீ துர்கா ராதா லக்ஷ்மீஸ் ஸரஸ்வதீ.

ஸாவித்ரீ ச ஸ்ருஷ்டிவிதௌ ப்ரக்ருதிப் பஞ்சதா ஸ்ம்ருதா.

இவளே உலகமாய்பரந்து யாவுமாகி நிற்பவள். இவள் உலகமாகமாறுவதற்கு ஐந்து காப்புசக்திகளை தன்வடிவமாகக் கொண்டாள் என்று தேவீபாகவதம் 911 கூறும். அவர்கள், துர்கை, ராதை, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ, காயத்ரீ என்ற ஐந்து சக்திகள். இச்சக்திகளின் வெளிப்பாடு இவ்வுலகம் இவர்கள் உலகஆற்றல்களின் மூலஉருவங்கள்.

காளீ அருள்தரும் தலங்கள்

புண்ணிய பாரதபூமியில், காசி முதலான புனிதத்தலங்களில் ஸ்ரீ மாதா காளிகா பலவகைத் திருக்கோலங்களில் பல பெயர்களில், பலவகை வழிபாட்டு முறைகளில், பலவகையில் அருளாட்சி செய்து வருகிறாள். எடுத்துக்காட்டாக முக்கியமாக "காளிகோட்டம்" என்ற இடத்தில் காசியில் காளி அருள்செய்கிறாள். மேலும் உஜ்ஜயினியில் மஹாகாளீ, என்றும், கொல்கட்டாவில் கோரகாளீ எனவும், தமிழ்நாட்டில் சிறப்பாக ஒன்பது தலங்களிலும் அருள்கிறாள். அவை 1) சிறுவாச்சூர் மதுரகாளீ 2) தொட்டியம் மதுரகாளீ 3) உடையாளூர் செல்வமாகாளீ 4) திருநாகேஸ்வரத்தில் பச்சைகாளீ, பவழக்காளீ, 5) திருவெண்காட்டில் (அகோரவீரபத்ரர் சன்னதி எதிரில் உள்ளவள்) பத்ரகாளீ 6) சிதம்பரத்தில் (ஆடவல்லானுடன் நடனமாடிய) தில்லை நடனகாளீ 7) கீழ்வேளூரில் ஐந்து வட்டத்துக்காளீ 8) காளையார் கோவிலில் சுவர்க்ககாளீ 9) அம்பகரத்தூர் வீரமாகாளீ ஆவாள். மேலும் மேல்மலையனூரில் அங்காளீ, திருவக்கரையில் வக்ரகாளீ, கதிராமங்கலத்தில் கம்பர்காளீ, திருவாலங்காட்டில் உக்ரகாளீ, என்று பலதலங்களிலும் கிராம தேவதையாக, தனிக்கோயில்களில், காவல்தேவதையாகவும், காளிகோயில்களில் விளங்கி இருந்து அருள்புரிவதைக் காணலாம். இவளையே **ஸம்ஹாரிணீ** ருத்ரரூபா என்றும், பத்ரப்ரியா என்றும், பத்ரமூர்த்தி என்றும், ப்ரம்மாண்டபுராணமாகிய லலிதாசஹஸ்ரநாமம் தெரிவிக்கிறது. வங்காளத்தில் **நவகாளீ** என்றே ஒரு இடம் காளீதலமாக விளங்குகிறது. ஒரிசாவில் காமாக்யாபீடம், பஞ்சாபில் சண்டிகர் என்றபெயரில் காளியின் இருப்பிடம் உள்ளது. பாரதத்தில், நவதேவீதலங்கள் என்று, குருக்ஷேத்ரகாளீ, ஜ்வாலாமுகீ, மானஸாதேவீ, சிந்தாதேவீ, வைஷ்ணவீதேவீ முதலான தலங்கள் பலவும் சக்திபீடங்களாகவும் விளங்குகின்றன.

அஷ்டாதச சாக்தபீடங்கள். (18பீடங்களும் தேவீபெயர்களும்)

1. ஸ்ரீலங்கா (த்ரிகோணமலை (வவுனியா)) சாங்கரீ தேவீ (சங்கரீ)
2. காஞ்சீபுரம் (தமிழ்நாடு) காமாக்ஷீ தேவீ
3. பிரத்யும்னா (காஷ்மீர்) சிருங்கலா தேவீ
4. கிரௌஞ்சபட்டணம் (கர்நாடகா) சாமுண்டா தேவீ (மைசூர்)
5. அலம்புரா (ஆந்திரா) ஜோகுலாம்பா தேவீ
6. ஸ்ரீசைலம் (ஆந்திரா) பிரமராம்பா தேவீ
7. கொல்லாபுரம் (மகாராஷ்ட்டிரா) மஹாலக்ஷ்மீ தேவீ (மும்பை)
8. மாயூரம் (தமிழ்நாடு) ஏகவீரா தேவீ

9. உஜ்ஜைனி (மத்யபிரதேசம்) மஹாகாளீ தேவீ
10. பிட்டாபுரம் (ஆந்திரா) பிரகூதிகா தேவீ
11. ஒடியாணா (காஞ்சீ.தமிழ்நாடு) கிரிஜா தேவீ
12. தெக்ஷாராமாமு (ஆந்திரா) மாணிக்கா தேவீ
13. ஹரிக்ஷேத்ரா (அஸ்லாம்) காமரூபீ தேவீ
14. பிரயாகை (உத்தரப்ரதேசம்) மாதவேஸ்வரீ தேவீ
15. ஜ்வாலாயாம் (பஞ்சாப்) வைஷ்ணவீ தேவீ
16. கயா (பீகார்) மங்களகௌரீ தேவீ
17. வாரணாசி (உத்தரபிரதேசம்) விசாலாக்ஷீ தேவீ
18. காச்மீரம் (காஷ்மீர்) ஸரஸ்வதீ தேவீ

50 சக்திபீடங்களின் பெயர்கள்

ஸிதாஸிதாருணச்யாம ஹரித்பீதான்யனுக்ரமாத்.
புனர் க்ரமேண தேவேசி பஞ்சாசத்பீட ஸஞ்சய:

இதன்படி உரிய நிறங்களில் சாக்தபீடங்களைக் கருதி அவைகளை பூஜிக்கும் தேவியின் திருமேனியில் வித்யாதேஹத்தில் அ முதல் க்ஷ வரையிலான ஐம்பது எழுத்துகளாகிற மாத்ருகைகளுடன் சாக்தப் பிரணவமாகிற ஐம்ஹ்ரீம் ச்ரீம் என்பவற்றுடன் தலை முதல் திருவடிவரை ஆவாஹனத்திற்கு முன்பு பதிவு செய்யப்படுவதே பீடநியாஸம் எனப்படும்.

ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் அம் காமரூபாய நம: – சிரஸி – தலையில்

ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் ஆம் வாராணஸ்யை நம: – முகவ்ருத்தே லலாடே – நெற்றியில்

ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் இம் நேபாளாய நம: – தக்ஷநேத்ரே – வலதுகண்ணில்

ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் ஈம் பௌண்ட்ரவர்தனாய நம: – வாமநேத்ரே - இடது கண்ணில்

இவ்விதமாக 51 எழுத்துக்களுடன் 51 உறுப்புகளில் உடலில் பதிப்பர். இதன்ப்டி தேவி பஞ்சாசத் மாத்ருகாலயா என்றும் பஞ்சாசத் பீடரூபிணி என்றும் பஞ்சாசத் பீடநிலாயா என்றும் போற்றப்படுகிறாள்.

இதிலிருந்து அரியப்படுகிற பீடங்கள் ஐம்பதும் முறையே நிறத்தால் வெள்ளை, கருப்பு, சிகப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என்னும் இவையாறும் மீண்டும் மீண்டும் வரிசையாக ஐம்பது பீடங்களுக்கும் நிறம் உடையதாகும். இத்தகைய 50 சக்திபீடங்களின் பெயர்களை அ முதல் க்ஷ வரை முறையே காண்போம்.

1. காமரூப பீடம்
2. வாராணஸீ பீடம்
3. நேபாள பீடம்
4. பௌணட்ரவர்த்தன பீடம்
5. புரஸ்திகாச்மீர பீடம்
6. கான்யாகுப்ஜ பீடம்
7. பூர்ணசைல பீடம்
8. அர்புதாச பீடம்
9 ஆம்ராகேச்வர பீடம்
10. ஏகாம்பர பீடம்
11. த்ரிஸ்ரோதஸ பீடம்
12. காமகோடி பீடம்
13. கைலாஸ பீடம்
14. ப்ருகுநகர பீடம்
15. கேதார பீடம்
16. சந்திரபுஷ்கரிணீ பீடம்

17. ஸ்ரீபுர பீடம்
18. ஓங்கார பீடம்
19. ஜாலந்தர பீடம்
20. மாளவ பீடம்
21. குலாந்தக பீடம்
22. தேவீகோட்ட பீடம்
23. கோகர்ண பீடம்
24. மாருதேச்வர பீடம்
25 அட்டஹாஸ பீடம்
26. விரஜா பீடம்
27. ராஜகேஹ பீடம்
28. மஹாபத2 பீடம்
29. கோலாபுர பீடம்
30. ஏலாபுர பீடம்
31. காலேச்வர பீடம்
32. ஜயந்திகா பீடம்
33. உஜ்ஜயிநீ பீடம்
34. சித்ரா பீடம்
35. க்ஷீரிகா பீடம்
36. ஹஸ்திநாபுர பீடம்
37. உட்டீ3ச பீடம்
38. ப்ரயாக பீடம்
39. ஷஷ்டீச பீடம்
40. மாயாபுரீ பீடம்
41. ஜலேச பீடம்
42. மலய பீடம்
43. ஸ்ரீசைல பீடம்
44. மேரு பீடம்
45. கிரிவர பீடம்
46. மஹேந்திர பீடம்
47. வாமன பீடம்
48. ஹிரண்யபுர பீடம்
49. மஹாலக்ஷ்மீபுர பீடம்
50. ஒட்யாண பீடம்

(51. க்ஷம் – சாயாச்சத்ர பீடம்)



அஷ்டாஷ்ட சக்திபீடங்கள் (64 தேவிநிலைகள்) (சக்தியின் 64 இடங்கள்)

சக்தியானவள் தனது முழுமுதற்கருணையும் பலமும் வீரமும் செலுத்திநிற்கும் திவ்யஸ்தலங்களே சக்திபீடங்கள். அவை அறுபத்துநான்கு சக்திபீடங்களாம். அவைகள் முறையே இவையேயாம்.

1. லக்ஷ்மீ பீடம். கொல்லாபுரத்திலுள்ளது
2. ரேணுகா பீடம். மாதுபுரத்திலுள்ளது
3. துளஜாபுர பீடம். மாதுபுரத்திலுள்ளது
4. சப்த ச்ருங்க பீடம். மாதுபுரத்திலுள்ளது
5. ஜ்வாலாமுகி பீடம். (மலைக் குகையிலுள்ளது)
6. பிராமரீ பீடம். (சாகம்பரியிலுள்ளது)
7. துர்கா பீடம். (ஸ்ரீரக்ததந்திகையிலுள்ளது)
8. விந்தியாசல பீடம். (ஸ்ரீரக்ததந்திகையிலுள்ளது)
9. அன்னபூரணி பீடம். (ஸ்ரீகாஞ்சியிலுள்ளது)
10. பீமாதேவீ பீடம். (விமலையிலுள்ளது)
11. கௌசிகி பீடம். (ஸ்ரீசந்திரகலையிலுள்ளது)
12. நீலாம்பரி பீடம். (நீலபர்வதத்திலுள்ளது)
13. ஜாம்பூநதேச்வரீ பீடம். (ஸ்ரீநகரத்திலுள்ளது)
14. ரகசியகாளி பீடம். (குஹ்யகாளீ) நேபாளத்திலுள்ளது.
15. மீனாக்ஷி பீடம். (மதுரையிலுள்ளது)
16. சுந்தரி பீடம். (வேதாரண்யத்திலுள்ளது)
17. ஏகாம்பர பீடம். (வேதாரண்யத்திலுள்ளது)
18. யோகேச்வரி பீடம். (மஹாசலத்திலுள்ளது)
19. நீலசரஸ்வதி பீடம். (சீனாவில் உள்ளது)
20. கபலை பீடம். (கவலை பீடம்.) வைத்யநாகத்திலுள்ளதுடாகினியில்)
21. புவனேச்வரீ பீடம். மணித்தீபத்திலுள்ளது
22. திரிபுரபைரவீ பீடம். காமயோனிமண்டலம் (காமாக்யா) த்ரிபுரா பீடம்.
23. காயத்ரீ பீடம். புஷ்கரத்திலுள்ளது
24. சண்டிகா பீடம். அமரேசத்திலுள்ளது
25. புஷ்கரேக்ஷணீ பீடம். பிரபாஸத்திலுள்ளது
26. தேவீ பீடம். நைமிசத்திலுள்ளது (நைமிசாரண்யம்)

27. புருஹூதீ பீடம். புஷ்கராக்ஷத்திலுள்ளது புருஹூதா பீடம்.)
28. ரதி பீடம். ஆஷாடத்திலுள்ளது
29. தண்டினீ பீடம். சண்டமுண்டியிலுள்ளது.
30. பூதி பீடம். பாரபூதியிலுள்ளது
31. நகுலேச்வரீ பீடம். நாமுலத்திலுள்ளது
32. சந்த்ரிகா பீடம். அரிச்சந்திரத்திலுள்ளது
33. சாரதா பீடம். ஸ்ரீகிரியில்உள்ளது (சிருங்கேரி)
34. திரிசூல பீடம். பஞ்சநதத்திலுள்ளது
35. சூக்ஷ்ம பீடம். ஆம்ராதகேச்வரத்திலுள்ளது
36. சாங்கரீ பீடம். மஹாகாளத்திலுள்ளது (உஜ்ஜயினி)
37. சர்வாணீ பீடம். மத்தியமாபிதத்திலுள்ளது
38. மார்க்கதாயினீ பீடம். கேதாரத்திலுள்ளது
39. பைரவி பீடம். பைரவத்திலுள்ளது
40. மங்கள பீடம். கயையில் உள்ளது
41. ஸ்தாணுப்ரியா பீடம். குருக்ஷேத்திரத்தில் உள்ளது
42. ஸ்வாயம்பவீ பீடம். விமலேச்வரத்திலுள்ளது (விச்வேசை)
43. உக்ரா பீடம். கனகலத்திலுள்ளது
44. விச்வேசீ பீடம். விமலேச்வரத்திலுள்ளது (விச்வேசை)
45. மஹாந்தகீ பீடம். (மகாந்தகை) ஹாடகாசலத்திலுள்ளது (அடகாசத்தில்)
46. பீமா பீடம். பீமத்திலுள்ளது (டாகினியில்)
47. பவானீ பீடம். வஸ்திராபதத்திலுள்ளது
48. ருத்ராணீ பீடம். அர்த்தகோடிகையிலுள்ளது (உருத்திராணி)
49. விசாலாக்ஷீ பீடம். அவிமுக்தத்திலுள்ளது (காசியில்)
50. மஹாபாகா பீடம். மஹாலயத்திலுள்ளது (மகாலயமகாபாகை)
51. பத்ரகாளீ பீடம். கோகர்ணத்திலுள்ளது
52. பத்ரா பீடம். பத்திரகர்ணிகத்திலுள்ளது (பத்திரை)
53. உத்பலாக்ஷீ பீடம். ஸ்வர்ணாக்ஷத்திலுள்ளது
54. ஸ்தாண்வீசா பீடம். ஸ்தாணுவிலுள்ளது (ஸ்தாணூசீ)
55. கமலை பீடம். கமலாலயத்திலுள்ளது (திருவாரூர்)
56. ப்ரசண்டா பீடம். ஜகமண்டலத்திலுள்ளது (சகமண்டலம்)

57. திரிசந்திரிகா பீடம். குரண்டலத்திலுள்ளது

58. மகுடேச்வரீ பீடம். மாகோடத்திலுள்ளது

59. சரண்டகா பீடம். மண்டலேசத்திலுள்ளது

60. காளீ பீடம். காலஞ்சரத்திலுள்ளது

61. தொனி பீடம். சங்குகர்ணத்திலுள்ளது

62. ஸ்தூல பீடம். ஸ்தூலகேசுவரத்திலுள்ளது

63. சூக்ஷ்ம பீடம். கைலாசத்திலுள்ளது. (மானஸரோவரம்)

64. பரமேச்வரீ பீடம். ஞானிகளின் இதயகமலத்திலிருப்பது

மேற்கூறிய அறுபத்துநான்கு சக்திபீடங்களில் முதற்சக்தி பீடம் தென் மதுரையாகும் என்பர். இதனை

கேடு தாங்கு மூவுலகினிற் சிரந்தன சக்தி
பீட மூவிரு பத்துநான் கவற்றின் முதற்பீட
மாட மோங்கிய மதுரையா மற்றது போகம்
வீடு வேண்டிய சித்தியும் விளைப்ப லென்றுன்னா.

என்று கூறியுள்ளார்கள்.

மாத்ருகண சக்திகள் 36.

சிவபெருமான் அந்தகாஸுரனை தனது பாசுபதாஸ்த்ரத்தால் அடித்த பொழுது அசுரன் உடலிலிருந்து பல்லாயிரமசுரர்கள்உதித்து, உலகை வியாபித்துநின்றனர். அப்பொழுது பகவான் அவர்களை குறுதியற்றவர்களாக்கி அழிக்கும்பொருட்டு அந்தகாசுரனின் ஸைன்யகுருதியைப் பானம்செய்ய முப்பத்தாறு மாத்ருகணங்களை உண்டாக்கினார். அவர்களே இவர்கள். இந்த மாத்ருகணங்கள் அந்தகனின் ரத்தத்தைக் குடித்து அவர்களைஅழித்தனர்.

1. மாஹேச்வரீ
2. ப்ராம்ஹீ
3. கௌமாரீ
4. பாடலீ
5. ஸௌபர்ணீ
6. வாயவீ
7. சங்கரீ
8. தாத்ரீ
9. ஸௌரீ
10. ஸௌம்யா
11. சிவதூதீ
12. சாமுண்டா
13. வாருணீ
14. வாராஹீ
15. நாரஸிம்ஹீ
16. வைஷ்ணவீ
17. விபாவரீ
18. ஸதானந்தா
19. பகானந்தா
20. பிச்சிலா
21. பகமாலினீ
22. பாலா
23. அதிபலா
24. ரக்தா
25. ஸுரபீ
26. முகமண்டிதா
27. மாத்ரு நந்தா
28. சுதத்தா
29. பிடாலீ
30. சகுனீ
31. ரேவதீ
32. மஹாபுண்யா
33. துர்கா
34. சிசிபட்டிகா
35. பிங்காக்ஷீ
36. லம்பகர்ணிகா

64 சக்தி பீடங்களின் திருநாமங்கள்

மந்திரசாஸ்திரநூல் அறுபத்திநான்கு சக்திபீடங்களைக் குறிப்பிடுகிறது. மூன்று சுலோகங்களால் 64 பீடப்பெயர்கள் தொகுத்து கூறுப்படுகின்றன. சக்திபீடங்களை நாம் வரிசையாக அறிந்திட உதவுகிற சுலோகம் இதுவே.

மாயா மங்கள நாக வாமன மஹா லக்ஷ்மீ சரித்ரா ப்ருகு
ச்சாயா ச்சத்ர ஹிரண்ய ஹஸ்தின மஹேந்த்ரோட்பீச சம்பாபுரம்.
ஷஷ்ட க்ஷீரஜ மஞ்ஜனேச்வர புரே லாசந்த்ர பூ: ஸ்ரீ கிரி
கோலா குல்லக பூர்ண பர்வத குரு க்ஷேத்ரைக லிங்கார்புதா:. 1

காச்மீரைகாம்ர காஞ்சீ மலயகிரி வரை கார கந்தூத தேவீ
கோட்டா ம்ராதேச ஜாலந்தர ஸுரபி மனிஷாத்ரி காசீ ப்ரயாகா:.
த்ரிஸ்ரோத: காமகோட்டோ ஜ்ஜயினி ஸமதுரம் கோஸலா கான்ய குப்ஜம்.
உத்யானோங் காராட்டஹாஸா திரஜ இஹதக் குண்டினம் ராஜகேஹம். 2

நேபாள புண்ட்ர வர்தன மாளவ பரஸௌரகாமரூப கேதாரா:.
விந்த்ய மஹாமட கோச்ருதி காம்பில்ய ஸ்ரீபீட மருதேசா:.

1. மாயா
2. மங்களம்
3. நாக
4. வாமன
5. மஹாலக்ஷ்மீ
6. சரித்ரா
7. ப்ருகுச்சாயா
8. ச்சத்ரம்
9. ஹிரண்யம்
10. ஹஸ்தினம்
11. மஹேந்த்ரம்
12. உட்டீசம்
13. சம்பாபுரம்
14. ஷஷ்டம்
15. க்ஷீரகம்
16. மஞ்ஜனேச்வரம்
17. ஏலா
18. சந்திராபூர்
19. ஸ்ரீகிரி
20. கோலா
21. குல்லகம்
22. பூர்ணபர்வதம்
23. குருக்ஷேத்ரம்
24. ஏகலிங்கம்
25. அற்புதம்
26. காச்மீரம்
27. ஏகாம்பரம்
28. காஞ்சீ
29. மலயம்
30. கிரிவரம்
31. ஏகாரம்
32. கந்தூதம்
33. தேவீகோட்டம்
34. ஆம்ராதேசம்
35. ஜாலந்தரம்
36. ஸுரபி
37. மனிஷாத்ரி
38. காசீ
39. ப்ரயாகா
40. த்ரிஸ்ரோதம்
41. காமகோட்டம்
42. உஜ்ஜயினீ
43. மதுரம்
44. கோஸவம்
45. கான்யகுப்ஜம்

46. உத்யானம்
47. ஒங்காரம்
48. அட்டஹாஸம்
49. ஆவிரஜ:
50. குண்டினம்
51. ராஜகேஹம்
52. நேபாளம்
53. புண்ட்ரவர்த்னம்
54. மாளவம்
55. பரஸௌரம்
56. காமரூபம்
57. கேதாரம்
58. விந்த்யம்
59. மஹாமடம்
60. கோச்ருதி
61. காம்பில்யம்
62. ஸ்ரீபீடம்
63. மருத்
64. ஜசம்

இவைகள் சக்திபீடங்கள் எனத்திகழும் தேவீதிருத்தல மூலமூர்த்தங்கள்.

தேவியும் தலமும். (108 சக்திபீடங்கள்)

சித்கலை வடிவமான ஸதிதேவியின் உடலுறுப்புகளை, உட்புகுந்த தெய்வங்கள் பலரும் சிதறிடுமாறு செய்தனர். அவ்வுருப்புகள் பூமியில் வீழ்ந்த பகுதிகளே சக்தி பீடங்களாக, தைவிகமான சக்திஸ்தலங்களாக புண்யக்ஷேத்ரமாக அருள்தருவனவாய் உள்ளன. அவற்றில் தலைவிழுந்த நிலப்பகுதியே காமாக்யா என்றும், குப்ஜிகாபீடம் என்றும் கூறுவர். இங்கு காமாக்யா தேவியுடன் பகவானும் நித்யவாஸம் செய்கின்றார். தேவீபாகவதம் எனும் நூல் இத்தகைய புண்யக்ஷேத்ரங்களையும் அவ்விடத்தில் அமர்ந்தருளும் 108 சக்திகளின் பெயர்களையும் பட்டியலிட்டுத் தொகுத்துக் கூறியுள்ளது. அதன்படி முறையே, 108 இடங்களும் தேவியர்களும் இவையே ஆம்.

1. காசி – விசாலாக்ஷி
2. நைமிசாரண்யம் – லிங்கதாரிணி
3. ப்ரயாகை – லலிதா
4. கந்தமாதனம் (மலை) – காமுகீ
5. மானஸ ஸரோவரம் – குமுதா
6. இதன்தென்திசையில் விச்வகாமா – பகவதி
7. இதன் வடக்குதிசையில் விச்வகாமா – ப்ரபூரணி
8. கோமந்தகம் – கோமதி
9. மந்தரம் (மலை) – காமசாரிணீ
10. ஜைத்ரரதம் – மதோத்கடா
11. ஹஸ்தினாபுரத்தில் – ஜயந்தீ
12. கான்யகுப்ஜத்தில் – கௌரீ
13. மலயபர்வதத்தில் – ரம்பா
14. ஏகாம்பரபீடத்தில் – கீர்த்திமதீ
15. விச்வத்தில் – விச்வேச்வரீ
16. புஷ்கரத்தில் – புருஹூதா
17. கேதாரத்தில் – ஸன்மார்கதாயினீ
18. ஹிமாலயமலைபின்புறத்தில் – மந்தா
19. கோகர்ணத்தில் – பத்ரகர்ணிகா
20. பில்வபத்ரிகாவில் – பில்வகா
21. பவானியில் – ஸ்தானேச்வரீ
22. ஸ்ரீசைலத்தில் – மாதவீ

23. பத்ரையில் – பத்ரேச்வரீ
24. வராஹசைலத்தில் – ஜயா
25. கமலாலயத்தில் – கமலா
26. ருத்ரகோடியில் – ருத்ராணீ
27. காலஞ்சரத்தில் – காளீ
28. ஸாலக்ராமத்தில் – மஹாதேவீ
29. சிவலிங்கத்தில் – ஜலப்ரபா
30. மாகோட்டையில் – மகுடேச்வரீ
31. மாயாபுரியில் – குமாரீ
32. ஸந்தானத்தில் – லலிதாம்பிகை
33. கயையில் – மங்களாம்பா
34. புருஷோத்தமத்தில் – விமலா
35. ஸஹஸ்ராக்ஷத்தில் – உத்பலாக்ஷீ
36. ஹிரண்யாக்ஷத்தில் – மஹோத்பலா
37. விபாசாவில் – அமோகாக்ஷீ
38. புண்ட்ர வர்தனத்தில் – பாடலீ
39. ஸுபார்ச்வத்தில் – நாராயணீ
40. மஹாலிங்கத்தில் – கபிலா
41. த்ரிகூடபர்வதத்தில் – ருத்ரஸுந்தரீ
42. விபுலத்தில் – விபுலாதேவீ
43. மலயாசலத்தில் – கல்யாணீ
44. ஸஹ்யபர்வதத்தில் – ஏகவீரா
45. ஹரிச்சந்த்ரத்தில் – சந்த்ரிகா
46. ராமதீர்த்தத்தில் – ரமணா
47. யமுனாதீர்த்தத்தில் – ம்ருகாவதீ
48. கோடிதீர்த்தத்தில் – கோடவீ
49. மாதவ வனத்தில் – ஸுகந்தா
50. கோதாவரியில் – த்ரிசக்தி
51. கங்காத்வாரத்தில் – ரதிப்ரியா
52. சிவகுண்டத்தில் – சுபானந்தா
53. தேவிகா தடத்தில் – நந்தினீ
54. த்வாரகையில் – ருக்மிணீ



55. ப்ருந்தாவனத்தில் – ராதா
56. மதுரையில் – தேவகீ
57. பாதாளத்தில் – பரமேச்வரீ
58. சித்ரகூடத்தில் – ஸீதா
59. விந்தியத்தில் (தேசம்) – விந்த்யவாஸிநீ
60. கரவீரத்தில் – மஹாலக்ஷ்மீ
61. விநாயக க்ஷேத்ரத்தில் – உமா
62. வைத்யநாதத்தில் – ஆரோக்யா
63. மஹாகாளத்தில் – மாஹேச்வரீ
64. உஷ்ணதீர்த்தத்தில் – அபயாம்பிகை
65. விந்த்ய பர்வதத்தில் (மலை) – நிதம்பை
66. மாண்டவ்யத்தில் – மாண்டவீ
67. மஹேச்வரபுரத்தில் – ஸ்வாஹாதேவீ
68. சகலண்டத்தில் – பிரசண்டா
69. அமரகண்டத்தில் – சண்டிகா
70. ஸோமேச்வரத்தில் – வராரோஹா
71. ப்ரபாஸத்தில் (தீர்த்தம்) – புஷ்கராவதீ
72. ஸரஸ்வதீ நதீதீரத்தில் – தேவமாதா
73. மஹாலயத்தில் – மஹாபாகா
74. பயோஷ்ணியில் (நதி) – பிங்களேச்வரீ
75. க்ருதஸௌக்யத்தில் – ஸிம்ஹிகை
76. கார்த்திகையில் – ஆதிசங்கரீ
77. உத்பலாவர்த்தத்தில் – லோலாதேவீ
78. சோணஸங்கமத்தில் – ஸுபத்திரை
79. ஸித்தவனத்தில் – லக்ஷ்மீ
80. பரதாச்ரமத்தில் – அனங்கா
81. ஜாலந்தரத்தில் – விச்வமுகீ
82. கிஷ்கிந்தையில் – தாரா
83. தேவதாருவனத்தில் – புஷ்டிர் மேதா
84. காச்மீரமண்டலத்தில் – பீமாதேவீ
85. ஹிமாசலத்தில் – துஷ்டி விச்வேச்வரீ
86. கபாலமோசனத்தில் – சுத்திதேவீ

87. காயாரோஹணத்தில் – மாதாதேவீ
88. சங்கோத்தரத்தில் – தரா
89. பிண்டாரசேக்ஷரத்தில் – த்ருதி
90. சந்திரபாகாநதியில் – கலாதேவீ
91. அச்சோதயத்தில் – சிவதாரிணீ (சிவதரணீ)
92. வேணீநதியில் – அம்ருதா
93. பத்ரியில் – உரஸீ
94. உத்தரகிரியில் – ஔஷதா
95. குசத்வீபத்தில் – குசோதகா
96. ஹேமகூடத்தில் – மன்மதா
97. குமுதத்தில் – ஸித்யவாதினீ
98. அச்வத்தில் – வந்தினீ
99. குபேராலயத்தில் – நிதி
100. தேவமுகத்தில் – காயத்ரீ
101. சிவசந்நிதியில் – பார்வதீ
102. தேவலோகத்தில் – இந்த்ராணீ
103. பிரம்மன்முகத்தில் – ஸரஸ்வதீ
104. சூரியபிம்பத்தில் – ப்ரபா
105. ஸப்தமாதாக்களில் – வைஷ்ணவீ
106. பதிவ்ரதைகளில் – அருந்ததீ
107. அப்ஸரஸ்த்ரீகளில்(அழகிகளில்) – திலோத்தமா
108. அனைவரின்சித்தத்தில் (மனதில்) – சக்தி, தேவீ பிரம்மகலை

51 காளிகளும் நரஸிம்மருத்ரார்களும் (சரபருத்ரர்கள்)

உலகஸர்வஸம்ஹாரகாலத்தில் ஸம்ஹாரிணீருத்ரரூபா என்றவாறு காளீ உக்ரஉருவம் கொண்டபொழுது அவளின்பதியான ருத்ரனும் சிம்மமுகத்துடன் மஹாருத்ரனாக விளங்கினார். பக்குவ ஆன்மாக்களுக்கு இவர்கள் ஸாலோக்யம் ஸாமீப்யம் ஸாரூப்யம் ஸாயுஜ்யம் என்ற நான்கு பதமுக்திகளைத் தருகிறார்கள். மீண்டும் பயிரிடுவதற்காக ஒருதானியத்தை விதையாக வைத்துக்கொள்வது போன்று, அபக்குவமான (கர்மபயனைஅனுபவித்திட) மீண்டும்பிறப்பை அளிக்கிறாள். இதனை **ஸஸ்யமிவமர்த்யப் பச்யதே ஸஸ்யமிவாவ ஜாயதே** என்று உபநிஷதம் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு பிரளயத்தை சிவனுடையவிருப்பத்தினால் காளீசெய்கிறாள். பழையதை நீக்கிவிட்டு புதியவையாகப்படைப்பதே தெய்வத் திருவிளையாடல். இதனையே **உன்மேஷ நிமிஷோத்பன்ன விபின்ன புவனாவளீ** என்கிறது பிரம்மாண்ட புராணம். மஹாருத்ரர்எடுத்த நரசிம்மருத்ரர்களை காளீகுலம் புகழ்ந்து அவருடன் இணைந்தனர். அந்தகாளிகளும் அவர்களின் நரசிம்மருத்திரர்களும் இவர்களது உறைவிடமாகிய மலைகளும், இவைகளே என்பதை அறியவும்.

உக்ரகாளியின்பெயர்	மஹாருத்திரர்பெயர்	பர்வதங்கள்
1. வித்யுத்கேசீ காளீ	ஜ்வாலாமாலீ நரஸிம்ஹர்	ஹிமாலயம்
2. காளராத்ரீ காளீ	கராள நரசிம்மர்	கந்தமாதனம்
3. உல்காமுகீ காளீ	பீம நரசிம்மர்	பத்ராசலம்
4. பிங்கஜடா காளீ	அபராஜித நரசிம்மர்	கேதுமாலம்
5. குண்டோதரீ காளீ	க்ஷோபண நரஸிம்மர்	ஸுமேருபர்வதம்
6. ப்ரேதாஸனா காளீ	ஸ்ருஷ்டி நரஸிம்மர்	விந்தியபர்வதம்
7. கபாலகுண்டலா காளீ	ஸ்திதி நரஸிம்மர்	நிஷதபர்வதம்
8. சண்டசாமுண்டா காளீ	கல்பாந்த நரஸிம்மர்	ஹேமகூடம்
9. தூமாவதீ காளீ	அனந்த நரஸிம்மர்	பாரியாத்ரம்
10. சுஷ்கோதரீ காளீ	விரூப நரஸிம்மர்	கைலாஸபர்வதம்
11. ஜ்வாலாகுலா காளீ	வஜ்ராயுத நரஸிம்மர்	உதயபர்வதம்
12. அஞ்ஜனப்ரபா காளீ	பராபர நரஸிம்மர்	அஸ்தபர்வதம்
13. வஜ்ரவாராஹீ காளீ	பரத்வம்ஸன நரஸிம்மர்	மால்யபர்வதம்

14. காலமர்த்தினீ காளீ	விச்வமர்தன நரஸிம்மர்	ஸஹ்யபர்வதம்
15. நாகஹாரிணீ காளீ	உக்ரதர நரஸிம்மர்	மலயபர்வதம்
16. கோநாதா காளீ	பத்ர நரஸிம்மர்	தர்துர பர்வதம்
17. கராளினீ காளீ	மிருத்யு நரஸிம்ஹர்	ருஷ்யமுக பர்வதம்
18. முண்டசர்ச்சிகா காளீ	ஸஹஸ்ரபுஜ நரஸிம்ஹர்	சுக்திமந்த பர்வதம்
19. ச்மசானசாரிணீ காளீ	வித்யுத்ஜிஹ்வ நரஸிம்ஹர்	மஹேந்த்ர பர்வதம்
20. சவவாஹினீ காளீ	கோரதம்ஷ்ட்ர நரஸிம்ஹர்	அற்புத பர்வதம்
21. ரக்தபாயினீ காளீ	மஹாகாலாக்னி நரஸிம்ஹர்	த்ரோண பர்வதம்
22. சண்டகண்டிகா காளீ	மேகநாத நரஸிம்ஹர்	ரைவதக பர்வதம்
23. அட்டாட்டஹாஸினீ காளீ	விகட நரஸிம்ஹர்	க்ரௌஞ்ச பர்வதம்
24. கங்காளினீ காளீ	பிங்கஸடா நரஸிம்ஹர்	சித்ரகூட பர்வதம்
25. பூதோன்மாதினீ காளீ	ப்ரதீப்த நரஸிம்ஹர்	காச்மீர கிரிந்த்ரம்
26. பிசாசினீ காளீ	விச்வரூப நரஸிம்ஹர்	காலஞ்ஜர பர்வதம்
27. விகடதம்ஷ்ட்ரா காளீ	வித்யுத்தசன நரஸிம்மர்	ஸ்ரீசைல பர்வதம்
28. மேகமாலா காளீ	விதார நரஸிம்ஹர்	மைநாக பர்வதம்
29. பூதிதுண்டா காளீ	விக்ரம நரஸிம்ஹர்	முஞ்ஜ கிரி
30. பாருண்டருண்டா காளீ	ப்ரணவ நரஸிம்ஹர்	கோமந்த கிரி
31. பேத்காரிணீ காளீ	ஸர்வதோமிக நரஸிம்ஹர்	த்ரிகூட பர்வதம்
32. பிசண்டிநாஸா காளீ	வஜ்ர நரஸிம்ஹர்	ஸுபல பர்வதம்
33. ஹூம்ஹூம்கார நாதினீ காளீ	திவ்ய நரஸிம்ஹர்	ஸைந்தவ பர்வதம்
34. கோலானனா காளீ	போக நரஸிம்ஹர்	களிந்த பர்வதம்
35. நிரஞ்ஜனா காளீ	மோக்ஷ நரஸிம்ஹர்	ஹேவிபாகா அசலம்
36. ப்ரமராம்பிகா காளீ	லக்ஷ்மீ நரஸிம்ஹர்	லோகாலோகாசலம்
37. மூலதாடங்கினீ காளீ	வித்ராவண நரஸிம்ஹர்	மந்த்ராசலம்
38. சூலசண்டிகா காளீ	காலசக்ர நரஸிம்ஹர்	கேதாராசலம்
39. கடங்கடா காளீ	க்ருதாந்த நரஸிம்ஹர்	நீலாசலம்
40. குக்குபீ காளீ	தப்தஹாடக நரஸிம்ஹர்	அஞ்ஜனாத்ரி
41. புல்கஸீ காளீ	ப்ராமக நரஸிம்ஹர்	வாராஹாசலம்

42. விச்வபஞ்ஜிகா காளீ	ரௌத்ர நரஸிம்ஹர்	சைத்ரரதாசலம்
43. சங்கினீ காளீ	விச்வாந்தக நரஸிம்ஹர்	கர்ணிகாராசலம்
44. நீலாப்ரா காளீ	பயங்கர நரஸிம்ஹர்	மந்தாரபர்வதம்
45. காலஸங்கர்ஷிணீ காளீ	ப்ரதப்ர நரஸிம்ஹர்	கோகாமுகம்
46. குணபபோஜினீ காளீ	விஜய நரஸிம்ஹர்	கோலாகிரி
47. தைத்யவித்வம்ஸிநீ காளீ	தேஜோமய நரஸிம்ஹர்	துஷாராத்ரி
48. விதாரிஸ்ருக்வினீ காளீ	ஜ்வாலாஜடால நரஸிம்ஹர்	வடதாலகிரி
49. க்ஷேத்ரபாலினீ காளீ	கரநக நரஸிம்ஹர்	நீசகிரி
50. குலகுட்டினீ காளீ	நாததாருண நரஸிம்ஹர்	கோவர்தனகிரி
51. ஆனந்ததாயினீ காளீ	நிர்வாண நரஸிம்ஹர்	ஹரிசந்திரபர்வதம்

இப்படியாக ஐம்பத்தோரு பர்வதங்களில் க்ரூரரூபமுடைய காளியுடன் நரஹிம்மரூபம்தரித்த பகவான் மஹாருத்ரர் அகிலஉலகங்களையும் ஸர்வஸம்ஹாரத்தில் ஒடுக்கி ஒய்வளித்து பின்பு புதியதாய் படைத்து காத்து அருள்கிறார்.

64 பைரவர்களும் 64 பைரவிகளும்.

1. நீலகண்டர் – ஜயாம்பா
2. விசாலாக்ஷர் – விஜயாம்பா
3. மார்த்தாண்டர் – ஜயந்தியம்பா
4. மந்தானர் – அபராஜிதாம்பா
5. ஸ்வச்சந்தர் – திவ்யாம்பா
6. அதிஸந்துஷ்டர்–மஹாயோகினீ
7. கேசரர் – ஸித்தயோகினீ
8. ஸம்ஹாரர்–கணேச்வரயோகினீ
9. விச்வரூபர் – ப்ரேதாஸினீ
10. விரூபாக்ஷர் – டாகினீ
11. நாநாரூபா – காளீ
12. ப்ரமர் – காளராத்ரீ
13. தண்டகர்ணர் – நிசாசரீ
14. சுதாபாத்ரர் – டங்காரீ
15. க்ரீடனர் – வேதாளீ
16. உன்மத்தர் – ஹுங்காரீ
17. மேகநாதர் – ஊர்த்துவகேசீ
18. மனோவேகர் – விரூபாக்ஷீ
19. க்ஷேத்ரபாலர் – சுஷ்க்காங்கீ
20. கராளர் – நரபோஜினீ
21. நிர்ப்பயர் – பட்காரீ
22. பிசிதர் – வீரபத்ரா
23. ப்ரேக்ஷிதர் – தூம்ராக்ஷீ
24. லோகபாலர் – கலஹப்ரியா
25. கங்காதரர் – ராக்ஷஸீ
26. வஜ்ரஹஸ்தர் – கோரரக்தாக்ஷீ
27. மஹாகாளர் – விச்வரூபா
28. ப்ரசண்டர் – அபயங்கரீ
29. ப்ரளயர் – வீரகௌமாரீ
30. அந்தகர் – சண்டிகா
31. பூமிகம்பர்– வாராஹீ
32. பீஷணர் – முண்டதாரிணீ
33. ஸம்ஹாரர் – பைரவீ
34. குலபாலர் – த்வாங்க்ஷிணீ
35. ருண்டமாலர் – தூம்ராங்கீ
36. ப்ரஜாபாலர் – ப்ரேதவாஹினீ
37. ரக்தாங்கர் – கட்கினீ
38. பிங்களேக்ஷணர்–தீர்க்கலம்போஷ்டீ
39. அப்ரரூபர் – மாலினீ
40. தராபாலர் – மந்த்ரயோகினீ
41. குலர் (குலபைரவர்)–காளிகாம்பா
42. மந்த்ரநாயகர் – சக்ரிணீ
43. ருத்ரர் – கங்காளீ
44. பிதாமஹர் – புவனேச்வரீ
45. விஷ்ணுபைரவர் – த்ரோடகீ
46. வடுகநாதர் – மஹாமாரீ
47. கபாலர் – யமதூதீ
48. பூதவேதாளர் – கராளீ
49. த்ரிகோத்தரர் – தேஜோவதீ
50. த்ரிபுராந்தகர் – மர்தினீ
51. வரதர் – ரோமஜங்கா
52. பர்வதவாஹனர் – நிர்வாரணா

53. சசீ (சசிதரர்) – விசாலா

54. கபாலபூஷணர் – காமுகீ

55. ஸர்வக்ஞர் – தோக்த்ரீ (தோக்ரீ)

56. ஸர்வதேவர் – அதோமுகீ

57. ராசானர் – முண்டஸ்ரக்தாரீணீ

58. ஸர்வபூதர் – வ்யாக்ரீ

59. கோரநாதர் – த்வாங்க்ஷிணீ

60. பயங்கரர் – ப்ரேதரூபிணீ

61. புக்திமுக்திபலப்ரதர் –தூர்ஜடீ

62. காலாக்னீ – கோரீ

63. மஹாரௌத்ரர் – கராளீ

64.தக்ஷிணதிக்பவர் – விசாலாங்க்ரீ

ஸ்ரீபார்வதிதேவியானவள் பலமலைகளில் இவ்வாறு குஹ்யகாளியாக இருந்து பலபைரவிகளின் திருஉருவங்களைப்பெற்று அவரவர்க்குறிய பைரவமூர்த்திகளுடன் வாஸம் செய்தவளாக மூவுலகத்தோரைக்காத்து அவர்களுக்கு அருள்செய்தாள் என்று சாக்ததந்த்ரம் பைரவீஸம்ஹிதைகளால் அறியப்படுகிறது.

காளிஸ்தாபன காலவிதானம்

உத்தராயணகாலே து சுக்லபக்ஷே சுபே தினே.

கர்கடாத்யந்து ஷண்மாஸம் மத்யமந்து ப்ரசஸ்யதே.

க்ருஷ்ணபஷே சதுர்தச்யாம் சாமுண்டா ஜன்மருக்ஷகே.

உத்தர த்ரிதயம் சைவ ரோஹிணீ க்ருத்திகா ததா.

மிருகசிரோ பௌமவாரம் ச சதகோடிபலம் குரு:.

அஷ்டமீ மத்யமம் ப்ரோக்தம் சதுர்த்தீச விவர்ஜயேத்.

ஸ்திரலக்னம் விசேஷேண உபயம் மத்யமமேவ ஹி.

அஷ்டமே சுத்திஸம்யுக்தே ப்ரதிஷ்டா ஸம்யக் ஆசரேத்.

பஞ்ச த்ரயஞ்ச ஸப்தாஹம் நவாஹம் ச விசேஷத:.

(நவயாமளஸங்க்ரஹம்)

காளீஸ்தாபனகால நிச்சயமுறை. (கும்பாபிஷேககாலம்)

உத்தராயணகாலத்தில் வளர்பிறையில் சுபநாட்களில் ஸ்தாபனம் செய்வது உத்தமம். ஆடி முதலான ஆறு மாதங்களில் செய்யப்படுவது நடுத்தரப் பயனைஇளிப்பதாகும். மாதங்களில் பௌர்ணமிக்குப்பிறகு, ஐந்துநாட்களுக்குப் பிறகு தேய்பிறை சதுர்தசியை (பதினான்காவதுதிதியை) தீர்த்தம் அல்லது தேருக்கு நிச்சயித்துகாளீ விழாவை செய்யவது உத்தமசெயல் முறையாகும். தேய்பிறை அஷ்டமியில் முடிவதாய் நிச்சயிப்பது நடுத்தரசெய்முறையாகும். நான்காவதான சதுர்த்திதிதி எப்போதும் விலக்கத்தக்கது. பஞ்சமி முதல் துவங்கி செய்தல் ஏற்புடையதாகும். இவ்வாறு திதியை நிச்சயிக்கலாம் அல்லது சாமுண்டியின் ஜன்மநக்ஷத்ரத்திலோ (ஆதிரையிலோ) உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ரோஹிணீ, க்ருத்திகை, மிருகசீர்ஷம் இவற்றில் தீர்த்தோத்ஸவம் செய்யும் வகையில், முன்னதாக விழாவிற்கான நாள்கணக்கை நிச்சயிக்கலாம். கிழமையில் செவ்வாய்கிழமை காளிக்கு மிகவும் உகந்ததாகும். இவ்விதம் உரியநாட்களில் கும்பாபிஷேகம் மற்றும் விழா (உத்ஸவம்) செய்வது காளிக்கு மகிழ்ச்சியையும், செய்பவருக்கு இஷ்டஸித்தியையும் அளிக்கும் என்று ஆகமநூல்கள் கூறுகின்றன. ஸ்திரலக்னம் விசேஷமாகவும் உபயலக்னம் நடுத்தரமாகவும் ஏற்கத்தக்கது. குறிப்பிட்ட முகூர்த்த லக்னநேரத்திற்கு எட்டாமிடத்தில் நவக்ரஹம் எதுவுமே இல்லாதிருப்பது ப்ரதிஷ்டைக்கு உகந்தகாலம். 9, 7, 5, 3 நாட்களில் யாகத்தை செய்ய வேண்டும்.

காளீயாக நவகுண்ட நவசக்திகள்.

காளீ சைவ கராளீச மனோரம்யா சுலோஹிதா.

சுதர்மினீச புல்லிங்கீ விச்வரூபீ விலோஹிதா.

தேவீ ஸா லோலநயனா நவசக்தீ: ப்ரகீர்த்திதா:.

ஒன்பது குண்டங்களுடனான காளீயாகமுறையில் ஒன்பது ஹோமகுண்டங்களிலும் மூர்த்தீச்வரீ சக்திகளாக முறையே ஒன்பதுதேவிகள் பூஜிக்கப்படவேண்டியவர்கள். அவர்கள் முறையே 1. காளீ 2. கராளீ 3. மனோரமா 4. சுலோஹிதா 5. சுதர்மினீ 6. புல்லிங்கீ 7. விச்வரூபி 8. விலோஹிதா 9. லோலநயனா என்ற தேவிகள் காளீரூபசக்திகள் பூசிக்கத்தக்கவர்கள்.

பஞ்ச தத்வம் மஹாகாளீ யஜமானீந்து திவாகர:.

வாமாதி நவசக்தீஸ் ச நவகுண்டே ப்ரபூஜயேத். (நவயாமளஸங்கிரஹம்) அல்லது பஞ்சபூதம்சூர்யசோமயஜமானர் என்ற மூர்த்திகள் எட்டுக்கும், அம்பிகாமுதலானபஞ்ச பிரம்மசக்திகள்5ம், பிராம்ஹீவைஷ்ணவீ ருத்ராணி மூவருமாக எண்மர் மூர்த்திச்வரிகள் ஆவர்.

காளீபீடபத்மபூஜை

பாதபத்மத்தடியில் நடுவே தரையில் ஆதாரசக்தியையும் எட்டுநாகம்சுற்றிய 1.அனந்தாஸனத்தில் மஹாலக்ஷ்மியையும், 2.ஸிம்ஹாஸனத்தில் ஸிம்மாஸனியையும். 3.யோகாஸனத்தில் நிர்மலாக்ஷியையும், 4.பத்மாஸனத்தில் ஸர்வபூததமனியையும், 5.பத்மகர்ணிகையில், பத்ரகாளியையும், பூஜிக்கவும். அந்தபத்மகர்ணிகையின் எட்டு திசையிலும் ஒம் ச்ரீம் ஹ்ரீம் க்லீம் என்ற நான்கு பீஜாக்ஷரங்களுடன் 1.பைரவிகபாலினி, முண்டமாலாதாரிணீ 2.தண்டகாளி டமருகசூலதாரிணீ 3. தர்சனகாளீ, டிண்டிமுண்டமாலாதாரிணீ 4.காளிசாமுண்டீ கங்காளிசாமுண்டீ 5.ருத்ரகாளிபகவதி, கௌலிநீசக்தி 6.பீஷணதம்ஷ்ட்ரிகாளீ, மதங்கினீசக்தி, 7. பேதாளகட்கினி, ஊர்த்வ தம்ஷ்ட்ரீகாளீ, மதங்கினீசக்தி 7. பேதாளகட்கினீ, ஊர்த்வ தம்ஷ்ட்ரீகாளீ, 8.ஸப்தமாத்ருகாளீ, அஷ்டமாத்ருகாளீ காளியோகினீசக்திகள், ஆகியோரைப் பூசித்திடவேண்டும். சுற்றியுள்ள பத்மகேஸரங்களில் கேஸரசக்திகளாகக் கருதி 1.உமாபகரூபிணீ 2.ஸரஸ்வதீ 3.துர்கா 4.லக்ஷ்மீ 5.காயத்ரீ 6.லகுலேச்வரீ 7.மேதினீதேவீ 8.வசுந்தராதேவீ, இவர்களை பூசிக்கவேண்டும். பின்பு எட்டுஇதழ்களிலும் 8 தளசக்திகளாக, 1. யோகினீசக்தி 2. குலபாஷிணீசக்தி 3. குடிலாங்கீசக்தி 4. குலாரிசக்தி 5. கௌபேரீசக்தி 6. தக்ஷிணகாளீசக்தி 7. அதர்வணோத்பவசக்தி 8. காலதண்டிநீசக்தி என்றஎட்டு, காளீசக்திகளை பூசிக்கவேண்டும். இவ்வாறு

ஸர்வசக்திகளுமாயுள்ள, சிம்மத்தின்மீதுள்ளதான கமலாஸனத்தில், காளியை ஆவாஹனம் செய்துபின்பு உபசரிப்பு மந்திரங்களால் முறையே உபசரித்து பூசிக்கத்தக்கவள்.

காளீயாககுண்டங்களின்தத்துவஉருவம்.

யாகத்திற்கு ஒருகுண்டமாக அமைத்திடுகையில் அக்குண்டமானது அனைத்திற்கும் முதல்தோற்றுவாயாகிய மஹாமாயை, சுத்தமாயை, குண்டலினீசக்தி என்று கூறப்படுகிற பரபிந்துஸ்வரூபமாகக் கருதத்தக்கது. ஐந்து குண்டங்களுடனானயாகத்தில் அவை ஐந்துகுண்டங்களும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ப்ரபஞ்சத்தின் ஐம்பெரும்பூதங்களின் உருவங்களாக கருதத்தக்கவைகளாகும். ஒன்பது குண்டங்களுடன் கூடியயாகத்தில் அவை ஐந்துபூதங்களுடன் சூரியன் சந்திரன் (ஆத்மா) யஜமானன் ஆகியனவும் ஆகஎட்டுவடிவங்களுடன் பிரதானகுண்டமானது பரபிந்து வட்டம். ஸத்சித்ஆனந்த உருவமானது என்று நவகுண்டஉருவம் அறியவும்.

காளீபிரதிஷ்டாயாக கலசதெய்வங்கள்.

யாகசாலை நடுவே காளிக்கு மஹாகரகமும், அதனைச்சுற்றி எட்டுகாளிகளுக்கும் எட்டுகரகங்களும், பிரதானகாளிகரகத்திற்கு இடப்பக்கத்தில் பீடசக்திக்கு என்று ஒருகலசமும் ஆகபத்து கலசம் இடம். பெறும். வடகிழக்கு மூலையில் யாகேச்வரர் அஸ்த்திரகலசம் இரண்டும். நான்குவாயிலின் இருபக்கங்களிலுமாக சுற்றிலும் இருபத்தி ஏழுகலசங்களும், (நான்கு வாயிலுக்கும்வெளியில் வலதுபக்கத்தில் நான்குவேதகும்பங்களும்) முளைப்பாரிபாலிகைகளின்நடுவே, சந்திரனுக்கு ஒருகலசமும், ஆக 40 கலசம் அமையும். இதனை யாகசாலை வரைபடத்தில் காணலாம். பின்வரும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கலசத்திற்கான வட்டத்தில் உள்ள எண்களால் பூஜ்யதேவதையை அறியவும்.

காளீபூஜையில் கந்தாஷ்டகம் (எட்டுவகை நறுமணப்பொருள்)

கந்தாஷ்டகம் சுபம் மந்த்ரீஸர்வஸம்பத் ப்ரதாயகம்
கலாஸ் ஸர்வாஸ் ஸமாவாஹ்ய பூஜயேத்ச யதாவிதி
கலாதி தேவதாரூபம் சங்கநீரம் கடேக்ஷிபேத்
சந்தனாகரு கற்பூர காச்மீரை ரோசனான்விதை:
ஸஸிஹ்லக ஜடாமாம்ஸீ ஸடீபி: சக்திஸம்பவம்

கந்தாஷ்டகம் சுபம் வச்யம் சக்தி மந்த்ரேஷு யோஜயேத்.

(ஸ்ரீவித்யார்ணவம்சுவாஸம்12ல்)

காளீ பிரதிஷ்டா யாகசாலையும் கலசதெய்வங்களும்.



1. சந்திர கும்பம்
2. சூரிய கும்பம்
3. சாந்திகலை
4. காளராத்திரி
5. மகாகாளி
6. வித்யாகலை
7. சங்கினீ
8. விஜயா
9. நிவிருத்திகலை
10. வாருணீ
11. சிம்மாசனீ
12. பிரதிஷ்டாகலை
13. தாக்ஷாயினீ
14. கலாதரி
15. சாவித்திரி
16. மகாலட்சுமி
17. யாகேஸ்வரர்
18. யாகேஸ்வரி
19. சசீதேவி
20. ஸ்வாஹா
21. மாலினீ
22. ஜாதா
23. கங்கா
24. ஸமீரணீ
25. ஹேமாம்பா
26. ருத்திராணீ
27. வாகீஸ்வரீ
28. நாராயணீ
29. கணபதி
30. சப்தகுருக்கள்
31. 4-வேதகும்பங்கள்

சாக்தபூஜையில் எட்டுவகைநறுமணப்பொருள்களை கும்பத்து தண்ணீரிலும் சங்குதீர்த்தத்திலும் கலந்து உபயோகிப்பது முறை. இவற்றால் பூஜைசெல்வமளிப்பதாகும். சந்தனத்துடன் எட்டுபொருள்சேர்ப்பதால் இதற்கு அஷ்டகந்தம் அல்லது கந்தாஷ்டகம் என்று பெயர். 1. சந்தனம் 2. அகில் 3. பச்சகற்பூரம் 4. குங்குமப்பூ 5. கோரோசனை 6. ஜடாமாம்ஸீ 7. ஸிஹ்லகம்=சிலாரஸம்சிலாசத்து 8. ஸடீ=கசோரம் (வெட்டிவேர்=ஹ்ரீபேரம். பாலகம்) குஷ்டம் முரம் முதலியவையும் கூறப்படுகின்றன விளாமிச்சம்வேர் = உசீரம்ஸேவ்யகம். (கடற்பாசி) கபி=செஞ்சந்தனம் முதலியனவுமாம்.

சந்தானகருகற்பூர சோரகுங்குமரோசனா:

ஜடாமாம்ஸீ கபியுதா: சக்தேர் கந்தாஷ்டகம் விது: (சாரதாதிலகத்தில்)

இத்தகைய முக்யமான எட்டுபொருள்களை தீர்த்தத்தில் சேர்த்து தேவிக்கும் இவ்வாறு சிவன் விஷ்ணுவுக்கும் சிறப்பானவெவ்வேறு கந்தாஷ்டகம் உண்டு. இந்தஎட்டுபொருளை பக்திசிரத்தையுடன் கும்பத்தண்ணீரில் முறையே சோப்பதாலும் பூஜை செய்பவருடைய திறமையினாலுமே பூஜா மூர்த்தியின் கலசம் யந்திரம் முதலானவை சக்திபெற்றதாக அருள்தருவதாகும் என்கின்றன நூல்கள். இதனை கந்தாஷ்டகஸ்ய ஸம்யோகாத் ஸாமர்த்யாத் தேசிகஸ்யச.

ஸசக்திகம் ஜலம்கும்பே பவேதேவ ந சம்சய: (ஸ்ரீவித்யார்ணவம்)

சாக்தபூஜையில் பதினாறு உபசரிப்புகளை முறையே செய்திடவேண்டம். உரிய சந்தனவகை மலர்வகை, நிவேதனவகை, உபசரிப்புவகை அவசியம் பின்பற்றப்படவேண்டும் என்று விதிமுறைகள் அறியப்படவேண்டும்.

காளிஆலயத்தில் பரிவாரதேவதைகள். (காளிகோயில் சுற்றுதெய்வங்கள்)

1. விக்னேச்வரர் 2. ஸ்கந்தர் 3. சாஸ்தா 4. மஹாகாளர் (வீரபத்ரர்) 5. கருப்பர்சுவாமி (க்ருஷ்ணவீரர்) 6. பைரவர் (க்ஷேத்ரபாலர்) 7. ராஜவீரன் (பாவாடைராயர்) (மோடீ=மோஹிநீ. (காட்டேரீ) 8. நிர்மால்யதாரிணீ (காளீபக்தை சண்டேச்வரீ) முதலானோர் இடம்பெறுவர். ஸப்தமாதாகோயில் வடக்குமுகம் நோக்கியவாறு, தெற்கில், நீள்சதுரமான சாலாகார ஆலயத்தில், பிராம்ஹிமுதலான ஏழுதாய்மார்களும் கிழக்கிலும் மேற்கிலுமாக வீரபத்ரர் மற்றும் வீரவிக்னேச்வரரும் ஆகிய ஒன்பதுதெய்வங்களும் ஒரே கருவறையில் அமைத்து பூசிக்கத் தக்கவர்கள். பாம்புபிடித்தஸப்த ரோஹிணியர்களும் ஏழுகன்னியர்களும் பூஜிக்கப்படுவார்கள்.

ஸப்தகன்னிகோயில்

பட்டாரகீது ப்ரதமாத்விதீயா தேவகன்யகா.

த்ருதீயா பத்மகன்யா து சதுர்த்தா ஸிந்துகன்யகா.

அகஜா பஞ்சமீ சைவ வனகன்யா து ஷஷ்டகா.

ஸப்தமா சு மதீகன்யா இத்யேதே ஸப்தகன்யகா:. (யாமளஸங்க்ரஹம்)

இப்படி 1. ராஜகன்னி 2. தேவகன்னி 3. நாககன்னி (பத்மகன்னி) 4. ஸிந்துகன்னி (கடற்கன்னி) 5. அகஜா=மலைக்கன்னி 6. வனகன்னி. காட்டுகன்னி 7. சுமதீகன்னி=நீலக்கண்ணி என்பவர்கள் ஏழுகன்னிகள். (வேறு ஒரு பெயர்முறையுமுண்டு)

1. பட்டாரகீ = ராஜகன்னி 2. தேவகன்யா = அமரகன்னி சுவர்ககன்னி. 3. பத்மகன்யா = நாககன்னி (சேஷலோககன்னி) 4. ஸிந்துகன்யா = கடல்கன்னி 5. அகஜா = கிரிஜா = மலைக்கன்னி (சைலஜா) 6. வனகன்னி = காட்டுக்கன்னி. 7 வசுமதீகன்யா = பூமகள், நிலக்கன்னி. இவர்கள் ஏழுகன்னி மார்களையும் முறையே ஏழு இடங்களில் உதித்தவர்களாயும் ஏழுவிதமானரத்தினங்களை அணிந்தவர்களாயும் வெவ்வேறு. மலர்களைகையில் வைத்திருப்பவர்களாய் வெவ்வெறு நிறத்தில் விளங்குபவர்களாய் கருதிவழிபடவேண்டும்.

காளீஅஷ்டமங்களவடிவங்கள்.

தர்பணம் பூர்ணகும்பம் ச ஸிம்ஹம் வை யும்மசாமரம்.

ச்ரீவத்ஸம் ஸ்வஸ்திகம் சங்கம் தீபம் காள்யாஷ்டமங்களம்

(சைவாகமம்)

காளீயாகமேடையைச் சுற்றிலுமாக பூசிக்கவேண்டிய அஷ்டமங்கள உருவங்கள் முறையே 1.கண்ணாடி 2.பூர்ணகும்பம் 3. ஸிம்ஹம் 4.யுக்மசாமரம் 5.ச்ரீவத்ஸம் 6.ஸ்வஸ்திகம் 7.சங்கம் 8.தீபம் என்பவையாகும். இவைகளை எட்டு அப்ஸரநாட்டிய தெய்வங்கள்கையிலேந்தியவாறு பூசிக்கவும்.

காளீதசாயுதங்கள்.

கட்கம் கபாலம் கண்டாம்ச நாராசம் டமருகம் த்வஜம்.

வேதாளம் க்ஷுரிகம் பாசம் சக்ரம் காளீ தசாயுதம். (சைவாகமம்)

காளியைச்சுற்றிலும் எதிர்திசைமுதலாக பத்துதிசைப்பகுதிகளில் முறையே 1. கத்தி 2. கபாலம் 3. கைமணி 4. நாராசம் (அம்பு/கடப்பாறை)

5. உடுக்கை 6. கொடி 7. வேதாளம் 8. குத்துக்கத்தி 9. பாசக்கயிறு 10. சக்கராயுதம் இவை பத்தும் தசாயுதங்களாக வெளிசுற்றில் காளிக்கு உரிய ஆயுதபடைகளாக பூசிக்கப்படவேண்டியவை.

காளீபூசையில் 16 உபசரிப்புமுறை.

(சாக்தபூஜா ஷோடசோபசாரக்ரமம்)

பாத்யார்க்யாசமன ஸ்நாந வஸநா பரணாநி ச.

கந்தம் புஷ்பம் தூப தீபௌ நைவேத் யாசமனம் புன:

தாம்பூலம் அர்ச்சனா ஸ்தோத்ரம் தர்ப்பணம்ச நமஸ்க்ரியாம்.

(துந்த்ரஸாரம்)

பொதுவாக பெண்தெய்வழிபாட்டு முறையில் ஸாமான்யமான ஷோடசஉபசாரவரிசை முறைபின்பற்றப்படவேண்டும். அவைகள் முறையே 1. பாத்யம் 2. அர்க்யம் 3. ஆசமனம் 4. ஸ்நாநம் 5. வஸனம் (ஆடை) 6. ஆபரணம் 7. கந்தம் 8. புஷ்பம் 9. தூபம் 10. தீபம் 11. நைவேத்யம் ஆசமனம் 12. தாம்பூலம் 13. அர்ச்சனை 14. தோத்திரம் 15. தர்ப்பணம் 16. நமஸ்கிரியா = நமஸ்காரம் செய்வது ஆகியவை முறையே செய்யப்படவேண்டும்.

விசேஷபூஜாகாலவிதானம்.
(விசேஷபூஜைக்கு ஏற்றதிதிகள்)

பூர்ணிமா பஞ்சமீ சைவ த்விதீயா ஸப்தமீ ததா.
த்ரயோதசீ ச தசமீ ப்ரசஸ்தா ஸர்வகாமதா (பிங்கலமதம்)
பஞ்சமீ ஏகாதசீ சுக்லா ஸப்தமீ ச த்ரயோதசீ

தசமீ சுக்லபக்ஷஸ்ய த்வாதசீ ச விசேஷதஸ (ரத்னஸாகரம்)

இதன்படியும் பல நூல்களின்படியும் சாக்தபூஜாகாலத்தில் திதிகள் பௌர்ணமீ, த்விதீயம், பஞ்சமீ, ஸப்தமீ, தசமீ, ஏகாதசீ, துவாதசீ, த்ரயோதசீ இவைகள் எட்டுதிதிகள் உள்ள நேரம் சிறப்பான பயனை அளிக்கும்.

பூஜாசக்ரநிர்மாணவிதி.

தத: குங்குமஸிந்தூரை: கார்யம் யந்த்ரம் து யோகினா.

ஸௌவர்ணே ராஜதே தாம்ரே ஸ்பாடிகேவை த்ருமே ததா.

சக்ரே யதோக்த விதிநா பூஜ்யா தேவீ நரோத்தமை:. (ருத்ரயாமளம்)

ரத்னே ஹேமநி ரூப்யே வா தாம்ரே த்ருஷதி ச க்ரமாத்.

க்ருத்வா சக்ரஸ்ய நிர்மாணம் ஸ்தாபயேத் பூஜயே தபி

லக்ஷ்மீ காந்தி யசப் புத்ர தனாரோக்யாதி ஸித்தயே. (தந்த்ரராஜம்)

பூஜைக்கு செஞ்சந்தனம் குங்குமப்பூ அரைத்த சாந்தினால் பூஜாயந்திரம் வரைந்து அமைக்கப்பட்டு பூஜிப்பதால் அமைந்துள்ள யந்திரத்திலோ பூசித்தலால் வனப்பு, அழகு, புகழ் செல்வம், ஆரோக்யம், மகப்பேறுயாவும் கிட்டும் என்று சாக்ததந்த்ர நூல்கள் கூறும்.

காளீயாககுண்டத்தின் உருவம்.

திக்விதிக்ஷுக்ரமாத் யோநி பத்மம் வா நவகுண்டகம்.

இந்திர ஈசானயோர் மத்யே வ்ருத குண்டம். ப்ரதானகம். (சைவாகமம்) காளிக்கு உரிய யாகத்தில் ஒன்பதுகுண்டங்களை அமைத்திடும் முறையில், நான்கு மூலைகள் மற்றும் நான்கு திசைகள் ஆகிய எட்டுதிசையிலும் அரசஇலை உருவிலான 8 யோநிகுண்டங்கள் அல்லது தாமரைப்பூஎட்டிதழ் உள்ள பத்மகுணடங்கள் எட்டும், கிழக்கிற்கும் வடகிழக்குமூலைக்கும் இடையில், நடுவே குணடலினீசக்திபிந்துவின் உருவமாகிய வட்டஉருவ விருத்தகுண்டம். ஆகியவை ஒன்பதும் அமைத்தல்முறை. "யோன்யாகாராணி குண்டாநி நவபஞ்சைகமேவவா". என்ற வசனத்தால் ஒன்பது யோனிகுண்டங்களையோ ஐந்து யோனிகுணடங்களையோ ஒருயோனிகுணடத்தையோ ஹோமத்திற்கு காளிதேவிக்கு அமைத்திடுவது ஒரு முறையாகும். 9/5/1 சதுரகுண்டம். நால்வேத உருவமாய் எல்லாதெய்வங்களுக்கும் எல்லாயாகத்திற்கும் ஏற்றதாகும். காளிக்கு அரசஇலை உருவம், முக்கோண உருவம், எட்டுஇதழ் தாமரைப்பூக்குண்டம்., வட்டமானகுண்டம் இவை ஏற்புடையகுண்டவடிவங்களாகும். "குணாச்ரம் யோநிகுண்டம். ச பத்மம் வா வ்ருத்த குண்டகம். என்று நூல்களில் கூறப்பட்டுள்ளதால் இவைகளை அறியமுடிகிறது. ஒரு உரியமுறையில் வேள்விச்சாலை அமைக்கத்தக்கது.

காளீ விழாக்கால விதிமுறை.

பஞ்ச த்ரயஞ் ச ஸப்தாஹம் நவாஹம் ச விசேஷத:.

ப்ரார்த்தனம்து உத்ஸவம் குர்யாத் பக்ஷாஹே (அ)ஷ்டமே (அ)ஹநி.

அங்காரவாரம் உத்திச்ய பூஜயேத் உத்ஸவம் குரு.

கிராம சாந்த்யர்த்த பூஜாயாம் சாமுண்டோத்ஸவ மாசரேத்.

ப்ரத்யேக மாலயம் ப்ரோக்தம் காள்யுத்ஸவ மதா சரேத் (கூர்மயாமளே).

சிவோத்ஸவஸ்ய பூர்வே ச மனஸ் ஸந்துஷ்டிகாரகே. (காரணாகமே) காளிக்கு பன்னிருமாதங்களிலும் தேய்பிறைநாட்களான பதினைந்திலுமே, பக்ஷோத்ஸவமத்தை, 15 நாட்களிலோ, மஹோத்ஸவத்தை

975 நாட்களிலோ, தேய்பிறைஅஷ்டமியிலோ, செவ்வாய்க்கிழமையிலோ ஏகதினஒருநாள் விழாவை செய்ய வேண்டும். மஹோத்ஸவத்தை 9,7,5, நாட்களிலோ தினோத்ஸவத்தை 3, 2, 1 நாளிலே செய்க.

மந்த்ரபேதோ பவேத் தத்ர க்ரியாபேதோ ந வித்யதே.

உத்ஸவாத்யாய மார்கேன க்ரியாஸர்வம் ஸமாசரேத்.

கிராமசாந்தியின் பொருட்டு, ஆண்டுக்கு ஒருநாள் ஒருமுறை ஆண்டுதோரும் செய்யவேண்டிய கிராமசாந்தியாகத்தை செய்கிற காலத்திலும், சிவனுக்கு பெருவிழாவைசெய்வதற்கு முன்னதாகவும் காளீஉத்ஸவத்தை செய்து காளியை மகிழ்வித்து விருப்பப்பயனைப்பெற வேண்டும் என்கின்றன நூல்கள்.

காளீஊர்வலத்தில் சிறப்பு உபசரிப்பு முறை.

அஜ ப்ரஹரணம் சைவ பூத பேதாள பலீய ப்ருத்.

சூத்ரோபாஸித யத் ப்ரார்த்ய அஜ ப்ரஹரணம் ததா.

க்ருஹே க்ருஹேஷு கர்த்தவ்யம் யதா காள்யோ பசாரயேத்.

கதலீ நாளிகேரம் வா தாம்பூலம் ச நிவேதயேத்.

குளஸாரம் நிவேத்யம் ச யதா காள்யோ பசாரயேத்.

பநஸாம்ர பலம் வாபி கபித்த பலமேவ ச.

ஸலிலம் நாளிகேரம் வா ப்ராம்மணாராதனம் க்ரமாத். (தேவீயாமளே)

இதன்படி காளீவிழாகால ஊர்வலத்தின்போது பிராமணர் அல்லாதோர் பூசைசெய்யும் கோயில் காளீதெருவில் வரும்பொழுது வீடுகள்தோறும் காளிக்கு ஆட்டை பூசாரியால்வெட்டி, பலியை அளித்திடுவது சிறந்தது. பிராம்மணர்பூஜிக்கும் தேவிக்கு பலிக்கு தேங்காய் (அல்லது பூசனிக்காயை உடைத்துப்படைத்து) உடைத்து மாபலாவாழைவிளா முதலிய அரிய உயரிய பழவகையை படைத்து தவறாமல் வெற்றிலைப்பாக்குத்தாம்பூலத்துடன் வெல்லமும் படைத்து எல்லோரும் திருவீதி ஊர்வலத்தில் நிவேதிக்கவேண்டும். வெல்லம் கரைத்த கரும்புச்சாருடனான பானகம் அல்லது இளநீர் நிவேதனம் செய்து அடியவர்களுக்கு அளிப்பதும்உரிய செய்முறையாகும், பிராம்மணர்களுக்கு தூய்மையான விருந்துணவுஅளித்தல் காளீஅருளை விரைவில் அளிக்கவல்லசெயல் ஆகும். இந்த செயல்முறைகள் பல ஊர்களில் தொன்னெடுங்காலமாக இன்று வரை வழக்கத்திலும் இருந்து வருகிறது என்றும் அறியலாம்.

காளிபூஜைக்கு ஏற்ற பூஜகர் விதி.

பிராம்மணா ராதனம் முக்யம் பாரசைவந்து கௌணவம்.

ஸாமான்யம் சௌண்ட நீயஞ்ச யாமளா சார்ய கர்மவத்.

சிலா லோஹஜபேரம் வா சுதா சித்ரஸ்ய காஷ்டத்ருக்.

இஷ்டிகா ம்ருண்மயம் வாபி நாநாரூபம் ப்ருதக் ப்ருதக்.

ஸ்வதந்த்ராலய கர்த்தவ்யம் ப்ராம்மணா ராதனம் சுபம்.

(உமாயாமளத்தில்)

தனித்தகாளீகோயிலில் பிராமணர் பூசைசெய்வது உயர்தரமான முக்கியபக்ஷமான செயல்முறை என்றும், பாரசைவர்கள் செய்வது (தீக்ஷைபெற்ற பூஜாகாரீ) நடுத்தரமான கௌணபக்ஷ நற்குண செயல்முறை, சௌண்டநீயர்கள் மதுமாம்ஸம் உண்ணும் குலத்து பக்திமான்கள் செய்வது கடைசி பக்ஷசெயல்முறை என்றும் அறியத்தக்கது.

ஆதிசைவ விஹீநே து பாரசைவேந பூஜயேத்.

ஸ்தாபனம் உத்ஸவம் சாந்திம் ஆதிசைவேந காரயேத்.

(ருத்ரயாமளத்தில்)

ஆதிசைவர் இல்லாதபோது பாரசைவரால் பூசைசெய்யத்தக்கது. விசேஷபூசைகளை ஆதிசைவரே செய்திடவேண்டும் என்பது ஆகமவிதியாகும்.

காளீ பூஜைக்கு ஏற்றமூர்த்தங்கள் உருவங்கள்

சிலா லோஹஜ பேரம் வா சுதா சித்ரஸ்ய காஷ்ட த்ருக்.

இஷ்டிகா மிருண்மயம் வாபி நாநா ரூபம் ப்ருதக் ப்ருதக்.

(உமாயாமளே)

கருங்கல்சிலைகள், உலோகச்சிலைகள், சுதைச்சிற்பங்கள், சுவரில் மற்றும் துணியில் வண்ணம் தீட்டிய சித்திரம், ஓவியம். மரத்தாலானசிலை (மரச்சிற்பப்ரதிமை) சுட்டசெங்கல் (நட்டுவைத்தது) மண்சிற்பம், மற்றும் நடப்பட்டுள்ள த்ரிசூலம், வெட்டறிவாள், கரகம், நெருப்பு, யந்திரம், மலை அல்லது நதிகளின் கற்கள் முதலானவற்றில் பலவகையான வடிவங்களிலே காளியை ஆவாஹனம்செய்து வழிபாடுசெய்யப்படலாம்.

மந்திரத்துடனான பூஜையின் மஹிமை.

சூத்ர பூஜித யத் பேரம் நமஸ்காரம் விவர்ஜயேத்.

அதவா லோபயா மோஹாத் அப்த புண்யம் விநச்யதி.

ப்ராம்மணா ராதனம் குர்யாத் மந்த்ர ஸாந்நித்ய மூர்த்திஷு.

மந்த்ர ஹீநம் து யத் பேரம் பூஜாநாம் நிஷ்பலம் பவேத்.

அமந்த்ரம் அர்ச்சகம் த்ருஷ்ட்வா பேரம் முஞ்சந்தி தேவதா:.

(யாமள தந்த்ரம்)

மந்திரம் அறியாதவர்களால் வழிபாடுசெய்யப்படும் மூர்த்தியை வணங்குவதை மக்கள் தவிர்த்திடவேண்டும். அதனை பேராசையினாலோ, அறியாமையாலோ தரிசனம்செய்தால் அவருடைய ஓராண்டுகாலத்து சேமித்தபுண்ணியங்கள் அழியும் எனப்படுகிறது. எனவே மந்திரசக்திநிலைபெற்றுள்ள உருவங்களில் மந்திரம்அறிந்த அந்தனர்பூசாரிகளாலேயே பூஜையானது செய்யப்படவேண்டும். மந்திரமில்லாத சிலையை (பூஜாமூர்த்தத்தை) பூசிப்பது பயனற்றதாகும். மந்திரம்அறியாத அர்ச்சகனைக் கண்டு தெங்கள் தாம் நிலைபெற்று இருந்த பூஜித்தசிலையைவிட்டு விலகிவிடுகின்றனர் (சென்றுவிடும்) என்று சைவ சாக்த தந்த்ரநூல்கள் தெரிவிக்கின்றன. எனவே எவராயினும் பூஜாவழிமுறை மற்றும் மந்திரங்களை அறிந்தபின்பே பக்தி சிரத்தையுடன் பூஜையை செய்யவேண்டும் என்கின்றன ஆகமநூல்கள்.



நவகும்பத்து நவகாளி பூஜைமுறை.
(காளீகொடிமரத்துநவகலசபூஜைக்குரியது)

உமாயாமளநூலின்படி பத்மாஸனத்தில் நடுவில் பத்ரகாளியை ஆவாஹனம்செய்து, பூஜித்து, கிழக்கு முதலான, எட்டுதிசையிலும் சுற்றிலுமாக (வடகிழக்கு அல்லது எதிர்புறஇடது மூலையிலுமாக) நவகாளிகார்ச்சனத்தை செய்து தேவியிலும் பீடத்திலும் ஒன்று சேர்த்தல் முறையாகும்.

1. ஓம் காள்யை நம: 2. ஓம் உத்தரகாள்யை நம: 3. ஓம் மஹாகாள்யை நம: 4. ஓம் கங்காள்யை நம: 5. ஓம் பௌமகாள்யை நம: 6. ஓம் தக்ஷிணகாள்யை நம: 7. ஓம் க்ரூரகாள்யை நம: 8. கராளவக்த்ரியை நம: 9. ஓம் சிவஸம்வாதகாள்யை நம: என்று ஒன்பது நாமமந்திரங்களால் 9 சக்திகளை ஓம் ச்ரீம் ஹ்ரீம் க்லீம் என்ற 4 பீஜங்களுடனோ, ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் க்ரீம் என்ற 5 பீஜங்களுடனோ சேர்த்துக்கூறி பூசித்து 16வகை உபசரிப்புகளால் பூஜித்தல் விதிமுறையாகும்.

காளீஉத்ஸவத்தில் பலிதானமுறை.
(காளிக்கு கொடித்துணியில் சிம்மம் அல்லது பூதகீ)

காளியின்பெருவிழாகாலங்களில் கொடிமரத்தடியில் "ஓம் க்ரூம் கேஸரினே ஸ்வாஹா" என்று சிம்மத்திற்கு அன்னஉருண்டையையும், அல்லது ஓம் பைசாச பேதாள்யைநம ஸ்வாஹா என்று வேதாள பூதகிக்கும் பலிதருவது முறை. மேலும் தினமும் இருவேளைகளிலும். குறிப்பிட்டவர்களுடன் எட்டுதிசைக் காவலர்களுக்குமான நவஸந்திபலிகளையும் அளித்திடவேண்டும். கொடிமரத்தடியில் 1. ஓம் நவசக்திப்யஸ் ஸ்வாஹா 2. ஓம் அஷ்டகாளிகாப்ய ஸ்வாஹா 3. ஓம் ஸப்தமாத்ருப்ய ஸ்வாஹா 4. ஓம் விக்னேச்வராய ஸ்வாஹா 5. ஓம் வீரபத்ராய ஸ்வாஹா என்று தூபதீபத்துடன் பலிதானம் செய்வதுமுறை. இவற்றில் தேவதை பெயர்கள் மந்திரங்கள் மாறுபடுமேதவிர விழாவின் செயல்முறைகள்யாவும் சிவாலயவிழாவிற்கான விதிமுறைகளே முழுமையாக பின்பற்றத்தக்கவை என்கின்றன நூல்கள்.

காளீகொடியில் பூஜையும் விழாக்காலபலிதானமும்.

ஓம் த்ரிணேத்ரி உக்ரரூபீத்வஜாதிபாயை காரணேச்வர்யை பத்ரகாள்யை நம: என்று கூறிகொடித்துணிபடத்தைப் பூஜித்து அதனை ஊர்வலமா எடுத்து வரசெய்து காளியின் புகழ்மாலையாகிய மாலாமந்திரங்களைக்கூறி கொடியைஏற்றி நடுவில் கொடிமரத்தடிமுதல் எட்டுதிசைகளிலுமாக சன்னதி எதிர்திசைதுவங்கி ஒரேசுற்றில் ஒன்பது இடங்களில் பலிதருவதைச் செய்துமுடித்தலே "உத்ஸவம்" எனப்படுவதாகும். எட்டுதிசைகளிலும் 8 திக்பாலசக்திகளையும் ஆங்காங்குள்ள காளியின் குழுமசக்திகளான காளீகண தேவதைகளையும் அழைத்து அன்னபலியை தந்து மகிழ்வித்தல் முறையாம். இரண்டாம்நாள் முதலாக பூதம்பைசாசம், பேதாளம், சாகினீ, டாகினீ, ராகினீ, காகினீ, ஹாகினீ, ப்ரம்மராக்ஷஸர்,



யக்ஷர், அசுரர் இவர்களுக்கு தினம் ஒருவருக்கு என்று கொடிமரத்துக்கு எதிரில் சிறப்பாக தினதேவதாபலியைத் தந்திடவேண்டும் என்பது உத்ஸவசெய்முறையாகும்.

காள்யாதி தச தேவாநாம் தத்யன்னேந பலிம் ததேத்.
மஹாபீடஸ்ய மத்யே து மணிகாம் சக்தி மர்ச்சயேத்.
தத்யன்னம் ச பலிம் தத்வா கூச்மாண்டம் ச பலிம் ததேத்.
தூப தீபாதிகம் தத்வா தோஷயேத் ஸர்வதேவதா:.

காளீபூசைக்கேற்ற ஆகமநூல் வகை.

“யாமளோக்த க்ரமேணைவ மாத்ருயாகம் ஸமாசரேத்.”

என்ற சைவாகம வசனப்படி சைவாகமவகைகளுள் ஒன்றான மிச்ர சைவ வகை தந்த்ரமான யாமளம் என்ற நூலின்படி காளிக்கு பூஜை செய்யத்தக்கதாகிறது. “நவயாமளஸங்கிரஹம்” என்னும்நூல் ஆகமயாமளத்தையும் ஆசாரியரையும் கூறுகிறது.

மிச்ரம் யாமளம் இத் யுக்தம் ஸப்தமாத்ரு ப்ரதானகம்.
ஸித்தாந்தம் மிச்ரம் இத்யுக்தம் நவயாமள ஸம்ஞகம்.
மாத்ருணாம் ஸ்தாபனம் பூஜா தாஸாம் வன்ஹேஸ்து தர்ப்பணம்.
ஸ்நபனோத்ஸவ சாந்த்யாதி ஸ்த்து ஆசார்யேனைவ காரயேத்.
(தேவீயாமளே)

ஒன்பதுவகையான யாமளநூல்கள் மிச்ரதந்த்ர நூல்வகையாகும். இவற்றால் ஸப்தமாதாக்களுக்கும் காளீ, மாரீ, துர்கா, முதலான கிராமதேவதைகளுக்குமான நித்யபூஜை மற்றும் நைமித்திகபூஜை. காமியசெயல்முறைகளையும், பூஜை குறிப்பாக ஸ்தாபனம், உத்ஸவம், சாந்தி, கிராமசாந்திபரிஹாரசெயல்கள், இவைகள் ஆதிசைவ குலத்து சிவதீக்ஷித சைவ ஆசார்யரால்மட்டுமே செய்யப்படவேண்டும் என்பது சாஸ்திர முடிவு.

மஹாநிர்வாணதந்த்ரத்தில் சிவனார் கௌளமார்கத்தைக் கூறி குலாசாரம்இன்றி சக்தி மந்த்ரம் ஸித்திஅளிக்காது என்கிறார். மேருதந்த்ரத்திலும் வாமக்ரம்ம கௌளமார்கம் என்று கூறும். “ஸர்வதர்மோத்தமாத் கௌளாத் பரோ தர்மோ ந வித்யதே” என்று சிவனால் கூறப்பட்டுள்ளது. குலாசாரபூஜை என்பது பஞ்சமகார பூஜா முறை என்ற மதுமாம்சாதியுடன் கூடியதாம்.

சாக்தஸமய வழிநூல் குறிப்புகள்

சைவத்தைப்போலவே சாக்தஸமயத்திலும் ஐந்து பிரிவுகள் உண்டு. அவை பஞ்ச ஆம்நாயமார்க்கங்கள் எனப்படுபவை. இவற்றுள் பூர்வாம்நாயத்திற்கு உன்மனீ, தக்ஷிணாம் நாயத்திற்கு போகினீ பச்சிமாம்நாயத்திற்கு குப்ஜிகா (குல்லிகா) உத்தராம்நாயத்திற்கு காளிகா. ஊர்த்வாம்நாயத்திற்கு மஹாத்ரிபுரசுந்தரீ பரதேவதைகள் ஆவர். இவைகள் இரண்டு பிரிவு உடையதாகும். அவை **மதுமதீவித்யா** என்றும் **மாலினீவித்யா** என்றும் **வித்யாமதம்** இருவகைப்படுகிறது. மதுமதீ மதத்திலிருந்து காதிமதம் (பஞ்சதசாக்ஷரீவித்யா பிரிவு) மற்றும் **காளீமதம்** என்று இருபிரிவு உண்டு. இவைக்கு தனித்தனியே குலகுருக்ரமம் குருவம் சவரிசை முறைகள் தனித்தனியே உள்ளன. இவ்விரண்டிலிருந்து வித்யாரண்யர் என்ற யதியானவர் இநத இரு தந்த்ரங்களிலிருந்தும் (மதுதீமாலினீ) ஸாரமாக எடுத்து ஸ்ரீசக்ரத்தில் மஹாதிரிபுரசுந்தரியை பூஜிக்கும் முறையை இருபகுதியாக பலசுவாஸங்களில் தொகுத்து **ஸ்ரீவித்யார்ணவ** தந்த்ரம் என்ற நூலை அளித்துள்ளார். இது சாக்தஸம்ப்ரதாயத்தில் சங்கராசார்ய மடத்து சீடர்களாலும் சாக்தர்களாலும் பின்பற்றப்பட்டுவருகிறது. இந்த நூலுக்கு ஆதாரமாக விளங்கியது மதுமதீபிரிவின் மிகப்பெரியஞானநூலான மாத்ருகார்ணவம் என்ற தந்த்ரநூலாகும். இதில் எல்லாபெண்தெய்வங்கள் (ஆண்தெய்வங்கள்) அனைத்திற்கும் மேலானவளாக சிவனாரின் பராசக்தியான மஹாத்ரிபுரசந்தரியே என்று விளக்கப்படுகிறது. காளிக்கேசிவந்தநிறத்தில் சாந்தமாக உள்ள அழகிய கோலத்தில் சுந்தரீ என்று பெயர் ஏற்படுகிறது உக்ரமான தோற்றத்தில் கருமைநிறத்தில் தக்ஷிணாஆத்யாகாளீ பரதேவதையாம். சாக்தசமயத்தில் காதிமதம், வித்யாவதார குருமதம், காளிமதம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன. மேலும் சாக்தத்தில் ஐந்துவகை ஸமயங்கள் பேசப்படும். அவைகள் அதில் கூறப்படும் பரதேவதையின் பெயரால் கூறப்படும் அவை. சாக்தசமய வித்யாதேவிகள். 1. ஸ்ரீவித்யா 2. பஹளா 3. காலராத்ரீ 4. ஜயதுர்கா 5. சின்னமஸ்தா என்ற ஸமயங்கள் ஐந்து பிரிவுகளில் உள்ளன. முதலாவதான ஸ்ரீவித்யாஸமயத்தை பின்பற்றி பரதேவதையாக ஸ்ரீமஹாதிரிபுரசுந்தரியை உபாஸித்து அருள்பெற்றவர்களான, சாக்தவழிபாட்டு வழிமுறைகளை உலகுக்கு எடுத்துக்கூறி வழிகாட்டிய சாக்தமத குருமார்களாக போற்றி வழிபடப்படுகிற வித்யாவதார குருமார்கள் இருபத்திஐந்து குருக்கள் ஆவர். இவர்களின் பெயரால் ஸ்ரீவித்யார்ணவம் நூல் இருபத்திஐந்து சாக்தமதங்களைக்கூறுகிறது. அந்த சாக்தஸம்ப்ரதாய ஸ்ரீவித்யாவதாரகுருமார்கள் முறையே 1. மனு 2. சந்திரன் 3. குபேரன் 4. லோபாமுத்ரா 5. காமராஜா 6. அகஸ்தியர் 7. நந்தி 8. சூரியர் 9. விஷ்ணு 10. குமாரர் (கந்தன்) 11. சிவர் (ஈசன்) 12. தூர்வாஸர் 13. இந்திரன் (சக்ரன்) 14. உன்மநீ 15. வருணர் 16. தர்மராஜா (யமன்) 17. அனலர் (அக்னி) 18. நாகராஜா (சேஷன்) 19. வாயு (மருத்) 20. புதன் (கிரஹம்) 21. ஈசானர் 22. ரதி 23. நாராயணர் 24. பிரம்மா

அருள்தரு ஸ்ரீமஹாமாரியம்மன் சமயபுரம்

அருள்தரு ஸ்ரீகண்ணுடையநாயகி நாட்டரசன்கோட்டை


அருள்தரு அங்காளபரமேஸ்வரி மேல்மலையனூர்

25. பிருஹஸ்பதி (வியாழன் குருக்ரஹம்) இவர்கள் பத்ததி குருமார்கள் ஆவார்கள். இதுபற்றி காமராஜம் எனும் நூல்விளக்கிக் கூறியுள்ளது.

சதுஷ்ஷஷ்டி சாக்ததந்த்ர நாமாநி.

(சதுஷ்ஷஷ்டிகலாமயி) தேவீ அறுபத்தினான்கு சாக்தாகமநூல் வடிவினள்.

மஹாமாயா சம்பரம் ச யோகிநீஜால சம்பரம்.
தத்வ சம்பரகம் சைவ பைரவாஷ்டக மேவ ச.
பஹூரூபாஷ்டகம் சைவ யாமளாஷ்டக மேவச.
சந்த்ரஞானம் மாலிநீ ச மஹா ஸம்மோஹனம் ததா.
வாமஜுஷ்டம் மஹாதேவம் வாதுளம் வாதுளோத்தரம்.
ஹ்ருத்பேதம் தந்த்ரபேதம் ச குஹ்யதந்த்ரம் ச காமிகம்.
கலாவாதம் கலாஸாரம் ததா அன்யத் குண்டிகா மதம்.
மதோத்தரம் ச வீணாக்யம் த்ரோதலம் த்ரோதலோத்தரம்.
பஞ்சாம்ருதம் ரூபபேதம் பூதோட்டாமர மேவ ச.
குலஸாரம் குலோட்டீசம் குலசூடாமணிஸ் ததா.
ஸர்வஞானோத்தரம் சைவ மஹாகாளீமதம் ததா.
அருணேசம் மோதினீசம் விகுண்டேச்வர மேவச.
பூர்வ பச்சிம தக்ஷம் ச உத்தரம் ச நிருத்தரம்.
விமலம் விமலோத்தரம் ச தேவீமதம் அதப் பரம்.

(இவற்றின் உட்பிரிவு நூல்களை லக்ஷ்மீதரத்தில்காணலாம். (அருணாமோதிநீ)

சாக்ததந்த்ர நூல்கள்

1. மஹாமாயா சம்பரம் 2. யோகினீஜால சம்பரம் 3. தத்வ சம்பரம்

(4 முதல் 11 வரை) பைரவாஷ்டகம். 8 நூல்

(12 முதல் 19 வரை) ஹுரூபாஷ்டகம். 8 நூல்

(20 முதல் 27 வரை) யாமளாஷ்டகம். 8 நூல்

28 சந்திரஞானம்	29 மாலிநீதந்த்ரம்	30 மஹாஸம்மோஹனம்
31. வாமஜுஷ்டம்	32. மஹாதேவதந்த்ரம்	33. வாதுளம்
34. வாதுளோத்தரம்	35. ஹ்ருத்பேதம்	36. தந்த்ரபேதம்
37. குஹ்யதந்த்ரம்	38. காமிகதந்த்ரம்	39. கலாவாதம்
40. கலாஸாரம்	41. குண்டிகாமதம்	42. மதோத்தரம்
43. வீணாக்யதந்த்ரம்	44. த்ரோதலம்	45. த்ரோதலோத்தரம்
46. பஞ்சாம்ருதம்	47. ரூபபேததந்த்ரம்	48. பூதோட்டாமரம்
49. குலஸாரம்	50. குலோட்டீசம்	51. குலசூடாமணிதந்த்ரம்

52. ஸர்வஞானோத்தரம் 53. மஹாகாளீமதம் 54. அருணேசம்
55. மோதினீசம் 56. விகுண்டேச்வரம் 57. பூர்வ தந்த்ரம்
58. பச்சிம தந்த்ரம் 59. தக்ஷிண தந்த்ரம் 60. உத்தர தந்தரம்
61. நிருத்தர தந்த்ரம் 62. விமல தந்த்ரம் 63. விமலோத்தரம்
64. தேவீமதம் இவைதவிரஷடாம்னாயதந்த்ரங்கள் பல உள்ளன.

சாக்தசமய நூல்கள்

காளீகாதந்த்ரம்
தாராதந்த்ரம்
சாரதாதந்த்ரம்
பைரவதந்த்ரம்
பிச்சிலாதந்த்ரம்
குப்தவதீதந்த்ரம்
மேருதந்த்ரம்
காத்யாயனீதந்த்ரம்
டாமரீதந்த்ரம் (டாமரம்)
குப்ஜிகாசூலபாணிதந்த்ரம்
நிர்வாணதந்த்ரம்
மஹாநிர்வாணதந்த்ரம்
ஹம்ஸதந்த்ரம்
நீலாதந்த்ரம்
குலார்ணவதந்த்ரம்
முண்டமாலாதந்த்ரம்
நவயாமளஸங்க்ரஹம்
ஞானார்ணவம்
ஸ்ரீவித்யார்ணவதந்த்ரம்
ருத்ரயாமளம் (உமாசங்கரசம்வாதம்)
சிவயாமளம்
உமாயாமளம்
கூர்மயாமளம்
தேவீயாமளம்
ஸகந்தயாமளம்
சக்தியாமளம்
(துர்காவிஜயாஸம்வாதம்)
சண்டயாமளம்
பைரவயாமளம்
துர்காயாமளம்
பிரம்மயாமளம்
த்ரைலோக்யடாமரதந்த்ரம்
த்ரைலோக்யமோஹநதந்த்ரம்
ஜயத்ரதயாமளம்
மாத்ருகார்ணவம்
த்ரிபுரார்ணவம்
ஸௌத்ராமணிதந்த்ரம்
திவ்யஸாரஸ்வததந்த்ரம்
நிருத்தரதந்த்ரம்
தூமாவதீதந்த்ரம்
ரேணுகாதந்த்ரம்
குலஸர்வஸ்வம்
காமாக்யாதந்த்ரம்
யோகினீதந்த்ரம்
யோகினீஹ்ருதயம்
மந்த்ரசாஸ்த்ரம்
சாக்தஸம்ப்ரதாயம்
யாமளப்ரதிஷ்டாதந்த்ரம்
யாமளஸங்கிரஹக்ரியாதீபிகா
துர்கோபாஸநாகல்பத்ருமம்
மந்த்ரமஹோததி (மஹீதரவிரசிதம்)
சிதம்பர ரஹஸ்யம்
காளீபுராணம் (தந்த்ரம்)
காளீரஹஸ்யம்

சாரதாதிலகம்
மந்த்ரமஹார்ணவம்
ப்ரபஞ்சஸாரஸங்க்ரஹம்
சப்தசதீஸர்வஸ்வம்
சப்தசதீஸப்தவ்யாக்யா
கிலமார்க்கண்டேயம்
சாக்தஸாதனக்ரந்தமஞ்ஜரீ
சாக்ததத்வபோதம்
அதர்வணரஹஸ்யம்
ப்ரபஞ்சஸாரம்
நவரத்னேச்வரம்
பாரிஜாதம்
சண்டீகல்பம்
தேவீபாகவதம்
காமதேனு
தேவீமாஹாத்மியம்
தேவீஅதர்வசீர்ஷம்
காள்யார்ச்சனசந்த்ரிகா
தூதீயாகக்ரமம்
பத்ரகாளீ மாஹாத்மியம்
(மார்க்கண்டேயபுராணம்)
த்ரிபுராரஹஸ்யம்
பைரவீஸம்ஹிதை
ஸ்ரீவித்யாரத்னாகரம்
யாமளதந்த்ரம்
குமாரீதந்த்ரம்
பேத்காரிணீ தந்த்ரம்
மந்தானபைரவ தந்த்ரம்
கௌதமீ தந்த்ரம்
பைரவீதந்த்ரம்
பஞ்சமீச்வரதந்த்ரம்
வீரதந்த்ரம்
நீலதந்த்ரம்
கந்தர்வதந்த்ரம்
வாமகேச்வரதந்த்ரம்
ஸ்வதந்த்ர தந்த்ரம்
விஜயமாலினீதந்த்ரம்
தந்த்ரரத்னாவளீ
பிங்களாமதம்
மந்த்ரதந்த்ர ப்ரகாசம்
பாவசூடாமணி
தத்வஸாரம்
ஸித்தஸாரஸ்வதம்
குண்டப்ரகாசம்
ஸ்வச்சந்தஸங்கிரஹம்
லக்ஷஸாகரம்
காமராஜம்
சாக்தப்ரபோதம்
பதார்த்த பாரிஜாதம்
தேவீபுராணம்
தேவீபராக்ரமம்
ஸ்மிருதிஸங்க்ரஹம்
புவனப்ரதீபம்
நிர்ணயாம்ருதம்
ஸமயப்ரதீபம்
க்ருத்யமஹார்ணவம்
ஸௌரதர்மம்
ப்ருஹத்ஸாரம்
ஹேமாத்ரி
ரத்னஸாகரம்
மஹாகாளஸம்ஹிதா
விச்வஸாரதந்த்ரம்
வ்யோமகேசஸம்ஹிதா
படபானலீயம்
மஹாதர்வணஸம்ஹிதா
காளிகாபுராணம்
ந்ருஸிம்ஹப்ராஸாதம்
ஷோடசீகல்பம்

ப்ரத்யங்கிராகல்பம்
நாரதஸம்ஹிதா
அஹிர்புத்னியஸம்ஹிதா
லலிதோபாக்யானம்
வாராஹீகல்பம்
சூஹூகல்பம்
மஹாலக்ஷ்மீரத்னகோசம்
இந்திராக்ஷீகல்பம்
பவானீகல்பம்
ஸித்தசாபரதந்த்ரம்
க்ரியாஸாகரம்
க்ரியாஸங்க்ரஹம்
க்ரியாஸாரம்
பீமஸம்ஹிதா
குஹ்யரத்னசிந்தாமணி
சாக்த ரத்னாகரம்
சாத்த ப்ரபோதம்
சியாமாபூஜாபத்ததி
சதுர்வேததாத்பர்யஸங்க்ரஹம்
ஸ்மிருதிஸமுச்சயம்
ஸ்மிருத்யர்த்தஸாரம்
சாக்த க்ரியாதீபிகா
தந்த்ரகல்பத்ருமம்
சியாமளாரகசியம்
குலசூடாமணி
குலார்ணவம் (வாமதக்ஷிணாசாரம்)
கௌலதந்த்ரம்
தூர்வாஸஸம்ஹிதா
1. பூர்வாம்நாயம் (பலநூல்கள்)
2. தக்ஷிணாம்நாயம் (பலநூல்கள்)
3. பச்சிமாம்நாயம்
4. உத்தராம்நாயம் (பலநூல்கள்)
5. ஊர்த்வாம்நாயம் (பலநூல்கள்)
6. அதராம்நாயம்

ஆம்னாயஸங்க்ரஹம்
(ஷடாம்நாயங்கள்)
ஷடாம்நாயதர்சினீ
தந்த்ரஸாதனம்
தந்த்ரராஜம்
சாக்தக்ரியாஸாரம்
(சாக்த)ப்ரயோகஸாரம்
நாரததந்த்ரம்
விச்வாமித்ரகல்பம்
சிவஞானவித்யா
கௌதமகல்பம்
ஸநத்குமாரகல்பம்
மணிஸாகரம்
வசிஷ்டஸம்ஹிதா
வாயவீயஸம்ஹிதா
வாசிஷ்டலைங்க்யஉபபுராணம்
ப்ரவைகல்பம்
குலப்ரகாசதந்த்ரம்
தேவ்யதர்வசீர்ஷம்
பாவநோபநிஷத்
ஸ்ரீகாளிகோபநிஷத்
(அதர்வணவேதஸௌபாக்ய
கண்டம்.)
காளீஸ்தவமஞ்ஜரீ
சாக்தப்ரமோதம்
காளீகுலாம்ருததந்த்ரம்
(தேவீபைரவஸம்வாதகம்)
உத்தரதந்த்ரம்
சரபமாஹாத்மியம்
சாதாதபஸம்ஹிதா
ஸ்ரீகண்டஸம்ஹிதா
தக்ஷிணாமூர்த்திஸம்ஹிதா
வஸிஷ்டஸம்ஹிதா
காத்யாயநீஸம்ஹிதா

காளியின் திவ்யதேச ஸ்தல ஆலயங்கள். (காளீதிருத்தலங்கள்)

காச்மீரத்தில் சிந்துநதிக்கரையில், யோகமாயா, க்ஷீரபகவதீ, யோகவித்யா காளிகள், மாயாபுரீ இடமான என்கிற ஹரித்வாரில், மஹாமாயாகாளீ. சதீகேசம்விழுந்த இடமான கல்கத்தாவில் மூன்றுபெயர்களில் ரக்தாம்பரா, முண்டமாலினீ முக்தகேசீ என்ற திருநாமங்களில் காளிகள் அருள்கின்றனர். டில்லிக்கு அருகே குருக்ஷேத்திரத்தில், ஸ்ரீக்ருஷ்ணபகவானின் குடும்பத்தினரின் குலதெய்வமாக கிருஷ்ணர் குடும்பத்தினர் முதலில்வழிபட்ட பத்ரகாளீதேவீ, அஸ்ஸாமில், பிரம்மபுத்ரா நதிக்கரையில் காமாக்யாகாளீ, காச்மீரபிராம்மபுரத்தில், நாரஸிம்ஹீகோயில் உள்ளது. உத்தரபிரதேசத்தில் மதுராபுரியில் மஹாவித்யா கோயில், மஹாமேதா கோயில், மஹாமாயா கோயில்கள் உள்ளன. மஹாராஷ்ட்ரத்தில் கொல்ஹாபுரத்தில் மஹாலக்ஷ்மீகாளீ அருள்கிறாள். நர்மதாநதிக்கரையில் ஓங்காரேச்வரத்திற்கு அருகில் சிறிது சிறிது தொலைவில் பிராம்ஹீ முதலான ஸப்தமாதாக்களுக்கு எழுதேவிகளுக்கும் ஏழு கோயில்கள் தனித்தனியே விளங்குகின்றன. மத்யபிரதேசத்தில் இந்தோர்ஹர்தாமார்கத்தில் கன்னௌஜ் என்ற இடத்தில் சிம்ஹவாஹநீ க்ஷேமங்கரீதேவீஅருள்கிறாள். மேலும் மத்யபிரதேசத்தில் பிரசித்திபெற்ற உஜ்ஜயினியில், ஹரஸித்திதேவீ ஆலயம் உள்ளது. ராஜஸ்தானில், ஆபூபர்வதத்தில் (மௌண்டபூமலையில்) அர்புதாதேவீஅருள்கிறாள். நாகௌரில் ததிமதீதேவீ, உத்ரபிரதேசத்தில் அல்மோடாநகரின் அருகில் கௌசிகீஅருள்கிறாள். நந்தாமலையில் நந்தாதேவீ, ஸௌராஷ்ட்ரத்தில் கோண்டல் எனுமிடத்தில் புவனேச்வரீயும், உத்தரபிரதேசத்தில் மிர்ஜாபூர் ஜில்லாவில் விந்தியமலையில் விந்தியவாஸிநீ அருள்கிறாள், உ.பி.வாராணஸீநகரில், ஸித்தேச்வரீ, ஸங்கடஹரா, ராஜேச்வரீ, அன்னபூர்ணா தேவிகள் அருள்கின்றனர். பஞ்சாபில், கோட்லா என்ற இடத்திலும் பன்கண்டீ எனும் இடத்திலும் பகளாமுகீ தேவீ ஆலயம் உள்ளது. கராஞ்சீஅருகில் சதியின் கைவிழுந்தமலையில், ஜ்வாலாதேவீ எனும் ஜ்வாலாமுகீமஹாக்ஷேத்ரம் பெருங்கோயில் அமைந்துள்ளது. இவ்விதம் நாம் பாரதம் முழுவதும் சாக்தஸ்தலங்கள் பரவலாக இருந்து அருள்பாலிக்கின்றன.

“திரிபுரா ரஹஸ்யம்” என்றநூலில் பாரதத்தில் தேவியின் பன்னிரண்டு முக்யஸ்தலங்களில் தேவீஅருள்கிறாள். அவை 1.காசீபுரம் அஸ்ஸாமில் காமாக்ஷீ, 2.மலயகிரியில் ப்ராமரீ, ப்ரமராம்பா, 3.கேரளத்தில், மலபாரில், கன்யாகுமாரீ 4.குஜராத்தில், ஆனர்த்தத்தில் அம்பா, 5.கரவீரத்தில் (கொல்ஹாபுரத்தில்) மஹாலக்ஷ்மீ, 6.மாளவத்தில், உஜ்ஜயினியில் காளிகா, 7.பிரயாகையில் அலஹாபாத்தில், லலிதா (அலோபீ) 8. விந்தியாசலத்தில்–விந்தியவாஸினீ 9. வாராணஸியில் விசாலாக்ஷீ, 10. பீகாரில்–கயாவில்–மங்களாவதீ, 11. வங்காள கல்கத்தாவில் சுந்தரீ. (காளீ) 12. நேபாளத்தில் குஹ்யகேச்வரீ என்ற இவைபன்னிரண்டு க்ஷேத்ரங்களும் துவாதச பகவதீ ஸ்தலமாம். வடஇந்தியாவில் (பாரதத்தில்) உள்ளநவதேவீஸ்தலங்கள் புகழ்பெற்றவை. பலஇடங்களில் அருள்தருபவை. அவற்றில் அருளும் 9 தேவிகளின் திருநாமங்கள்முறையே 1.நயனாதேவீ. 2.சிந்த்பூர்ணீதேவீ 3. ஜ்வாலாதேவீ 4. வஜ்ரேச்ரீதேவீ 5. மாதாவைஷ்ணவீதேவீ 6. சாமுண்டாதேவீ 7. மானஸாதேவீ 8. சாகம்பரீதேவீ 9. காளிகாதேவீ (பத்ரகாளீ). இத்தலங்கள் 9ம் சிவமஹாபுராணக்கதையின்படி தாக்ஷாயணீ என்ற ஸதீதேவியின் தேஹப்பகுதிகள் விழுந்த 51 பீடங்களில் அடங்கிய 9 சக்திபீடங்களே ஆகும் என்கின்றனர்.

தமிழகத்தில் சிவகங்கைமாவட்டத்தில் நாட்டரசன் கோட்டையில் கண்ணாத்தாள்காளீ, கொல்லங்குடியில் வெட்டுடையார்காளி, வனபத்ரகாளியம்மன், மதுரகாளியம்மன், முதலிய பெயர்களில் எல்லா மாவட்டங்களிலும் தனித்த காளிகோயில்களில் கிராமதேவதையாக காத்தாயீ என்று காப்பவளாக இருந்துஅருள்கிறாள். திருச்சி உறையூரில் அருள்பவள் வெக்காளியம்மன். காஞ்சீபுரத்தில் எட்டு திசையையும் எட்டுகாளிகள்காப்பதாக அறியப்படுகிறது. மைசூரில் சாமுண்டீச்வரீ, திருவெண்காடு ஆதிகாளி, காளையார்கோயிலில் சுவர்ணகாளீ. அம்பகரத்தூரில் மஹாகாளீ, தொட்டியம் மதுரகாளி. சீர்காழியில் இரட்டைக்காளி, திருநாகேச்வரத்தில் பச்சைக்காளி பவளக்காளி என்று இருகாளிகள் அருள்கின்றனர். வங்காளகாளி. நேப்பாளகாளீ, லங்காத்ரிகேணமலைபத்ரகாளீ முதலான பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ், ரீயுனியன் முதலான பல அண்டைநாடுகளிலும் தேசம்காத்திடகாளீகோயில்கள் உள்ளன.

விச்வேசிகாளியின் விழிக்கருணை.

நமோ தேவி! மஹாமாயே! ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரிணீ.

அனாதிநிதநே! சண்டி! புக்திமுக்திப் ப்ரதே! சிவே.

காளீ த்ரிநேத்ரீ, த்ரிநயனா, த்ரிலோசனி, த்ரயம்பகி, என்று பலவாறு நூல்களில் முக்கண்ணியாகவே போற்றப்படுகிறாள். காளியின் விழிக்கோலத்தைக் கூறுகையில் **விசாலாக்ஷீ**=பெரியக்கண்ணி, **பீமாக்ஷீ**=அச்சம்தரும்பெருவிழியாள். **ரக்தாக்ஷீ**= செங்கண்ணி, சிவப்புவிழியாள், **ஸஹஸ்ராக்ஷீ** = ஆயிரங்கண்ணுடையாள், **பத்மாக்ஷீ** = தாமரைப்பூவிழியாள். ரவீந்துவக்னிலோசனா = சூரியன் சந்திரன் அக்னி மூன்றை விழியாக கொண்டவள். **தீர்காக்ஷீ** = நீண்டவிழியாள், குசுமாக்ஷீ = மலர்விழியாள். **முண்டகக்கண்ணி. காமாக்ஷீ**=கலைமகள் அலைமகள் அருள்தரும்காமனையைத்தரும் கண்ணாத்தாள். **ம்ருகாக்ஷீ** = மான்போன்றவிழியாள், **மீனாக்ஷீ** = மீன்போன்றகயல் விழியாள். **கருணாக்ஷீ க்ருபாக்ஷீ, தயாக்ஷீ** = கருணைமிகுகண்ணி, **தூம்ராக்ஷீ** = புகைக்கண்ணி. **ஜ்வலனாக்ஷீ** = நெருப்புவிழியாள். மூவகைஅக்னிகளான (தீவிழியாள்) **கோராக்ஷீ**=அச்சுருத்தும் விழியாள், அருணாக்ஷீ, லோஹிதாக்ஷீ செங்கண்ணகி விருத்தாக்ஷீ வட்டவிழியாள். மாதுலுங்காக்ஷீ–செம்மாதுளைவிழியாள். ரக்தாயதாக்ஷீ–நீள்செங்கண்ணீ. லோலாக்ஷீ, சஞ்சலாக்ஷீ, கோடராக்ஷீ, கர்த்தாக்ஷீ. இப்படி பலவாறு கண்ணழகைப்பெற்று அருளும் அன்னைகாளி தனது கடைக்கண்ணால் கருணைமழை பொழிந்து அடியவர்களை அருள்பெறச் செய்கின்றாள். இதனையே **"கடாக்ஷஸ்யந்திகருணா"** என்று கூறி போற்றப்படுகிறாள். இதனால் **காளியே கண்ணாத்தாள், கண்ணாம்பாள், கண்ணகி, கோலவிழியாள்,** என்று செந்தமிழில் போற்றப்படுகிறாள். இப்பூவிழியாள் கோபம்கொண்டபோது தீவிழியாளாகி, **தூம்ரலோசனன்** என்ற புகைக்கண்ணனான அசுரனை தம்பார்வையால் எரித்து சாம்பலாக்கினாள் என்கிறது மார்க்கண்டேயபுராணம். எல்லாபுலன்களுக்கும் முக்கியமானது கண்களே. அவ்வாறே எல்லாதெய்வங்களினும் முக்கண்ணியே பெரியநாயகியாவாள். பீமாக்ஷீ எனப்படுகிற காளியை பெருந்தேவியை முக்கண்ணியை தொழுவார்கு உலகில் அருள்கிட்டுவது திண்ணம் என்று அறியவும்.

சென்னையில் அருளும் அன்னை காளிகா.

காத்தருளும் காளியானவள், கலியுகவரதாவாக, கருணைமழை பொழிந்து. அருளாட்சி செய்திடும் திருத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னைமாநகரில், காளிக்கு உகந்த புனிதஇடமான கடற்கரைப்பகுதியில், அமைந்துள்ளது இந்த **காளிகாம்பாள்கோயில்.** இக்கோயில் ஸ்ரீகாளிகாம்பாளுக்கு மட்டுமே அமைந்ததொரு **"காளிகாம்பா ஸ்வதந்த்ராலயம்"** எனப்படுகிற காளியின் தனிக்கோயிலாகும். இவள் சிவசக்தியே என்பதை உணர்த்திடும் வகையில் சைவாகமப்படி மிச்ராலாயமாக சிவாலயமும், இதனுடன் அமைந்து உள்ளது. இவ்விரு கோயிலும் துவாரதேவதா முதலாக பலிபீடம் வரையிலும் கொண்டதாக தனித்தனியாக சண்டேசருடனும் அமைந்து விளங்கினாலும் கூட, இங்கு, பிரதானமாய், **காளிகாம்பாள்** வீராசனத்தில், தக்ஷிணாமூர்த்திவடிவில் அமர்ந்தவளாய் விளங்கி இருக்க, அவளே கொடிமரத்துடன் கூடி மஹோத்ஸவத்துடன் பூஜிக்கப்படுகிறாள். இங்கு இவள் அதிஸௌம்யமான உருவத்தையும், அதிரௌத்ரமான பெயரையும் பெற்று விளங்குகிறாள் என்பதும், ஸ்ரீ சக்ரத்துடன் விளங்குவதும் இத்தலத்தை ஒரு சக்திபீடம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இங்கு காளிக்கே உரிய, உக்ரத்தோற்றமில்லாவிடினும், லலிதாம்பிகை, ராஜராஜேஸ்வரீ திருவுருவத்தில் விளங்கியும், திருவடியில் திரிசிரங்கள் இருப்பதாலும், கரும்பு இன்றியும், ஐவகை மலர்கணைகள் இன்றி, தாமரை மலர் மொட்டும், வரதமும் உள்ளது. இவளை ஆதிபராசக்தியின் வடிவாய், காளியின் சாந்தஸ்வரூபியான காளியின்அம்சமான அமைப்புகொண்டு அருள்பாலித்து வருகிறாள். இவ்வாலயம் காளிகோயிலுக்கான அமைப்பிலக்கணம் கொண்டுள்ளதைப் பற்றிய தகவல்களை அறிவோம். பொதுவாக சிவனது சக்தியின் கோயில் கிழக்குமுகமாகவும், தெற்குமுகமாகவும் அமைந்திருக்கும். காளியின் கோயில் கிழக்கு அல்லது வடக்குதிசை நோக்கிஇருக்கும். இவ்வாலயத்தில் தனிச்சிறப்பாக கடற்கரையில் மாநகரத்தைநோக்கியவாறு மேற்குநோக்கி அமர்ந்து அருள்கிறாள்.

சென்னை, காளிகாம்பாள் ஆலயஅமைப்பு.

1) இங்கு ஆகமங்களின் ஆலயவிதிமுறைப்படி, கிராமம், நகரம் முதலானவற்றில், வெளிநோக்குடன், கிராம ஸம்ரக்ஷணியாக, எல்லைப்பகுதியில் காளியானவள், ஸம்ஹாரிணியாக, ருத்ரரூபாவாக, நிக்ரஹகாளியாக விளங்குவாள். அவ்வாறே கிராமாதிகளை தனது பார்வையால் அருள்புரிவதற்காக காளியானவள் ஸதாசிவாவாக, அந்தர்முக ஸமாராத்யாவாக அனுக்ரஹதாவாக கிராம நகரத்தைப் பார்த்திடுமாறு அனுக்ரஹகாளியாக விளங்குவாள். இவ்வாறு லிங்கத்தில் பூசிக்கப்படும் ஸதாசிவரின் சக்தியாக அனுக்ரஹ காளியாக, இங்கு அமைந்து இருக்கிறாள். ஸ்ரீ சக்ரத்தின் ப்ரதிஷ்டையால் உக்ரமின்றி அருள்கிறாள்.

2) இங்கு சிவலிங்கத்தை ப்ரதிஷ்டைக்கு, மேற்குமுகமாக நிருவிவைத்தல் (ஸ்தாபித்தல்) உத்தமம் என்ற சிவாகமவசனப்படி, அருவுருவநிலையில் சாக்தலிங்கமான, சக்ரராஜமான, ஸ்ரீசக்ரமேருவிற்கும், மேற்குமுகமாய் ஆலயம் அமைந்து உள்ளது. வளர்கின்ற, உதிக்கின்ற செங்கதிர்போல், மேற்கு நோக்கி இருந்து அருள்கிறாள். இங்கு சைவலிங்கத்து ஸதாசிவனின் குடும்பினி (மனைவி) என்பதை உணர்த்திட அம்பா என்றும், சாக்த சமய பரதேவதை காளியே என்பதை உணர்த்துவதற்காக காளீ என்றும் பெயர் கொண்டு "காளிகாம்பாள்" என்று பெயர்பெறுகிறாள். இதனால் லிங்கத்தைப்போன்ற மேருசக்தியாய் மேற்கு நோக்குகிறாள்.

3) சாக்த தந்திரத்தில் பரதேவதைகளாகக் கூறுப்படுகிற தசமஹாவித்யைகளுக்குள் முதலாவதாக கூறப்படும் பரப்ரம்மஸ்ரூபிணியான காளீ அம்சமாகவும், அவற்றுள் சாந்தரூபியான புவனேஸ்வரீ மேற்கே உதித்தவளாதலால், இவளது வடிவிலேயே இங்கே மேற்குமுகமாய் அமைந்தது ஓர் சிறப்பாம்.

4) ஸ்ரீசக்ரத்தைப் தனியே பூசிப்பவர் அதனை பூசிக்கும் பொழுதில் தன்னையே நோக்கியவாறு, அச்சக்கரத்தினுடைய மையமுக்கோணத்தின் முனைஅமையுமாறுவைத்து, அதை பூசித்திட வேண்டும். அவ்வாறு பின்பற்றுகையில் தேவி மேற்கு அல்லது தெற்கு நோக்கியவளாவாள். அந்த ஸ்ரீசக்ரமே ஒரு ஆலயத்தில் அமையும் பொழுது பூஜகர் வடக்குமுகமாய் இருந்து அர்ச்சிக்க வேண்டியதாக, இங்கு அமைந்துள்ளது. இதனால் ஸ்ரீசக்ரபூஜையை அபிமுகமாக அமராமல், லிங்க பூசைபோலவே வடக்குநோக்கி அமர்ந்திருந்து

பூசித்திடுமாறு இங்கு அமைப்பை பெற்றுள்ளது. லிங்கமும், ஸ்ரீசக்ரமேருவும் அருவுருவநிலையில் உள்ள வடிவங்களாதலால், இதனால் உரிய பாவனையை செய்து, பின்நியாஸம்செய்து, பூசித்திடஇயலும். ஆனால் உருவநிலையில் ஸகளமாய் தேவியை பூசித்திடுகையில் அவளது வலதுகை பக்கம் அர்ச்சகர் இருந்து, பிற ஆலயங்களில் கிழக்கு அல்லது வடக்கி நோக்கியவராக பூசையை செய்திடுவார்கள். இங்கு இரண்டு வகை வடிவமும் இணைந்து, ஒரேகருவறையில், மேற்கு நோக்கி உள்ளதால் தேவிக்கு இடதுபுறம் நின்று, சிவலிங்கார்ச்சனையைப் போன்றே உருவத்தில்தேவிக்கு பூஜை செய்யப்படுவது சிறப்புஅம்சமாய் முறையாய் உள்ளது.

5) தசமகாவித்யைகளுள் காளீ வடக்குதிசையில் உதித்தவள் ஆதலால் தனித்த காளிகோயில் உக்ரமூர்திக்கு வடதிசையை நோக்கிஇருக்கும். உக்ரமூர்த்தியின் உக்கிரத்தை தனித்திட அதன் எதிரில் வீதியையோ, நீர்நிலையையோ, அல்லது சாந்தமூர்த்தியின் பிம்பப்ரதிஷ்டையையோ, ஆகமவிதிப்படி செய்திடுவர். இங்கு காளி சாந்தமூர்த்தியாய், நீருக்கு அதிபதியான வருணபகவானின் திசையான மேற்குநோக்கி, உஷ்ணத்தில் சிவந்த செந்தணலைப் போல, சிவப்பு நிறக்காளி கோபம்தணிந்து இங்கு காளி (கருப்பியாக), சியாமாவாக விளங்குகிறாள். "கிருஷ்ணவர்ணீ ப்ருஹத்ரூபீ" என்று அதர்வணவேதம் காளியைக் குறிப்பிட்டுத் துதிக்கிறது அறியத்தக்கது.

6) காளியின் திருவுருவத்தில் முகத்தில் உக்ரமோ, அல்லது அசுரன்தலையானது அவளுடைய ஒரு கையிலோ, அவள் காலடியிலோ அமைந்திருக்கும். தக்ஷிணகாளி ஒருத்தியே வரதமுத்திரையுடன் விளங்குபவள். இதனை உணர்த்துவதாக இங்கு தேவியின் திருவடியில் மூன்று அசுரர்களின் துண்டித்த தலைகளும், முன்கையில் வரதமுத்திரையும் அமைந்துள்ளது தனிசிறப்பாகும்.

7) தேவீஆலயத்தில் சாந்தமூர்த்திக்கு அதன் சன்னதியில் விருஷபம் (எருது) அமையும். இங்கு தேவீ காளியானபடியால் சாந்தமாய் உள்ளபோதும், எதிரில் சிம்மவாகனமும், உக்ரமான உருவில் துவாரசக்திகளும், இங்கு ஏவல் காவல் தெய்வங்களாக இவளது வலதுகைபக்கத்தில் பத்ரகாளியும், வீரபத்ரரும் இருப்பது இங்கு காளிமாதாவாக திகழ்வதையே உணர்த்துகிறது. இவ்விதம் சிறப்புமிக்க அமைப்புகளுடன் காளிகாம்பாள்கோயிலாக இது திகழ்கிறது.


சென்னை சூளை ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி

சாக்தபூஜா விதிமுறை

வேதங்கள், ஆகமங்கள், தந்திரசாஸ்திரங்கள், மந்த்ரசாஸ்திரங்கள், புராணங்கள், சிற்பசாஸ்திரங்கள் முதலான சமயத்து முதல்நூல்கள், மகிமைகளுடனும் வரலாறுகளுடனும் தேவியின் திருவுருவங்களை விளக்குகின்றன. இவற்றுள் தேவியின் திருநாமங்களும், திருமேனி வடிவங்களும், எண்ணிலா நாமரூபங்களாய் கூறப்படுகின்றன. பராசக்தியிடமிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக, அவளது அம்சமாகவே ஆதிசக்தி வெளிப்பட்டதாயும், இவ்வாறே அவளிடமிருந்து முறையே **இச்சாசக்தி** விருப்ப ஆற்றல், **ஞானசக்தி** மெய்ஞான ஆற்றல், **கிரியாசக்தி** செயலாற்றல் என்ற ஐவகை சக்திகளின் வெளிப்பாட்டை சைவாகம **வாதுளாகமம்** விளக்கி உள்ளது. பராசக்தியின் ஒரு கூறாகவே துர்கையும், சாமுண்டீஸ்வரியும், பத்ரகாளியும் கூறப்படுவர். தமிழில் இலக்கியங்கள் துர்கையை குறிப்பிடுகின்றன. சாக்தநெறியில் சக்தி வழிபாடு செல்வாக்கு பெற்ற நிலையில், காளிபூசையும், துர்கை அம்மன் பூசையும் சிறப்பாகப் பின்பற்றப்படுகிறது. காளீ மற்றும் துர்கை, மாரியம்மன், சப்தமாதாக்கள் முதலான கொற்றம்மிக்க தெய்வ வடிவங்கள் கிராமம், நகரம் இவற்றில் வெளிப்புறத்தில் எல்லைப்பகுதியில் திருகோயில்கள் அமைத்து வழிபடப்படுகின்றன. இவற்றில் வழிபாடு இருவகை நெறியில் நிகழ்வன. சாந்தமான பூஜாநெறியில், மதுமாம்ஸம் முதலியவைகளைவிலக்கி, மாற்றுவழியில் மகிழ்விப்பது சைவநெறி வழிபாடு. மற்றொன்று உக்ரமான பூஜாநெறியில் மதுமாம்ஸாதிகளுடன் உயிரினப்பலியுடன் உதிரத்துடன், ஆசார்யர் அந்தணர் அல்லாத பாரசைவர்களால் பூசாரிகளால் செய்யப்படுகிற, சாக்ததந்த்ரமார்க்கபூசை வழிபாட்டுமுறை ஆகும். அன்றாடம் செய்வது அல்லது தொடர்ந்து ஏதேனும் ஒருமுறையில் குறிப்பிட்ட கிழமை அல்லது திதிகளில் மட்டும் செய்வது காளியின் நித்யபூசைமுறை ஆகும். இதனை பாரசைவர்களான பூசாரிகளும் மற்றய உபாஸகர்களும் செய்திடத்தகுதியுடையோர். முதலில் செய்யப்படுவதான பிரதிஷ்டையையும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யத்தக்க சம்புரோக்ஷணமென்னும் கும்பாபிஷேகத்தையும், சிறப்புகால மாதம், திதி, நட்சத்திரம் இவற்றில் செய்யத்தக்க பலநாள் திருவிழாவான உத்ஸவத்தையும், ஆதிசைவகுலத்து உதித்த ஆசார்யர்களைக் கொண்டு, செய்துகொள்வது, நைமித்திகபூசை எனப்படும். வேண்டுதலின் பேரில் விருப்பகாலத்தில் விரும்பும் வகையில் செய்யத்தக்க காம்யபூசைகளை **பூஜாகாரி** எனும் **பூசாரிகளைக்** கொண்டு செய்ய வேண்டுமெனவும் சாக்ததந்த்ரமாகிய நூல்கள் கூறுகின்றன. இத்தெய்வங்களுக்கு குருதிப்படையலுடன் செய்யப்படும் கௌலமார்க்க பூஜை விருப்பமான

பூசையாகும். உக்ரவடிவதெய்வங்களை அமாவாசை, தேய்பிறை அஷ்டமி, சதுர்தசி ஆகியதிதிகளிலும், சாந்தவடிவதெய்வங்களையும், உக்ரவடிவதெய்வங்களையும், ப்ரதிமாதபௌர்ணமி திதியிலும், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அனைத்து தேவியர்களையும் பூசை செய்வது சிறப்புப்பயனைத் தருவது ஆகும்.

காளியின் வழிபாட்டுமுறைகள்.

ஒரு தெய்வத்தை உபாசனை செய்வது என்பது, அந்த தெய்வத்தைப் பற்றிய பஞ்சாங்க செய்திகளை அறிந்து, அவசியமாய் பின்பற்றுதலாகும். அவை முறையே 1) **படலம்** = தெய்வத்தைப் பற்றிய செய்திகளை அறிதல் 2) **பத்ததி** = யந்திர பிம்பாதிகளின் பூசை முறைகளை அறிதல் 3) **வர்ம** அல்லது **கவசம்** அந்த தெய்வத்தின் பாதுகாப்புத்துதியால் தற்காப்புபெறுதல், 4) **நாமஸாஹஸ்ரகம்** = தெய்வத்தின் அரியபெயர்களையும், 108, 300, 1008 திருநாமாக்களையும் அறிதல் 5) **ஸ்தோத்ராணி** =தெய்வத்தின், இதயஸ்தவம், மஹிமாஸாரஸ்தவம் மற்றும் பலவகை உயர்தர துதிப்பாடல்களை அறிந்து, துதித்திடுதல் ஆகியவை **'பஞ்சாங்கம்'**என்னும் ஐம்பெரும்உறுப்புகள். இவ்வைந்தையும் செய்துவருவது உபாசனை ஆகும். வழிபடப்போகும் தெய்வத்தினுடையமூலமந்திர ஒலியின் உச்சரிப்புப்பயிற்சியை முடித்த பின்பு – பூஜைக்கான யந்திரம் அல்லது பிம்பம் இவைகளை முதலில் முறையே பஞ்சகவ்யத்தால் சுத்திசெய்து, புனிதப்படுத்தி, அத்தேவதையின் மந்திரங்களை தமதுஉடலில் பதித்து, தாமும் அத்தெய்வகுணத்தகுதி மற்றும் உருவஒற்றுமை, தத்வபாவனையுடன், தெய்வத்தின் இந்த பஞ் சாங்கத்தையும் முறையே பின்பற்றி உரியகாலம் வரையில் செய்து, மந்திரசித்தியைப் பெறுவது வழிமுறையாகும். இதனை –

படலம் பத்ததீ வர்ம ததா நாம ஸஹஸ்ரகம்.
ஸ்தோத்ராணி சேதி பஞ்சாங்கம் தேவதோபாஸனே ஸ்மிருதம்.
(மந்த்ரசாஸ்த்ரம்)

இம்முறைக்கு காரணம் யாது?எனில்? இவை ஐந்துஉறுப்புகளும் சேர்ந்தாலே, இஷ்டதேவதையும், அதன்பூசையும் முழுமைபெறும். இவற்றில் கவசம் உடலாகவும், படலம் தலையாகவும், பத்ததி கைகளாகவும், ஸஹஸ்ரநாமதுதி தேவியின் திருமுகமாகவும், தோத்திரங்கள் தேவதையின் திருவடிகளாகவும், விளங்குவதால் இவ்வைந்தையும் கடைபிடித்தால் மட்டுமே அத்தெய்வத்தினுடைய அருள்கிட்டுவது உறுதியாகும். எனவேதான் தேவர்களும் சிவனை ஆயிரம் பெயர்களை கூறி போற்றுவதாக சமயாசாரியரான அப்பர்பெருமான் தேவாரத்தில் **"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை"** என்றும், **"போற்றாதே**

ஆற்றநாள் போக்கினேனே" என வருந்தியும், "இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று கருதியும் சைவபக்தர்கள் போற்றிப் பயனடைந்துள்ளனர். அபிராமிபட்டரும் தேவியை "சேர்திருநாமங்கள் செப்புவரே" என்றும், "வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்" என்றும் அபிராமிஅந்தாதியில் குறிப்பிடுகிறார்.

காளிகோயில் பூசைமுறை

பரப்ரம்மஸ்வரூபிணியான பகவதியான காளியை, கிராமம், நகரம், புரம், பட்டணம், ராஜதானி (தலைநகர்) கங்காதீரம், நதிக்கரை, பர்வதம் (மலைப்பகுதி) சுபஸ்தலம் (க்ஷேத்ரம்), மயானம் (சுடுகாடு), தேவாலயம் இவற்றில், ஏகபேரவிதானமாகிய, தனி ஒருசிலையாகவோ, பகுபேரவிதானமாகிய, பலபரிவார தெய்வங்களுடன் கூடியதாகவோ பலவகை உருவச்சிலையுடன்கூடியுள்ளதாகவோ, காளீசிலையை ஸ்தாபித்து, அதில் தேவிகாளியை பிரதிஷ்டைசெய்து பூசித்திடவேண்டும் என்று, **சாக்தயாமளஸங்கிரஹம்** என்ற நூலின் **கிரியாதீபிகை** கூறுகிறது. சிவாலயத்தில், பரிவாரஸ்தாபன விதிமுறையில் காளியையும், துர்கையையும், ஸப்தமாதர்களையும், சிவலிங்கத்தின், சுற்றுப்பகுதியில் ஆலய பரிவாரமாக ஸ்தாபித்து, பூசித்திடவேண்டுமென்று சைவாகமங்கள் கூறியுள்ளன.

சாக்தாகமங்களான ஒன்பது யாமளநூல்கள், **ஸித்தாந்தமிச்ரதந்த்ரம்** என்றும், இவற்றாலேயே சிறப்பாக ஸப்தமாதாக்களுக்கும், காளீ முதலானோருக்கும் ஸ்தாபனம், பூஜை, ஹோமம், ஸ்நபனம், உத்ஸவம், சாந்தி முதலியவை செய்யப்படவேண்டும் என்று சைவாகமத்தின்**சுப்ரபேதாகமம்** கூறியுள்ளது. சிவாலயத்தின் தென்புறத்தில் உக்ரவடிவில், ரௌத்ரியாக சாமுண்டீச்வரியையும், சப்தமாதாக்களை, வீரபத்ரர் மற்றும் விக்னேச்வரர்ஆகிய இருவருடனும் கூடியவர்களாக வடக்கு நோக்கியவாறு ஸ்தாபித்து, நித்யபூஜையை செய்திடுமாறும், இவ்வாறு பரிவாரமாக அமைந்துள்ளபோது, தேவீ காளிக்கு உத்ஸவத்தை சிவாலயத்தில் செய்யக்கூடாது என்றும், காளிக்கு தனிக்கோயிலாக இருக்குமிடத்தில்மட்டுமே காளிக்கு உத்ஸவத்தைச் செய்யவேண்டும் என்றும், சைவாகமத்தில் **அம்சுமதாகமம்** கூறிஉள்ளது. இதனையே காரணாகமம்.

ப்ராஸாத கோபுரம் சைவ ப்ராகார வ்யாபினீ யதி.
ப்ரத்யேக மாலயம் சைவ ப்ரதி த்வஜ மிஹோச்யதே.
ப்ரத்யேக மாலயம் ப்ரோக்தம் காள்யுத்ஸவ மதா ஆசரேத்.
அந்தே பசுபலிம் க்ருத்வா பாரசைவேண காரயேத். (காரணாகமம்)

காளிக்கு சிறப்பான, தனித்த பரிவாரத்துடனும், கோபுர பிரகாரங்களுடனும் அமைந்துள்ள கோயிலாக உள்ளவிடத்தில், ப்ராமணர்களைக் கொண்டு பூசித்தல் சுபதம் உத்தமம் என்கிறது. மேலும் காளிகோயிலில், ப்ரதிஷ்டை, உத்ஸவம், முதலிய நைமித்திக கிரியைகளை, ஆதிசைவ சிவாசார்யரைக்கொண்டே செய்விக்க வேண்டும், நித்யபூசையை, சிறப்பாக தீட்சைபெற்ற பாரசைவர்களாகிய பூசாரிகளைக் கொண்டு செய்விக்கவேண்டும், என்றும் சைவாகமகாரணாகமம் தெரிவிக்கிறது. உமாயாமளம் என்ற சாக்தநூலில், நித்யபூஜையை காளிக்கு ப்ராமணர் செய்வது உயர்தர சுகந்தரும் என்றும், பாரசைவர்களான பூசாரிகளால் செய்யப்படுவது நடுத்தரமான பலனைத்தருவதாக, இது கௌணம் என்றும், ஸாமான்யமக்களால் செய்யப்படுவது கடைநிலைச் செயலென்றும் கூறப்பட்டுள்ளது. தனித்தகோயிலில் ப்ராமணர் பூசிப்பது சுபம் என்கிறது.

ப்ராம்மணா ராதனம் முக்யம், பாரசைவம் து கௌணவம்.
ஸாமான்யம் சௌண்டநீயம் ச யாமளாசார்ய கர்மவத்.
ஸ்வதந்த்ராலயே து கர்தவ்யம் ப்ராம்மணா ஆராதனம் சுபம்.

(உமாயாமளம்)

காளீபூசையின் விசேஷபயன்

காளியின் திருவடியைப் பூசிப்பதனால், நீண்டஆயுள், ஆரோக்யம், செல்வம், வல்லமை, புஷ்டி (செழிப்பு), பெரும்புகழ், புலமை, சுகபோக அனுபவம், முக்தி எனும் தேவீஸாயுஜ்யமான வீடுபேறு, முதலிய அரியபயன்கள் கிடைக்கும். எவன் காளியை பூசிக்கிறானோ அவனே உலகில் அருஞ்செயலாற்றிய ஸாதனையாளன், அவனே குலத்தை உயர்த்திய போற்றத்தக்க மகனாவான். அவனது தாயே கொடுத்து வைத்த பெரும்பாக்யவதி, எவனால் காளீ நன்கு பூசிக்கப்பட்டாளோ, அவன் ஜகன்மாதாவின் அருளால் ப்ரம்மஞானத்தை அடைகிறான் என்று சாக்தாகமமான காளீதந்த்ரம் கூறுகிறது.

ஆயுராரோக்ய மைச்வர்யம் பலம் புஷ்டிம் மஹத் யச:.
கவித்வம் புக்தி முக்தீ ச காளிகா பத பூஜநாத்.
ஸ ஏவ சுக்ருதீ லோகே ஸ ஏவ குலநந்தன:.
தன்யா ச ஜனனீ தஸ்ய யேந தேவீ ஸமர்ச்சிதா.
ப்ரம்மஞானம் அவாப்னோதி ஸ்ரீமாதா ஆத்யா: ப்ரஸாதத:.

(காளிதந்த்ரம்)

மேலும் காளியைப்பூசிப்பதே, சிவன் விஷ்ணு முதலான அனைத்து தெய்வங்களையும் பூசித்ததாக ஆகும். ஸர்வதேவதா ஸ்வரூபிணியாக

காளீவிளங்குவதால், இவள் ஒருத்தியை வழிபடுவதனாலேயே பிரம்மா, விஷ்ணு, சிவன், கௌரீ, லக்ஷ்மீ, கணபதி, சூரியன் இவர்கள் பூசிக்கப்பட்டவர்களாகின்றனர் என்று ப்ரபல மந்திரசாஸ்திரம் கூறுகிறது. மேலும் புண்யஜன்மவசத்தால், காளியை பூசிப்பதனால் அச்வமேதம் முதலிய பலஉயர்ந்தயாகங்களின் பயனையும், தவம், தானம், புண்யக்ஷேத்ர தீர்த்தயாத்திரை முதலானவற்றின் பயனையும் பெறுகிறான் என்று காளீரஹஸ்யம் எனும் சாக்தநூல் பூசைப்பயனைக்கூறுகிறது.

ததா அச்வமேத ப்ரமுகைர் யாரிஷ்ட்வா சுச ஜன்மனா.
தத்தம் தானம் தபஸ் தப்தம் பூஜயேத் யஸ்து காளிகாம்.
பிரம்மா விஷ்ணு சிவோ கௌரீ லக்ஷ்மீர் கணபதீ ரவி:.
பூஜிதாஸ் ஸகலா: தேவா: ய: காளீம் பூஜயேத் ஸதா. (காளீரஹஸ்யம்)

காளீபூசையில் அரிய பொருட்கள்

காளிபூஜையில், நாம்விரும்பும் சிறப்புப்பயனைப் பெற்றிட, உகந்த, உரிய பொருளை, தேவிக்கு அர்ப்பணித்தல் முறையாகும். விருப்பப்பயனுக்கேற்ப வழிபாட்டுசெய்முறைகளும் சிறப்புப் பொருள்களும் வேறுபடும். அதாவது வில்வஇலையினாலும், சிகப்பு அரளிப்பூவினாலும் பூசித்தால் காளி வரமருள்பவளாவாள் என்கிறது.

பில்வபத்ர ஸஹஸ்ராணி கரவீராணி வை ததா.
ப்ரதி நாம்நா பூஜயேத் ஹி தேந காளீ வரப்ரதா. (காளிரஹஸ்யம்)

பூசையால் ஒருவர் விரும்பும்பயனை அடைவதற்கு தெயவ்தற்திற்குஏற்ப மந்திரம், தியானம், ஜபவிதி, வழிபாட்டுமுறை, உரியபொருள், இவை வேறுபடும். இவற்றை தனது (ஒரு) குருவிடமிருந்துதான் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். தாமே அறிந்து செயல்படுதல் துயரம் அளித்திடும். எனவே காளிபூஜைக்கு குருவருள் துணை அவசியம். எடுத்துக்காட்டாகவும், பொதுவாகவும், காளீ பூஜையில் பொருள்தியாகத்தின் பயன்களாக, சிவப்புமலரால் பூசித்திட உலகில் விரும்பியது வசமாகும். செந்தாமரைமலரால் அர்ச்சித்தால் அவரது எதிரிகளும் நண்பர்களாகிவிடுவர். குபேரனை மிஞ்சும் அளவுக்கு செல்வம் பெறுவர். வில்வஇலைகளால் அர்சித்திட அரசபோகத்தைப் பெறுவர், என்றும், காளியை எருமை, ஆடு, ஒட்டகம் முதலியவற்றின் மாம்சாதிகளால் பலியிட்டு மகிழ்வித்தால் அவருக்கு விரைவிலேயே அனைத்து ஸித்திகளும் கைகூடுமென காளிரஹஸ்யம் கூறுகிறது. காளி பூஜைக்குமட்டில் மாம்ஸம் அல்லது ரத்தத்துடன் அன்னத்தை, அல்லது உயிரினத்தின் உயிர்ப்பலியினை பூசைமுடிவில் அளித்தால்மட்டுமே

அருள்தரு ஸ்ரீவெக்காளியம்மன் உறையூர்

அருள்தரு ஸ்ரீபத்திரகாளியம்மன் சிவகாசி

அருள்தரு மாரியம்மன் சிதம்பரம் கீழத்தெரு

அருள்தரு அங்காளபரமேச்வரி வலையப்பட்டி

பயன்கைகூடும். பலி எனும் கிரியைப்பயனையும், வெற்றியையும், வலிமையையும், தரவல்லது. சௌம்யவழிபூசையாயினும் உரிய மாற்றுப்பொருள்களைக் கொண்டாவது அதனை மாமிசமாகக்கருதி காளிக்கு பலிஅளித்தல் பூஜைமுறை என்கிறதுநூல்.

ரக்தாம்போஜைர் பவேன் மைத்ரீ தனைர் ஜயதி வித்தபம்.
பில்வபத்ரைத் பவேத் ராஜ்யம், ரக்தபுஷ்பைர் வசீகிருதி:.
அஸ்ருஜா மஹிஷாதீனாம் காளிகாம் யஸ்து தர்பயேத்.
தஸ்ய ஸ்யு ரசிராதேவ கரஸ்தாஸ் ஸர்வஸித்தய:. (காளிரஹஸ்யம்)

சாக்த மந்திர மஹிமை

தெய்வங்களின் அருளைப் பெறவும். நம்மைக் காத்துக் கொள்ளவும், தெய்வங்களை வெளிப்படுத்தவும், மகிழ்விக்கவும், நிலைபெறச் செய்யவும், பயன்பெறவும், தெய்வங்களின் மந்திரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன. மந்திரத்தின் பொருளுணர்ந்து, மனதில் எண்ணுபவனை இது காப்பதனால், இது மந்திரம் என்று பெயர் பெறுகின்றது. ஒருவரை அழைக்கவும், செயலாற்றச் செய்யவும் அவரது பெயர் தேவையாகிறது. அவ்வாறே பெயரைக் கூறி அழைத்தஉடனே அப்பெயருள்ளவர் நம் அருகில் வருவதுபோலவே, தெய்வங்களும் மந்திர உச்சரிப்பால் வெளிப்பட்டு, அருள்புரிந்து, பயன்தருவர். எந்ததேவீயானவள், ப்ரளயகாலத்தில், அசையாததான ஸ்தாவரம், அசைவதான ஜங்கமம் என்று இருவகையாய் விளங்குகிற ஸகலப் பிரும்மாண்டங்களையும், ஸம்ஹரிக்கிறாளோ, அக்காளியை வணங்குகிறேன் என்று கூறி, பொதுவான காளியின் துதிமந்திரத்தால் காளியை யாவரும் வணங்கலாம்.

காளீ காலயதே ஸர்வம் ப்ரம்மாண்டம் ஸ சராசரம்.
கல்பாந்த ஸமயே யா தாம் காளிகாம் ப்ரணமாம்யஹம். (காளீதுதி)

பராசக்தியே **சப்தபிரம்மமயீ** என்றும், பராத்பரமயீ என்றும் போற்றப்படுபவளாக ஓசைவடிவாய், சூக்ஷ்மமாயும், ஒளிவடிவாய் ஸ்தூலமாயும், எழுத்தொலியாகவும், சொல்லாகவும், பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்ற நான்கு ஒலிவடிவங்களாயும் விளங்குகிறாள். நம் உடலில் ஓசையானது நால்வகையாக உள்ளதை, வேதம் "சத்வாரி வாக் பரிமிதா பதானி. தானி விதுர் ப்ராம்மணா மநீஷிண:" என்றுகூறுகிறது. பரபிந்துவிலிருந்து 50 எழுத்துக்கள் முதலில் தோன்றின. பின் அவை ஒன்பதுபகுதிகளாகி, நவகண்ட மாத்ருகாக்ஷரங்களாகின்றன, இவற்றின் சக்திகளாக, 50 மாத்ருகாதேவிகள் சைவாகமத்திலும், சாக்தாகமத்திலும் விளக்கிக் கூறப்பட்டுள்ளனர் சிவனார் கூறிய மந்திரமிது.

மந்த்ராக்ஷர மயீம் தேவீம் மாத்ருகா ரூப தாரிணீம்.
நவதுர்காத்மிகாம் ஸாக்ஷாத் கன்யாம் ஆவாஹயாம்யஹம்.
(சாக்ததந்த்ரம்)

எல்லாமந்திரங்களுக்கும் மூலமாய், ஆதாரமாய் விளங்குவன, 50 எழுத்துக்களே. எனவேதான் எல்லாதெய்வங்களின் வழிபாட்டிலும், தவறாமல் "மாத்ருகாக்ஷரநியாஸம்" இடம் பெறுகிறது. படைக்கும் சக்தியை, யோகினிகளாக, சோணிதசக்திகளாக குறுதியாக தனக்குள்ளே பெற்றுள்ளவர்களான, கன்னிப்பெண்களின் (குமரிப்பெண்) வடிவில், துர்கையும், காளியும் பூஜிக்கப்படுவதால், மகிழ்ந்து அருள்வார்கள் என்கின்றன பல சாக்தாகம நூல்கள். எனவே கன்னிபூசை, குமாரிபூசை இவை தேவீபூசையில் தவறாமல் செய்யப்படவேண்டியதாகும். கட்டாயமாக விதித்துள்ளன.

சக்திமந்திரவகைகள்

யஸ்யாப் பரதரம் நாஸ்தி ஸைஷா துர்கா ப்ரகீர்த்திதா என்கிறது தேவீஉபநிஷதம். நஹிகாளிஸமா வித்யா என்ற சாக்தாகமக்கொள்கை முடிவாலும், துர்கையும், காளியும் ஒரே பகவதி ஆவர். இவர்களுக்கு சிறப்பாக 9 என்ற எண்ணிலும், 81 என்ற எண்ணிலும், சிறப்பு பதம், முக்கோணம், இவற்றுடன் யந்திரமந்திர நாமாவளிகள் உள்ளன. துர்கையை 'கன்யகுமாரி' என்று துர்காசூக்தத்தில் யஜுர்வேதம் குறிப்பிடுகிறது. மதங்கமுனிவர் யோகப்பயனாய் சிவசக்தியை மகளாக அடைந்து, வளர்த்ததனால், மகாகவிகாளிதாஸரும் காளியை மதங்கமுனிகன்னியே என்பார். காளியே இளமையாக, சாந்தமானவளாக, **சியாமளா** என்றும், **மாதங்கீ** என்றும் பெயர் பெறுகிறாள். நவாக்ஷரமந்திரத்தின் நாயகியாக **சாமுண்டீஸ்வரியே** விளங்குகிறாள். துர்கையும் காளியும் உலகத்திற்கு பயத்தைப் போக்குவதால் இவர்களின் மந்திரத்தில் சிறப்பாக 'விச்சே' என்றசொல் இடம்பெறுகிறது. விச்சே என்றால் அபயமளிப்பவள் என்பது பொருள். சிவபஞ்சாக்ஷரத்தைப் போன்று **சாமுண்டீ** என்று நவாக்ஷரீமந்திரத்தில் மட்டுமே தேவிபராசக்தியான **சாமுண்டா** எனப்படும் காளியின்பெயர் உள்ளதுஎன்பது, தனிச்சிறப்பு ஆகும். **பஞ்சதசீ, ஷோடசீ,** முதலிய மற்றய மந்திரங்கள் பலப்பல எண்ணிக்கையில், சிறப்புமிக்க கூட்டுஎழுத்துக்கள் சக்திகளாய் விளங்குவன. சக்திகளின் மந்திரத்திற்கு **வித்யா** என்று பெயர். சாக்தமந்திரபேதமானது, அவற்றின் முதல்எழுத்தைக் கொண்டு, ஏழுவகை என்று, மந்திரசாத்திரங்கள் கூறியுள்ளன. அவை முறையே கூறப்படுகின்றன.

1) காதிவித்யா = கஎன்றஎழுத்தில் துவங்குவது காதி எனப்படும்.

2) ஹாதிவித்யா = ஹஎன்றஎழுத்தில் துவங்குவது ஹாதி எனப்படும்.

3) குரோதாதிவித்யா குரோதபீஜம்எனப்படுகிற, ஹூம் என்ற எழுத்தில் துவங்குவதாகும்.

4) வாகாதிவித்யா = வாக்பவபீஜம் எனப்படுகிற ச்ரீம் என்ற எழுத்தில் துவங்குவனவாகும்.

5) நாதிவித்யா = நம: என்றசொல்லில் துவங்குவனாய் விளங்குபவைகள்.

6) தாதிவித்யா = மூன்றாவது ஒலியுடனான த என்றஎழுத்தில் துவங்குவனவாகும்.

7) ப்ரணவாதி = ஓம்என்ற பிரணவத்தில் துவங்கும் மந்திரங்கள் ஆகும். மந்திரங்களில், ஒரேஎழுத்து மந்திரங்களாக இருப்பவை, அந்த தேவதையை அழைப்பவை. ஒரு மரத்தை ஒரு விதையே வெளிப்படுத்துவது போல, ஒரு தெய்வத்தை வெளிப்படுத்துவதாக விளங்குவதால் அந்த எழுத்து 'பீஜாக்ஷரம்' எனப்படுகிறது. அதாவது விதைபோன்ற வித்தெழுத்து ஆகும். பொதுவாக தெய்வங்களின் பெயர்களில் உள்ள முதல்எழுத்தே அந்த தெய்வத்தின் பீஜாக்ஷரமாகும். சண்டீநவாக்ஷரியில் காளியின் பீஜாக்ஷரமாக **"க்லீம்"** விளங்குகிறது. சாக்தவித்யாதந்த்ரமாகிய மந்திரசாஸ்திரங்களில், காளீதேவிக்கு முதலாவதான ககாரத்தில் **"க்ரீம்"** பீஜாக்ஷரமாக விளங்குகிறது. ஐம் என்பது **வாக்பவபீஜம்** என்றபெயரில் நீலசரஸ்வதிக்கு உரியதானாலும், இதுகாளியைக் குறிப்பிடும், ஹ்ரீம் என்பது மஹாமாயாபீஜம் என்றாலும் பராசக்தி சண்டிகையைக் குறிப்பதானாலும் பரதேவதையான மஹாமாயையைக் குறிப்பிடவும் இது இடம் பெறும். **ச்ரீம்** என்பது **லக்ஷ்மீபீஜம்** என்றாலும் உக்ரசக்திகளுக்கும், அரிய வல்லமைகளுக்கும் இது பயன்படும். **ஐம் ஹ்ரீம் ச்ரீம்** என்ற இவைமூன்றும்சேர்ந்தது, **சாக்தப்ரணவம்** எனப்படும். **ஐம், ஹ்ரீம், ச்ரீம், க்லீம், ஸௌ:** என்னும் இவைஐந்தும் **விமர்சப்ரணவம்** எனப்படும். சாந்தரூபிணியான புவனேஸ்வரீ, ஸ்ரீவித்யா, சிவசக்தி இவர்களின் பீஜாக்ஷரத்துடன் சிறப்பானதொரு **நவாக்ஷரீ** மஹாமந்திரமானது ஒன்பது சைவாகமங்களின் ஸாரமாகத்திகழுகிற. திருமூலர் அருளிய **திருமந்திரத்தில்** கூறப்பட்டு உள்ளது. இது நவாக்ஷரீ என்றுபெயர் பெறும். இவற்றை, தேவிக்கேஉரிய, அக்னிகலைகளான பத்து கோடுகளால் உருவாகிற **தசசூத்திர பரமேசீ வாஸ்துபத** வடிவில், சமசதுரத்தில், எண்பத்தொருகட்டத்தில், பகுத்துப், பதிக்கும் முறையில்,

யந்திரவடிவில் கூறியுள்ளார். திருமூலரின் கூற்றுப்படி ஒன்பது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒன்பது எழுத்தாகி ஒன்பதாகப் பெருகி 9x9=81 எழுத்தாகி அமைந்து விளங்குகின்றன. அவை முறையே 1) க்லீம் 2) ச்ரீம் 3) ஹ்ரீம் 4) ஐம் 5) கௌம் 6) க்ரீம் 7) ஹௌம் 8) ஔம் 9) ஸௌம் என்பவை நவாக்ஷரங்கள் ஆகும். இதில் தசமஹாவித்யாவில் முதலாவதான தக்ஷிணகாளீ பீஜமும், முதலாவதாக மகாகாளியின் பீஜமும், இடம்பெற்று உள்ளதைஉற்றுநோக்கி, இதனை பராசக்தியான காளியின்யந்திரம் எனக்கொள்ளலாம். இதுவே சாமுண்டீஸ்வரிக்கும் ஏற்றதாக இது ஒப்புயர்வற்ற, மஹோன்னதமான சக்திபடைத்த மந்திரயந்திர அமைப்புமுறையாகும். இம்மந்திரத்திற்கானசான்று, இது.

நவாக்கரி சக்கரம் நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரியாக
நவாக்கரி எண்பத் தொரு வகையாக
நவாக்கரி யக்லீம் ஸௌ முதலீறே
(திருமந்திரம் 1294)

காளீஉபாஸனா மார்க்கம்

காளியை உபாஸித்து, மும்மூர்த்திகள் முதலான பல தேவர்களும், பல ரிஷிகளும், பல மன்னர்களும், இஷ்டஸித்திகளைப் பெற்றனர் என்பதை இதிஹாஸ புராணங்கள் நன்கு விளக்கி உள்ளன. ஞானமே வடிவான காளியின் அருளால், மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தோரும், மிகவும் உயர்ந்த நிலையில், மன்னனாகவும், மகரிஷிகளாகவும், மகாகவிகளாகவும், வீரமும், விவேகஞானமும் பெற்று உள்ளர். சாக்த நூல்கள் காளியை காரணமேதுமின்றியே கருணை புரிபவளாகவும், ஒப்பற்ற பயனளிப்பவளாகவும் கூறுகின்றன. இதனால் தேவி அவ்யாஜ கருணாமூர்த்தி என்று கூறப்படுகிறாள். இவளிடம் வந்தே சரணம் புகுவோர், வானுலகையும், மண்ணுலகையும் ஆள்வார்கள். எவனொருவன் தனக்கு மந்திரத்தை உபதேசித்த குருநாதர் தான்உபாசிக்கும் தேவதை, தான் ஜபித்து ஸாதித்திடும் மூலமந்திரம் ஆகிய இம்மூன்றையும் வேறுபாடே இல்லாதவாறு, மூன்றிலும் மற்றதையும், ஒன்றில் ஒன்றை அபேதமாகக் கருதியும், ஆராதிக்கிறானோ அவனே சாக்தனாகிறான். அவனே சைவனாயும், வைஷ்ணவனாயும், ஸௌரனாயும், பூர்ணமான தீக்ஷிதனாகவும் ஆகிறான். இத்தகுதி இல்லாதவன் மந்திரத்தைப் பெறுவதும், அவன் பயிற்சிசெய்வதும், பயனற்றதாகி பயன் கைகூடுதலை தடைசெய்யும், என்றுசாக்த தந்த்ரநூலில் சிவபெருமானார் கூறியிருக்கிறார். அச்சான்று இதுவே.

குருர் தைவத மந்த்ராணாம் மஹேசஸ் யாபி பார்வதி.
அபேதேந ஸ்மரேன் மந்த்ரம் ஸ சிவஸ் ஸ கணாதிப:.
யோ மந்த்ரம் பாவயேன் மந்த்ரீ ஸ சிவோ நாத்ர சம்சய:.
ஸ சாக்தோ வைஷ்ணவஸ் ஸௌர: ஸஏவ பூர்ணதீக்ஷித:.
அயோக்யாய ந தாதவ்யம் ஸித்தி ரேவப் ப்ர ஜாயதே.

இவ்வாறு மந்த்ரசாஸ்திரத்தில் உண்மையான ரகசியத்தை சிவன் பார்வதி தேவிக்கு கூறுகிறார். ஆதலால், நாம் யாவரும் ஸத்குருவைத்தேடித், தேர்ந்தெடுத்து, அவரது அடிபணிந்து, அவரையே இஷ்டதெய்வமாகக், கொண்டு, ஜங்கமமூர்த்தியாக, அதாவது அவரை நடமாடும்தெய்வமாக, உண்மையாகநம்பி, உபதேசம்பெற்று, அதற்கேற்ப ஆசாரநெறிமுறைகளைப் பின்பற்றி, அத்தெய்வத்தின் மந்திர பஞ்சாங்கங்களையும், மந்த்ர புரச்சரண விதிமுறைகளையும், முறையே செய்துமுடித்தால் மட்டுமே, மந்திரஸித்தியானது உண்டாகும். இவ்விதம் மந்திரஸித்தி ஏற்பட்டதை பலஅறிகுறிகளால் அறிந்து கொண்டபின்பு, விரும்பியபயனைப் பெறவும், பெறச் செய்யவும், ஸாதகன் ஈடுபடவேண்டும் என்று மந்திரசாஸ்திரங்கள் வலியுறுத்திக்கூறியுள்ளன.

ஒன்றையேபிடி, உறுதியாகப் பிடி என்றவாறு, தேவியின் திருவடியை உறுதியாக நம்பிப் பற்றி, வழிபட்டால் அவளருளால் வீடுபேற்றைப் பெறஇயலும். மெய்யே உன் பொன்னடிகள் கண்டிங்கு வீடுற்றேன் என்கிறார் சைவசமயத்து மணிவாசகா சாரியர். துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே என்று துர்கா ஸூக்தமும், தாம் பத்மினீம் சரணம் அஹம் ப்ரபத்யே என்று லக்ஷ்மீ ஸ்ரீஸூக்தமும் தேவியை சரணமென்று அடையவேண்டும் என்பதைக்கூறி நமக்கு வேதங்கள் உபதேசிக்கின்றன.

பிறவிப்பயன்தருவது பூஜை

வந்தே வந்தாரு மந்தார மிந்திரா நந்த கந்தளம்.
அமந்தாநந்த ஸந்தோஹ பந்துரம் ஸிந்துராநநம்.

நமக்கு இந்த உடல் கிடைத்தது கடவுளை வணங்கி முக்தியின்பத்தைப் பெறுதற்பொருட்டேயாகும். நன்மக்கள் இளமைக்காலத்தே தக்க ஆசாரியர் ஒருவரை அடைந்து தீக்ஷைபெற்று சமய அனுஷ்டானங்களைச் செய்து கொண்டு வருவதோடு உரியகாலத்தில் விசேஷதீட்சைபெற்று பூசையை தினமும் செய்து வருதல் பிறவிப்பயனைத் தருவதாகும். மக்கள் தொண்டாற்றும் சரியைவான்கள் முதல் ஞானவான்கள் வரை எல்லா மக்களுக்கும் விக்ரஹவழிபாடு இன்றியமையாததே. தெய்வச்சிலைகளில் தெய்வத்தை எழுந்தருள வேண்டுமென அன்புடன் யாசித்து, அலையாது அழுந்த நிலைபெறல் **ஸ்தாபனம்** என்பதாக அறிந்து வீட்டுவழிபாட்டுச்சிலையிலும் செய்யத்தக்கதாகிறது. ஒருஇலக்கு உருவத்தில், கடவுள் சக்தியை அங்கே நிலைநிறுத்தி வழிபடுவோர் அதிலிருந்து பயன் பெறும்படி செய்துள்ளார்கள்.

பசுவின் உடலெங்கும் பரவியிருக்கும் பாலானது அதன்மடிவழியாகச் சுரப்பதுபோல பரந்து கிடக்கும் ஆண்டவனது அருள்விக்ரஹவழியாக நமக்கு கிடைக்கிறது. கடவுள் பாலில் நெய்போல் எங்கும் நிறைந்திருப்பினும் பூஜாவிக்ரகங்களில் தயிரில் நெய்போலவும், மலரில் மணத்தைப்போலவும், எள்ளில் எண்ணைபோலவும், இரும்பில் வல்லமைபோலவும் நெருப்பில் சூடுபோலவும் மறைந்து நிறைந்து ஸத்தியமாக விளங்குகிறார் என்பதை உணர்ந்து உள்ளன்போடு நன்நம்பிக்கையோடு மட்டுமே, பூசையைச்செய்திடவேண்டும், விளக்குச்சுடரில் தீயுமிருக்கிறது சூடுமிருக்கிறது. தீயிலிருந்து சூட்டினையோ சூட்டிலிருந்து தீயினையோ பிரிக்கமுடியாதபடி அவை ஒன்று சேர்ந்திருக்கின்றன. அதுபோல ஆண்டவனிடமிருந்து சக்தியையோ சக்தியினிடமிருந்து ஆண்டவனையோ பிரிக்கமுடியாது. அருட்சக்தியே பெண்வடிவம் பெற்று அருள்புரிகிறது.

இறைவன் தன் அருளையே பெண்வடிவமாய்க்கொண்டு போகியாய்த் தோன்றிஉயிர்கள் அனைத்தையும் சுகபோகத்தை அனுபவிக்கச்செய்கிறான். அவன் அம்மைஅப்பனாக இருந்து உலகைப்படைத்ததனாலேயே உலகத்து உயிரினங்களனைத்தும் அம்மை அப்பராயிருந்து மக்கட்பேறடைந்து வாழுகின்றன. இறைவன் அம்மையப்பராயிருந்து உலகசிருஷ்டியை செய்யாது போனால் நாமும் அம்மையப்பராயிருந்து உலகமக்கள் விருத்திசெய்வது இயலாது. ஆனால் ஆண்டவன் போகரூபத்தோடு

யோகரூபமும், வேகரூபமும், அல்லது கோரரூபமும் உடையவன். எனவே உலகை துஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்டாநுக்ரஹம் செய்கிறார். அரூபத்தில் சிவத்துக்கு பராசக்தியும் நாதத்துக்கு விந்துவும் ஆகஇருவகையாகவும், உருவத்தில் மகேசனுக்கு மஹேசையாகவும், ருத்திரனுக்கு உமையாகவும், மாலுக்குத் திருமகளானலக்ஷ்மியாகவும், அயனுக்கு வாணியாகவும், ரூபாரூபமாகியசிவலிங்கத்துறைந்த சதாசிவத்திற்கு மனோன்மனியாகவும் எவ்வாறு ஒரே நாயகனாகிய இறைவன் விளங்குகிறானோ அவ்வாறே அவனது ஒரே சக்தியும் பலவாகி விளங்குகிறாள். இதனால் தேவியை வழிபட்டாலும் அது அவளைப்பிறியாதுள்ள சிவனையும் வழிபட்டதாக ஆகும். அனைவரையும் வழிபட்டதாகி சிவசக்தி இருவரின் அருளையும் தருவதாகும். இறை நிலையை அடைவதற்குள்ள வழிகள் நான்கு.

அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. கிரியை என்பதே பூசை என்பதைக்குறிப்பதாகும், மற்றவை இப்பூசைக்கு துணைபுரிபவைகளாக இருந்திடவேண்டும். மனம்மொழிமெய்யாலே தினமும் இறைவனை நல்ல எண்ணங்களால் மனதாலும், உரியமந்திரங்களால் வாய்மொழியாலும், மலர்முதலியபொருள்களால் கைகளாலும் பூசையை முறையோடமைந்தமந்திரம் கிரியை பாவனை இந்த மூன்றுடனும் செய்யும்போது எத்தெய்வபூசையும் பயனளிப்பதாகிறது என்பதை அறிந்திடுவதும் பின்பற்றுவதும் அவசியமாகிறது.

வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே. (அப்பர்)

என்கிறார் அப்பர்பெருமான் தனது தேவாரப்பதிகத்தில்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன்பணிக்காக வன்றோ

என்பது சிவஞானசித்தியாரில் வரும் ஒரு பாடல் தொடர். தூயஉடம்பும் தூயஉள்ளமும் தூயஅன்பும் நல்லஎண்ணங்களும் எவரிடத்தில் உள்ளதோ அவரே புனிதனாய் நடமாடும் இறைவனாய் சற்குருவாய் விளங்குகிறார். உடம்பேகோயில் உள்ளமே தெய்வச்சிலை லிங்கம், வியக்தலிங்கம், நல்லஎண்ணங்களே பூஜைப்பொருட்கள், தூயநேயமே பூசை என்று அறியலாம். இதனை அப்பர் பெருமான் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

திருமந்திரம் பூசைசெய்பவரின் தூயஉள்ளமே கோயில் உடம்பே ஆலயம், உயிரே சிவலிங்கம் ஐம்பொறிகளே திருவிளக்கு எனக்கூறுமாறு ஒவ்வொரு அடியார்களும், பூஜகர்களும் உறுதியாகக் கூறுமாறு நல்லொழுக்க வாழ்க்கையும் ஜீவகாருண்யம்மிக்க நற்சிந்தனைகளோடும் இருந்து பூசிக்கவேண்டும் என்கிறது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவ லிங்கம்
கள்ளப் புலனைந்தும் கானாமணி விளக்கே. (திருமூலநாயனார்)

இவ்விதம்யாவரும் பூஜைசெய்து வருதலே பிறவிப்பயனைத் தருவதாகும். பெண்கள் பூசைசெய்யலாமா? என்று இக்காலத்தில் பலர் வினவுகின்றனர்? ஐயமின்றி வீட்டுவழிபாட்டைச்செய்யவேண்டும். உயிர்கள்யாவும் உய்யும் உன்னத வழிமுறையான வழிபாட்டிற்கு முதற்குருவாக விளங்குபரே அம்பிகையான பார்வதியே ஆவாள். காஞ்சீபுரத்தில் அம்பிகை மணலால் சிவலிங்கம்ஸ்தாபித்து வழிபட்டாள், பூவுலகில் பல பெண்தெய்வங்களும் சிவனை வழிபட்டுள்ளனர். ஆதலால் அந்த சிவனின் சக்தியானபல உருவில் விளங்கும் தேவியை நாம் வழிபடுவதால் சிவனையும், பராசக்தியையும் வழிபட்டவர்களாவோம்.

பூசைவகைகள்

சிலா லோஹஜ பேரம் வா ஸுதா சித்ரஸ்ய காஷ்ட த்ருக்.
இஷ்டிகா மிருண்மயம் வா பி நாநாரூபம் ப்ருதக் ப்ருதக்.

பத்ரகாளியை கிராமம், நகரம், புரம், பட்டணம், ராஜதானி இவைகளிலும், கங்கைநதிக்கரையில், மலையில், சிவாலயம், சுபஸ்தலம், மயானதேசத்தில், தேவாலயங்களில், தேவியை ஒரு சிலையாகவைத்து பூசிக்கலாம். ஸர்வஸித்திக்கும், சத்ருவியாதிபயவிநாசத்திற்கும் பூசிக்கவும் என்கின்றன சாக்தயாமளதந்திர நூல்கள்.

பொதுவாக பூஜை என்பது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என்று இருவகைப்படும். ஆன்மார்த்த பூஜை தன்பொருட்டுச் செய்யப்படுவது. பரார்த்த பூஜை கோயிலிலும் பிறபொதுஇடங்களிலும் பிறர்பொருட்டுச் செய்யப்படுவது. மேலும் ஆதீனமடாலயங்களிலும் பிறஇடங்களிலும் வழிவழியாகத் சீடர்கள் வாயிலாகச் உரிமையுடன் செய்துவரும் பூஜையை அதிகாரபூசை எனப்படும் பரார்த்தபூசையின் உட்பிறிவாகும்.

யாவரும் தத்தமதுவீடுகளில் செய்யத்தக்க ஆன்மார்த்தபூசை க்ஷணிகபூசை / உடையவர் பூசை என்று இருவகைப்படும். க்ஷணிகம் என்பது அவ்வப்பொழுது பூசையின் முடிவில்கைவிடப்படுவது. ஒவ்வொரு பூஜையின் முடிவிலும் பூசித்தஅம்மூர்த்தியை விடுத்து (நீக்கிவிட்டு) மறுநாள் வேறொரு புதிய மூர்த்தியை தற்காலிகமாகக்கைக்கொள்வது க்ஷணிகலிங்கபூஜை எனப்படுவதாகும். விசேஷகாலசிறப்புபூசைக்கும் இவ்விதமாய் ஒரு இலக்கு உருவை ஏற்கலாம். விநாயகசதுர்த்தி தினத்திலும், விளைநில உழவுத்துவக்கம், தைமாதப்பிறப்பு, இஷ்டகாம்யபூசை, தமது குலதெய்வபூசை இவைகளில் அக்காலத்திற்குமட்டும் சிறந்த தூயமண்ணைப் பிசைந்து கூம்புவடிவிலோ, மலர்ந்ததாமரைப்பூவடிவிலோ ஸ்தண்டில சமசதுரமேடைவடிவிலோ, செங்கல் வடிவிலோ வைத்து, பலதெய்வங்களை பூசித்துவருகின்றனர்.

எந்தஒருசெயலை(பூசையை) செய்வதில் செய்விப்பதில் ஓர் ஒழுங்குமுறை இருக்கவேண்டும் என்பதால் கிரியைகளை இலக்கணக்காரிகையின் கிரமமாக செய்முறை வரிசைப்படி செய்வது அவசியம். எனவே ஒருவழிமுறையைக் கூறும் பத்ததிநூல் அவசியமாகும். உடையவர்பூசை என்பது ஆசாரியரிடமிருந்து ஸ்படிகம், பவழம், மரகதக்கல் முதலியவற்றினாலான லிங்கம் அல்லது சிலை, உலோகவகைகள் இவற்றாலான சிவலிங்கம் தெய்வச்சிலை இதனை ஆசாரியர் கொடுக்கத் தான் அதைப் பெற்றுவந்து அதில் தினமும் பூசைசெய்து

அதனைக்கைவிடாமல் பாதுகாத்துவந்து தினமும் மாற்றாமல் அதிலேயே பூசைசெய்து வருவதே உடையவர்பூசை. லிங்கம், சந்திரசேகரர், நடராஜர், உமாதேவீ, காளீ, முதலிய உருவச்சிலைகள் என்று உரியதை அறிந்து ஏதேனும் ஒன்றில் பூசைசெய்யத்தக்கது.

தெய்வத்தைப் பூசைபுரிவோர் மந்திரம், கிரியை, பாவனை, என்ற மூன்றையும் முறையே கைக்கொள்ளவேண்டும், மந்திரம் வாயாலும், கிரியை உடலாலும், பாவனை மனத்தாலும், செய்யப்பெறுதலினால் பூசையில் பூசைசெய்பவருடைய முக்கரணங்களும் தெய்வத்திடம் ஒன்றி இருப்பதை உணரலாம். இதனால் மனோலயம் ஏற்படும். பூசையால் திரிகரணசுத்தி ஏற்படும். ஆன்மமாகும் மனமாசுகளும் தீவினைகளும் நீங்கிட மனிதன்புனிதனாகிறான், என்பதை அறியவேண்டும், பூசைக்குரிய விதிமுறைகள், சைவாகமங்களிலும் வைணவம் மற்றும் சாக்தஆகமம் எனும் தந்த்ரநூல்களிலும் ஆசாரியர்கள் பலரின் பத்ததிகளிலும் (வழிநூல்களில்) கூறப்பட்டுள்ளன. இவைகள் இன்றும் ஆஸ்தீக இந்து சமயப்பெருமக்களுக்கு பெரிதும்உதவிபயனளித்துவருகின்றன.

எல்லாவுயிரும் இறைவன்தன் சந்நிதியாகும்
இலங்கு உடலனைத்துமுந்தன் கோயிலென்றுணர்,

என்றும்

அன்பர் பணிசெய்யவெனையாளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே

என்றும்,

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனநீர் பூசைகொள்ளவாராய் பராபரமே.

என்றும், (தாயுமானவர்சுவாமி) பெரியோர்கள் அருளாளர்கள்பலரும் உள்ளன்புடன் பூசைசெய்திட வலியுருத்தி அதன்பெருமைகளைப் பலவாறாகக் கூறியுள்ளனர்.

கொலை, களவு, கள்ளுண்ணல், பிறன்மனைவிழைதல் பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை, முதலிய புண்ணியங்களை உடையவர்களாய், குருவிலக்கணங்கள் குறைவறஅமைந்த, ஆசாரியரை அடைந்து சமயதீக்ஷையைப் பெற்றவர்களாய், உரிய சமயசின்னங்களை அணிந்தவராய், குருவின்வாக்கியங்களை பரிபாலனம் செய்தல்

முதலியவைகளை மெய்யன்போடு அனுஷ்டிப்பவர்களே பூசைசெய்வதற்குரியவராவார்கள். அறநூல்கள் பூசைக்குஉரிய நியமத்தைச் சரிதங்களால் வற்புறுத்தி உபதேசிக்கின்றன. இவ்வாறு செய்யும்பூசையில் உள்ளேநின்று இறைவன் பூசையை ஏற்றருள்கின்றார். இதனால் யாவரும் சிவபெருமானையும் சிவசக்திதேவியையும் பூசிக்கவேண்டுமென்றறிக. திருமுறைகள் பூசைசெய்யாதாருக்கு வரும் கெடுதியை வரையறுக்கின்றன. "யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை" என்றுகூறி யாவரும் பூசையை செய்யவேண்டும் என்று திருமூலரின் திருமந்திரம் கூறுகின்றது. பூஜா என்னும் வடமொழிச்சொல்லில் உள்ள பூ என்றஎழுத்து, மலமாயாகன்மங்களைப்பூர்த்திசெய்வதையும், ஜாஎன்ற எழுத்து, சிவஞானத்தைத்தருவதையும் பொருளாக உணர்த்துவன. சிவஞானத்தைத்தருவது சிவனதுசக்தியான தேவீயே ஆதலால், ஜகன்மாதாவை பூசைசெய்வதால் தேவிசிவஞானப்ரதாயினியின் அருள்கிட்டுவது திண்ணம் என்று அறியவும்.

தேவீவழிபாட்டுவிதி முறை.

(ஓம் நமச் சாமுண்டாயை என்று கூறிவணங்குவோம்).

உலகமக்களால் ஒருமனதுடன் எங்கும் தனது பொருளாதாரநிலை, செல்வசக்திக்கு ஏற்றவாறு, விரிவாகவும் சுருக்கமாகவும், பிறரிடமிருந்து எப்பொருளையும் வேண்டிப்பெறாமல், உடலும் உள்ளமும் தூய்மையுடன் அனைவராலும் தந்த்ரகல்பத்தில் கூறியவாறு பூஜையைச் செய்யவேண்டும். பலவகை உபசாரங்களினால் பூசையைச் செய்ய இயலாதவர்கள் சந்தனம் புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் ஆகிய ஐந்துவகைஉபசாரங்களைச் செய்து பூசிக்கவும் என்று சாக்தாகமங்களும், புராணங்களும், தேவீவழிபாட்டை விதித்துள்ளன.

ஏக பக்தேந நக்தேந ததைவா (அ)யாசிதேந ச.
பூஜநீயா ஜனைர் தேவீ ஸ்தானே ஸ்தானே புரே புரே.
க்ருஹே க்ருஹே சக்திபரை: க்ராமே க்ராமே வனே வனே.
ஸ்நாதைப் ப்ரமுதிதைர் ஹ்ருஷ்டைர் ப்ராம்மணைர் க்ஷத்ரியைர் ந்ருபைர்.
வைச்யைஸ் சூத்ரைர் பக்தியுக்தைர் ம்லேச்சைர் அன்யைஸ்ச மாநவைர்.
ஸம்யக் கல்போதிதாம் பூஜாம் யதி கர்த்தும் ந சக்னுயாத்.
உபசாரான் ததா தாதும் பஞ்சைதான் விசரேத் ததா.
கந்தம் புஷ்பம் ச தூயம் ச தீபம் நைவேத்ய மேவ ச.
அபாவே புஷ்ப தோயாப்யாம் ததபாவே து பக்தித:.

(தேவீதந்த்ரபுராணம்)

ஐந்து பூதங்களின் அம்சமாக ஐந்து உபசரிப்பாலும் செய்யமுடியாதபோது, நீரும் பூவுமாக இரண்டு உபசரிப்புடன் பெயர்கூறி ஜலதர்பணத்தையும் மலர்தூவிஅஞ்ஜலியையும் செய்து வழிபடவேண்டும். இவை இரண்டையும் செய்ய இயலாதபொழுதில் உள்ளன்புடன் ஒருமனதுடன் பக்தியினால் மனத்தே கருதித் துதிக்கவும். இவ்விதமாக மனிதப்பிறவியில் உள்ளோர் உலகஅன்னையை வழிபடுவது அவசியமாம்.

காளீபூசைக்கேற்ற காலநேரம்.

தேவீவழிபாட்டிற்கு சிறப்புமிக்க பருவகாலம் சரத்ருது காலமான ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்கள். ஐப்பசிமாத அமாவாசை முதல் கார்த்திகைமாதத்து அமாவாசை வரையில்உள்ள காலத்தில் ஸௌம்யமானசாந்தமான உருவமுள்ளதேவிகளை நவமி மற்றும் பௌர்ணமிகளிலும், ரௌத்ரமான உக்ரஉருவமுள்ள தேவிகளை அஷ்டமி மற்றும் அமாவாசை திதிகளிலும் நடுநிசியில் பூசிப்பது சிறந்தபயனைத்தரும். **திதிச் சரீரம் திதிரேவ காரணம் திதிப் ப்ரமாணம் திதிரேவ ஸாதனம்.** என்ற சாக்தாகமஸ்மிருதிவாக்கின்படி காளீபூசைக்கு க்ருஷ்ணாஷ்டமியும், அமாவாசையும் உகந்தது. **கார்த்திகே து விசேஷண அமாவாஸ்யா நிசார்தகே. தஸ்யாம் ச பூஜயேத் தேவீம் போகமோக்ஷப்ரதாயினீம்** என்கிறது தந்த்ரம். ஆண்டுதோரும் காளீபூஜையை புதியதூய்மையான வண்டல் களிமண்ணால் பொம்மையாக தேவீ உருவத்தை ஒருமரப்பலகையில் செய்துவைத்து, அமாவாசைஇரவில் பலவகையான உபசாரங்களுடன், பலதீபஅலங்காரத்துடனும், அன்னம் முதலான பலிதானம் முதலிய பல விநோதங்களுடன் நிருத்ய கீதவாத்யத்துடன் புகழ்பாடி மகிழ்வித்து, அதிகாலையில் மறுபூசையை முடித்து நீர்நிலைகளில் கைவிடவேண்டும். இந்த எளியவழிமுறையிலான காம்யமான காளீபூஜையை காமாக்யதந்த்ரநூல் கூறியுள்ளது.

சரத்காலே ச தேவேசி தீபயா வா தினே ததா.
அமாவாஸ்யாம் ஸமாஸாத்ய மத்யராத்ரௌ விசக்ஷண:.
மிருந்மயீம் புத்தளீம் க்ருத்வா தீபாதிபி ரலங்க்ருதாம்
பலிம் நாநாவிதம் தத்யாத் வாத்யபாண்ட ஸமன்விதம்.
நருத்யம் கீதம் கௌதுகாநி யாவத் சூர்யோதயம் சரேத்.
ப்ராதக்காலே சுத்ததோயே ஸ்தாபயேத் அவிநாசிநீம். (காமாக்யாதந்த்ரம்)

வியோமகேசஸம்ஹிதை என்னும் நூல் சூரியன்துலாராசியில் இருக்கும்போது, எந்தஅமாவாசை (சரத்காலதர்சமோ) திதியோ அதுவே காளீபூசைக்குஉரியது என்றுவிதிக்கிறது. அந்தநாளில் காளியை

பூசிப்பவனுக்கு போகம்மோக்ஷம் இருவகைப் பயன்களையும் காளீ தந்து அருளுவாள் என்கிறது அச்சான்று இதுவே.

துலார்க்கே யஸ்த்வமாயாம் ஹி நிசார்தே கோர தக்ஷிணாம்.
பூஜயேத் விதிவத் பக்த்யா ஸர்வ ஸித்தேச்வரோ பவேத். (வ்யோமகேசஸம்ஹிதா)

இருநாளில் நள்ளிரவில் அமாவாசை திதி பரவி இருக்குமேயானால், என்று ப்ரதோஷகாலத்தில் அமாவாசைதிதி கூடியுள்ளதோ, அன்நாளில் காளீபூசையை செய்திடவேண்டும் என்று குலஸர்வஸ்வம் என்றநூல் நிச்சயிக்கிறது.

ப்ரதோஷவ்யாபிநீ யத்ர மஹாநிசி ச ஸா பவேத்.
ததைவ காளிகா பூஜ்யா தக்ஷிணா மோக்ஷதாயிநீ.
மஹாநிசா தினே தேவி ப்ரதிபத் ச யதா பவேத்.
காளீ கைவல்ய யோகோ (அ)யம் தத்தினே காளிகார்ச்சனம்.
(யுதி யுபயதினே ப்ரதோஷவ்யாபினீ ததா சதுர்தசீயுக்தா க்ராஹ்யா)
அர்தராத்ரே மஹேசாநி அமாவாஸ்யா யதா பவேத்.
சதுர்தசீயுதா க்ராஹ்யா சாமுண்டாபூஜனே ஸதா. (குலஸர்வஸ்வம்)

அமாவாசை திதியானது நள்ளிரவில்இருந்து, அத்துடன் அன்றே பிரதமையும் கூடி இருக்குமேயானால், அந்தஅமாவாசைஇரவு காளீதேவீ கைவல்யமுக்தி தரக்கூடிய யோகமுள்ளநிசி என்று அறியவும். இருநாளிலும் பிரதோஷகாலத்தில் அமாவாசை கூடியுள்ளபோது, என்று நடுநிசியில் அமாவாசை கூடிஉள்ளதோ அன்றே காளீபூசையை செய்திடவேண்டும்.

காளீபூசையின் முடிவில் பலிதருவது அவசியமான ஒருசெயல் அரிசிசோறுஉருண்டை அல்லது அரிசிமாவுஉருண்டை அல்லது மீன்முதலிய மாமிசபலி (உரியவர்களுக்கு மட்டில்) கோழி, ஆடு, முதலிய ஏதேனும் ஒருவகை உயிர்பலி அல்லது அதற்குமாற்றாக பூசணிக்காய் அல்லது தேங்காய் இவற்றை உடைத்தாகிலும் பலிதரப்படவேண்டும். பூசையில் பலிஎன்பதே பயனைத் தரக்கூடிய வலிமைதரும் பூசைசெயலாகும். இத்தகைய காளீபூசைக்கான நடுநிசிநேரப்பலியை ஒருபோதும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமை இரண்டிலும் அளித்தல்கூடாது. இதனைத் தெரிவிக்கும் சாக்ததந்த்ரநூலின் சான்று இதுவே.

சதுர்தசீ ப்ரதோஷே து அமாவாஸ்யா மஹாநிசி.
சனிபௌமதினே தேவி நிசாயாம் ஸர்வதா த்யஜேத். (காளீதந்த்ரம்)

இத்தகைய நடுநிசிகாளிபூசையில், பூசணிக்காய் முதலான ஒன்றை பலிதருவது அவசியம்.

பலி பூஜாதிகம் ஸர்வம் நிசாயாம் க்ரியதே து யத்.
தத்தத் அக்ஷயதாம் யாதி காளீ வித்யா ப்ரஸீததி.

(விச்வஸாரதந்த்ரம்) சிறப்புநாளில் ஒருசிறப்புப்பயனைக் கருதி செய்யப்படுகிற நைமித்திகபூசையில் பலிஅவசியம் என்றும், பலிதரப்படாதபூசையை காளீ ஏற்பதில்லை என்கிறது சாக்தநூல்.

தஸ்மான் நைமித்திகார்ச்சாயாம் பலிராவச்யக: ப்ரியே.
பலிம் விநா நைவ தேவீ பூஜாம் அங்கீகரோதி ஹி

காளீபூஜையில் பலியின் பயன் :

பலிதருவதால் தருபவரின் ஆயுள், வாழ்நாள் பெருகும், நோய்கள் நீங்கும், அவர் எதிரிகளை வெற்றிகொள்வார். செல்வத்தையும் அடைவார்கள் என்கின்றன சாக்த நூல்கள்.

பலிபிர் வர்ததே ஹிஆயுர் பலிபிஸ் சாம்யதேருஜா.
ஜயத் யராதீன் பலிபிர் ப்ராப்யதே பலிபிர் தனம்.

இவ்விதமாகவே காளீ பூசையை பத்ரகாளீ, வீரமாகாளீ, தக்ஷிணாகாளீ, பிரத்யங்கிராகாளீ, இவர்களைக் குறித்து செய்திடவேண்டும் என்பது சாக்த தந்திரங்களால் அறியத்தக்கது.

சரத்காலபூசைப் பயன்.

உலகில் பக்தியுடன் ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில், சரத்ருது என்னும்தேவலோகத்தில்நள்ளிரவுநேரப் பருவகாலத்தில் எவர்கள் தேவியை, காளீ, துர்கை முதலியதேவிகளை, உள்ளன்போடு பூசிக்கின்றாரோ, அவர்கள் நல்லமனைவியையும், ந ல் ல பி ள் ளை க ளை யு ம் , சுகபோகங்களையும், பணவசதிசெல்வம், உடல்நல ஆரோக்யம், மேன்மை, பிற்காலம் சுவர்கலோகத்தில் வசித்தல் முதலியபயன்களை பெறுகிறார்கள். இவற்றை தேவீ உளமகிழ்ந்து அருள்கிறாள் என்கிறது நூல்.

சரத்காலீன பூஜாம் யே கர்த்தாரோ பக்தி பாவிதா:.
தேஷாம் தாரான் சுதான் போகான் வித்த மாரோக்ய முன்னதிம்.
துஷ்டா தாஸ்யாம் யஹம் சம்போ ஸ்வர்கலோகே வஸதிம் ஸதா.
(ப்ருஹத்ஸாரம்)

காளியின் பூஜாபயன்.

ஆயுராரோக்ய மைச்வர்யம் பலம் புஷ்டி: மஹத் யச:
கவித்வம் புக்தி முக்தீ ச காளிகா பத பூஜனாத்.

இதன்படி ஸ்ரீகாளியின் பாதாரவிந்தங்களில் நல்லமலர்களால் பூஜைசெய்வதால் நீண்டஆயுள், ஆரோக்யம், ஐச்வரியம், பலம், புஷ்டி(செழிப்பு) பெருங்கீர்த்தி (புகழ்) கவிதை புனையும் புலமை, ஆற்றல், போகம், மோக்ஷம் முதலியனயாவும் கிடைத்திடும் என்று சாக்தநூல்கள் கூறுகின்றன.

வாழ்வின் பயன்

உலகில் உள்ள உயிரினங்களை உள்ளிருந்து ஆட்டி வைக்கும் அந்தசக்தி எது? என்ற கேள்விக்கு ஒரேபதில் பராசக்தி என்பதே ஆகும். ஸர்வசக்தியும் ஒன்றே. பிரம்மாவின் படைக்கும் சக்தி, விஷ்ணுவின் காக்கும் சக்தி, ருத்ரனின் ஸம்ஹரிக்கும் சக்தி, சூரியனின் பிரகாசிக்கும் சக்தி, அக்னியின் தகிக்கும் சக்தி, வாயுவின் வீசும் சக்தி, பூமியின் சுமக்கும் சக்தி, இவை எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாக ஒருசக்தி உண்டு என்பது யாதெனில்? அவளே பராசக்தி. இவள் ஒவ்வொரு பிராணியிடத்திலும் தேஹசக்தியாக, ஜீவசக்தியாக, யோகசக்தியாக, குண்டலினீ என்றபெயரில் விளங்குகிறாள். இவளின்றி எதுவும் அசையாது. இவளே ஜகத்யோனியாகவும், பரபிந்துசக்தியாகவும், ஜகதீஸ்வரியாகவும், காளியாகவும் இருக்கிறாள். எனவே புழு முதல் பிரம்மா வரையில் ஒரு காரியத்தைச் செய்யமுடியாத போது, தனக்கு சக்திஇல்லை என்றே கூறுவார்கள். இதனையே தேவீ மகாத்மியம் யாதேவீஸர்வபூதேஷுசக்திரூபணே ஸம்ஸ்திதா என்கிறது. எங்கும் நிறைந்துள்ள அந்த சக்தியே பரப்ரம்மம் எனப்படுகிறது. அவளை அறிதலே ப்ரம்மஞானம் எனப்படுகிறது. அவளே பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளிடமும் சக்தியாக இருந்து. முத்தொழில்களைச்செய்து உலகைக்காத்து ரக்ஷித்து இயக்குகிறாள், என்று அறிந்து தெளிவோம்.

ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரம்மரூபா கோப்த்ரீ கோவிந்த ரூபிணீ.
ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீ ஈஸ்வரீ.
ஸதாசிவா அனுக்ரஹதா பஞ்சக்ருத்ய பராயணா.

(லலிதாஸஹஸ்ரநாமஸ்துதி)

உலகும் அவளே, உலகப்பொருளும் அவளே, அதனை நுகர்பவளும் அவளே, எல்லாமாய் யாதுமாகி நிற்பவள் ஆதிசக்தி காளியே ஆவாள். விருப்பமற்ற ஞானியர், யோகியர் இவளையே நிர்குண ப்ரம்மமாயும், விருப்பமுள்ள போகியரான மக்கள் ஸகுணப்ரம்மமாயும் கருதி

உபாசித்து, விரும்பும் பயனை அடைகின்றனர். நமக்கு உலகில் ஏற்படும் கஷ்டங்களையும், தொல்லைகளையும் நீக்கவும், அக்கிரமங்களை ஒழிக்கவும், தருமத்தை நிலைநாட்டவும், நாமும் ஆதிபராசக்தியான, பரப்பிரம்மஸ்வரூபணியான, **ஸ்ரீ காளிகாம்பாளை சரணம்** என்று அடைந்து "முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே" என்ற சாக்த அருளாளர் ஸ்ரீஅபிராமிபட்டரின் அருள்வாக்கின்படி, அருள்பெற்று, தீங்கின்றி இன்புறுவோமாக. பகவதி ஸ்ரீமாதா நம்மைக் காக்கட்டும்.

காளியின் உருவங்கள்.

காளியின் திருவுருவம் பைரவர் மற்றும் வீரபத்திரர் உருவத்தை ஒத்தவடிவில் பெண்ணுருவாய் விளங்கும். இவளது வடிவம் 64 வகையாக கூறுப்படுகிறது. நான்குகை முதலாக 4கை, 6கை, 8கை, 12கை, 16கை, 18கை, 32கை என்று கைஅமைப்புகளுடனும், ஒன்று, ஐந்து, பத்து, ஆயிரம் தலைகளுடனும், குஹ்யகாளீ என்பது பல்லாயிரம் கரம், சிரம் கொண்டதாயும், மிக பயங்கரமாயும் கூறப்பட்டுள்ளன. கொற்றம்மிக்ககோலம் காளிக்கே உரியவடிவமாகும். மூவுலகிலும் காளியின் பராக்ரமத்திற்கும், வீரத்திற்கும் உவமை இல்லை என்றும், சத்ருவை அஞ்சிடவைத்து, அழித்திடவல்ல வேறுசக்திஇல்லை என்றும் தேவீமாகாத்மியத்தின் தேவர்களின்துதி தெரிவிக்கிறது.

கேநோபமா பவது தே அஸ்ய பராக்ரமஸ்ய
வீர்யம் ச சத்ரு பயஹாரி அதிகாரி குத்ர.
சித்தே கிருபா சமர நிஷ்டுரதா ச திருஷ்டா.
த்வய் ஏவ தேவி! வரதே! புவன த்ரயேபி. (தேவீசப்தசதீதுதி)

போரின்போது கொடூரமானவளாயினும், மனதில் கிருபைகொண்டு, வரமளித்து மூவுலகைக்காப்பவள் காளியே என்கிறது. இத்துதி பொதுவாகவும், அதிகமாகவும் ஆலயங்களில் 4 கைகளிலும், 8 கைகளிலும் உக்ரமாகவே காளியின் மூலத்திருவுருவம் அமைந்து அருள்கிறது. இதில் காளிக்கு வலது முன்கையில் திரிசூலம் அல்லது கத்தியும் இடது முன்கையில் குருதி நிறைந்த அருந்துகிற பானபாத்திரகிண்ணம் அல்லது மனிதமண்டை ஓட்டாலான கபாலகிண்ணம், வலது இடதில் மேல் பின்கரங்களில் உடுக்கை, பாசம் இவற்றுடன், பரட்டைத் தீச்சுடர் முடியும், குரூரமானவட்டவிழியும், வாயில் இருபக்கத்திலும் கோரமான தெற்றிப்பற்களும், நீண்டுதொங்குகிற நாக்கும், அஷ்டநாகங்களானபெரும் 8 பாம்புகளால் அணிகலன்களும், 51 மண்டைஓட்டு மாலையும் உடையது சிறப்புஅமைப்பாகும். ரக்தசாமுண்டீஸ்வரிக்கு=பின்கைகளில் டமருகம் (உடுக்கை), பாசம் (கயிறு) இரண்டு அல்லது சக்ரம் சங்கு இவற்றுடன்

முன்கைகளில் வலது இடதாக மலர்களையும், கரும்புவில்லும் உருவ அமைப்பாகும். எட்டுகை காளியானது = மேற்படி உடலமைப்புடன் தன் எட்டுகரங்களில் கத்தி, சூலம், கபாலம், வேதாளம், மணி, உடுக்கை, பாசம், வில், அம்பு, கேடயம் அல்லது தீச்சட்டி, வீரத்தை வியந்து தெரிவிக்கும், விஸ்மயமுத்திரை, வரதம், அபயம் அல்லது எச்சரிக்கும் தர்ஜனீமுத்திரை இவற்றுடன் கூடிய அமைப்புடையதாகும். காளிபூசையில், தவறாமல் சிம்மத்திற்கு பூசை செய்யப்பட வேண்டும். காளியின் வாஹனமாக, சன்னதியில் சிம்மத்தை எதிரில் அமைத்திட வேண்டும். இந்த வாகனசிம்மம் படுத்தநிலையிலோ, நின்றநிலையிலோ, பாயும்நிலையிலோ அமைக்கப்படலாம். சாந்தவடிவதேவியர்க்கு வ்ருஷபம் (எருது) அமைக்கத்தக்கது. இந்துசமயத்தில் வாஹனஅமைப்பு மிக முக்கியமாகவும், தத்வ முப்பொருளையும், உயிரினங்கள் இறைவனை அடையமுயல்வதையும் குறிப்பிடுகிற, பசுபதார்த்தமாகஉள்ள தர்மரூபமாகும். வாஹனம் என்றும் அழியாத தருமதேவதையாக கருதப்படுகிறது. சிம்மம், சம்ஹாரசெயலையும், மாமிசஉணவையும் கொண்டு காட்டுக்கும், விலங்குக்கும் அரசனாக இருப்பதால் இத்தகையகுணமுள்ள காளிக்கு சிம்மமே வாஹனமாகத் திகழ்கிறது. சிங்கம்இருக்கும் இடத்திற்கு பிற பிராணிகள் செல்லஅஞ்சும், தேவையில்லாதபோது சிம்மம் தனது இயல்பான (ஹிம்சித்தலை), துன்புறுத்தலைச் செய்யாது. மஹான்களுடைய தன்மானத்திற்கு சிம்மத்தையே உவமையாகக் கூறுவர் இதுவே வனராஜம் ம்ருகராஜா எனப்படும் விலங்கரசனாவதால் தர்மவாஹனம் எனவே சம்ஹாரசெயலான போரில் ஈடுபடுகிற, துர்கை, காளி இவர்களுக்கு, போரில் பேருதவியைப் புரிந்தும், சுமந்தும் அசுரப்படைகளை அழித்தும், அறம்காத்தது சிம்மமே ஆகும். இதனாலேயே சிவன் முதல் அனைத்து தெய்வங்களுக்கும் இருக்கையில் சிம்மாஸன இதன் பூஜை இடம்பெறுகிறது. அறம்காக்கும் அரசர்களுக்கும், அரியணையாக, சிம்மாசனமே திகழ்கிறது. மஹாப்ரளயகாலத்தில், அழியாது நின்றிடும் தருமதேவதையை, சிவசக்தியே வாஹனமாக ஏற்று, அருளியதாக வேதாகம புராணங்கள் வாஹனமகிமையை விளக்குகின்றன.

காளியின் ரூபத் தியானங்கள்
(பலவகை உருவவிளக்கக் குறிப்புகள்)

1. வரபத்ரகாளீ ரூபதியானம் (4கைகள்)

சதுர்புஜாம் த்ரிணேத்ராம்ச காளகண்டிம்ச கர்ணிகாம்.

தம்ஷ்ட்ராகராளவதனாம் வ்யாக்ரசர்மாம் பராவ்ருதாம்.

பாசம் டமருகம் சைவ கபாலம் சூல மேவச.

கிங்கிணீ மாலயா யுக்தாம் பஜேத் காளீம் வரப்ரதாம்.

தென்தமிழ்நாட்டுக் காளிகோயில்களில் இதுபோலவும், பைரவரைப்போலவும் அதாவது பாசம், உடுக்கை இரண்டும் பின்இருகைகளிலும், சூலம் கபாலம் இரண்டும் முன்இருகைகளிலும் கொண்டவளாகப், பலதொன்மையானதலங்களில் ஆகமப்படி பூசையில் இருந்து அருள்கிறாள். மேலும் பலதிருத்தலங்களில் கோயில் மற்றும் கிராமத்தினுள் பின்கரங்களில் வில் அம்பும் முன்கைகளில் கத்தி கேடயமும் ஏந்தியவாறு அருள்தருகிறாள்.

2. பத்ரகாளீ ரூபதியானம் (4கைகள்)

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம்

ஸம்பிப்ரதீம் அக்னிசிகாம் த்ரிநேத்ராம்.

சந்த்ரார்த்த சூடாம் ஸிதபீம தம்ஷ்ட்ராம்

நமாமி ஸித்யை மம பத்ரகாளீம்.

நான்கு கையினளாக, காளீ கத்தி (அல்லது கல்உளி), கபாலம், உடுக்கை, முச்சூலம் இவற்றை ஏந்தியவளாக, சந்திரகலை அணிந்தவளாக, மஞ் சள்நிறமான மேல்நோக்கிய பரட்டைதலை கேசமுடையவளாக, வெளுத்த பெரிய கண்களையுடையவளுமாக காளியின் திருவுருவம் வர்ணிக்கப்படுகிறது.

3. அஷ்டபுஜா பத்ரகாளீ ரூபதியானம் (8கைகள்)

ச்யாமாபாம் ரக்த வஸ்த்ராம் ஜ்வலன சிக யுதாம்

அஷ்ட ஹஸ்தாம் த்ரிணேத்ராம்

சூலம் வேதாள கட்கம் டமருக ஸஹிதாம் வாம ஹஸ்தே கபாலாம்

அன்யே கண்டேந்து கேடாம் (சூடாம்) அபய வர யுதாம்

பாச (சாப) ஹஸ்தாம் ஸுதம்ஷ்ட்ராம்

சாமுண்டாம் பீமரூபாம் புவன பயகரீம் பத்ர காளீம் நமாமி.

இதன்பொருள் = கருமைநிறத்தினள், சிவப்புநிறஆடை உடுத்தியவள், தீச்சுடராக மேல்நோக்கிய கேசத்தோடு கூடியவள், எட்டுகைகளைக் கொண்டவள். முக்கண்ணி, வலதுகைகளில் மேலிருந்து, உடுக்கை முச்சூலம். வேதாளம், பட்டாகத்தி, நான்கையும், இடதுகைகளில் மேலிருந்து, பாசம் (அல்லதுவில்) கைமணி, கேடயம், பெரிய (ரத்தம் நிறைந்த) கபாலகிண்ணம், இவற்றையும் ஏந்தியவளாய் இருகைகளால் அபயம் வரதம் அளிப்பவளாய் கடைவாயில் கோரமான தெற்றிப்பற்களை

உடையவளாயும். பெரிய உருவத்தை உடையவளாயும், உலகங்கள்யாவும் பயப்படும்படியாக கோரமாய்விளங்குபவளும், சண்டன்முண்டன் என்ற இரு அசுரர்களை அழித்து "சாமுண்டீ" என்றபட்டப்பெயரை உடையவளும் உலகத்தோருக்கு ஜகன்மங்களமாகிய, பத்ரமாகிய மங்களத்தைத் தருகிறவளுமான பத்ரகாளியை வணங்குகிறேன் என்பதாம். மேலும்பலகோயில்களில் பத்ரகாளி எட்டுகை அல்லது பத்துகைகளுடையவளாக, பிறஇலக்கணத்துடன், சூலம், வேதாளம், கத்தி, உடுக்கை, கபாலம், கைமணி, வில், கேடயம், (அபயம், வரதம்) இவற்றுடன் பெரியஉருவத்தினளாக உலகபயங்கரியாக பத்ரகாளீ தியானிக்ப்பட்டு பூசிக்கப்பட்டு வருகிறாள்.

4. சிம்ஹாருடா பத்ரகாளீ ரூபதியானம்

ஏகவக்த்ராம் த்ரிநயனாம் ஊர்த்வகேச ஸமன்விதாம்.

ச்யாமவர்ண ஸமாயுக்தாம் சதுர் தோர்தண்ட மண்டிதாம்.

சூலம் டமருகம் சைவ கபாலம் பாச மேவச.

பிப்ரதீம் புல்ல நயனாம் நாநா பரண பூஷிதாம்.

ப்ரஸன்ன வதனாம் தேவீம் துகூல வஸனான்விதாம்
சயநம் வாமபாதம்ச லம்பிதம் ஸவ்யபாதகம்
திவ்யஸிம்ஹா ஸநா ஸீநாம் திவய மால்யாநு பூஷிதாம்
ஏவம் த்யாத்வா மஹாகாளீம் ஸர்வ ஸௌபாக்ய தாயிநீம்

முன்கூறிய இலக்கணத்துடன் இவளை சிறப்பாக சிம்மத்தின் முதுகில் அமர்ந்தவளாய், நான்குகைகளில் வலதுபக்க மேல்கையில் உடுக்கை, கீழ் கையில் சூலம், இடது பக்க மேல்கையில் பாசம், கீழ்கையில் கபாலம் இவைகளை ஏந்தியபடி, விரிந்த சிவந்த மூன்று கண்களை உடையவளாய், பட்டாடை உடுத்தியவளாய் மங்களம் தருபவளாக பத்ரகாளியை எண்ணி வழிபடவும்.

5. உக்ரகாளீ ரூபதியானம். (32 கையுள்ளகாளீ)

ஏக வக்த்ராம் உக்ர தம்ஷ்ட்ராம் சிகிஜ்வாலா சிகாம் சுபாம்.

ச்யாமாங்கீம் ரக்தவஸ்த்ராம் தாம் த்வாத்ரிம்சத் புஜசோபிதாம்.

தக்ஷே வேத் ராஸி வேதாள சூல கட்க சரா (அ)ங்குசா:.

குடார க்ஷுரிகா கேட டக்கா ப்ரமர சக்தய:.

வாமே கபால தஹன கண்டா பாசை ண டிண்டிமா:.

சங்காஹி சாப முஸல பிண்டி லாங்கல கேந்துகா.

ஸர்வா லங்கார ஸம் யுக்தாம் ஸர்வா பரண பூஷிதாம்.

ஸுராஸுர ஸ்தோம வந்த்யாம் உக்ரகாளீம் நமாம் யஹம்.

தனது 32கைகளில், வலதுபக்கத்துகைகளில், பிரம்பு, கத்தி, வேதாளம், சூலம், வாள், அம்பு, அங்குசம், கோடாலி, சிறியகைக்கத்தி, கேடயம், உடுக்கை, கருவண்டு, சக்தியாயுதம், சக்ரம், உளி, சம்மட்டி, ஆகியவற்றையும், இடதுபக்கக்கைகளில். கபாலம், தீச்சுடர், கைமணி, பாசக்கயிறு, மான், பம்பை எனும் இசைக்கருவி, சங்கு, பாம்பு, வில், உலக்கை, பிண்டிபாலமுள்கதை, கலப்பை, நாகம், வஜ்ரம், பத்மம், ஈட்டி ஆகியவற்றையும் ஏந்தியவளாக உக்ரவடிவில் முன்கூறியபடி தியானிக்கவும்.

6. அங்காளீ ரூபதியானம்.

ஜ்வாலாகேச ஸமன்விதாம் த்ரிநயனாம்
சானந்த கோலாஹலாம்.
ஹஸ்தைஸ் சூல கபாலகான்
விமலஜைர் பாசாங்குசம் பிப்ரதீம்.
ஸவ்யா லம்பித வாம நித்ரித பதாம்
பத்மாஸனே ஸம்ஸ்திதாம்.
க்ரூராம் ரத்ன விபூஷிதாம் ச சுபதாம்
தேவீம் பஜே காளிகாம்.

இதன்படி ஒருமுகம், தீச்சுடர்முடி, முக்கண்கள் உடையவள், தனது நான்குகைகளில் பின் இரு கைகளில் அங்குசம் பாசம், முன்இருகைகளில் சூலம் கபாலம் ஏந்தியவள். வலதுகாலை தொங்கவிட்டு, இடதுகாலை படுக்கவைத்து, பத்மாஸனத்தின் மீது அமர்ந்திருப்பள், உக்ரமானதோற்றம், ரத்னாபரணபூஷிதையானவள் அஹங்கார ரூபமான அங்காளி தியானிக்கத்தக்கவள்.

7. ரக்தசாமுண்டா த்யானம் (சாங்கரீகாளீ)

ரக்தாபாம் பீதவஸ்த்ராம் ஸ்மிதமுக கமலாம்,
இந்து ரேகா வதம்ஸாம்
திவ்யைர் மாணிக்ய முக்தா மணிகண
கசிதைர், பூஷணைர் தீப்யமானாம்.
புண்ட்ரேக்ஷ் விஷ்வாஸ பாணாரி ஜலஜ
புஜாம், புல்ல பத்மாயதாக்ஷீம்
சாமுண்டாம் ஸ்ருங் ந்ருமுண்டாம் ரிபுகுல
மதனாம், சாங்கரீம் பாவயாமி.

இந்த ரக்தசாமுண்டாதேவியை மந்த்ரசாஸ்த்ரம் 'சங்கரசக்தி' என்று பேசுகின்றது. இந்த சாமுண்டாதேவியே மஹாசரஸ்வதிஅன்னையின் ஆணையால், ரக்தபீஜன் என்ற அசுரனின் ரத்தத்துளிகளை பூமியில் கீழே எசிந்தி விடாதபடி (அவன் ரத்தத்தைக்) குடித்து, அவன் போரில் மடியக் காரணமாயிருந்தவள். இவள் ரக்தசாமுண்டா

என்றும், பிரம்மசாமுண்டா என்றும் பேசப்படுகிறாள். இவளுடைய நிறம் சிவப்பு, மஞ்சள் நிற ஆடையணிந்தவள். புன்சிரிப்புத் தவழும் தாமரை போன்ற முகத்தினள். சந்திரகலை தரித்த சிரத்தினள் அழகிய மாணிக்கம் முத்து முதலிய மணிகள் பதித்த ஆபரணங்களை அணிந்தவள். கரும்புவில், மலர்க்கணையான, சூரியபாணம், சக்ரம், சங்கம் இவைஏந்திய, நான்குகரத்தினள். சத்ருசம்ஹாரம் செய்பவள், இவ்வாறு ரக்தசாமுண்டாதேவியை உள்ளத்தில் உருகி உகந்து தியானிக்க வேண்டும். இவளது உருவம் ஆராதனை மஹிமைகளை மார்கண்டேயபுராணம் தேவீமாஹாத்மிய ரகஸ்யத்ரயத்தில் கூறப்பட்டுள்ளது இங்கு அறியத்தக்கது. மூர்த்திரகசியத்தில் இவளது ரக்ததந்திகா ஸ்வரூபமானது கூறப்பட்டு இவளே ரக்தசாமுண்டா, இவளே யோகேச்வரீ எனப்படுகிறது.

8. ரக்ததந்திகா தியானம் (யோகேச்வரீகாளீ)

யா ரக்ததந்திகா நாம தேவீ ப்ரோக்தா மயா (அ)நக.
தஸ்யாஸ் ஸ்வரூபம் வக்ஷ்யாமி ச்ருணு ஸர்வ பயாபஹம்.
ரக்தாம்பரா ரக்தவர்ணா ரக்த ஸர்வாங்கபூஷணா.
ரக்தாயுதா ரக்தநேத்ரா ரக்தகேசா (அதி) பீஷணா.
ரக்த தீக்ஷ்ண நகா ரக்த தசநா ரக்த தந்திகா.
பதிம் நாரீவா னுரக்தா தேவீ பக்தம் பஜேத் ஜனம்.
வசுதேவ விசாலா ஸா ஸுமேரு யுகள ஸ்தனீ.
தீர்கௌ லம்பா வதிஸ் தூலௌ தாவதீவ மனோஹரௌ.
கர்கசா வதிகாந்தௌ தௌ ஸர்வாநந்த பயோநிதீ.
பக்தான் ஸம்பாயயேத் தேவீ ஸர்வகாம துகௌ ஸ்தநௌ.
கட்கம் பாத்ரம் ச முஸலம் லாங்கலம் ச பிபர்த்தி ஸா.
ஆக்யாதா ரக்தசாமுண்டா தேவீ யோகேச்வரீ தி ச.
அனயா வ்யாப்த மகிலம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம்.
இமாம் யப் பூஜயேத் பக்த்யா ஸ வ்யாப்னோதி சராசரம்.
புக்த்வா போகான் யதா காமம் தேவீஸாயுஜ்ய மாப்னுயாத்.
அதீதே ய இமம் நித்யம் ரக்ததந்த்யா: வபுஸ் தவம்.
தம் ஸா பரிசரேத் தேவீ பதிம் ப்ரிய மிவாங்கனா.

(மார்க்கண்டேயபுராணம் சப்தசதீ மூர்த்திரஹஸ்யம்)

இதன்படி அனைத்தையும் செந்நிறத்தில் கொண்டுள்ளவளும், ரக்தம்தோய்ந்த வைகளாக உள்ள கோரப்பற்கள் உடையவளும் கத்தி, கிண்ணம், உலக்கை, கலப்பை இவற்றை தனது 4கைகளில் ஏந்தியவளாகவும், அடியவர்களுக்கு காமதேவனுவாக (ஸர்வகாமதுஹா) அனைத்தையும் அளிப்பவள், பயத்தை நீக்குபவள் ரக்ததந்திகா என்கிறது புராணம். இவளைத் துதிப்பவனை, அவள் தனது கணவனைக்காப்பதைப்போல உடனிருந்து உதவிக்காப்பாற்றுவாள் என்று கூறப்படுகிறது. இவளே யோகேச்வரீ எனப்படுவாள்.

9. பிரம்மசாமுண்டா ரூபதியானம்

உத்யத் பாஸ்கர ஸன்னிபாம் த்ரிநயனாம் வேதானனாப்ஜாம் சதுர்
ஹஸ்தைர் அம்புஜ சூல தாம சஷகான் ஸம்பிப்ரதீம் சூலின:
நிருத்தா டம்பர தூர்வஹாம் சிவமயீம் ப்ரேதாஸனாத்யாஸினீம்
தியாயேத் தில்ல வனேச்வரீம் ஹ்ருதி ஸதா ஸ்ரீ பிரம்ம சாமுண்டிகாம்.

(வேறுதியானம்)

வேதவக்த்ராம் சதுர்ஹஸ்தாம்
ஸர்வாலங்கார பாஸுராம்.
த்ரிசூலம் சாக்ஷமாலாம் ச
பானபாத்ரம் ஸிதாம்புஜம்.
பிப்ரதீம் ரக்தவஸனாம் கரண்ட
முகுடான் விதாம்
ப்ரேதாஸனாம் பஜேத் தேவீம்
ப்ரம்ஹசாமுண்ட ரூபிணீம்.

இந்த பிரம்மசாமுண்டாதேவீ தில்லைவனம் எனப்படுகிற சிதம்பரத்தில் தில்லைகாளியாக தனிக்கோயிலில் அருள்கிறாள். இவளது துதி, அர்சனை, பூசைகளை ஸ்ரீநடராஜவித்யாஸபை ஒரு நூலாக வெளியிட்டுள்ளது. இவள்

நான்கு வேதங்களையே நான்குமுகமாகக் கொண்டு பரபிரம்மசக்தியாக விளங்குகிறாள். நான்குகைகளில் முன்கைகளில் முத்தலைச் சூலம், ரக்தபான பாத்திரமும் மேலிருகைகளில் வலதிடதில் ருதராக்ஷஜபமாலை வெண்தாமரை மலரும்ஏந்தி, சிவந்தமேனியளாய், முக்கண்ணியாய், சிவப்புநிற ஆடை உடுத்தியவளாய் ஸர்வாலங்காரத்துடன், கரண்டமகுடம் சூடியவளாய், வலதுகாலை தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கியவாறு பிரேதத்தின்மீது அமர்ந்திருப்பவளாய் அருள்தருபவள். இவள் சிவனாரின் நிருத்யத்தில் ஈடுபாடுடையவள். இதனால் இவள் தில்லை வனத்தில் சிவனோடு தாண்டவமாடி முடிவில் கோபமுற்று கோயில்கொண்டு உள்ளாள். இவளது மஹிமைகளை 9சுலோகமுள்ள பிரம்மசாமுண்டாஸ்தவம் விளக்குகிறது.

10. தக்ஷிணகாளீத்யானம். (உருவவிளக்கப் பொருளுரை).

ஸத்யஸ் ச்சின்ன சிரக் க்ருபாண மபயம் ஹஸ்தைர் வரம் பிப்ரதீம்
கோராஸ்யாம் சிரஸாம் ஸ்ரஜாஸு ருசிராம் உன்முக்த கேசாவளிம்.
ஸ்ருக்காஸ்ருக் ப்ரவஹாம் ச்மசானநிலயாம் ச்ருத்யோஸ் சவாலங்கிருதிம்.
ச்யாமாங்கீம் க்ருத மேகலாம் சவ கரைர் தேவீம் பஜே காளிகாம்.

இதன்பொருளாவது, அப்போதே வெட்டப்பட்ட அசுரத் தலையை இடதுகீழ் ஒருகையிலும், கத்தியை இடது மேல் ஒருகையிலும், வலதுமேல் ஒருகரத்தில் அபயமுத்திரையையும், வலது கீழ்கரத்தில் வரத முத்திரையையும் (அல்லது) கத்தியும் வரமும் வலதுகைகளில், (வெட்டியதலை) சிரமும் அபயமும் இடதுகைகளில் என்றவாறு சிரம், கத்தி, அபயம், வரதம் இவைகளை தாங்கிய நான்கு கரகமலத்தினள். பயங்கரமான வக்ர முகத்தினள். ஐம்பது தலைகளாலான ஒரு முண்டமாலை அணிந்து அழகியவள். அவிழ்த்துவிடப்பட்ட கேசபாரத்தினள். அவள் கடைவாய்வழியாய்

ரத்தம்பெருகி வெளிவரும். ச்மசானத்தில் வஸிப்பவள். காதுகளில் சவசிசுக்களைத் தோடாக அணிந்து கொண்டவள். கறுத்த நிற தேஹத்தினள். சவத்தின் கரங்களாலான ஒட்டியாணம் உடையவள். இவ்வாறான தக்ஷிணகாளியை உபாஸிக்கிறேன் என்பதாகும்.

11. சவாருடாகாளீ தியானம்

சவாருடாம் மஹாபீமாம் கோரதம்ஷ்ட்ராம் ஹஸன்முகீம்.

சதுர்புஜாம் கட்க முண்ட வராபய கராம் சிவாம்.

முண்டமாலாதராம் தேவீம் லலஜ் ஜிஹ்வாம் திகம்பராம்.

ஏவம் ஸஞ்சிந்தயேத் காளீம் ச்மசானாலய வாஸினீம்.

(மஹாநிர்வாணதந்த்ரம்)

இத்தியானத்தின்படி இவள், கருத்தவள், பிறைசூடியசிரத்தினள், முக்கண்ணி, சிவப்புநிறஆடையை உடுத்தியவள், அபயம், வரதம், இரு முத்திரைகளைக் கொண்ட இருகைகளை உடையவள். மலர்ந்த செந்தாமரையில் அமர்ந்து அருள்பவள். இனிய திராக்ஷைப் பழரஸத்தைப்பருகிக் கொண்டு தன்முன் நடனமாடும் மஹா காலரைக்கண்டு மலர்ந்த முகத்தினளாக விளங்குபவள். இவ்வாறான காளியை வணங்குகிறேன் என்பதாகும். முன்கூறிய தியானம் குரூர உருவமுடையதாம். பின்புகூறிய இது மிகவும் சாந்தமான, சௌம்ய மூர்த்தியி னுடையதாகும் என்று தெரிகின்றது. இந்த காளியின் பல உருவதியானங்கள் மஹா நிர்வாண தந்திரத்தில் கூறப்பட்டு உள்ளன.

12. பிரத்யங்கிரா ரூபதியானம்.

ஸிம்ஹீம் ஸிம்மமுகீம் ஸகீம் பகவத: ஸ்ரீபைரவோல் லஸத்
சூல ஸ்தூல கபால பாச டமரு வ்யக்ரோக்ர ஹஸ்தாம்புஜாம்.
தம்ஷ்ட்ராகோடி விசங்கடாஸ்ய குஹராம் ஆரக்த நேத்ரத்ரயாம்
பாலேந்து த்யுதி மௌளிகாம் பகவதீம் ப்ரத்யங்கிராம் பாவயே.

இவள் சிம்ம வாஹினியாக, சிங்கத்தினுடைய வாயைப் போன்ற, அகன்றதான குகை போன்றவாயை உடையவளாகவும், ஸ்ரீபைரவரின் தோழியான சக்தியும், மிகவும் கருத்த தேஹத்தினளும், நெருப்பு ஜ்வாலை போன்ற மேல் நோக்கி எழுந்த சிகைகளையுடையளும், நீலநிறமான இரண்டு ஆடைகளை உடுத்தியவளும், மிகவும் பருத்த வலிமைமிக்க உடலும், பெருங்கழுத்தும், தொங்கும் நீளமான தீச்சுடர்மயமான தொங்கும் நாக்கையும் கடைவாயில் கோரமான, கூரிய தெற்றிப்பற்களை உடையவளும், சிவந்த மூன்று கண்களை உடையவளும், சந்திரனின் இளம்பிறையை சூடியவளும், எட்டுபெரும்பாம்புகளை அணிகலன்களாய் அணிந்திருப்பவளும், கழுத்து முதல் கால்வரை, நீண்டதான கிங்கிணீ(மணி)மாலையையும், 50 தலைகளாலான முண்டமாலையையும் அணிந்திருப்பவளும் எங்கும் எட்டுதிசையிலும் நிறைந்திருந்து மூவுலகைக் காப்பவளாகவும் கருதத்தக்கவள்.

13. சத்ருக்னா பிரத்யங்கிராகாளீ ரூபதியானம்

சியாமாபாம் வேதஹஸ்தாம் த்ரிநயன லஸிதாம் ஸிம்ஹ வக்த்ரோர்த்வ கேசீம்,
சூலம் முண்டம் ச ஸர்பம் டமரு புஜ யுதாம் குந்தளா துக்ர தம்ஷ்ட்ராம்
ரக்தேஷ் வாலீட ஜிஹ்வாம் ஜ்வல தனல காயத்ரி சாவித்ரி யுக்தாம்
த்யாயேத் ப்ரத்யங்கிராம் தாம் மரண ரிபு விஷ வ்யாதி தாரித்ரிய நாசாம்.

இதன்படி தேவியை கருத்தவளாய், முக்கண்ணியாய், நாற்கரத்தவளாய், முன்கைகளில் முச்சூலத்தையும், கொய்த சிரத்தையும், பின்இருகைகளில் வலது இடதாக உடுக்கை, பாம்பு (7தலைபாம்புபாசம்) ஏந்தியவளாய் விரித்த கருங்கூந்தலும், வாயில் கோரப்பற்களும், தொங்கிறநாக்கும், இருபக்கங்களில் உள்ள காயத்ரி, சாவித்ரி தேவிகளால் உபசரிக்கப்படுபவளும், உலக உயிர்களினுடைய மரணபயம், எதிரிகள், விஷங்கள், வியாதிகள், இல்லாமைகள் இவைகளை நீக்கி அழித்து இஷ்ட ஸித்திகளைத் தந்தருளுபவளாக பிரத்யங்கிரா தேவியையெண்ணித் துதித்து, வணங்க வேண்டும். மற்றொருவகைத்தோற்றத்தில் கையில் கத்தியுடன் உள்ளவள் உக்ராபிரத்யங்கிரா எனப்படுகிறாள்.

14. உக்ர ாபிரத்யங்கிரா தியானம். (உக்ராஉருவம்)

ஸிம்ஹா ரூடாதி க்ருஷ்ணம் த்ரிபுவன
பயக்ருத் ரூபம் உக்ரம் வஹந்தீ
ஜ்வாலா வக்த்ரா வஸாநா நவ வஸன
யுகம் நீல மண்யாப காந்தி:.
சூலம் கட்கம் வஹந்தீ நிஜகர யுகளே
பக்த ரக்ஷைக தீக்ஷா
ஸேயம் ப்ரத்யங்கிரா ஸம் க்ஷபயது
ரிபுபிர் நிர்மிதம் வோ (அ)பிசாரம்.

இதன்படி ஸிம்மத்தின் மேலமர்ந்த கருநிறத் திருமேனியால் மூவுலகையும் பயமுறச் செய்பவளும், நீலரத்னத்தின் ஒளியுடையவளும், நீலநிறபட்டாடை

உடுத்தியவளும், தீச்சுடர்முடியையுடையவளும், கோரப்பற்களையும், தொங்கும் நாக்கையும் உடைய, குகைபோன்றதான சிங்கத்தின்வாயைக்கொண்டவளாய், வலது முன்கையில் சூலம் அல்லது கத்தி வைத்திருப்பவளாய், எதிரிகளால் செய்யப்பட்ட தீவினைச்செயலை போக்குபவளாய் தியானிக்கத்தக்கவள். இவளே முன்இருகைகளில் கத்தி மற்றும் கேடயத்துடனும் கூறுப்படுகிறாள். அது இதுவே.

15. சாங்கரீ பிரத்யங்கிரா தியானம்

ஆசாம்பரா முக்த கசா கனச் சவி:
தியேயா ஸ சர்மா (அ)ஸிகரா
(அ)ஹி பூஷணா.
தம்ஷ்ட்ரோக்ர வக்த்ரா க்ரஸிதா
(அ)ஹிதா த்வயா
ப்ரத்யங்கிரா சங்கர தேஜ ஸேரிதா.
(மந்த்ரசாஸ்த்திரம்)

இதன்படி திசைகளையே தனக்கு ஆடையாகக்கொண்டவளாகவும், அவிழ்ந்த விரிந்த சேசத்துடன் கூடியவளாயும், மேகம்போல கருத்த நிறத்தவளாயும், கத்தி கேடயம் ஏந்தியவளாயும், பாம்புகளைப் பூண்டுள்ள உக்ரமான சிவசக்தியே ப்ரத்யங்கிரா எனப்படுபவள் எனக்கருதி வழிபடவேண்டும்.

16. குஹ்யகாளி ரூபத்யானம்

மஹா பீஷணாம் கோர விம்சார்த வக்த்ராம்
ததா ஸப்த விம்சான் விதைர் லோசனைச்ச.
புரா தக்ஷவாமே த்விநேத்ரோ ஜ்வலாம் தாம்
ததா (அ)ன்யானனே த்ரி த்ரி நேத்ரா பிராமாம்.

குஹ்யகாளீ எட்டுஇதழ்கள் உள்ள தாமரைமலரில் வீற்றிருப்பாள். (நீலோத்பலபுஷ்பம்) கருங்குவளைமலர்போன்ற நீலநிறத்தினள். 27 கண்கள் உடையவள். மேல்நோக்கிய முகத்தினள் பத்துமுகமூர்த்தியைத்தவிர மற்றமூர்த்திகள் இரண்டு கண்களையுடையவளாகவும் மூன்று கண்ணினளாகவும் இருப்பாள். இராவணன் இத்தேவியின் மீது புஜங்கப்ராஸசந்தத்தில் இயற்றிய ஸ்துதியில் இவளை வர்ணித்துள்ளார். இதில், இவள் மிகவும்பயங்கரமானவள், கோரமான 10முகங்கள்

கொண்டவள், 29 கண்கள் உடையவள், ஒருமுகத்தில் இரண்டு கண்களும் பிறமுகங்களில் மூன்று கண்களுமாக கொண்டிருப்பவள்.

குஹ்யகாளிக்கு பத்துமுகங்கள் என்றும், அவைகளும் பத்துவகையான திருமுகங்களாக பத்து திசைஅமைப்புடன் விளக்கப்பட்டுள்ளன. அந்த பத்துமுகங்களின் அமைப்புமுறை இதுவே.

1. மேல்நோக்கியது – சிறுத்தை முகம்,
2. கீழ்நோக்கியது – ஸிம்ஹமுகம்,
3. அதன்கீழ் – நரிமுகம்,
4. அதன்இடதுபக்கம் – வானரமுகம் (குரங்கின்முகம்)
5. வலதுபக்கம் – கரடிமுகம்,
6. இதன்கீழ் – மனிதமுகம்,
7. இடதுபக்கம் – கருடமுகம் (பறவைமுகம்)
8. வலதுபக்கம் – முதலைமுகம்,
9. இடதுபக்கம் – யானைமுகம்,
10. வலதுபக்கம் – குதிரைமுகம்

என்றும் விளக்கப்பட்டுள்ளன.

இவள் 52கைகளில் பலவகை ஆயுதங்களை ஏந்தியவள். இவளின் இடது கரங்களான 26கைகளில். ஏந்தியுள்ள ஆயுதங்கள் முறையே. 1. ரத்னமாலை 2. கபாலம் 3. கேடயம் 4. பாசம் 5. சக்தி 6. கத்தி 7. முண்டம் 8. புசுண்டீ 9. வில் 10. சக்ரம் 11. மணி 12.வெட்டியதலை (சிரசு) 13. மலை 14. மனிதஎலும்பு 15. கீரி 16. பாம்பு 17. உன்மாதவம்சிகா 18. சம்மட்டி (முத்கரம்) 19. . தீச்சட்டி 20. உடுக்கை 21. இரும்புத்தடி (தாழ்பாள்தடி) 22. பிண்டிபாலம் (முள்கதை) 23. உலக்கை 24. பட்டாக்கத்தி 25. சதக்னீ (100பல்உள்ளது. அறுப்பு ரம்பவாள்) 26. நரிக்குட்டி இவற்றுடனும், இவளின் வலது பக்க கரங்களில் 26 கைகளில் முறையே. 1. அக்ஷமாலை 2. கத்தரிக்கோல் 3. வாள் 4. தர்ஜனீமுத்திரை (சுட்டிக்காட்டி மிரட்டுவது) 5. அங்குசம் 6. தடி 7.ரத்னக்குடம் 8. முச்சூலம் 9. ஐந்து பாசுபதபாணங்கள் 10. ஈட்டி 11. பாரிஜாதமலர் 12. குத்துவாள் 13. தோமரம் (தீக்கடைக்கோல்) 14. பூமாலை 15. டிண்டிமம் (பம்பை இசைக்கருவி). (உருமிமேளம்)

16. கழுகு 17. கமண்டலம் 18. மாமிஸத்துண்டு. 19. ஸ்ருவம் (ஹோமஸாதனகரண்டி) 20. கொய்யாப்பழம் 21. ஊசி (ஆணி) 22. பரசு (கோடாலி) 23. கதை 24. தடி 25. கைமுஷ்டி (குத்துபிடிமுத்திரை) 26. ப்ரேதம், (பிணம்) இவற்றுடனுமாக 52 கைகளுடன் விளங்குபவள். கொலுசு, வளையல், தோள்வளை, அரைஞான் இடைக்கயிறு பூணூல் (உபவீதம்) ஹாரம், தோடு, ஜடையைக்கட்டும் கயிறு, இவையனைத்தும் பாம்புகளாலானவைகளாக அமைத்திருப்பவள், இடையில் புலித்தோலாடையையும் சிறுத்தைத்தோலாலான மேலாடையையும் (உத்தரீயம்), உடுத்தியவளாய் சரணகமலங்களில் செந்தாமரைமாலையை அணிந்திருப்பவள், பிரளயகாலத்து நெருப்புபோல் மின்னும் தேஹம், (உடற்பொலிவுடன்) மூன்றுகோடி சக்திகள், மற்றும் ஒன்பதுகோடி சாமுண்டாதேவிகள், பதினெட்டுகோடி யோகினீதேவிகள் அறுபதுகோடி டாகினீசக்திகள், 100கோடி பைரவிகள் இவளைச் சூழ்ந்துநின்று இவளுக்குப் பணிபுரிபவர்களாகக் கொண்டிருப்பவள்.

17. நிக்ரஹகாளீ ரூபதியானம் (யுத்தகாளீ/ஸம்ஹாரகாளீ)

ஏகாஸ்யா மக்னிஜ்வாலோக்ராம் ஆயதாக்ஷீம் பயங்கராம்.
க்ரூரதம்ஷ்ட்ராம் ரக்தமால்யாம் அஷ்டாதச புஜான்விதாம்.
பயாபஹாம் சித்ரவஸ்த்ராம் சிரோமாலா விபூஷிதாம்.
துங்கஸ்தனபராம் நம்ராம் கர்ஜந்தீம் ஸமராங்கணே.
ஸவ்யே கண்டேஷு முஸல சக்ர வஜ்ராஸய: கரே.
கபால நாக க்ஷுரிகா சங்க கேடாங் குசா: பரே.
சராஸந கராம் பீமாம் த்ருத பேதாள விக்ரஹாம்.
சாமுண்டா முக்ரரூபாம் தாம் பஜே
நிக்ரஹ காளிகாம்.

இதன்படி ஒருமுகம், தீச்சுடர்முடியுடன் உக்ரமானவள், நீண்டகண்களை உடையவள், கோரமான தெற்றிபற்கள் சிவந்தநிறமாலை உடையவள், பதினெட்டு கைகள் உடையவள், உயர்ந்துபருத்த மார்பக முடையவள். போர்களத்தில் பயங்கரமாக கர்ஜிப்பவள், வலது பக்க கைகளில் கபாலம், பாம்பு, குத்துகத்தி, சங்கு, கேடயம், அங்குசம், வில், அம்பு முதலான ஆயுதமேந்தியவள், வேதாளவாஹனத்தின் மீது அமர்ந்திருப்பவள், சண்டமுண்டர்களை மாய்த்தவள். அழித்தல் தொழிலாற்றும் உக்ரரூபமுள்ளவளாக நிக்ரஹகாளீ தியானிக்கத்தக்கவள்.

18. அனுக்ரஹகாளீ ரூபதியானம்

தம்ஷ்ட்ரா கராள வதனாம்
த்ரிநேத்ராம் ச சதுர்புஜாம்.
ஊர்த்வோன்னத்த சுகேசாட்யாம்
நீலவர்ணாம் ஜ்வலத்சிகாம்.
கபால பாச டக்கோக்ர சூல ே
ஹதி தராம் சுபாம்.
வராபய கராம் சாந்தாம் பஜே
(அ)நுக்ரஹ காளிகாம்.

இதன்படி, ஒருமுகமும், அதில் கோரப்பற்களோடு கூடிய கோரமான திருவாயும், மூன்றுகண்களும் உடையவளாய், நான்குகரத்தினளாய், நீலநிறத்தினளாய் ஒளிரும் மேல்நோக்கிய சுடர்முடிகளை உடையவளும், கைகளில் முன்இருகைகளில், வலது இடதாக சூலம் கபாலத்தையும், பின்இருகைகளில் வலதுஇடதாக உடுக்கை, பாசம், இரண்டையும் தாங்கியவளும், அல்லது முன்கைகளில் அபய வரதத்துடனும், பின்கைகளில் சூலம் கபாலம் இரண்டையும், ஏந்தியவளாய் சாந்தமான தோற்றமுடையவளாய் அருள்தருகிற அனுக்ரஹகாளியை எண்ணி வணங்கவும்.

19. பீடாஹாரீ சாமுண்டீ காளீ தியானம்.

சாமுண்டா ப்ரேதகா க்ருஷ்ணா
வ்ருக்ருதா சாஹி பூஷணா.
தம்ஷ்ட்ராளா க்ஷீண தேஹா ச
கர்தாக்ஷீ காமரூபிணீ.
திக் பாஹுர் க்ஷாம குக்ஷிச்ச
முஸலம் சக்ர சாமரே.
அங்குசம் பிப்ரதீம் கட்கம்
தக்ஷிணே சாத வாமகே.
கேடம் பாசம் தனுர் தண்டம்
குடாரம் சாபி பிப்ரதீ.
ரக்தவஸ்த்ர தரா கோரா
ஸர்வ பீடாப ஹாரிணீ.

இதன்படி சாமுண்டாதேவீ கோரரூபமாய் பிரதேவாஹநத்திலமர்ந்தவனாய், கருப்புநிறத்தவளாய், பத்துகைகளில் உலக்கை சக்கரம் சாமரம் அங்குசம், கத்தி, கேடயம் பாசம் வில் தண்டம் கோடாரி இவற்றை ஏந்திய பீடாஹாரீகாளீ. மற்றய பொதுவான உருவ இலக்கணங்களையும் கொண்டுள்ளவள். இவளைவிகாமான உருவமும், பாம்புகளாலான ஆபரணங்களையும் கடைவாயில் தெத்திப்பற்களையும், ஒல்லியான உடலும், குழிவிழுந்தகண்ணும் உடையவளாகவும் கொடூரஉருவத்தில் கருதிவழிபடவேண்டும்.

20. மஹாகாளீ தியானம்

நீலோத்பல ஸமப்ரக்யாம் ஷோடசாநந ஸம்யுதாம்.
த்ரிணேத்ராம் ரக்தவஸ்த்ராம் ச கிரீட மகுடோஜ்வலாம்.
அஷ்டாஷ்ட புஜ ஸம்யுக்தாம் அக்னிஜ்வாலா சிகோஜ்வலாம்.
ஸிம்ஹ வாஹன ஸம்ரூடாம் உக்ரதந்தாம் ஸகர்ஜநாம்.
குடார சூல பேதாள டக்கா வேத்ர கதா யுதாம்.
சாப பாணாஸி பரசு சக்த் யங்குச கராம் சுபாம்.
ஓங்கார ரூபிணீம் அபாம் மஹாகாளீம் ப்ரபூஜயேத்.

இதன்படி நீலநிறத்தினளும், 16 முகத்தினளும் முகங்களில் முக்கண்ணியும், சிகப்புற ஆடையினள், கிரீடமகுடம் சூடியவள், 64 கைகளை உடையவள், தீச்சுடரானசிகையினள். சிங்கவாஹனத்தின்மீது, அமர்ந்தவள். கோரப்பற்களையும், கோரகர்ஜனையையுமுடையவள், குடாரம், சூலம், வேதாளம், உடுக்கை, பிரம்பு, கதை, வில், அம்பு, கத்தி, கோடாரி (பரசு) சக்தி, அங்குசம் முதலான பிற ஆயுதங்களையும் ஏந்தி இருப்பவளும், ஓங்காரத்தின் உருவமாய் விளங்குபவளுமான மஹாகாளியை எண்ணி பூசித்திடவும்.



21. உக்ரா பத்ரகாளீ ரூபதியானம் (4கைதேவீ)

கபாலமாலா பரணம் நாகராஜ விபூஷிதம்.

பத்ம பீடோபரிஸ் தம்ச ரக்தவஸ்த்ர ஸமன்விதம்.

வாமபாத தலம் சைவ ரக்தபீஜோபரிஸ்திதம்.

சந்த்ரலேகா ஸமாயுக்தம் கராள வதனான்விதம்.

ப்ரபா மண்டப மத்யஸ்தம் உக்ர த்ருஷ்டி பயங்கரம்.

ஆஸனம் ஸ்தானகம் வாபி ப்ரேதாரூட மதாபிவா.

த்வாத்ரிம்சல் லக்ஷணோபேதம் சாமுண்டீ பூர்ணவிக்ரஹம்.

யத்வா சதுர்புஜம் வாபி பாசம் டமருகம் ததா.

சூலம் கபால ஸம்யுக்தம் சேஷம் பூர்வவ தாசரேத்.

(உத்தரகாரணாகமம்)

பத்ரகாளியினுடைய பூஜாவிக்ரஹத்தின் அமைப்புமுறையை சைவகாரணாகமம் இவ்வாறு கூறுகிறது. இதில், ஒருமுகம், முக்கண், கருமைநிறதேஹம் செந்நிறஆடையை உடுத்தியவள், கபாலமாலை,பாம்புகளாலான ஆபரணங்கள், பத்மபீடத்தின் மீது அமர்ந்தநிலையிலோ, நின்ற நிலையிலோ இருப்பவளாய் தனது, இடதுபாதத்தை ரக்தபீஜ அசுரனின் மீது பதித்திருப்பவளாகவும், பிறைமதியை சூடியவளாயும், உக்ரமான தெற்றிப்பற்களுடன் கூடிய வாயினளும், ஒளிவட்டத்தின் நடுவே இருப்பவளும், உக்ரமான செங்கண்பார்வையை உடையவளும், அல்லது ப்ரேத்தின் மீது உள்ளவளாகவோ, பெண்ணின் 3 வகைஇலக்கணத்துடன் கூடிய உருவத்தினளாகவோ, சாமுண்டியின் விக்ரஹத்தைச் செய்தல்முறை அல்லது நான்குகைகளுடன், பாசம், உடுக்கை இரண்டையும் மேல்கரங்களிலும், சூலம் கபாலம் இவற்றை கீழ்முன்கரங்களிலும் ஏந்தி, முன்கூறியபடி இருப்பவளாய், சாமுண்டாகாளியை அமைத்து வழிபடவேண்டும்.

22. மஹாகாளீரூபதியானம் (8 கைகாளீ)

ஏகவக்த்ராம் த்ரிணேத்ராம்ச

கரண்டமகுடா ஜ்வலாம்

அஷ்டபாஹுர் மஹாகாயா

காலமேக ஸமப்ரபா.

சங்க சக்ர கதா கும்ப

முஸலாங்குச பாசயுக்.

வஜ்ரம் கரே பிப்ரதீ ஸா

மஹாகாளீ முதேஸ்து ந:

(காரணாகமம்)

இதன்பொருள் : எட்டுகைகளும், பெருத்தமேனியும், கருமைநிறமும் கொண்டு, சங்கு சக்ரம், கதை, கும்பம், உலக்கை, அங்குசம், பாசம், வஜ்ரம், இவற்றை 8கைகளில் ஏந்தி விளங்கும் மஹாகாளீ நன்மை தருபவள். இவள் ஞானமளிக்கும் நீலசரஸ்வதீ எனப்படுவாள்.

23. அங்காளீ ரூபதியானம்.

ஏகவக்த்ராம் த்ரிணேத்ராம் ச

ஜடாகண்டேந்து மண்டிதாம்.

குடார சூல ஹஸ்தாம் தாம்

வரா பய கராம்புஜாம்.

முண்டாஸ்தி மாலிகா முக்ராம்

அட்டஹாஸ விபீஷணாம்.

ச்மசான வாஸினீம் க்ரூராம்

மஹா ஸம்ஹார காரிணீம்.

பூத ப்ரேத பிசாசோக்ர

ப்ரம்ம ராக்ஷஸ ஸேவிதாம்.

அங்காளீம் பாவயேன் நித்யம்

சர்வசத்ரு விநாசினீம்.

இதன்படி தேவீ ஒருமுகம், மூன்றுகண்கள், ஜடாமகுடம் கூடியவள், சந்திரபிறையை அணிந்தவள், சிகப்புநிறத்தவள், சிகப்புநிறஆடையை உடுத்தியவள், முண்டமாலை அணிந்தவள். நான்குகையினள், வலது இடது பின்கைகளில் குடாரம் என்கிற கோடாரி, திரிசூலம் ஏந்தியவள் முன்கைஇரண்டில் அபய வரத முத்திரைகளை காட்டுபவள், மயானத்தில் வசிப்பவள், குரூரமானவள், கர்ஜிப்பவள், அட்டஹாசசிரிப்பால் உலகை பயமுறுத்துபவள், அகந்தையை அழிக்கும் செயலைச் செய்பவள், பூதங்கள், ப்ரேதகணம், பிசாசகணம், பிரம்மராக்ஷஸர்கள், இவர்களால் சூழப்பட்டு சேவிக்கப்படுபவள், மக்களின் தீய பீடைகளை நீக்கும் பரமேச்வரியான அங்காளியை எண்ணித் துதித்து வணங்கிடவேண்டும்.

24. உக்ரகாளீ ரூபதியானம்.

ஏகவக்த்ராம் த்ரிணேத்ராம்ச ஜடாமகுட மண்டிதாம்.
ஜ்வாலாகேசாம் கராளாம்ச தக்ஷிணே நக்ரகுண்டலாம்.
வாம கர்ணே பத்ர பூஷாம் ஸர்வா பரண பூஷிதாம்.
பாச சூல கபாலோக்ர டங்க ஹேதி விராஜிதாம்.
பீதாம்பராம் வ்ருஷாரூடாம் அங்காள பரமேச்வரீம்.
வந்தே சதுர்புஜாம் உக்ராம் குங்குமாபாம் சுபப்ரதாம்.

இதன்படி, ஒருமுகம், முக்கண், தீச்சுடர்முடி, வலதுகாதில் மகரகுண்டலம், இடதுகாதில் பனைஓலைச்சுருள், ஸர்வாபரணபூஷிதை, சிகப்புநிறமேனியள். மஞ்சள்நிற ஆடைஉடுத்தியவள், உக்ரமான தோற்றமுடையவள், காளை மாட்டின் மீதமர்ந்தவள், வலது இடது பின்கைகளில் கல்உளிடங்கம், பாசக்கயிறு இவற்றையும், வலது இடது முன்கைகளில் சூலம் கபாலம் இவற்றையும் ஏந்தியவளாய், பகைவரைஅழித்து ஸகலஸௌபாக்யங்களையும் அளிப்பவளுமான அங்காளியை வணங்குக. **"கட்க சூல கதா டக்கா விராஜித சதுர்புஜாம்"** இதன்படிதேவியை வலதுகைகளில் கத்தி, சூலம் கீழும் மேலுமாக ஏந்தி இடதுகைகளில் கபாலம் கதை உடுக்கை அல்லது பாசம் கீழும் மேலுமாக ஏந்தியவளாக அங்காளபரமேச்வரீ விளங்குகிறாள் இவளை கருமாரி என்றும் கூறுவர்.

25. தசானனா மஹாகாளி ரூபதியானம்.

கட்கம் சக்ர கதேஷு சாப பரிகான் சூலம் புசுண்டீம் சிர:
சங்கம் ஸந்ததீம் கரைஸ் த்ரிநயனாம் ஸர்வாங்க பூஷாவ்ருதாம்.
யாமஸ்தௌத் ஸ்வபிதே ஹரௌ கமலஜோ ஹந்தும் மதும் கைடபம்
நீலாச்ம த்யுதிம் ஆஸ்ய பாத தசகாம் ஸேவே மஹாகாளிகாம்.

மஹாகாளியின் ஸ்வரூபத்தை மார்க்கண்டேய புராணத்தின் சப்தசதீ வர்ணிக்கிறது. பிரம்மாவின் துதியால் மகிழ்ந்த மஹாகாளி வின்னில் வெளிபட்டாள். அப்பொழுது தேவர்கள் தேவீஸ்வரூபத்தைக் கண்டுகளித்தனர். அது, இதன்படி மஹாகாளியானவள் இந்திரநீல ரத்தினக்கல் போன்று நீலநிறத் திருமேனியில் ஒளிர்பவளாய், பத்துதலைகளையும், பத்துகைகளையும், பத்துகால்களையும் உடையவளாய், 10 முகங்களில் மூன்று வீதம் 30 கண்களை உடையவளாய், கத்தி, சக்ரம், கதை, அம்பு, வில், பரிகாயுதம், முச்சூலாயுதம், புசுண்டிஆயுதம், அப்பொழுது வெட்டி எடுத்ததலை, சங்கு இவற்றை பத்துகைகளில் ஏந்தி இருப்பவளாய், ஸர்வாங்கங்களிலும் ஸர்வாபரணங்களையும் கருநாகங்களையும் ஆபரணமாக அணிந்தவளாய், மஹாவிஷ்ணு யோகநித்திரையில் இருந்தபொழுதில் அவரது நாபிகமலத்தில் இருந்த பிரம்மதேவர் மதுகைடபஅசுரர்களை அழிக்க எவளைத் துதித்தாரோ அவள் என்று வெளிப்பட்டு அருள்புரிந்த இந்த மஹாமாயா எனும் மஹாகாளியை வணங்குகிறேன்.

26. பவானீகாளீ ரூபதியானம்.

சதுர்புஜாம் ஏகவக்த்ராம் பூர்ணேந்து வதன ப்ரபாம்.
கட்க சக்தி தராம் தேவீம் வரதாபய பாணிகாம்.
ப்ரேத ஸம்ஸ்தாம் மஹாரௌத்ரீம் புஜகேநோப வீதிநீம்.
பவானீம் கால ஸம்ஹார பத்த முத்ரா விபூஷிதாம்.
ஜகத் ஸ்திதி கரீம் ப்ரம்ஹ விஷ்ணு ருத்ராதிபிஸ் ஸுரை:.
ஸ்துதாம் தாம் பரமேசாநீம் நௌம்யஹம் விக்னஹாரிணீம்.
அர்தேந்து மௌளீம் அமலாம் அமராபி வந்த்யாம்,
அம்போஜ பாச ஸ்ருணி ரக்த கபால ஹஸ்தாம்.
ரக்தாங்க ராக வஸநா பரணாம் த்ரிணேத்ராம்
வந்தே சிவஸ்ய வனிதாம் மத விஹ்வலாங்கீம்.

பவன் என்றால் சிவன். இவரது சக்தி பவானீ. சிவசக்தியான பார்வதி கோபமுற்று, உக்ரமான கோலம்கொண்ட போது அவள் பவானீ என்று பெயர்பெருகிறாள். இவள் அறம்நிலைக்கப் போர்புரிந்த உக்ரகாளியே ஆவாள். இவளே தேவாசுரர்களால் பூசிக்கப்பட்டவள். இத்தியானத்தின்படி பவானீகாளியானவள் சிகப்பு நிறத்தவளாய், ஒருமுகமும் நான்குகைகளும் உடையவளாய், முழுநிலவுபோன்ற அழகிய முகத்தினளாய், மூவுலகசுந்தரியாய், சக்திஆயுதம், பட்டாகத்தி இவற்றை மேலிருகைகளிலும், அபயம் வரதம் இவற்றை முன்இரு கைகளிலும் ஏந்தியவளாய் சந்திரபிறையை சூடியவளாய் (அல்லது செந்தாமரை, பாசக்கயிறு, அங்குசம், ரத்தம் நிறைந்த பானபாத்ரகபாலம் இவற்றை ஏந்தியவளாய்) சிவப்பு நிறஆடை உடுத்தியவளாய், சவத்தின் மீதமர்ந்தவளாய், கருத்த பெரும்பாம்பை பூணூலாயணிந்தவளாய், காலசம்ஹாரகோலத்தில் மஹாரௌத்ரியாய், வலிமையால் மதங்கொண்டு விளங்கும் வீரசக்தியாய் சிவனது பராசக்தியாய், ஸகல தேவர்களால் துதிக்கப்படு பவளாயுமுள்ள, உலகத்தோர் இடர்நீக்கும் பரமேச்வரீயாம் பவானியை வணங்குவோம்.

அகுல குலமதந்தீ சக்ர மத்யே ஸ்புரந்தீ,
மதுர மது பிபந்தீ ஸாதகான் பக்ஷயந்தீ.
துரித மபஹரந்தீ ஸாதகான் போஷயந்தீ,
ஜயதி ஜயதி தேவீ சுந்தரீ க்ரீடயந்தீ. (பவானீஸ்துதி)

இவள் பெண்மையின் வடிவினள், இனிய பேரழகி, தடை முட்களைக் களைந்து காப்பவள், பாவத்தைப் போக்குபவள், மந்திர ஸாதகர்களை ஸித்தி யளித்து காப்பாற்றுபவள், தேவர்கள் புகழும் பேரழகி என்று இவளது துதி இவள் மஹிமையை எடுத்துரைக்கிறது.

27. முஸலதாரிணீகாளீ தியானம்

சதுர்புஜா மேகவதநாம்
த்ரிணேத்ராம் சசிசேகராம்.
துகூல வஸநோ பேதாம்
ஸர்வா லங்கார சோபிதாம்.
கராள வதனாம் பீமாம்
த்ரிசூலம் கட்க கேடகே.
சாதகும்ப நிபாம் த்யாயேத்
காளீம் முஸல தாரிணீம்.

சுவர்ணம்போல் மஞ்சள்நிறமான மேனியை யுடையவளும், பட்டாடையை உடுத்தியிருப்பவளும், நிறைய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், உலக்கையைக் கையில் வைத்திருப்பவளுமான காளீதேவியை வணங்கவேண்டும்.

28. பூதவாஹினீகாளீ தியானம் (சாமுண்டீதியானம்)

சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச கிங்கிணீ மணி சோபிதாம்.
கபால வர ஹஸ்தாம் தாம் பூத ப்ரேதாதி வாஹனாம்.
யௌவநாம் சிவசக்தீநாம் அதிபாம் சத்ரு நாசினீம்.
சாமுண்டீம் பாவயேத் நித்யம் ஸர்வாபீஷ்ட பலப்ரதாம்.

நான்கு கைகளையும், மூன்று கண்களையுமுடையவளாய், சிறியமணிகளாலான மாலையினால் சோபிக்கின்றவளும். கபாலம், வரதமுத்திரை இவைகளையுடையவளும். பூதம் அல்லது ப்ரேதம் முதலியவைகளை வாகனமாக உடையவளும், யௌவனப்பருவ வயதுடையவளும், சிவசக்திகளுக்குத் தலைவியும், எதிரிகளை அழிப்பவளும், விரும்பியவற்றை எல்லாம் அளிக்க வல்லவளுமான சாமுண்டீதேவியை தியானம் செய்து கருதிவணங்கிடவேண்டும்.

29. ப்ரேதாஸநீகாளீ தியானம். (சாமுண்டா மாதா)

சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச

காலமேக ஸம ப்ரபாம்.

தம்ஷ்ட்ரா கராள வதனாம் வ்யாக்ர

சர்மாம் பரோ ஜ்வலாம்.

ஸகட்காம் சூல ஹஸ்தாம் ச

கபாலாபய தாரிணீம்.

கிங்கிணீ மாலயா யுக்தாம்

கரண்ட மகுடான் விதாம்.

சிரோமாலா ஸமாயுக்தாம் ப்ரேத

வாஹன ஸம்ஸ்திதாம்.

பீநஸ்தனீம் யௌவனாம் ச

சாமுண்டாம் பாவயேத் ஸதா.

நான்குகைகள் மூன்றுகண்கள் காளமேகம் போன்ற கருப்பானமேனி, கோரப்பற்களுடன் கூடிய பயங்கரமான திருமுகம் கொண்டவளும், புலித்தோலை ஆடையாக உடுத்தியவளும், கத்தி, சூலம், கபாலம், அபயமுத்திரை, இவைகளை கைகளில் பெற்றிருப்பவளும், சிறியமணிகளாலான மாலையை அணிந்திருப்பவளும், கரண்டமகுடத்தை தலையில் சூடிஇருப்பவளும், மனிதர்களின் தலைகளாலான (முண்டங்களைக்கொண்ட) மாலையை அணிந்திருப்பவளும், ப்ரேதத்தை (சவத்தை) வாஹனமாக அமைத்துக்கொண்டு அதன்மேல் வீற்றிருப்பவளுமான சாமுண்டியை எப்பொழுதும் வணங்கவேண்டும்.

30. ஸிம்ஹவாஹினீகாளீ தியானம் (சூலினீ - 8கைகள்)

கட்க கேட சர சூல தாரிணீம்

சங்க சக்ர ஸதனுக் கபாலிநீம்

காள மேக ஸத்ருச ப்ரபா யுதாம்

ஸிம்ஹ வாஹந கதாம் த்ரிலோசனாம்.

கட்கம் (வாள்) கேடயம், பாணம், சூலம், சங்கம், சக்ரம், வில் கபாலம் இவைகளை (எட்டு) கைகளில் வைத்திருப்பவளும், காளமேகம் போன்று கருமையான நிறம்கொண்டவளும், சிம்மத்தை வாஹனமாகக்கொண்டு அதன்மேல்வீற்றிருப்பவளும் மூன்று கண்களையுடையவளும், நன்கு அலங்கரிக்கப்பட்டவளும் தேவர்கள் அசுரர்கள் எல்லோராலும் வணங்கப்பட்டவளும் மஹிஷாசுரன் ரக்தபீஜாசுரன் தலையின் வைக்கப்பட்ட பாதத்தை யுடையவளுமான சூலினீதேவியை காளியை (துர்கையை) எண்ணி வணங்குவோம்.

31. அங்காளபரமேச்வரீ ரூபதியானம் (மயானகாளீ)

ஏகவக்த்ராம் த்ரிணேத்ராம் ச
ஜடா கண்டேந்து மண்டிதாம்.
வரா(அ)பயகராம் சூல பரச்
வாயுத தாரிணீம்.
முண்டாஸ்தி மாலிகா பூஷாம்
அட்டஹாஸ பயங்கராம்.
ச்மசான வாஸிநீம் கோராம்
சத்ருசோஷண தத்பராம்
பூதப்ரேத பிசாசாதி
ப்ரம்மராக்ஷஸ ஸம்வ்ருதாம்.
அங்காளபரமேசீம் தாம் பஜே
பீடாபஹாரிணீம்.



ஒரு முகத்தையும், மூன்று கண்களையும் முடியில் பிறைச்சந்திரனையும் கொண்டு கையில் வரதமுத்திரை அபயமுத்திரைகளையும், சூலம், கோடரி இவைகளை (தனது நான்கு) கைகளில் கொண்டவளும், மனித தலை எலும்புகளை மாலையாகக் கொண்டிருப்பவளும் அட்டஹாஸ உரத்த சிரிப்புடன் பயமுருத்துபவளாய் இருப்பவளும், ச்மசானத்தில் (சுடுகாட்டில் இடுகாட்டில்) வசிப்பவளும், பயங்கரமான தோற்றத்தையுடையவளும், சத்ருக்களை அழிப்பதில் ஈடுபட்டவளாயும், பூதகணங்கள், ப்ரேதகணங்கள், பிசாசுக்கூட்டங்கள் ப்ரும்மராக்ஷஸர்கள் இவர்களால் சூழப்பட்டவளாயும் உலகத்தோரின் துன்பங்களைப் பீடைகளைப் போக்குகின்றவளுமான அங்காள பரமேச்வரியை உள்ளத்தில் எண்ணிவணங்குகிறேன்.

32. திகம்பரா தக்ஷிணகாளீ தியானம்.

வாமோர்த்வே சின்னமுண்டம். வரமபி தததோ
தக்ஷிணோர்த்வேதி தீக்ஷ்ணம்
கட்கம் சான்யே ஹ்யபீதிம் கர கமல தலே
பிப்ரதீம் மேக காந்திம்
திக் வஸ்த்ராம் ஊர்த்வ கேசீம் சவகரவரக்ருத்
காஞ்சி காபாம் சவா ஸ்ருக்
விஸ் பூர்யத் வ்யாத்த வக்த்ராம் ச்ரித ஜன
பலதாம் காளிகாம் தாம் நமாமி.

இவளது இடது மேல்கரத்தில் வெட்டப்பட்ட அசுரத்தலை, அதன்கீழ்கரத்தில் வரதம் வலதுமேல்கரத்தில் கூரிய வெட்டுகத்தி, அதன்கீழ்கரத்தில் அபயமுத்திரையை கொண்டவளும், கருமைநிறத்தினளும் மேல்நோக்கிய கேசமுடையவளும், சவங்களின் கைகளாலான ஒட்டியாணத்தை அடைந்தவளும் ஆடையற்றவளும், சவத்தின் ரத்தத்தால் நிறம்பிய திறந்தவாயினளும், தன்னை சரண் அடைந்தவர்களுக்கு பயனளிப் பவளுமாகிய காளிதேவியை வணங்குகிறேன்.



33. ரிபுநாசினீ பிரத்யங்கிராகாளீ தியானம்.

சியாமாபாஞ்ச த்ரிநேத்ராம் தாம் ஸிம்ஹ
வக்த்ராம் சதுர் புஜாம்.
ஊர்த்வ கேசீம் ச ஸிம்ஹ ஸ்தாம்
சந்த்ராங்கித சிரோருஹாம்.
கபாலசூல டமரு நாகபாச தராம் சுபாம்.
ப்ரத்யங்கிராம் பஜே நித்யம்
ஸர்வசத்ரு விநாசிநீம்.

பச்சைநிறதேஹமும், மூன்றுகண்களும், ஸிம்ஹத்தின்முகமும், நான்குகைகளும், மேல்நோக்கிய சுடர்முடியும், ஸிம்ஹவாஹனத்தில் இருப்பவளும், சந்திரனைத்தரித்தகூந்தலும், கபாலம், சூலம், உடுக்கை, பாம்பாகிய நாகபாசம், இவைகளைஏந்திய நான்குகைகளுடையவளும், ஸகலசத்ருக்களையும் எதிரிகளை முற்றிலுமாக அழிப்பவளுமான பிரத்யங்கிராதேவியை தினந்தோறும் எண்ணித்துதித்து வணங்குகிறேன்.

34. உக்ரசாமுண்டாதியானம் (பீமவிக்ரமகாளீ)

சாமுண்டா து ப்ரகர்த்தவ்யா த்ரிநேத்ரா ச சதுர்புஜா.
பத்த சண்ட த்வகா சைவ ப்ருகுடீ குடிலா நநா.
ஸ்தன த்வயோ பரி க்ராந்த பணீந்த்ர பண பீஷணா.
கண்டா நூபுர ஸம்யுக்தா விகீர்ணோ (ஊ)ர்த்வ சிரோருஹா.
பும் முண்டம் பணிராஜம் ச லலாடோர்த்வே து பிப்ரதீ.
த்ரிசூலம் பத பார்ச்வே து தக்ஷிணே ச ததோ(உ)த்தரே.
கபால பாச ஸம்யுக்தம் தததீ பீம விக்ரமா.
அஷ்ட ஹஸ்தாபி வா ஸா ஸ்யாத் சூல கட்கௌச துந்துபிம்.
க்ஷுரிகாம் தததீ ஸவ்யைர் கரை ரன்யைக் கபால யுக்.
கண்டாம் ச ஸர்ப்பாசம் ச ஸர்வ லோக பயங்கரீ. (அஜிதாகமம்)

சாமுண்டியானவள் முக்கண்களோடும் நாற்கரங்களோடும், புலித்தோலாடையுடுத்தியவளும், புருவங்களை நெறித்த பயங்கர முகத்தை யுடையவளும், இரு மார்பகங்களின்மீது கட்டியுள்ள பாம்பரசனின் முகபடத்தை யுடையவளும், கால்களில் மணிச்சலங்கைகளாலான கொலுசுகளை அணிந்திருப்பவளும், பரந்த மேல்நோக்கிய முடிகளை யுடையவளும், ஆண்தலையை வெட்டி வலது கையில் வைத்திருப்பவளும், நாகராஜனை தலையிலே அணிந்தவளாயும், வலதுமேல்கையிலும் இடதுகீழ்கையிலுமாக பிடித்துள்ள கீழ்நோக்கிய சூலம், கபாலம், பாசம் இவைகளையும் ஏந்தி நாற்கரத்துடனிருப்பளுமாவாள். இவளே எட்டுகைஉடையவளாகவும் ஆவாள். அப்பொழுது வலதுநாற்கரங்களில் சூலம், வாள், துந்துபி எனும் ஊதும் இசைக்கருவி, சிறுகுத்துகத்தி இவற்றையும் இடதுநாற்கரங்களில் கபாலம், கைமணி, கருநாகம், பாசக்கயிறு இவற்றையும் ஏந்தியவளாய், அனைத்துலகமும் அஞ்சும்வகையில் மிகவும் உக்ரமானகோலத்தில் இருப்பவள் உக்ரசாமுண்டா ஆவாள்.

35. லோகேசீ சாமுண்டி தியானம் (ஸப்தமீமாதா)

தீர்கஜிஹ்வோ (ஹ)ர்த்வகேசா ச க்ருஷ்ணகா க்ருஷ்ண தம்ஷ்ட்ரிகா.

நிர்மாம்ஸா வ்யாவ்ருதமுகீ சண்டீ கண்டேந்து மண்டிதா.

காளீ கபாலமாலா ச சவாரூடா க்ருசோதரீ.

கௌசிகா ரோஹிணீ வாஸஸீ சாமுண்டா க்ருத்ர கேதுகா.

மாம்ஸ கண்ட சுஸம்பூர்ணம் கபாலம் வாம பாணி பாக்.

சூலாஹீ தக்ஷிணே சைவ வஹ்னிர் வாம கரஸ்தக:.

வ்யாக்ர சர்மாம்பரா காளீ த்ரிணேத்ரீ சங்ககுண்டலீ.

லோகானாம் மாதரஸ் ஸப்த மாதரக் கதிதாஇமா:.

நீண்டதான நாக்கையுடையவளும், மேல்நோக்கிய முடியையுடையளும், கருமைநிறமானவளும், கருத்தகோரபற்களை யுடையவளும், மெலிந்தமேனியளும், திறந்தவாயையுடையவளும், கொடியவளும், பிறைச்சந்திரனைச் சூடியவளும், காலத்தின் உருவமானவளும், 51 மண்டைகளாலான மாலையை அணிந்தவளும், சவத்தின்மீது நிற்பவளும், சிறிய குழியான, வயிற்றையுடையவளும், பருந்து, கோட்டான் முதலியவைசூழ இருப்பவளும், கழுகுக்கொடியோடு இருப்பவளும், மாம்ஸத் துண்டுகளால் நிறைந்திருக்கும் கபாலத்தை முன் இடக்கையில் வைத்துள்ளவளும், சூலத்தை வலதுகையிலும், பின் இடதுகையில் நெருப்பை வைத்திருப் பவளும், புலித்தோல் ஆடையுடுத்திய வளும், காலஸ்வரூப மானவளும், மூன்றுகண்ணுள்ளவளும், காதுகளில் சங்குகளாலான குண்டலங்களை யுடையவளுமான, சாமுண்டீமாதாவை எண்ணி வணங்குவோம்.

36. ரக்தாக்ஷீ சாமுண்டீ தியானம். (திருஷ்டிகாளீ)

சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச
கட்க கேடக ஸம்யுதாம்.
சூலம் கபால ஹஸ்தாம் ச
ரௌத்ரத்ருஷ்டி பயா(அ)பஹாம்.
ஊர்த்வ கேசீம் சு ரக்தாக்ஷீம்
சாமுண்டீம் காரயேத் புத:.

நான்கு கைகளும் மூன்றுகண்களும், உக்கிரப்பார்வையும், அச்சுருத்தும் கொடிய தோற்றமும், மேல்நோக்கியமுடியும், மூன்று நன்கு சிவந்த விழிகளும் உள்ளவளாய், நான்குகைகளில் வலதுஇடதாக முன்கைகளில் சூலம் கபாலம், இரண்டையும் பின்கைகளில் கத்தி கேடயம் இரண்டையும் ஏந்தியவள் சாமுண்டீ எனும் செங்கண்மாகாளியைக்கருதி வணங்கிடுவோம்.

37. காலருத்ர பைரவீ தியானம். (ஆபதுத்தாரிணீகாளீ)

பஞ்சவக்த்ரா ப்ரதிமுகம் த்ரயக்ஷா
தம்ஷ்ட்ரா ஸமன்விதா.

ரக்தாஸ்ருக் சர்ம மேதாஸ்தி
ஜந ப்ராணரதா (அ)நிசம்.

தசாயுதா(ஆ)வரணேந
திக்தேவா(ஆ) வரணேந ச.

ஸதா ஸமன்விதா
பீம ரூபிணீ பரமேச்வரீ.

ஆபதி ஸ்மரணீயா ச
கால ருத்ராக்ய பைரவீ.

ஸத்பக்தஸ்ய ஸதா சீக்ரம்
ஸர்வகாம பலப்ரதா. (அஜிதாகமம்)

ஐந்து முகமும், பதினைந்து கண்களும், தெத்திப்பற்காளோடுகூடிய உக்ரமான முகமும், உடலின் சப்ததாதுகளின் வடிவாய் இருப்பவளும், பத்து திக்தேவதைகளாலும், பத்து ஆயுதங்களாலும் எப்பொழுதும் சூழ்ந்திருப்பவளும், காலருத்ரரின் பத்தினியுமான இவளை ஆபத்காலத்தில் நினைத்து வழிபடுவதால் விரும்பிய பயனைத்தருவாள் என்கிறது அஜிதாகமம்.

38. வேதாளாரூடாகாளீ தியானம். (ஸம்ஹாரிணீகாளீ)

காளீம் மேக ஸமப்ரபாம் த்ரிநயனாம்
வேதாள கண்ட ஸ்திதாம்.
கட்கம் கேட கபால தாருக சிர:
க்ருத்வா கராக்ரேஷு ச.
பூத ப்ரேத பிசாசயித்ரு ஸஹிதாம்
முண்ட ஸ்ரஜா லங்க்ருதாம்.
வந்தே துஷ்ட மசூகராதி
விமதாம் ஸம்ஹாரிணீ மீச்வரீம்.
(சாஸ்த்ருபூஜாகல்பம்)

மேகம்போன்ற நீலநிறத்தவளும், மூன்றுகண்ணுள்ளவளும், வேதாளத்தின் (பூதகியின்) கழுத்தில் கால்வைத்துநிற்பவளும், வீரவாளும் கேடயமும், தாருகாசுரனுடையதலையைக் கையிலேந்தியும், அதன்கீழ்கையிலுள்ள கபாலத்தில் ரத்தம்விழும்படியாக கபாலமேந்தியவளும், பூதங்கள், ப்ரேதகணங்கள், பிசாசங்கள், சப்தமாதாக்கள் இவர்களோடு சூழ்ந்தவளும், மண்டையோடுகளின் மாலைகளை கழுத்தில் அணிந்தவளும். வேறுபட்டகருத்து உடையவர்களைக் கீழ்படியவைத்தும், துஷ்டர்களை அடக்கிநல்லவர்களை தம்முள் சேர்த்தும் அருளுகின்ற ஈச்வரியாகிய ஸம்ஹாரிணீ காளியை வணங்குகிறேன்.

39. புவனேச்வரீகாளீ தியானம் (பீமா -16 கைகள்)

நாநாபா ஹேமவஸ்த்ரா நரருதிர வஸா
மாம்ஸ நிர்பின்ன வக்த்ரா
சூலம் குந்தம் ரதாங்கம் பணி முஸல
கதா தோமரம் பட்டிசம் ச.
பாசம் சக்திம் ச சங்கம் த்வஜ ஹல
தஹனான் வஜ்ர கேடான் கராப்ஜை:
பிப்ராணா பீம வேஷா விஜயதி
புவனே வித்ருதா பத்ரகாளீ.
(ஆகாசபைரவகல்பம்)

கருமை முதலான பலநிறத்துமேனியளும், பொன்நிறமான ஆடையுடுத்தியவளும், நரமாமிஸம்ரத்தம் தோய்ந்துள்ள வாயையுடையவளும், 16 கைகளில் 1. சூலம் 2. ஈட்டி, 3. சக்கரம் 4. பாம்பு 5. உலக்கை 6. கதை 7. தோமரம்(தீத்தடி) 8. பட்டிசம்(ரம்பம்) 9. பாசம் 10. சக்தி 11. சங்கு 12. கொடி 13. கலப்பை 14. நெருப்பு 15. வஜ்ரம் 16. கேடயம் இவற்றை வைத்திருப்பவளும், மிகப்பெரிய உருவமுடையவளுமான உலகத்தலைவியான பத்ரகாளீ தியானிக்கப்படவேண்டியவளாக வெற்றியோடு விளங்குகிறாள்.

40. நீலசாமுண்டா தியானம். (நீலீகாளீ)

சதுர் பாஹும் த்ரிணேத்ராம் ச த்விபாதேந ஸமன்விதாம்.

ஊர்த்வ கேசீம் ஸுதம்ஷ்ட்ராம் ச ரௌத்ரத்ருஷ்டி ஸமன்விதாம்.

லம்பிதம் தக்ஷிணம் பாதம் வாமபாதம் து சாயிநம்.

தக்ஷஹஸ்தே து ஸம்யுக்தம் டமரும் பாச மேவ ச.

வாம ஹஸ்தாந்தரே சைவ சூலம் சைவ கபாலகம்.

நீலவர்ணாம் மஹாரூபாம் வாமபாதாட்ட ஹாஸிநீம்.

லம்போஷ்டம் மாதுலுங்காக்ஷீம் சாமுண்டா தியான மாசரேத்.

(ரௌரவாகமம்)

நான்குகைகள், முக்கண்கள், இருகால்கள், மேல்நோக்கிய கூந்தல் முடிகள். அழகிய கோரைப்பற்கள், நெருப்பு தெரிக்கின்ற கண்களோடும், வலதுகால் தொங்கவிட்டு இடதுகால் மடித்து அமர்ந்தவளும் கைகளில் மேலே உடுக்கையும் பாசமும் ஏந்தி கீழ்கைகளில் சூலமும் மண்டைஒடுகிண்ணியும் ஏந்தி, நீலநிறத்தவளாய், பெரியஉருவமாய், உரத்த சிரிப்போடும், தொங்கினாற்போன்ற உதடோடும், மாதுளைபோல் சிவந்தமுக் கண்களோடும் பயங்கரகோபத்தோடும் உக்கிரஉருவத்தோடும் சாமுண்டீஉருவத்தை எண்ணவேண்டும்.

41. அக்னிபைரவீ காளீதியானம் (20 கைகள்)

உத்வீக்ஷணா ரக்த தம்ஷ்ட்ரா ஸ்வதந்தைர் தம்சிதா(அ)தரா.

ரக்தாம்பர தரா ரக்த விசுத்தா ஸாம்புஜா சிவா.

ஸஹஸ்ர ஸர்ப்பா(ஆ)பரணா ரக்தபுஷ்பா(அ)னு லேபநா.

அதிரக்த கேச நேத்ர ஜிஹ்வா சோத்கடிகாஸநா.

ஜ்வலத் ஸம்ஹாரகாலாக்னி மூர்த்தி பைரவ ரூபிணீ.

ஸிம்ம தார்க்ஷ்யாதி மஹிஷ ஸாலா வ்ருகாதி வாஹினீ.

சக்ரம் சங்கம் சரம் சாபம் வஜ்ரா(அ)க்னிம் முஸலம் ஹலம்.

அலஸாம் கட்க கேடௌ ச சத்ர பாச கபாலகம்.

நாக நாராச பரசு ரத ஸ்தம்பா (அ)பயம் வரம்.

ஸதா ஹி தக்ஷிணைர் வாமைர் தரந்தீ கர பங்கஜை:.

ஊர்த்வாநநா பின்னகரா சாநந்தாத் யத்திகா க்ரமாத்.

ஸம்ஹார சக்ர மத்யஸ்தா ஸா யாது ப்ரதநே த்விஷாம்.

ஸஹஸ்ரகோடி ஸந்தோஹ ஸேநா ஸ்தம்பந காரிணீ.

ப்ருதக் ப்ருதக் கோடி கோடி பைரவீ பைரவா(ஆ)வ்ருதா.

ஸேவ்யா ஸதா வஸாபூர்ணா கபால தர பாணிபி:

(அஜிதாமத்தில் கூறியது)

மேல்நோக்குபார்வையுள்ளவளும், சிவந்த ரத்தம்தோந்த கடைவாய் கோரப்பற்களை யுடையவளும், தனது பல்லால் கடித்துக்கொண்டிருக்கிற கீழ்உதட்டை யுடையவளும், சிகப்பு நிற ஆடையுடுத்தியவளும், பைரவரிடம். விருப்பமுள்ள ளயதூய உள்ளத்தாமரையை உடைய சிவசக்தியும், ஆயிரம்பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டவளும், சிவந்தநிற மலர்மாலையை அணிந்து செஞ்சந்தனம் பூசி யிருப்பவளும், மிகவும் சிகப்புநிறத்திலுள்ள தலைமுடிகள், கண்கள், நீண்டநாக்கு இவற்றையுடையவளும், வலதுகாலை பீடத்தில் குத்திட்டு ஊன்றி, இடதுகாலை தரையில் ஊன்றியபடி, உத்கடிகாஸனத்தில் அமர்ந்து இருப்பவளும், ஒளிவீசுகின்ற பைரவரின் ஸர்வஸம்ஹார ஊழிகாலத்து அக்னியின்உருவமான உருவமானவளும், சிங்கம், கருடன், எருமை, ஓநாய், உடும்பு, கழுதைப்புலி முதலான கொடியவன விலங்குகளை தனக்கு வாஹனமாக ஊர்தியாகக் கொண்டிருப்பவளும், சக்கரம், சங்கு, அம்பு, வில், வஜ்ரம், நெருப்பு,

